

ஸத்குருஸ்ரீத்யாகப்ரஹ்மபுஷ்பாஞ்ஜலி!



புஷ்பா ஸ்ரீவத்ஸன்



ஸ்ரீ பத்மாவதி அம்மவாரு



ஸ்ரீ வேங்கடேச்வர ஸ்வாமிவாரு

ஓம்

ஸத்குரு ஸ்ரீ த்யாகப்ரஹ்ம புஷ்பாஞ்ஜலி:

அஷ்டோத்தரஶத த்ரிஶதி பஞ்சஶதி ஸஹஸ்ரநாமாவளி கதம்பகம் ஶரணாகதி கத்யம் மங்களாஷ்டகம் ச

ஸ்ரீமதி புஷ்பா ஸ்ரீவத்ஸன்




2016

ॐ

सद्गुरुश्रीत्यागब्रह्मपुष्पाञ्जलिः

अष्टोत्तरशतत्रिशतिपञ्चशतिसहस्रनामावलिकदम्बकम्
शरणागतिगद्यम् मङ्गलाष्टकम् च

श्रीमती पुष्पा श्रीवत्सन्



तिरुमल तिरुपति देवस्थानम्
तिरुपति

Sadguru Śrī Tyāgabrahmapushpāñjali:
(Aṣṭottaraśata Triśati
Pañcaśati Sahasranāmāvali Kadambakam,
Sadguru Śaraṇāgatigadyam and Mangalāṣṭakam)

by Smt. Pushpa Srivatsan

First Edition: 1994
Tamil Edition: 2016

ஸம்ஸ்க்ருத -- த்மிழ் எழுத்துப்பெயர்தல்

अ	அ	ग्	க்^{3}	ध्	த்^{4}
आ	ஆ	घ्	க்^{4}	न्	ந்
इ	இ	ङ्	ங்	प्	ப்
ई	ஈ	च्	ச்	फ्	ப்^{2}
उ	உ	छ्	ச்^{2}	ब्	ப்^{3}
ऊ	ஊ	ज्	ஜ்	भ्	ப்^{4}
ऋ	ரு^{2}	झ्	ஜ்^{2}	म्	ம்
ए	ஏ	ञ्	ஞ்	य्	ய்
ऐ	ஐ	ट्	ட்	र्	ர்
ओ	ஓ	ठ्	ட்^{2}	ल्	ல்
औ	ஔ	ड्	ட்^{3}	व्	வ்
अं	◌	ढ्	ட்^{4}	श्	ஶ
अः	:	ण्	ண்	ष्	ஷ்
अँ	.	त्	த்	स्	ஸ்
क्	க்	थ्	த்^{2}	ह्	ஹ்
ख्	க்^{2}	द्	த்^{3}		

உள்ளுரை

ஓம்

நாத$_3$ப்$_3$ரஹ்மணே நமோ நம:

ஸத்$_3$கு$_3$ரு ஶ்ரீ த்யாக$_3$ராஜ நாத$_3$ப்$_3$ரஹ்மார்பணம் |

ॐ

नादब्रह्मणे नमो नमः

सद्गुरुश्रीत्यागराजनादब्रह्मार्पणम् ।

அபி4நந்த3னம்

புஷ்பா ஸந்ததமாஜுஹாவ ஶதகைர்நாம்நாம் மனோரஞ்ஜகை:
க3த்3யம் போ4க்3யதமம் விதா4ய ஸூப4க3ம் ப4த்3ரப்ரத3ம் மங்க3ளம் |
த்யாக3ப்3ரஹ்ம ஸமர்ச்ய மங்க3ளகு3ணா ப4க்தாக்3ரக3ண்யா ஸுதீ4:
ஶ்ரேய: ப்ராப்ய பரம் சகாஸ்து பு4வனே ஸங்கீ3தஸர்வோந்நதா ||

த்யாக3ப்3ரஹ்மக்ரு2பா விஹாரமயதே யாமாஶ்ரிதா ஸந்ததம்
யஸ்யா: சேதஸி நாந்யத3ஸ்தி பு4வனே ஶ்ரீத்யாக3ராயம் வினா
நாத3ப்3ரஹ்மஶூபா4னுபூ4திபரமா வீணாகரா தீ4மதீ
சித்தாராம விஹார பூஜனரதா சிரம் காஶதாம் ||

ஶ்ரீவத்ஸேன ப்ரதி2தவிப4வா த்யாக3ராயார்யத்3ரு2ஷ்டா
ப4க்த்யாராமா விபு3த4பரிஷத்3கீ3யமானப்ரபா4வா |
ப4வ்யஜ்ஞானா ஸூத்3ரு2ட4தி4ஷணா ப4க்திபா4வப்ரபூர்ணா
புஷ்பாமோதா3 விலஸது முதா3 புஷ்பவல்லீ த4ரித்ர்யாம் ||

N. SRINIVASA RAGHAVACHARIAR
(SEVA SWAMY)
Winner of President's Award for Sanskrit - 1992
Desika Bhaktha Ratnam, Nyaya Siromani,
Sahitya Ratnam, Vidya Vinodha, Daya Sevaka,
Desika Darsana Seva Dhureena, Desika Seva Saktha
Desika Darsana Rakshamani, Samskruta Prachara
Chatura, Shudhadwaita Bhushana Vedanta Vidvan
Desika Darsana Choodamani

श्रीः
श्रीमतेलक्ष्मीहयवदनपरब्रह्मणे नमः
श्रीपद्मावती समेत श्रीश्रीनिवासपरब्रह्मणे नमः

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:
ज्ञानानन्दमयं देव निर्मलस्फटिकाकृतिम् ।
आधारं सर्वविद्यानां हयग्रीवं उपास्महे ॥

2, Lakshmipuram, Villivakkam,
MADRAS - 600 049

अभिनन्दनम्

पुष्पा सन्ततमाजुहाव शतकैर्नाम्नां मनोरञ्जकैः
गद्यं भोग्यतमं विधाय सुभगं भद्रप्रदं मंगलम् ।
त्यागब्रह्म समर्च्य मंगलगुणा भक्ताग्रगण्या सुधीः
श्रेयः प्राप्य परं चकास्तु भुवने संगीतसर्वोन्नता ॥

त्यागब्रह्मकृपा विहारमयते यामाश्रिता सन्ततं
यस्याः चेतसि नान्यदस्ति भुवने श्रीत्यागरायं विना ।
नादब्रह्मशुभानुभूतिपरमा वीणाकरा धीमती
चित्तारामविहारपूजनरता पुष्पा चिरं काशताम् ॥

श्रीवत्सेन प्रथितविभवा त्यागरायार्यदृष्टा
भक्त्यारामा विबुधपरिषद्गीयमानप्रभावा ।
भव्यज्ञाना सुदृढधिषणा भक्तिभावप्रपूर्णा
पुष्पामोदा विलसतु मुदा पुष्पवल्ली धरित्र्याम् ॥

த்யாக$_3$ப்$_3$ரஹ்மஸமர்சனேன மஹிதா கீ$_3$தேன வைராக்யத:
பூர்ணப்ரக்ஞஸமா பரிஶ்ரமயுதா ப$_4$க்த்யுஜ்ஜ்வலா ஸந்ததம் |
நாமாவல்யபி$_4$லேக$_2$நேன நிதராம் ஸௌவர்ணகாந்த்யாவ்ரு$_2$தா
ஶ்ரேயோபி$_4$ஸ்ஸஹிதா விபா$_4$து விபு$_3$த$_4$ஸ்வாந்தேஷு ஸர்வோத்தரா ||

ஆமூலாக்$_3$ரம் கீர்திதம் நாமஜாதம்
த்$_3$ரு$_2$ஷ்ட்வா ஹ்ரு$_2$ஷ்டோ க$_3$த்$_3$யமப்யத்$_3$பு$_4$தம் தத் |
வாரம் வாரம் மங்க$_3$ளம் விஸ்மயம் ச
ப்ராப்தஸ்ஸோஹம் ஶ்ரீநிதீ$_4$ ராக$_4$வார்ய:||

புஷ்போத்$_3$கீ$_3$தம் புஷ்பக$_3$ந்தோ$_4$பஜுஷ்டம்
ப$_4$க்த்யா தா$_4$ர்யம் ராக$_3$தோऽப்யுத்தமாங்கை$_3$:|
பூ$_4$ஶ்ரேயோ விந்த$_3$தாம் புஷ்பவல்லீ
ஶ்ரீவத்ஸேனாமோத$_3$தாம் ஶ்லாக$_4$நீயா ||

நாமாவல்யா த்யாக$_3$ராயோ மஹாத்மா
ஶோபா$_4$மன்யாம் விந்த$_3$மானஸ்ஸமேஷாம் |
ஶ்ரேயோதி$_3$வ்யாம் ஶேமுஷீம் ஶாந்திப$_4$க்தீ
பூ$_4$யோ த$_3$த்$_3$யாத் வர்த$_4$யன்னேவ புஷ்பாம் ||

வில்லிவாக்கம் ஸேவா ஶ்ரீநிவாஸராகவாசார்ய:
மதராஸ்
21-9-93

त्यागब्रह्मसमर्चनेन महिता गीतेन वैराग्यतः
पूर्णप्रज्ञसमा परिश्रमयुता भक्त्युज्ज्वला सन्ततम् ।
नामावल्यभिलेखनेन नितरां सौवर्णकान्त्यावृता
श्रेयोभिस्सहिता विभातु विबुधस्वान्तेषु सर्वोत्तरा ॥

आमूलाग्रं कीर्तितं नामजातं
दृष्ट्वा हृष्टो गद्यमप्यद्भुतं तत् ।
वारं वारं मङ्गलम् विस्मयंच
प्राप्तस्सोऽहं श्रीनिधी राघवार्यः ॥

पुष्पोद्गीतं पुष्पगन्धोपजुष्टं
भक्त्या धार्यं रागतोऽप्युत्तमाङ्गैः
भूरिश्रेयो विन्दतां पुष्पवल्ली
श्रीवत्सेनामोदतां श्लाघनीया ॥

नामावल्या त्यागरायो महात्मा
शोभामन्यां विन्दमानस्समेषाम्
श्रेयो दिव्यां शेमुषीं शान्तिभक्ती
भूयो दद्यात् वर्धयन्नेव पुष्पाम् ॥

विल्लिवाकम्
मद्रास
२१-९-९३.

सेवा श्रीनिवासराघवाचार्यः

தமிழ்ப்பதிப்பின் முன்னுரை

ந. வே. வத்ஸன் I.P.S.(Rtd)

திருவையாறு ஸத்குரு ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகளின்மீது இயற்றப்பட்ட இத்துதி நூல் 1994ம் ஆண்டு திருமலை-திருப்பதி தேவஸ்தானத்தினால் அச்சிட்டு வெளியிடப்பட்டது. முன்னாள் குடியரசுத் தலைவர் திரு சங்கர் தயாள் சர்மா அவர்களால் திருமலையிலும், பூஜ்ய ஸ்வாமி ஸ்ரீ தயாநந்த ஸரஸ்வதி அவர்களால் சென்னையிலும் அறிமுகப்படுத்தப்பட்டது. அவர்களாலும் பல ஸம்ஸ்க்ருத புலவர்கள் மற்றும் பக்தர்களாலும் ஒருங்கே பாராட்டப்பெற்ற இந்நூல் ஸம்ஸ்க்ருத (தேவநாகரி) எழுத்து தெரியாதவர்க்குப் பயன்படுமாறு தமிழ் எழுத்துக்களில் இருந்தால் நன்றாயிருக்குமே என்று திருவையாறு த்யாகப்ரஹ்ம மஹோத்சவ சபாவின் முன்னாள் காரியதரிசி வயலின் வித்வான் திரு குன்னக்குடி வைத்யநாதன் உள்பட பலர் கருத்துத் தெரிவித்தனர். அதற்கொப்ப இத்தமிழாக்கம் வெளிவந்துள்ளது. இதைக் கணினியில் ஆக்க முக்கியமான பேருதவி செய்தவர் ஸத்குரு மற்றும் முத்துஸ்வாமி தீக்ஷிதர் ஸ்யாமா சாஸ்த்ரி அவர்கள் செய்த ஸம்ஸ்க்ருத தெலுங்கு கீர்த்தனங்களையும் தமிழாக்கம் செய்து புகழ்பெற்ற சென்னை திரு Col. கோவிந்தன் அவர்களேயாவார். அவருக்கு எங்கள் மனமார்ந்த நன்றி உரியதாகும்.

வத்ஸன்

Swami Dayananda Saraswati

Arsha Vidhya Ashram Gurukulam,
Alamarathumedu,
Anaikatti (P.O.),
Coimbatore-641 108.

Saint Tyagaraja was not only of the form of the music he composed but also was of the content of its theme. That is the reason why he came to be known as Tyaga Brahmam. The swaroopa of Lord Rama, his altar of devotion and theme of most of his songs, is Brahman, the implied meaning of the Sruti's words: *Satyam gnanam and anantam.*

Besides the accounts of Tyagaraja's saintliness and wisdom narrated by his parampara of disciples, the lyrics of his music themselves revealed his wisdom. One can study his songs as a Book of Vedânta for discovering the Vastu that is Brahman.

Smt. Pushpa is a disciple of Saint Tyagaraja even as Ekalavya was to Drona. Her discipleship does not just confine to music; it inlcudes her spiritual pursuit. She looks upon Saint Tyagaraja as her Upasya Devata. She has earned His blessings in full measure and this is borne out in her outpourings in the form of this Unique Sahasranama, Pancasati, Trisati, Ashtottarasata Namavali, Saranagati Gadyam and Mangalashtakam.

Very rarely does one come across a Namavali of this nature. The names of a given Deity are always centred on the swaroopa or the vibhutis of the Deity. The famous Vishnu Sahasranama would reveal the Lord's essential nature, His glories and His forms-of blessing in His various avataras. In these Namavalis you can come across a number of names which reveal the heart of the composer with which any reader can easily identify. Therefore, this book not only reveals Tyagaraja the person and his music, his wisdom and the content of it but also the beauty of devotion. The book itself is an offering of Pushpa to her Guru and Ishta Devata, the Saint Tyagaraja who is looked upon as Brahman.

DAYANANDA

* * *

Swami Haridhos Giri (Guruji)

227, Avvai Shanmugam Road,
Madras 600 086, India
Phone : 89889.

Smt. Pushpa Srivatsan, a staunch Bhakthai of Saint Tyagaraja, possesses unique knowledge of music and insight into the Saint's life purely out of her own inspirations. She has created a Sahasranamavali, a Pancasati, a Trisati, an Ashtottarasatanamavali a Gadyam and Mangalashtakam on Sri Tyagarajaswamigal in beautiful Sanskrit. They are thrilling revelations, excellent in style and substance, to be cherished by all devotees and music lovers. They are very useful for prayer and worship.

May Sadguru Maharaj shower His choicest blessings on her for all success in her mission.

GURUJI

* * *

வாழ்த்துரை

[வா. ஸ்ரீவத்ஸாங்காசாரியர், பிரின்ஸிபால், சென்னை ஸம்ஸ்க்ருதக்கல்லூரி, மயிலை, சென்னை-60004.]

ஸ்ரீ தியாகப்ரம்மத்தையறியாதார் யாருமில்லை. ஸ்ரீராமபக்தியே உருவெடுத்து ஸ்ரீஆஞ்சேனயரைப் போன்று ஸ்ரீராமநாமங்களை பஜனை செய்து வந்த பெரிய மஹான். ஸங்கீத சாஸ்த்ரத்தை பாவ-ராக-தாளத்துடன் உலகில் பரவச்செய்த அந்த மஹான் ஒரு மறுமலர்ச்சியை, எழுச்சியை மக்களிடம் தூண்டி ஒருவகையில் நம் பாரதப் பண்பாட்டினை உலகறியச்செய்த பெரும் வள்ளல். அவரது இனிய கானத்துக்கு உருகாதவர் யாருமில்லை.

இத்தகைய மஹானிடம் த்ருடமான பக்தி பூண்டுள்ள ஸ்ரீமதி புஷ்பா ஸ்ரீவத்ஸன் அவர்கள் மிகவும் சிறந்த தொண்டு பூண்டுள்ளார்கள். இவர்கள் இளமையிலிருந்தே ஸ்ரீத்யாகப்ரம்மத்தைப் பற்றியே மனதில் ஸதா எண்ணி ஆசார்யனாக அவரையே வரித்து "தேவு மற்றறியேன் குருகூர் நம்பி பாவின் இன்னிசை பாடித்திரிவனே" என்று ஸ்ரீநம்மாழ்வாரின் புகழை இனிய கானத்துடன் பாடி உலகில் முதலில் வெளியிட்ட ஸ்ரீமதுரகவி ஆழ்வாரைப் போன்று வாழ்ந்து வருபவர். இவர் ஸ்ரீத்யாகப்ரம்மத்தின் கானாம்ருத ஸாகரத்தில் மூழ்கி இவரது பக்தியின் வெளியீட்டாக ஸஹஸ்ரநாமம், பஞ்சசதீ, த்ரிசதீ, அஷ்டோத்தரசதம் என்பன போன்று பல நாமாவளிகளைப் படைத்துப் பாடியுள்ளார். இது வெறும் அஷ்டோத்தரம் போன்றதன்று. தமது ஆழ்ந்த அனுபவத்தை வெளியிடும் அநுபவ பரீவாஹம். இதில் ஸ்ரீத்யாகப்ரம்மத்தைக் காணலாம். அவரது ஸ்ரீராமனைக் காணலாம். அவர் அனுபவித்து வெளியிட்டபடி ஸ்ரீராமபிரானின் திருமேனியை ஸேவிக்கலாம். அவரது கானத்தில் அமைந்துள்ள கருத்தாழத்தை உணரலாம். நம் கண்முன்னே இவை அனைத்தையும் கொணர்ந்து நிறுத்துகிறது இந்த நூல்கள். அவ்வளவும் அநுபவத்தில் தோன்றியவை. வடமொழியில் நல்ல புலமையும் தேர்ச்சியும் ஸ்பஷ்டமான உச்சாரணமும் ஸங்கீதமும் நிறைந்துள்ளபடியால் சொல்லோவியம் கருத்தாழத்துடன் ஒளிர்வது கண்கூடு. சில இடங்களில் புதிய சொற்களைக் கையாண்டிருப்பது - ஸ்ரீத்யாகப்ரம்மத்தின் பாட்டுக்களின் ஊறிய ஊற்றத்தால் ஏற்பட்டது.

மேலும் இவர் ஸ்ரீத்யாகப்ரம்மத்தைப் பற்றி அத்புதமான சரணாகதி கத்யமும் மங்கலாஷ்டகமும் எழுதியுள்ளார். வடமொழி இலக்கியத்தில் கத்யகாவ்யங்கள் மிகவும் குறைவு. "கத்யம் கவீநாம் நிகஷம் வதந்தி" [கத்யகாவ்யம் கவிகளை உறைபோட உறைகல் என்பதாய் ஆன்றோர் பகர்வர்] என்று ஒரு பழமொழி உண்டு. சந்தஸ் (சுலோகங்கள்) ஆகில்

"சுலோகத்தில் விருத்தம் சேர்வதற்காக இந்த சொல்லைப் பயன்படுத்தினேன், இப்படி பிரித்துப் பொருள் கூறவேண்டும்" என்பது போல் ஏதேனும் காரணம் கூறி தப்பிக்கலாம். "ஸ்வாயந்தே சப்த ப்ரயோகே கிமிதி அவாசகம் ப்ரயுஜ்யதே" [சொற்றொடர்களை தன்விருப்பப்படி அமைக்க வழியுள்ளபோது வருந்தி பதங்களை எழுதுவது கூடாதன்றோ?] என்றபடி கத்ய காவ்யங்களில் சில நியமங்களை மீறுத நிலை உண்டு. இவை யாவும் இங்கு நன்கு அமைந்துள்ளது. இந்நோக்கில் இந்த கத்யம் தலைசிறந்து விளங்குகிறது. இது இவரது சிறந்த புலமைக்கு ஒரு சான்று. பக்தியின் பெருக்கால் இது வெளியிடப்பட்டது. அதுபோல் மங்களாஷ்டகமும் அழகாக அமைந்துள்ளது. இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஸகல ச்ரேயஸ்ஸுக்களும் அமையும் என்பது உறுதி.

இந்த மிகச் சிறந்த கவயித்ரீ சில காலம் சேலம் சாரதா கல்லூரியில் கணிதப் பேராசிரியையாக இருந்தார். கிளியைப் பழக்குவிக்குமாப்போலே தமது இரு பெண் கிளிகளுக்கு பாவனையையும் பதிவிசையும் போல் உணவோடு இரண்டற ஸங்கீதத்தையும் குழைத்து ஊட்டி வருபவர். குடும்பப் பணிகளைச் செவ்வனே செய்து மகிழ்வார். இத்தகைய இம் மாணிக்கத்தை ஸ்ரீத்யாகப்ரம்ம பக்தியே உருவான பெண்மணியைப் பெற்ற படைத்த - வரப்பெற்ற குடும்பங்கள் சிறப்பெய்தின. இவரது துணைவரும் பெருந்தகையாளர்.

இந்த நூல்களை நான் அடிமுதல் கடை வரை படித்து மகிழ்ந்தேன். ஆங்காங்கு நேரிலேயே ஸ்ரீத்யாகப்ரம்மத்தை ஸேவித்த உணர்வை அடைந்தேன். பூரண மனநிறைவு எய்தினேன். இந்நூல்களை வெளியிட்டு பெரும்புகழையோ பதவியையோ அடைய இவருக்கு எண்ணமில்லை. ஸ்வாநுபவத்துக்காகவே இதை எழுதினார். ஆயினும் "பாத்ரஸ்த்தம் ஆத்மஜ்ஞானம்ச ஸந்த்வா தர்மம் ஸமாசரேத் ந அந்தர்தாய ஸ்வயம் யாதி ஜகத் பீஜம் அபீஜகம் நத்" [தன்னிடமுள்ள சிறந்த ஜ்ஞானத்தைத் தகுந்த பாத்திரங்களுக்குக் கொடுப்பதாகிய தர்மத்தைச் செய்யவேண்டும். தன்னோடு இக்கலைமறைய விடலாகாது. உலகில் விதை அற்றுப் போகக்கூடாதே] என்ற பகவந் நியமனத்தை அடியொற்றி இதை அச்சேற்றி வெளியிட ஸம்மதித்தார். ஆகவே பால்யம் தொட்டு கங்கையில் புனித நீராடுவதையும், த்ரிவேணியில் ஸ்நாநமும் விரும்பும் இவருக்கு ஸ்ரீத்யாகப்ரம்மத்தின் ஸங்கீத கங்காஸ்னானமும், பாவ-ராக-தாளமாகிய த்ரிவேணி ஸ்நாநமும் தினமும் கிடைத்து வருவது பகவத் ஸங்கல்பமே. இவரது சிறந்த இத்தகைய தொண்டுகள் சிறக்க பகவானை ப்ரார்த்திக்கிறேன். இத்தகைய் நற்செயல்களை வெகுவாக அடிக்கடி செய்துகொண்டு பல்லாண்டு பல்லாண்டாய் இவர் ஸகுடும்பம் ஷேமமாய் இருந்து வாழ அந்த த்யாகப்ரம்மத்தையே ப்ரார்த்திக்கிறேன்.

வாஸனானுபவ பூமிகை

அணிந்துரை

ஆசார்யனைக் காட்டிலும் ஸத்குருவைக் காட்டிலும் உயர்ந்த தெய்வம் ஒன்றிருப்பதாக நாங்கள் எண்ணோம் என்றார் ஸ்ரீவேதாந்த தேசிகன். மேலும் 'மந்த்ரே தீர்த்தே த்விஜே தேவே தெய்வக்ஞே பேஷஜே குரௌ யாத்ருசீம் பாவனாம் குர்யாத் ஸித்திர்பவதி தாத்ருசீ' என்ற சுலோகமும் குருவினிடத்தில் பக்தி செய்பவனின் பெருமையைப் பேசுகிறது. "தேவமிவ ஆசார்யம் உபாஸீத" என்று வேதமும் ஓதியது.

ஸ்ரீத்யாகராஜரை அறியாத ஜீவன் இன்றில்லை. அவர்தம் பெருமை வாக்குக்கும் மனதிற்கும் எட்டாதது. ஸங்கீதத்தின் ஒளியாய் விளங்கிய அம்மஹான் உலகம் காக்க வந்த பரம்பொருளே என்ற திடமான விச்வாஸமுடையவர்கள் விண்ணுளாரிலும் சீரியர்.

எந்தரோ மஹானுபாவுலு என்பர் ஸ்ரீத்யாகப்ரம்ஹம். மஹானுபாவர்கள் எங்கிருப்பர் எவ்வாறிருப்பர் என்பதையும் எளிதில் அறிவது கடினம். இத்தகையோர் எக்காலத்திலும் தோன்றலாம். பக்தர்கள் தமது அனுபவத்தின் பரீவாஹமாகப் பல அனுபவங்களை உள்ளடக்காமல் வெளியிடுகின்றனர். அது உலகுக்குப் பரம லாபமாக அமைகிறது. இவ்வாறு பக்தி வெள்ளத்தினால் தோன்றும் துதிநூல்கள் மிகமிகச் சீரியவை. தெய்வீகத்தன்மை வாய்ந்தவை. காலதத்துவமுள்ளளவும் விளங்குபவை. இவ்வகைத்துதிநூல்கள் பெருமை தருவதுடன் பெருமையோடு விளங்குகின்றன.

ஈடுபாட்டின் மிகுதியே தெய்வீகத் தன்மையாகும். இத்தகைய ப்ரவ்ருத்தி யோகிகளுக்கோ மகரிஷிகளுக்கோ தோன்றினால் வியப்பில்லை. ஸம்ஸாரத்தில் ஸுக, துக்கங்களுக்கிடையே ஒருவரிடமிருந்து தோன்றினால் அவர் தெய்வாம்சம் பெற்றவர் என்பதில் எவ்வித ஸந்தேகமும் இல்லை. முன்பிறவிகளில் யோகம் உச்சநிலையடைந்து ஒருகாரண விசேஷத்தால் அப்போது அது பலன் தராமல் மறுபிறவியில் பயன் அளிக்கத்தொடங்கும் என்பதையும் ஒருவாறு உணரலாம்.

இவ்வடிப்படையில் இன்று அத்புதமான நாமாவளிகள் நூறு, முன்னூறு, ஐந்நூறு, ஆயிரம் என்ற கணக்கில் தோன்றுகின்றன என்றால் இதனிலும் வியக்கத்தக்கது வேறொன்றில்லை.

திருக்கோவலூர் என்பது வைணவ மரபில் நடுநாட்டுத் திருப்பதி எனப்படும். இங்கு உலகளந்த பெருமாள் ஆயனாராய் ஸேவை ஸாதிக்கிறார். இங்கு கோயில் கொண்டுள்ள தாயாரின் பெயர் புஷ்பவல்லி. இவளுடைய திருநாமம் சூடப்பெற்று தனித்திருவுடன் விளங்குபவர் ஸ்ரீமதி புஷ்பவல்லி ஸ்ரீவத்ஸன். சாந்தி, விரக்தி, பக்தி இவற்றை அணிகலமாகப்

பெற்றவர். இவருடைய பக்வமான மனோநிலையால், வைராக்யம், விவேகம், விழிப்புணர்ச்சி ஆகியவற்றால் பெருமை பெற்றிருக்கிறார். உண்ணும் சோறு, பருகு நீர், தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன் எம்பெருமான் என்ற நம்மாழ்வாரின் நிலையை மெய்ப்பிக்கும் வண்ணம் த்யாகப்ரம்ஹத்தையன்றி வேறில்லை எனும் நிலையில் அனவரதத்யானத்தினால் அவரிடத்தில் அனுராகமும் உலகியலில் வைராக்யமும் அமையப் பெற்று சாந்தி ஸ்வரூபியாய் இருக்கிறார்.

கணிதத்தில் சில ஆண்டுகள் கல்லூரிப் பேராசிரியையாய்ப் பணியாற்றியும் 'நிதி த்ஸால ஸுகமா' எனும் ஸ்ரீத்யாகப்ரம்ஹத்தின் வாக்குக்கேற்ப எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஸத்குருவின் திருவடிகளே கதி என்று அவர்தம் பணிக்குத் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்துக் கொண்டுள்ளார். ஸத்குருவின் திருவுள்ளத்தை திருவாணையாகவும் பெருந்துணையாகவும் கொண்டு பக்தர்கள் விரும்பும் ஏகாந்த அனுபவ நிலையை தனக்கு உரியதாக்கிக் கொண்ட பெருமை இவரிடத்தில் விளங்குகிறது.

உலகின் பாக்யத்தாலும் இவரது தவப்பயனாலும் த்யாகப்ரம்ஹத்தைப் பற்றிய இந்நாமாவளிகள் அவதரித்துள்ளன. அத்புதமான த்யாகப்ரம்ஹத்தில் ஈடுபட்டு நெஞ்சாழும் கண் சுழலும் என்கிற உன்னத நிலையை அடைந்து பல திவ்ய நாமாக்களைத் தொகுத்து அஷ்டோத்தரசதம் - த்ரிசதீ - பஞ்சசதீ - ஸஹஸ்ரம் என்ற கணக்கில் அனுஸந்தானம் பண்ணியிருக்கிறார்.

த்யாகப்ரம்ஹத்தையே குருவாக உபாஸித்து அதனால் திவ்யமான கானத்தில் ப்ராவீண்யம் பெற்றவர். நாமாவளியை ராகங்களோடு அமைத்து நாள்தோறும் த்யாகப்ரம்ஹத்தை அர்ச்சித்து வருபவர். த்யாகப்ரம்ஹத்தில் லயித்து அப்பொழுது அவர்தம் அருளால் கிடைக்கும் நாமாக்களை அப்படியே தொகுத்து வைப்பது இவர் கையாண்ட முறை. த்யானிக்கிறார் - உளம் கரைகிறார். உடனே அழகான ஸம்ஸ்க்ருதத்தில் திருநாமங்கள் தோன்றுகின்றன. இவர் உபாஸிக்கும் ஸத்குருவின் அனுக்ரஹத்தை இங்கு முழுமையாகக் காணலாம்.

நாமாவளி இயற்றுவது பூர்ணப்ரக்ஞர்களுக்குதான் ஸாத்யமாகும். பகவந்நாமாக்களைச் சொல்வதே பெருமை. அவ்வாறு நாமாவளியை இயற்றுவது ஸாதாரணமான செயலன்று. பகவானுடைய ஸங்கல்பமும், அனுக்ரஹமும் தனது கடுந்தவமும் ஆசார்யனுடைய ஆசியும் பிறவிப்பயனும் சேர்ந்தாலன்றி இது எவ்விதத்திலும் ஸாத்யமில்லை. கருவிலே திருவுடையவர்களே இதற்கு அதிகாரிகள். இக்காலத்திலே எதை எதையோ எழுதுவதும், சேராததையெல்லாம் எழுதுவதும் சொன்னதையே திரும்பத்திரும்ப எழுதுவதும் கேவலம் எழுத வேண்டுமென்று எழுதுவதும் வழக்கமாகி வருகிறது. இதற்கு முற்றிலும் நேர்மாறாக அத்புதமாக பக்திரஸ போஷமாக திவ்யநாமங்களாக இவர்தம் நாமாவளி அமைந்துள்ளது என்பது மிகையாகாது.

ஒருவரே நூற்றெட்டு, முன்னூறு, ஐந்நூறு, ஆயிரம் என்று இதுவரை யாருமே நாமாவளி இயற்றியதில்லை. ஆயிரத்தில் எல்லாம் அடங்குமே என்ற கேள்விக்கு இங்கு இடமில்லை. முதலில் தோன்றியது அஷ்டோத்-

தரசதம். ஈடுபாடு அதிகமாக ஆக த்ரிசதீ தோன்றியது. பிறகு நவநவமாக நாமாக்கள் தோன்றவே பஞ்சசதீ ஆயிற்று. மேலும் உள்ளடங்காத பக்தி இதுவும் பர்யாப்தமன்று என்று தோன்றவே ஆயிரம் திருநாமங்கள் தோன்றிவிட்டன. ஸத்குருவின் அனுக்ரஹ வெள்ளத்தை அணைபோட்டுத் தடுக்க யாரால் இயலும்! எல்லாமே போக்யமாக அமைந்துவிட்டபடியால் தனித்தனியே பெயர்களிடப்பட்டுவிட்டன. த்ரிசதீ, பஞ்சசதீ, ஸஹஸ்ரம் இவற்றைப் பூரணமாகப் பாராயணம் பணண முடியவில்லை என்பவர்களுக்கு ஒவ்வொரு நூறு முடிந்ததுமே எட்டு நாமாக்கள் இணைக்கப்பட்டன. இவ்வாறாக த்ரிசதீயில் 324 நாமாக்கள், பஞ்சசதீயில் 540 நாமாக்கள், ஆயிரத்திலும் 1080 நாமாக்கள். இவ்வண்ணம் 144 நாமாக்கள் அதிகமாய் அமைந்ததே தனி அஷ்டோத்தரசதமோ என்று கூடக்கூறலாம் போலும். ஸத்குருவுக்கு எவ்வளவு நாமாவளி ஸமர்ப்பித்தாலும் போதாது என்ற திடமான எண்ணம் இங்கு நடைபோடுவதைப் பார்க்கும் போது பக்தலோகம் வியக்காமல் இருக்கமுடியாது. திருநாமங்களை வரிசைப்படுத்தியிருப்பதும் மிகவும் உன்னதமானது. த்யாகப்ரம்ஹத்தை ஸத்குருவாகவும் ராமனாகவும் ஸங்கீதஸ்வரூபமாகவும் தனது ஸர்வஸ்வமாகவும் பாவித்திருப்பது பரம போக்யமாயுள்ளது. த்யாகப்ரம்ஹத்தை இவர் காணும் பார்வை அலாதியானது. இதுவரை இந்நோக்குப்பெற்றார் யாரும் இல்லை. ராமனாகப் பார்க்கிறார். ராமபக்தனாகப் பார்க்கிறார். பரம்பொருளாகப் பார்க்கிறார். ஸங்கீதமாகப் பார்க்கிறார். ஆசானாகப் பார்க்கிறார். ஆசை தெய்வமாகப் பார்க்கிறார். ரஸமாகப் பார்க்கிறார். தனக்கு எல்லாமாகப் பார்க்கிறார். என்னே இவரது பார்வை!

இவரது படைப்பு விசித்திரம். இவரது எண்ணங்கள் விசித்திரம். இவரது எழுத்தும் விசித்திரம். இவரது போக்கே விசித்திரம்! புலவர்கள் எண்ணியும் பார்க்கமுடியாத படைப்பு, பாரிப்பு, பூரிப்பு. தனது நிலையிலிருந்து யார் என்ன சொன்னாலும் எப்படி சொன்னாலும் இவர் மாறுவதில்லை. அசைக்கமுடியாத தன்னம்பிக்கையும் த்யாகப்ரம்ஹத்திடம் இவருக்குள்ள பக்தியுமே இதற்குக் காரணம் என்று அறியமுடிகிறது. வர்ணனைகளில் இவர் காட்டும்படியான நிலை வியக்கவைக்கிறது. 108 தந்தவேகம் 324 படி உயர்ந்தது. ஏக்கமும் உளக்கிளர்ச்சியும் 540 தோன்றச் செய்தது. பக்திக்கும் ஆசைக்கும் வரையுண்டோ! 1080 நாமாக்களை உதிர்த்தது. புஷ்பா என்ற தாமரை மலரிலிருந்து 1080 தளங்கள் த்யாகப்ரம்ஹத்தின் திருவடிகளில் உதிர்ந்தன. என்னே!

2052 நாமாக்கள். பகவானுக்குக்கூட இவ்வளவு இல்லையே! இதில் ஒரு அதிசயம். வந்த சொல் வரக்கூடாது என்ற பிடிவாதமும் தென்படுகிறது. நாமாக்கள் நவநவமாக மிளிர்கின்றன. இது முனிவர்களுக்கும் ஸாத்யமாகாத படைப்பு.

பக்திநயம் என்ற வேரில் கிளம்பி, பாவநயம் என்ற கப்பும் கிளைகளும் கொண்டு ராகநயம் எனும் பூக்களை உதிர்க்கும் புஷ்பாவின் படைப்பு அதிசயம். புலவர்களுக்கும் புல்லரியச்செய்யும் பாணி. வீணைமீட்டும் மங்கையின் நடனம் வீணைமீட்டும் இம்மங்கையினிடம் அரங்கேறுகிறது.

இயற்கையில் இவரது அனுபவங்கள் கவிலோகத்தைக் குதூகலிக்கச்-

செய்கின்றன. இமயமலைச்சாரலில், கங்கையின் கரையினில், கடலின் தோற்றத்தில் இவர் தனது உள்ளத்தை அள்ளிக்கொடுத்து அதை த்யாகப்பிரம்ஹத்திடம் அர்ப்பணித்துள்ளார். பொதுவாக இது புலவர்களுக்கு ஒருவிதமான விளக்கத்தைத் தந்தாலும் அவரது விளக்கம் மேலும் பரம போக்யமாயமைந்திருப்பது அதிஅழகு.

இந்த நாமாவளியில் ஸம்ஸ்க்ருதத்தின் நிஜமான தன்மையைக் காணமுடிகிறது. உண்மையில் சொல்லவேண்டுமானால் இத்தகைய ஸம்ஸ்க்ருதத்தை இன்று புரிந்து கொள்ளும் புலவன் உளனா என்ற ஐயப்பாட்டினையும் உண்டாக்குகிறது. நாமாக்கள் சிறியனவாயும் பெரியனவாயும் அமைந்துள்ளன. ப்ரஸித்தமான சப்தங்கள் பல இருப்பினும் கேட்டிராத பல அத்புத சப்தங்கள் ஆங்காங்கே இடம் பெற்றுள்ளன. ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமானால் அமுதத்திற்கு பேத்வம் என்பதும் ஸ்வர்ணத்திற்கு ஸானஸி என்பதும் மேகத்துக்கு முமுசான என்பதும் பண்டிதர்களை சிந்திக்க வைக்கிறது. நாமாவளியில் நாமங்களின் அடைவு படிப்படியாகப் பெருமைகளைப் பெருக்கியவண்ணம் அமைந்துள்ளது.

அன்றியும் ஆங்காங்கு புஷ்பா என்கிற தனக்குத் தனியருள் செய்த த்யாகப்ரம்ஹத்துக்கு ச்லேஷையாக அமைத்திருப்பது மிக மிக ரஸமானது. அங்கெல்லாம் புஷ்பம் - மலர் என்ற பொருள்தான் முதலில் தோன்றும். இது ஸத்குருத்யாகராஜஸ்வாமியே ஒவ்வொரு கீர்த்தனத்திலும் த்யாகராஜநுத என்று காட்டிக்கொடுத்த வழியாமே! பல இடங்களில் சிஷ்ய, பக்த என்றெல்லாம் பொது சப்தங்களே ப்ரயோகித்திருப்பினும் தன்னிலையை உணர்த்தியிருப்பதுவாகவே சாலப்பொருத்தமாக அமைகின்றன.

ஒவ்வொன்றிலும் தொடக்கத்தில் ஒரு காயத்ரியை அமைத்திருப்பது ரஸம். இதற்குப்ரேரணைதான் முக்ய காரணம் என்று தோன்றுகிறது.

இவ்வாறாக புஷ்பா என்கிற பக்த கவிமணியின் படைப்பான இத்துதிநூலில் காணப்பெரும் பெருமைகளை உள்ளொளிகளைப் பல கோணங்களில் பார்க்கிறோம். புஷ்பா - ராகத்துடன் படைத்தது இது. ராகத்தின் மறுபெயர் பக்தி. ஆதலால் புஷ்பா ராகப் படைப்பு என்று பார்க்கும்போது இது புஷ்பராகம் என்கிற ரத்தின வகையைச் சேர்ந்தது என்பதில் ஐயமில்லை. வைரத்தில் தோஷம் ஏற்படுவதுண்டு. ஆனால் மெல்லிய உள்ளமும் திடமான பக்தி விச்வாஸமும் பல கோணங்களில் பளபளக்கும், புஷ்பாராகப் படைப்பு குற்றமற்ற, குணமுள்ள மதிப்பிடமுடியாததோர் ரத்தினம்.

அஷ்டோத்தர சத நாமாவளி, த்ரிசதீ, பஞ்சசதீ, ஸஹஸ்ர நாமங்கள் பாடியும் நேருக்குநேர் சம்போதித்து தான் அடைக்கலம் என்று சொல்ல உள்ளடங்காத பக்தி ப்ரவாஹத்தால் உந்தப்பட்டு உதித்தது இவரது சரணாகதி கத்யம் எனும் மஹா கத்யம். அத்புதமான கல்பனை வளத்தால் புலவர்களுக்கும் புதிராகப் புதிய பாணியை கையாண்டுள்ளார். பல சப்தங்கள் இவரிடத்தில் விளையாடுகின்றன என்பதில் ஐயமில்லை. பொருள் எளிதில் புரியாவிட்டாலும் செவிக்கினிய சொல்லணி மெய் சிலிர்க்கச் செய்கிறது. எடுத்தோம் பார்த்தோம் ரஸித்தோம் என்று

சொல்லி வைத்துவிடும் நூலல்ல இது!

நாமாவளிகளால் லயித்த அவர் அடங்காத பக்தியினால் அத்புதமான கத்யத்தை இயற்றியபின் தனது குருதேவனுக்கு மங்களம் பாட வேண்டாமா என்று ஏங்க, த்யாகப்ரம்ஹத்தின் ப்ரேரணையால் மங்களாஷ்டகமும் தோன்றியுள்ளது. த்யாகப்ரம்ஹத்துக்கு எவ்வளவு எழுதினாலும் போதாது என்னும் பிடிவாதம் வியக்கச் செய்கிறது. பக்தியின் பரீவாஹத்தால் தனித்ததொரு ஸ்வானுபவத்துடன் இயற்றப்பட்ட இம்மங்களம் மிகவும் உயர்ந்தது. இவ்வத்புதமான அஷ்டகத்துடன்

புஷ்பாநுராக₃ஸங்கீ₃தம் த்யாக₃ராஜார்ய மங்க₃ளம் ।
யே கா₃யந்தி ஸதா₃ ப₄க்த்யா தேऽபி மங்க₃ளபா₄ஜனம் ॥

என்று சேர்த்து அனுஸந்திப்பது ஸர்வமங்களத்தையும் உண்டாக்கும் என்பது திண்ணம்.

இவ்வாறு அஷ்டோத்தரசதம், த்ரிசதீ, பஞ்சசதீ, ஸஹஸ்ரம், சரணுகதிகத்யம் என்று ஐந்து ரத்தினங்களை மங்களாஷ்டகம் என்னும் புஷ்பவர்ஷத்துடன் பஞ்சநதக்ஷேத்திரத்தில் தோன்றிய த்யாகப்ரம்ஹத்துக்கு ஸமர்ப்பித்து நிறமும் மணமும் பெறுகிறார் ஸ்ரீமதி புஷ்பா ஸ்ரீவத்ஸன். இவருடைய பாக்யம் இவருடைய ஞானம் - இவருடைய பக்தி - இவருடைய வ்யவஸாயம் நம் மனதிற்கும் வாக்குக்கும் எட்டுவதில்லை.

மனுஷ்யாணும் ஸஹஸ்ரேஷு.............. கஸ்சித் மாம் வேத்தி தத்வத: என்றான் கீதாசாரியன். கீதாசார்யனான த்யாகப்ரம்ஹத்தை உண்மையில் அறிந்தவர் ஸ்ரீமதி புஷ்பா ஸ்ரீவத்ஸன்.

த்யாகராஜரின் க்ருதிகளைப் பாடலாம். அவருக்கு மண்டபங்கள் கட்டலாம். அவரை தெருக்களில் எழுந்தருளப்பண்ணலாம். அவருக்கு கோடிக்கணக்கில் பணத்தை அர்ப்பணம் பண்ணலாம். ஆனால் அவை எல்லோருக்கும் எல்லோராலும் செய்யப்படுவையே. தனிப்பெருமையும் வைலக்ஷண்யம் தோன்றுவதில்லை! **ஆனால் ஸ்ரீமதி யோகிச்ரேஷ்டையான புஷ்பாவின் படைப்பு சாச்வதமானது. நிகரற்றது. பிறரால் சிந்தித்துப் பார்க்கக்கூட இயலாதது என்பது ஸத்யம்.**

இவரை வெளியே காணவில்லை. பகட்டில்லை, பற்றில்லை, படாடோபமில்லை, பாசமில்லை, நேசமில்லை, ஸம்ஸார பந்தத்திலும் பற்றில்லை, ஆனால் இவருக்கு த்யாகப்ரம்ஹம்தான் உண்ணுஞ்சோறு பருகும் நீர், தின்னும் வெற்றிலை எல்லாம் கண்ணன் என்கிற கணக்கிலே அமைந்து விட்டது. த்யாகப்ரம்ஹத்தைக் கெஞ்சுகிறார். உடனே கொஞ்சுகிறார். சில ஸமயத்தில் மிஞ்சுகிறார். ஏகலைவன் மாதிரி தியாகப்ரம்ஹத்தை உபாஸித்து ஸாக்ஷாத்காரமும் பெற்று விட்டார் என்றே சொல்லலாம்.

பக்தியின் பரீவாஹமாக இந்த ரத்தினங்கள் அமைந்தன. இவை சிந்தாமணிகள். த்யாகப்ரம்ஹமே பெற்றுக்கொண்ட பெரும் புதையல். ஸங்கீத லோகத்திற்கு இதுவோர் வரப்ரஸாதம். தெரதீயக ராதா என்று வேண்டினார் அன்று. த்யாகப்ரம்ஹத்தின் பக்தி திரையை திறப்பது

போல் புஷ்பா என்கிற பக்தையைக் கொண்டு த்யாகப்ரம்ஹத்தை உலகம் உணரட்டும் என்று திரையை திறந்து அத்புதமான இந்த அஞ்சு ரத்தினங்களையும் தானே வெளியிட்டு மகிழ்கிறான் போலும். திருவேங்கடமே திருக்கோவலூரே என்று இணைத்துப் பேசினார் திருமங்கை மன்னன். தொடர்பு புரியவில்லை. இன்று இதை ஒருவாறு உணர்கின்றேன். திருக்கோவலூர் தேவியின் அருள் திருநாமம் பெற்ற ஸ்ரீமதி புஷ்பாவைக் கொண்டு பூவின் மணமென்னலாம்படி அவரிடம் தோன்றிய பஞ்சரத்தினங்களை நான் தானே வெளியிடவேண்டுமென்று உத்ஸாகத்துடன் திருவேங்கடமுடையோன் ஸாமகானலோலன் முனைந்துள்ளான். இதைக் காட்டிலும் இதற்கு வேறு சாக்ஷியோ அத்தாட்சியோ தேவை இல்லையே!

ஸ்ரீமதி புஷ்பாவின் படைப்புக்களில் வற்றாத ஸங்கீத ஊற்று உள்ளது. ஸங்கீதத்திற்கு மணம், ஸங்கீதயோகத்திற்கு நிறமாய் ஸ்ரீத்யாக ப்ரஹ்மத்திற்கு பலமாய், உலகுக்கு என்றும் அகலாத அருட்சுனையாய் இவை விளங்கட்டும். இவை ஸமீபத்தில் திவ்யநாம பஜனத்துக்கு ஏற்கப்பட்டு உலகம் பெருமை அடையட்டும்.

இவற்றை நாட்டுக்கு நல்கிய ஸ்ரீமதி புஷ்பா ஸ்ரீவத்ஸன் ஸகல ஸௌபாக்யங்களையும் பெற்று பல்லாண்டு பல்லாண்டு பெருவாழ்வு வாழட்டும் என்று திருவேங்கடமுடையானை இறைஞ்சுகின்றேன்.

இதைக்கண்டுகளிக்கும் வாய்ப்புதந்த அவர்தமக்கு தன்யவாதத்தையும் ஸமர்ப்பித்துக்கொள்கிறேன்.

பக்த ஸங்கீதலோகமே - என்னே உனது பாக்யம்!

தேசிக பக்தரத்னம்

ஸ்ரீநிவாஸ ராகவாசாரியார்

26-4-93 ஸேவா ஸ்வாமி.

ரஸானுபவம்

ஒவ்வொன்றாக இந்நாமாவளியின் பெருமையை எடுத்துச் சொல்வது ச்ரமஸாத்யம். சில இடங்களில் கேட்டதற்கு அத்புதமான ஸமாதானத்தைப் பெற்றேன். உதாரணத்துக்காக ஒரு இடம் சிஷ்ய மனோநாச காரகாய நம: என்பது. சிஷ்யர்களின் மனதை அழியச் செய்பவர் என்று பொருளாகாதா, இது தகுமோ என்றேன். மனோநாசம் என்ற நிலை ஏற்பட்டால்தான் ப்ரம்ஹானுபவம் ஏற்படும் என்று கூறியபோது உண்மையில் அதிர்ச்சி அடைந்தேன். மேலும் தன்னை மனதில் கொண்டே இந்நாமாவை எழுதியதாகவும் அறிந்தேன். இவ்வண்ணம் இன்னும் சில இடங்களை ஸமர்த்தித்த பாங்கு உண்மையான புலமையையும் அளவற்ற ஆத்ம விச்வாஸத்தையும் தெளிவாக்குகிறது.

ஒவ்வொரு நாமாவும் பரமபோக்யமாயும் அதி அத்புதமாயும் சொல்லுக்கப்பாற்பட்டதாயும் விளங்குவதால் சிலவற்றைக் குறிப்பிட்டு சிலவற்றைக் குறிப்பிடாமல் விடுவதா என்ற நிலை. 'அற்புதமான ச்ருஷ்டி' என்று இரண்டே சொற்களில் முடித்துக்கொள்ளலாம். நான் கண்டனுபவித்ததைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் சிலவற்றை மட்டும் குறிப்பிடுகிறேன். முழுதும் இந்நாமாவளியின் பெருமையைச் சொல்வது அஸாத்யம். ஆராய்ச்சியினாலேயே அறிய இயலும். ஒரு சில ரஸங்களை மட்டுமே குறிப்பிடுகிறோம் - விரிவுக்கஞ்சிய நிலையில்.

அஷ்டோத்தரசதம் :

காயத்ரியில் த்யாகராஜாய வித்மஹே நாதப்ரம்ஹணே தீமஹி தந்ந: ஸத்குரு: ப்ரசோதயாத் எனப்பட்டது. இதை விளக்கும் பாணியில் முதல் திருநாமம் நாதப்ரம்ஹாவதாராய நம: என்று அமைந்தது. முடிவில் ஸ்ரீத்யாகப்ரம்ஹ ஸத்குரவே நம: எனப்பட்டது. ஆதலால் அஷ்டோத்தரத்தின் சுருக்கம் அந்த காயத்ரீ என்று தெளிவாகிறது. 107வது திருநாமமும் ஸாக்ஷாத் பரப்ரமஹணே நம: என்று அமைந்ததும் அழகு.

ஸ்வரூபம் ரூபம் குணம் விபவம் ஐச்வர்யம் என்ற வரிசையில் நாமாக்கள் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஸத்வமூர்த்தயே (22) ஸ்ரீராமபக்தி ஸாம்ராஜ்ய சக்ரவர்த்திநே நம: (33) பாவந ஸௌசரிதாய நம: (47) ஸாக்ஷாத் ஸௌஸ்வரதேவதாயை (50) ச்ருதி சாஸ்த்ர விசாரதாய நம: (60) மோக்ஷமார்கதர்சகாய நம: (97)என்கிற நாமாக்கள் அமைந்திருப்பது அழகு.

த்ரிசதீ :

த்ரிசதியில் ஒவ்வொரு நூறிலும் ஒவ்வொரு விசேஷம் இடம் பெற்றுள்ளது. ராமராமாய வித்மஹே நாமரூபாய தீமஹி தந்ந: த்யாக: ப்ரசோதயாத் என்கிற காயத்ரியுடன் தொடங்குகிறது த்ரிசதீ. இதில் அத்வைதஸித்தி ப்ரதானந்த குரவே என்று தொடக்கத்திலேயே ஆனந்த

குரு என்பது காம்பீர்யத்தைக் காட்டுகின்றது. பல இடங்களில் சிஷ்ய சப்தம் ப்ரயோகிக்கப்பட்டிருந்தாலும் தனக்கு சிஷ்யை என்ற நிலையை வலியுறுத்துவதாகவே அமைகின்றது. இங்கும் அழகான பதப்ரயோ-கங்கள் மனோஜவஸ - வ்யூத - ஆதூசிதாய - ப்ரணேநீ - வரூத்ரே ரேபிணே, வரூத, குநாபயே என்பவை விரலப்ரயோகங்கள். பூரணமாக முதல் நூறில் குரு சிஷ்யபாவத்தை மையமாகக் கொண்டு நாமாக்கள் தோன்றியுள்ளன. ஆதலால் கடைசியில் ஸத்குருஸ்வாமிநே நம: என்று முடிக்கப்பட்டிருக்கிறது என்பதை எளிதில் உணரலாம். இங்கும் புஷ்ப சப்தத்தில் வாஸனையுள்ளது. புஷ்ப - ஆபூஜித - புஷ்பாபூஜித என்பன போன்ற பல நாமாக்கள். கவி மரபும் பக்தியின் மிகுதியும் இவ்வாறு அமைப்பதை பலப்படுத்துகின்றன. சிஷ்யாத்மதீபாய, சிஷ்ய ஹ்ருந்மந்-திராய சிஷ்ய சித்த நீராஜிதாய என்பதும் சரீரவ்யதா விமோக்த்ரே என்பதும் அனுபவபூர்வமாக அமைந்த நாமாக்கள் என்னலாம். இவ்வாறு ஒவ்வொரு நாமாவும் தனிப்பொலிவுடன் விளங்குகின்றது.

இரண்டாவது சதகத்தில் ஒருசில ரஸங்கள்:- ஸ்ரீராம நாமத்துடன் இணைந்தே நாமாக்கள் அமைந்துள்ளன. ஸங்கீதக்ஞான ஸூர்யன் என்று தொடக்கம். முன் அஷ்டோத்தரத்தின் முடிவில் ப்ராக்ஸந்த்யா எனப்பட்-டது. ஸ்ரீராமப்ரியாய நம: என்பது ராமனுக்கு ப்ரியமானவர் என்று பொருளுடன் மேல்கோட்டையில் உள்ள பகவானுக்கு ராமப்ரியன் என்றே பெயர் என்பதையும் உணரலாம். இங்கு ஒரு ரஸம் 137ல் பூர்ணமான சப்-தங்கள் ஒவ்வொன்றாக குறைந்து கொண்டே வந்து ராமப்ரியன் என்று முடிவதில் ஸங்கீத சாஸ்திரத்தில் கையாளப்படும் ஒரு கைவரிசையை (ஹஸ்தலாகவம்) கவனிக்கலாம். இது ஒரு ராமநாமாஷ்டோத்தரசதம் என்றே சொல்லலாம். ஒரு இடத்தில் தான் ரகுவர எனப்பட்டது. அத்-புதமாய் அமைந்துள்ள சில நாமாக்கள்; பாபவிராம ஸ்ரீராமநாமாவிராம கானாராமாய நம: என்கிற 176வது நாமம் வெகுவெகு அழகு. பாபத்-துக்கு விராமம் நாமத்திற்கு அவிராமம் - கானத்திற்கு ஆராமம் என்கிற அமைப்பு பரமபோக்யம். திகம்பர ஸ்ரீராமாவரண திவ்யவாகம்பராய நம: என்பது எப்படி என்பதற்கு ஸ்ரீத்யாக ப்ரம்ஹமே திகம்பர என்று கூறி-யிருப்பதை நினைவுபடுத்த என்று தெரிகிறது. அடுத்தபடியாக சிதம்பர எனப்பட்டதும் ரஸம், இதிலும் அத்புதமான பதப்ரயோகங்களைக் காண-முடிகிறது - ஸௌரப்யான - ஸந்தாநித-பேத்வவர்ஷக - முமுசாந - மந்தாக - அவரோகி - புங்ககார - ஸூரேப - தீதி - ரீண - க்ருத்ஸ முதலானவை. ராமராமாய வித்மஹே என்கிற காயத்ரியில் கூறப்பட்டது இந்த இரண்டாவது சதகத்தில் எல்லா நாமாக்களும் ராமநாமத்துடன் விளங்குவதால் விளக்கப்பட்டது என்பதும் ரஸம்.

இனி மூன்றுவது சதகத்தின் அமைப்பினைப் பார்ப்போம். ராமக்-ருஷ்ண கானானந்தாவதாராய நம: என்பது தொடக்கத்திலேயே ஆனந்தம் இடம்பெற்றது. சில நாமாக்களின் அமைப்பின் அழகை இங்கு குறிப்-பிடுவோம். க்ருஷ்ணன் விஷயமாக அமைந்த நாமாக்கள் பல. பாக-

வதஸமூஹத்திற்கு குன்றின்மேலிட்ட விளக்காய் விளங்குபவர் என்பதை அத்ரிதீபாய எனப்பட்டது. இங்கு நாமாக்களில் சப்தாவ்ருத்தி மிகவும் ரஸமானது. யாதவகுலதிலக காயகதிலகாய, நுதகீத பரமேசநுதகீதாய; கிரீச மனோஹர மனோஹர கிரீசாய; விநுதவாகதிபவிநுதவாகதிபாய; ரஸிகாக்ரேஸர ஸ்ரீராம ரஸிகாக்ரேஸர, பூஜாலோலபூஜாலோலாய, தாரா-தீச..... ஸ்வராதீச, வரிவஸிதவர வீர வீரவர தீரதீர ஸ்வராய, உரகராஜ - ராகராஜாய, மதநஜனக மோதந மதுர கீர்த்தன ஜனகாய; தராதிப..... ஸ்வராதிபாய என்பன போன்றவை மனதின் பக்வநிலையையும் உத்ஸா-கத்தையும் எடுத்துக் காட்டுகிறது. நவரஸ நிசயி, க்ருதிநிசயாயநம என்-பது ஸ்வானுபவத்தை தெளிவாக விளக்குகிறது. 277வது நாமமானது மிகவும் போக்யமானது - பக்தியில்லாத ஸங்கீத வித்வான்களின் கூட்டத்-திற்கு வெகு தூரத்தில் உள்ளவர் என்பது அவர்தம் கூறிய கருத்தினை அழுத்தமாக உணர்த்தும் பாங்கில் அமைந்தது. 278 முதல் அமைந்த நாமாக்கள் மிகமிக போக்யமானவை. 293 முதல் மரம் என்றும் நிழல் தரும் மரம் என்றும் கூறியதும் மேல் ஸ்வர்ண கங்கை, வாக் கங்கை குரு கங்கை என்று கூறியதும் 312 முதல் 317 வரை புஷ்ப(ா) சப்த ப்ரயோகமும் ஈடுபாட்டின் மிகுதியை குறிக்காமல் இருக்காது. 317வது திருநாமம் ரக்தானுராகஸ்துதிபுஷ்பாலயதைவதாய என்பது ரஸம். புஷ்-பாலய என்பதைக் கவனிக்கவேண்டும். துதி மலர்களால் அமைந்த கோயில் என்று பொருள் கொடுக்கப்பட்டிருந்தாலும் உட்பொருளை நோக்-கின் அநுராகத்தினால் மனம் கனிந்த புஷ்பா எனும் ஆலயம் என்பதும் சாலப்பொருத்தமாக அமைகிறது. தானே அவருக்கு, ஆலயம் எனபதில் தான் எவ்வளவு பெருமை. புஷ்பாலயம் என்றால் லதாக்ருஹம் என்பது பொருள். அனுராகம் ஏற்பட்டால் லதாக்ருஹம் போக்யம்தானே! 7வது திருநாமாவும் இதை நினைவூட்டுகிறது. இவ்வாறு ஒவ்வொரு நாமாவும் ஸ்வானுபவ பூர்வமாக ஹார்தமாக, அத்புதமாக, த்யாகராஜரத்னத்தைப் பல கோணங்களில் எடுத்துக் காட்டுவதாக அமைந்த இந்த நாமாவளி-யில் பொதிந்து கிடக்கும் பொருளின் பெருமை சொல்லுக்கு அப்பாற்பட்-டது என்பதை அனுபவித்து இவ்வண்ணம் தொகுத்துரைக்கும் பாக்யம் பெற்றேன். நறுமணமுள்ள மலர்போல் என்றும் வாடாத இப்புஷ்பாம-லர் த்யாகப்ரம்ஹத்திற்குப் பெருமணம் தந்து பெருவாழ்வு வாழச்செய்வது உறுதி உறுதி உறுதி.

பஞ்சசதீ

முதல் சதகம் : பஞ்சசதியின் அமைப்பினைச் சிறிது பாரப்போம். ஐந்து நூற்றெட்டுக்கள் இருப்பதால் இவற்றை முதல் சதகம் இரண்டா-வது சதகம் என்ற முறையில் வகுத்து அறிவது நலம்.

இதற்கு காயத்ரியில் அமைந்தது குருதேவாய என்பதும், முதலில் பஞ்சநதக்ஷேத்ர ஸஞ்சரித பரம குரவே நம: என்பதும் இடத்தைச் சுட்டிக் காட்டி குருதேவன் யார் என்பதை விளக்கும் முறையில் அமைந்தது. தொடர்ந்து திருமேனி வர்ணனம் இடம் பெறுவது ரஸம். 19, 20 நாமாக்-

கள் இவரது கனிந்த பக்தி நிலையைப் புலப்படுத்துகின்றன. குருவின் செயல் ஸந்தேகத்தைப் போக்குவதே. இது 24வது நாமத்தில் ஸம்சயச்சிதே எனப்பட்டது. எந்த விதத்தில் குரு என்பதை 36 நாமாவில் - ஸ்வரஸமுத்ரபார தர்சயித்ரே எனப்பட்டது. 43வது பெயர் அத்புதமாய் அமைந்துள்ளது. அனன்யோபாஸிகாயா: க்ஷணமப்யபரோக்ஷாய நம: என்பது எப்பொழுதும் தன் கண்முன்னே த்யாகராயர் காக்ஷியளிப்பதைக் காட்டுகிறது. அன்றியும் ஸஹஸ்ர நாமாவளியின் முடிவில் ஸத்குரோ: அனன்யோபாஸிகயா புஷ்பயா என்று கூறுவதால் இதற்கு விளக்கம் கூறப்பட்டது போலும். 60வது திருநாமத்தில் அநிர்வசநீய ஸ்வாதுமய வாக்ப்ரபாவாய நம: என்பது த்யாகராஜ கீர்த்தனையின் ப்ரபாவம் கூறப்பட்டது போலும். வாக்கின் இனிமை வாக்குக்கு எட்டவில்லையே என்பது ரஸம். 65வது நாமாவில் நவரத்னங்களைக் காணமுடிகிறது. ஸ்வர-ராக-லய-க்ஞான-பக்தி-வைராக்ய-பாவ-ஆனந்த--நாத-நவரத்ன கசித ஹாடக ஹ்ருன்மண்டப ஸ்ரீராமத்யானாபிநிவிஷ்டாய நம: என்கிற இடத்தில் ஒன்பது விஷயங்கள் குறிப்பிடப்பட்டன என்பதும் ரஸம். 70வது திருநாமம் புலவர்களை மோகிக்கச் செய்கிறது. இந்த நாமாவின் ரஸம் அவர் சொன்னபிறகுதானே புரிந்தது! யாந்த பாந்த நுதி தாந்த - தாந்த நிசாந்தாய நம: என்பதில் ரஸம் கவனிக்கவேண்டும். யாந்த - என்பது ரா வையும், பாந்த ம வையும், அவ்வாறே தாந்த -என்பது நாவையும் தாந்த என்பது த என்பதையும் குறிக்கும் என்பது ஆழ்ந்த புலமையைக் காண்பிக்கின்றது. 84 ல் ப்ரக்ஞான ஸூர்ய என்பதும் 91ல் மநச்சுத்திரஹித பூஜாதிரஸ்கர்த்ரே என்பதும், 92ல் ஸுசுத்தமானஸபுஷ்பார்ச்சன ஸ்வீகர்த்ரே என்கிற இடத்தில் தன்னையும் சுட்டிக்காட்டுவதும் ரஸம். 93ல் மௌனத்தை அகற்றுபவர் தானே ஸத்குரு. இவர் மனோமௌனகர ஸத்குருவாய் விளங்குகிறார் என்பதும் விழிப்புணர்ச்சியை உண்டுபண்ணுகிறது. இவ்வண்ணம் 103ல் தனக்கு அவர்தான் சொந்தம் அல்லது தன்னையே சொந்தமாக உடையவர் என்றும் உணர்த்துவது ரஸம். இவ்வண்ணம் பல அபூர்வமான உல்லேகங்களைக் கொண்டது பஞ்சசதியில் முதல் சதகம்.

இரண்டாம் சதகம் : அத்வைத ஸாராய என்று தொடங்கி டௌகித நாதப்ரம்ஹானந்த த்யாக ப்ரம்ஹ குருநாதாய நமோ நம: என்று இரண்டாவது சதகம் நிறைவு பெறுகிறது. அகாரத்தில் தொடங்கி வரிசையாக வர்ணக்ரமம் 4 சதகத்திலும் கையாளப்படுகிறது. அத்புத ஸாராய என்று தொடங்காமல் அத்வைத ஸாராய என்பதில் நிகரில்லாத ஸாரமாய் விளங்குவர் என்பதாகும். இது ரஸம். இங்கு ரிக்மிய என்பது அபூர்வசப்தம். 12 நாமாக்களுடன் உயிர் எழுத்துக்களின் தொடர்ச்சியில் ஈச்வரதர்சகாய, ஏகப்ரம்ஹணே, ஓங்கார ஸ்வரூபிணே என்பவை ரஸமானவை. அத்வைத என்று தொடங்கி ஔபநிஷதஸார என்று முடிப்பதும் பரமரஸம். பிறகு க காகிகீ என்ற அடைவில் 12 நாமாக்களை முடித்து க்ர என்று ஸம்யுக்தாக்ஷரத்தில் ஆரம்பித்து 17 நாமாக்கள். (125)ல் குலதந ஸ்ரீராமாவ்ருத்த ஜீவநாய என்பதும் (131) கோகில கான புஷ்பாஞ்ஜலி-

பாக்ய ப்ரதாய என்று தனது பாக்யத்தைக் கூறுவதும், 134 க்ராந்ததர்சீ (கவி) என்பதும் (147) க்ஷேமங்கராய என்பதும் 161ல் குருதேவாய என்பதும் 173 நாமாவில் கவர்கம் முடிவு பெற்றது. 205 வரை சவர்கம் முற்றுப்பெறுகிறது.

205 முதல் டவர்கம். இதில் 12 நாமாக்கள். 207வது நாமம் டிப்பணீபூத என்பது ரஸம். டௌகித - டேபித முதலான சப்தங்கள் ரஸமானவை. குருதேவனிடம் பெற வேண்டியது வர்ணக்ரமம் தான். ஸங்கீதத்திலும் வர்ணக்ரமம் உண்டு. ஆனால் இங்கு ஸ்ரேயாளப்படும். வர்ணக்ரமம் விலக்ஷணமானது. இம்மாதிரி அமைப்பதும் ஒரு புதுமையே.

மூன்றாவது சதகம் : இதற்கு முன் முடிவில் நாதப்ரம்ஹ எனப்பட்டது. இப்பொழுது தவர்கத்தில் மூன்றாவது சதகம் தொடங்குகிறது. தந்த்ரீ ஸ்வர ஸ்வராய என்பது முதல் நாமா. ப வில் முடிகிறது. இதில் அக்ஷரஸ்வாரஸ்யம் ஒருபுறமிருக்க, நாமாக்களின் அமைப்பு அதி அழகு. 4ல தீர்த்தீக்ருத பஞ்சநதக்ஷேத்ராய என்பது தீர்த்தீகுர்வந்தி தீர்த்தாநி என்ற ப்ரமாண வசனத்தை நினைவூட்டுகிறது. 226வது திருநாமமாக தோயாத்மநே என்பது அவரே தீர்த்த ஸ்வரூபம் என்றும் சுட்டிக்காட்டுவது ரஸம். 232 த்ரிதாபரஹிதாய என்பது மற்றவரை விட வைலக்ஷண்யம் காட்டுவதாய் அமையும். 243வதில் த்ருடபக்த ஸ்வீயாய என்பது தன்னையே குறிப்பது. 251ல் தன்னிலை குறிப்பிடப்பட்டது. 253லும் அவ்வாறே. த்ருவஸங்கீத ஸித்தயே என்பதும் 288ல் ராக தைவதம் என்பதும், 299ல் புண்யரூப ஸ்ரீராம தர்சனானந்த புண்யரூபாய என்பதும் 311ல் ப்ரிய பாஷிணே என்பதும், 312ல் ப்ரியங்கர குருநாதாய என்பதும் 315ல் ப்ருஷித மாநஸபுஷ்பாவச்யாய என்பதும் 324 பணிநாத தல்பக ஸாந்நித்யக காநநாத ஸ்ரீத்யாகராஜகுருநாதாய என்பதும் பரமரஸமான நாமாக்கள்.

தந்த்ரீஸ்வர ஸ்வராய என்று தொடங்கி கானநாத என்று முடிப்பதும் ஒரு அழகு. த்யாகராஜ கீர்த்தனங்களைக் குறிக்கும் வகையில் த்ராக்ஷா பாக ஸாம்ஸித்திக ஸுகீர்த்தன பாவகாய நம: எனப்பட்டது. அனுபவ பூர்வமான குறிப்பு. இவ்வாறு எவ்வளவோ சொல்லலாம்.

நான்காம் சதகம் : தொடக்கமே ரஸம் பலதாத்ருஸத்குரவே நம: என்று நான்காவது சதகம் தொடங்குகிறது. 328ல் பலித பரப்ரம்ஹம் எனப்பட்டது. புத்தியோகோபாச்ரித பக்த சித்த ஸதாச்ரிதாய என்கிற பொழுது தன்னைக் குறித்துக் கொள்வதில் நோக்கு இருப்பதாகத் தெரிகிறது. போதகுரவே, ப்ரம்ஹக்ஞாநிநே, ப்ரம்ஹஸ்வரூபாய ப்ராம்ஹ முஹூர்த்த நாதோபாஸன ப்ரியாய, பிந்நஹ்ருத்பிஷஜே என்ற வரிசையும் ரஸம். பிந்நஹருத் பிஷஜே என்பதற்கு மனம் உடைந்து நிற்பவருக்கு மருந்தாய் உள்ளார் என்று கூறுவது அனுபவ பூர்வகமானது என்று அறியமுடிகிறது. 350வது நாமம் பைரவி ராகத்தைக் குறிப்பிட்டது பைரவியின் காம்பீர்யம் மனதில் ஊன்றியிருக்கிறது என்பதையும்

காட்டுகிறது.

364வது நாமாவில் தனக்ஶ்ரேயுரியதான குறிப்பு போக்யமானது. தன்னை மூகவச்சிஷ்ய என்பதும், அவளைக் கொண்டு பஞ்சசதீ எழுதிக்கொண்டது பெருமை என்பதும், இதனால் அர்ச்சிக்கப்பட்ட குரு என்பதும் கவிமரபிற்குச் சேர மிக மிகப் பொருத்தமானது. அதே சமயத்தில் த்யாகராஜரை மௌனகுரு என்பதும் ரஸம். குரோஸ்து மௌனம் வ்யாக்யானம் சிஷ்யாஸ்துச் சிந்ந ஸம்சயா: என்று தக்ஷிணாமூர்த்தி விஷயமாக கூறப்பட்டது இங்கு இவள் விஷயத்தில் பொருத்தமாக அமைந்தது எனலாம். 380ம் ரஸம், 383, 384ல் ராகஹரனாயிருப்பவரே ராகவரதன் என்பது கவியின் உளப்பாங்கிற்கு ஓர் உதாரணம். 398ல் ரோகஹரராக நிர்ஜ்ஜராய நம: என்பது ராகத்தின் பெருமையை உள்ளபடி உணர்த்துகிறது. 408 வாக்வரதாய நம: என்பது தனக்கு வாக்கு அவரது வரப்ரஸாதமாக கிடைத்தது என்பதை உணர்த்துகிறது. 409 வாசாம் அகோசராய நம: என்று வியப்பினை உணர்த்துகிறது. 432ல் வேதஸார ஸ்ரீராம நாமநாத ஸாராய என்பது மிகவும் அழகு. சௌப ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிநே நமோ நம: என்று நான்காவது சதகம் முடிக்கப்பெற்றது.

இதில் பல அபூர்வமான சொற்கள் இடம் பெற்றுள்ளன.

ஐந்தாவது சதகம் : தொடக்கத்திலேயே ஸப்த ஸ்வர மூர்த்தி ப்ளப்படுகிறது. நாமாவளியில் நாமாக்கள் ஒவ்வொன்றையுமே குறிப்பிடலாமெனும்படி அதி அழகு. பாவகம்பீரம், கவியுள்ளத்தின் மென்மை, வாக்வளம் இவற்றை வியக்கும்படி பூரித்து நடைபோடுகின்றன. ஒவ்வொன்றின் பெருமையினையும் எடுத்துச் சொல்வது இயலாத காரியம் - ஒவ்வொரு நாமாவையும் உணர்ந்து அனுபவித்தே புரிந்துகொள்ள இயலும். ஸ்வானுபவ பரீவாஹமாகிய இந்நாமாவளியில் ஒவ்வொரு திருநாமாவும் பட்டை தீட்டிய வைரமாய்ப் பலகோணங்களில் ஜ்வலிக்கிறது. 515ல் ஹேமகும்ப ஹ்ருத்பூர்ணானுராக மத்வர்ப்பிதாய என்பது குருவிடம் கொண்ட அநுராகத்தினைக் காட்டுகிறது. 460 ஸங்கீத ஸத்மநே நம: 508ல் ஹாஸ்யரஸானுவித்த நிந்தாஸ்துதிராஜாயநம:, 511ல் ஹ்ருத்கத ஸத்குரவே நம:, 512 ஹ்ருதயபூர்வ பக்தி புஷ்பாஞ்ஜல்யாமோதிதாய நம:, 516 முதல் 526 வரை ஸ்வானுபவத்தை விவரித்து 527 முதல் நாதமயமான குருவிடம் லயிக்கிறார். 540 நாதப்ரம்ஹானந்த ஸத்குரு ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிநே நமோ நம: என்று இனிதே முடிக்கப்பெற்றது. மிகவும் ரஸமான ஸ்தோத்ரம், கம்பீரமான சைலி அழுத்தமான பக்தி. ஆழமான ஸம்ஸ்க்ருத ஞானம். குருவை உருக வைக்கும் படைப்பு. புலவர்களை மயக்குவிக்கும் விநோதம். தெய்வீகமான வாக்கு.

ஸஹஸ்ரம்

ஸஹஸ்ர நாமாக்கள் பகவானுக்கு உண்டு. எலலா நாமாக்களும் அவனுடைய குணங்களை - அவற்றை வெளியிடும் சரிதங்களை ஆதாரமாகக் கொண்டவை. அவற்றை பீஷ்மர் யுதிஷ்டிரருக்கு உபதேசித்தார். உல-

கங்கள் சேமமாக வாழவே ஸஹஸ்ரநாமம் தோன்றியது. பேருமோர் ஆயிரம் உடையன் என்று ஆழ்வாரும் இதை அறுதியிட்டார். ஆயிரநா-மாக்களைத் தொகுப்பது என்பது மஹா மஹாவித்வான்களுக்கும் சுலப ஸாத்யமில்லை. புனருக்தி சர்வித சர்வணம் என்கிற குறைகள் சிலவற்றில் குறைவாகவும், சிலவற்றில் அதிகமாகவும் இருக்கும். இது இயல்பு.

இருக்கிற ஸஹஸ்ரநாமத்தைச் சொன்னாலே பாபம் தாபம் சாபம் போகும். வேண்டியவை கிடைக்கும் என்பது தான் இன்றைய உல-கநிலை. இவ்வாறிருக்க ஆசார்ய தேவோ பவ என்ற சாஸனத்தின்-படி ஆசாரியனை தெய்வமாக உபாஸிப்பது பெயரளவுக்கு என்றிராமல் ஆசார்யபக்தியின் மேலீட்டால் செய்வதெல்லாம் போக்யமே என்ற நிலை இவரது. வரவேற்கப்பட்டதும் கூட.

மனக்கண்ணைத் திறந்து வைத்து ஆன்மவொளியை ஏற்றி வைத்து ஆனந்தத்தில் மிதக்கச் செய்யும் ஆசார்யனுக்கு எதைத்தான் செய்யக்கூ-டாது. பக்தியின் தாரதம்யத்துக்கு ஈடாக செயல்கள் அமைகின்றன. ஓர் கைம்மாறு மாயனும் காணகில்லான் என்பர் வேதாந்த தேசிகர்.

இவ்வண்ணம் ஸ்ரீத்யாகப்ரம்ஹத்தையே அல்லும் பகலும் உபாஸித்து அவரே எல்லாம் என்கிற எண்ணம் கொண்டு பக்தியின் பரீவாஹமாக ஒரு பரம பக்தையின் ஆர்த்தநாதமாக, ஆனந்தநாதமாக நாதப்ரம்ஹத்-துக்கோர் நாதாராதனமாகத் தோன்றியுள்ளது இந்த ஸஹஸ்ரநாமம். இது பூந்தோட்டத்தில் பூத்துக்குலுங்கும் மலர்மாரி போல் புஷ்பா எனும் நந்த-னவனத்தில் பூத்துக்குலுங்கும் வாடாமலர்களாய் உளத்தாபத்தையகற்றும் மணம் கமழும் மந்தமாருதமாய் அமைகின்றது. இது அதிசயோக்தியல்ல.

இவரது ஈடுபாடு விசித்திரம். முதலில் 108 நாமாக்களைத் தொகுத்தார். ஒன்றுக்கு மூன்று என்பது போல் த்ரிசதி ஏற்பட்டது. பஞ்சநத க்ஷேத்ரத்-துக்கு ஒரு பஞ்சசதீ வேண்டாமா! அதுவும் பூர்த்தியாயிற்று. அனன்ய பக்தியுடன் இவர் உபாஸிக்கும் ஸத்குருவின் ஸங்கல்பமும் இணைந்தது. ஆயிரத்துக்கும் மேற்பட்ட திருநாமாக்களைப் பொழிந்தார். 5.3.1 என்று சேர்த்தாலும் கொஞ்சம் நாமாக்களை சேர்த்தாலே ஆயிரம் ஆகிவிடாதோ என்று தோன்றவில்லையே! ஒன்றிலோ மூன்றிலோ ஐந்திலோ வராத நாமாக்களை ஏன் தொகுக்கலாகாது என்ற எண்ணம் இவரைத்தவிர வேறு யாருக்குத் தோன்றும்! இப்படியொரு ஈடுபாடா என்று வியக்காமல் இருக்க முடியவில்லை.

நாமாக்கள் அத்புதமானவை. சிறிய திருவடியைக் கண்டு அவனது பேச்சில் ஈடுபட்டு ராமன் வியப்பினில் ஆழ்ந்தது போலவே இவரது இந்த நாமாக்களின் படைப்பு வியப்பினில் ஆழ்த்துகிறது. புலமை பொலிகின்றது. பக்தி மிளிர்கின்றது. என்னே! இதைப் பூராவும் கண்டு களிக்கும் பாக்யம் பெற்றேன். புலமைக்குத் தலைவணங்குவதா பக்திக்-குத் தலைவணங்குவதா! ஸங்கல்பத்துக்குத் தலைவணங்குவதா! புரியாத நிலையில் தலை வணங்குகிறேன்.

எனது சிற்றறிவுக்கெட்டின வரையில் ஒரு சில ரஸத்தை மட்டும் கோடி காட்டும் வகையில் குறிப்பிடுகிறேன். கண்டு கொண்டதைப் பகிர்ந்து கொள்வதற்காகவேயன்றி வேறில்லை. ஸஹஸ்ரத்தில் ஒவ்வொரு சதகமும் தனித்தன்மையோடு நடையாடுகிறது. ப்ரதிபர்வரஸோதய: என்பர். அவ்வண்ணமே கரும்பில் கணுக்குக்கணு ரஸம் போலே சதகத்துக்கு சதகம் ரஸ பரிதமாக அமைந்துள்ளது பரமரஸம். விரிவுக்கஞ்சி ஒரு சில நாமாக்களை மட்டும் குறிப்பிடுகிறேன்.

முதல் சதகம் : நாததேவாய் தீமஹி என்கிற காயத்ரியில் த்யாகராஜர் நாதப்ரம்ஹம் என்று ஸூத்திரமாகச் சொன்னார். இதை விளக்கும் அடிப்படையில் ஸங்கீதாலயப்ரதிஷ்டித பகவதே என்று தொடங்குகிறார். 9, 10, 16ல் நாதப்ரம்ஹானந்த ஸ்வரூபாய, ஸுஸ்வர தேவதை, நாததேவதை என்ற வகையில் ஸ்வரூபத்தைச் சொல்லிப் பிறகு அவரது திருமேனியை வர்ணிக்கும் வகையில் நாமாக்களின் அமைப்பு ஈடுபாட்டின் மிகுதியைக் காட்டுகிறது. நாமாக்களில் பலவிதமான க்ரமங்கள் கையாளப்பட்டுள்ளன. ஸங்கீதமூர்த்தி ஸ்ரீராமமூர்த்தி என்பதும் 33ல் நாதோபாஸன ஸுஸ்வரபுஷ்பாபூஜித பத புண்டரீகாய என்பதும், 96இல் ஸுரகங்கை என்பதும், ஸங்கீத என்றே தொடங்கும் நாமாக்களும், இடையில் ஸங்கீத என்ற நாமாக்களும், நாத ஸ்வர கடித நாமாக்களும், நிறைந்தது இம் முதல் சதகம். இதில் வரிசைப்படுத்துவதும் அழகு. பக்தார்ச்ரவபிஷிக்தபாவன மூர்த்தயே என்பது ரஸம். நாதோபாஸன லாலஸா - தும்பரதாள ஸுநாதந கராரவிந்த என்று சித்திரிப்பது அழகு, ஆங்காங்கு அற்புதமான பதப்ரயோகங்கள் புலமைக்கு எடுத்துக் காட்டு. வீணா என்பதுடன் நாத என்பதை இணைக்காமல் ப்ரக்வண என்பது எவ்வளவு அழகாக இருக்கிறது! (41) மேலும் இந்த சதகத்தில் கங்கா ஸம்பந்தம் அதிகமாக இருக்கிறது. கங்காப்ரவாஹம் போல் நாமாக்கள் உந்துகின்ற பொழுது கங்கையே பல நாமாக்களில் இடம் பிடிக்கிறாள் போலும். ஸங்கீத க்ஞான கங்கை, கான கங்கோத்பேதம், கங்கா ப்ரவாஹம் கீர்த்தன கங்கை, கீத கங்கை வாக் கங்கை கங்கா தீர. கங்காஸ்நான - பஞ்சநதக்ஷேத்ர.......ஸங்கீத ஸுரகங்கை என்ற அடைவில் அமைந்த நாமாக்களில் ஒரு பக்தி கங்கையே ப்ரவஹிக்கின்றது. இது அத்யத்புதம். கல்பத்ருமம் என்றும், அதில் ஸங்கீத ஞானமே பலம் என்றும் கூறியதோடு நிற்காமல் ஸ்வாது பலம் என்று பிறகு கூறியதும் பரம ரஸம். மேலும் பலநாமாக்களில் திருமேனி வர்ணனம், படிப்படியாக இயற்கையமைப்பின் வர்ணனம் என்பவை ஸ்வானுபவ பரீவாஹத்தைக் காட்டுகின்றன. ஸங்கீதாபரநாமா ஸூஸ்வரதாமா என்று முடிவில் கூறுவதும் பாங்கே. இவ்வண்ணம் அழகான சொற்கள். அத்புதமான உல்லேகங்கள். அழகான வரிசைப்படுத்தல் இது அத்புதமான திவ்யகவிஸ்ருஷ்டியேயாகும். ஸங்கீத லோகத்துக்கோர் வரப்ரஸாதம்.

இரண்டாம் சதகம் : முதல் சதகத்தில் தொடக்கத்தில் ஸங்கீதாலய ப்ரதிஷ்டித தேவாய எனப்பட்டது. ஸஸ்மித ஸங்கீத தேவாய நம:

என்று தொடங்கி நாததேவாய என்று காயத்ரியில் கூறியது மேற்கொள்ளப்பட்டது. முடிவிலும் நாதாவதார த்யாகப்ரம்ஹ ஸத்குரு நாதாய எனப்பட்டதும் இதை வலுப்படுத்துகிறது. முதலில் ஸங்கீதத்தை அறிமுகப்படுத்துவது ஸமஞ்ஜஸம். ஸஸ்மித ஸங்கீதம் - ஸதாநந்த ஸங்கீதம் - ஸங்கீத ஸத்வம் - ஸதாதந ஸங்கீதம் - ஸத்ய: ப்ராணகர ஸங்கீதம் - என்பவை பஞ்சரத்னங்கள். த்யாகராஜரின் அவதார ரஹஸ்யத்தைக்கூறும் (120) ஸநாதந பரப்ரம்ஹஸகுணோபாஸன - ஸங்கீதமார்க ஸம்ஞாபநார்த்தாவதீர்ண பரமபாவநாய என்பது உள்ளதை உள்ளபடி உணர்த்துவதாம். 121 வது நாமா முதல் ஸ்ரீராம சப்தயோகம் 215வது நாமா வரையில் அத்புதமாய் அமைந்துள்ளது. நாதாவதாரம், நாதநதீ - நாதபர்ஜன்யன் நாத குஸுமாய, நாமோந்நாத நாத, நாதயோகி, நாதோபாஸன, நாதப்ரம்ஹானந்த... நாதாலய என்கிற நாமாக்களில் நாத சப்தத்தையே ப்ரயோகித்தது அழகு. 121வது நாமா பரிபூர்ணவதார ஸ்ரீராம - த்யான - நாமபஜன - ஸகுணகாந பரிபூர்ணர்த்தாய என்பதும், ஸங்கீத க்ஷீரஸாகர என்பதும் ஸங்கீத மத்ஸ்யாவதார என்பதும், ஸ்வமாநஸ சாமீகர பீட என்பதும் மிகரஸமானவை. இங்கு பூஜாவிதியும், உபசாரங்களை ஸமர்ப்பிப்பதும் அழகாக அமைந்துள்ளது. ஸ்ரீராமதேஜோமய விக்ரஹ த்யான பராய, கானலோல ஸ்ரீராம லோல, ஜிதராம ஜித மாநஸாய, ரமணீய நாம ராமாபிராம ச்ரோத்ராபிராமகான லீநாய முதலானவை போக்யமானவை. 209ல் வந்தத என்பது அபூர்வப்ரயோகம். 121வது நாமா முதல் ஸ்ரீராமனை இணைத்தே நாமாக்கள் தோன்றியுள்ளன. 123 முதல் 194வது நாமாவரை ஸ்ரீராம சப்தமே முதலிடம் பெற்றுள்ளது. 195 முதல் 215 வரை நாமாக்களில் ஸ்ரீராமன் என்கிற சப்தம் இடம் மாற்றம் செய்யப்பட்டதேயன்றி ஸ்ரீராமமயமாகவே உள்ளது அபிராமம். அடுத்த சதகத்தில் எல்லாமே ஸ்ரீராமமயம். இங்கு பொதுவாக கூறப்பட்டது. (123) ஸ்ரீராமன் என்கிற மலையில் தோன்றின தேவகான ஆகாசகங்கை, என்றாரம்பித்து கல்லோலிநீ, ப்ரவாஹம், பர்ஜன்ய, ஜீமூதஸ்வனம் ஜீமுதவர்ஷம் மதுகங்கா ப்ரவாஹம் என்கிற வரிசைக்ரமம் ரஸம். க்ஷீரஸாகரம் என்றும் கூறப்படுவதும் போக்யம். பல கோணங்களில் ஒரு விஷயத்தையே வர்ணிப்பது கைவந்தகலை. (176) ஸ்புரத் ஸஹஸ்ர கீர்த்தனம் ஸ்ரீராமவிபூஷணம் என்பதும் ரஸம். காகலிக்வணித, கிஷ்ணு, வந்தத போன்ற சொற்கள் அபூர்வமானவை. ரமணீயநாம - ராமாபிராம - ச்ரோத்ராபிராமகாந லீநாய என்பன போன்ற நாமாக்கள் எத்தனை முறைகள் சொன்னாலும் தெவிட்டாதவை. ஒவ்வொரு நாமாவிற்கும் விளக்கம் தருவது பாரதத்தை விஞ்சுமாதலால் அஞ்சி சில கூறினேன்.

மூன்றாவது சதகம் : இங்குள்ள 108 நாமாக்களில் புலமை - பொலிகின்றது. ஆழ்ந்தஅறிவும் பக்தியும் அனுபவமும் படைத்தாலன்றி இப்படைப்பு அஸாத்யம். சொற்களின் உபயோகம் பாவனையின் ஏற்றம் அத்புதம். சில நாமாக்களை எண்களைக் கொண்டு குறிப்பிடுகிறேன். விரிவுக்கஞ்சியே. ஸ்ரீராம சப்தத்திலேயே இணைந்து - அதையே முதலாகக்

கொண்டு நாமாக்கள் மிளிர்கின்றன. முதல் நாமா ராம சைதந்யாய என்பது. இப்பொழுது க்ருஷ்ண சைதந்யர் நினைவிற்கு வராமல் இருப்பரோ! ஸ்ரீராம ப்ரேமாவதாராய ஸ்ரீராமானுராக மூர்த்தி என்கிற தொடர்ச்சி ரஸம். 226 ஸ்ரீராமபக்தியோகாரூடாய, 244 ஸ்ரீராமநாம சர்க்கராமிச்ரித மிஷ்ட பாஷிணே, 245ல் புஷ்பாவலி, 248ல் ஸ்ரீராமநாம கட்கதாரிணே, 249 ஸ்ரீராம ஸ்மரண ரோமாஞ்சன கஞ்சுகினே, 254ல் ஸ்ரீராம தாஸ தாஸ ஸ்வமானினே, 277 ஸ்ரீராம மய ஜீவநாசரித மஹாக்ஞானினே, 284 ல் ஸ்ரீமத்ராமாயண பாராயண பராயணய, 288ல் ஸ்ரீராமபரத்வ பூயிஷ்ட க்ருதிரத்னத்யோதகாய, 291ல் ஸ்ரீராம தாரகரூப நிஜதத்வக்ஞாபகாய, 299ல் ஸ்ரீராம பாதார்ச்சன கீத புஷ்பாமோதவாஹினே, 308ல் ஸ்ரீராமாபிந்நாய 310ல் ஸ்ரீராம தாரக மந்த்ரகோசராய, 311ல் கம்யாய, 313ல் குஹ்யார்த்த ப்ரக்ஞானதாய, 319ல் ஸ்ரீராமப்ரேம குட்மலித ஹ்ருத்புஷ்பார்ச்சன ப்ரியாய, 320 சரணுகதி பாவமது நைவேத்ய ப்ரியாய 322ல் ஸ்ரீராமதாரக நாமானவரத ஜப பராயண சிஷ்ய(ா) - ப்ரியாய என்பவை அத்புதமாக அமைந்த சில நாமாக்கள். சில நாமாக்களில் தனக்கே யுரியதான சில தன்மைகள் கூடமாக காட்டப்படுவதும் அழகு. சில சொற்கள் வைதிக ரீதியை உணர்த்துகின்றன. ஸுநஸே, ஸுத்வநே, ஸேவ ஸுகினே, பரிஷ்டவன, ப்ரதிஸாந்தானிக, விமங்க்த்ரே, ஸங்கீத தநுஷே, ஸமஷ்டி வபுஷே முதலானவை. இவ்வாறு பல ரஸங்கள் கொண்டதாய் இந்த சதகம் அமைந்தது.

நான்காவது சதகம் : வர்ணக்ரமத்தில் 7 சதகங்கள். ஆசிரியன் மூலமாகத்தானே வர்ணக்ரமம் வேண்டும். ஆதலால் அநந்ய குரவே என்று தொடக்கம். அகாரத்தில் தொடங்கும் நாமாக்கள் 60. ஆகாரத்தில் 20 இகாரத்தில் 6, ஈகாரத்தில் 2, உகாரத்தில் 12, ஊகாரத்தில் 1, ருகாரத்தில் 6, ஏகாரத்தில் 2, ஆக 108 நாமாக்கள். முத்துக் கோத்தது போல் பளிச்சிடும் நாமாக்கள்.

இங்கு முதல் எழுத்தில் தான் நோக்கு, அனன்ய என்பது முதல் சொல் ஆனால் 345, 365, 366, 371, 372, 373, 380 என்ற நாமாக்களில் தொடக்கம் இந்த சொல்லே. ஒரே தொடர்ச்சியாக இருக்கலாமே என்று தோன்றினாலும் கருத்தின் வளத்தைக்கொண்டுதான் என்ற உணர்வும் ஏற்படுகிறது.

60 நாமாக்களில் சில நாமாக்கள்:- இங்கு நாதத்திற்கு முக்யத்வம் காணப்படுகிறது. 20 நாமாக்கள் இவ்வாறு ஒலிக்கின்றன. இவற்றுள் சில அத்புதமான நாமாக்கள்:- அனந்த நாத சக்தயே, அதிகஹந நாதாரண்யாய, அசிந்த்ய ரூபாய, அமித மாதுர்ய பத ப்ரயோக விசக்ஷணய, அத்புத கவிவராய, அவிரதஸ்மரணூர்த்ரீபூதானன்ய பக்தாத்யக்ஷாய (இதில் தனது நிலை உணர்த்தப்படுகிறது) 366 ஸங்கீத சிக்ஷாகுரவே, அபயாஞ்ஜல்யவிதூராய, என்பவை. 60க்கு மேலும் பல ரஸங்கள். ஆசார்ய தேவாய என்பது ஆசார்ய தேவோ பவ என்பதையும் உணர்த்துமே. ஆஹ்லாதக காநவித்யா வரதாய ஆத்மதத்வக்ஞானதாய என்பவை ஆகா-

:::

ரத்தில் போக்யமானவை. இஷ்டதெய்வதாய, ஈச்வரப்ரஸாத நாதவித்யா ஸௌக்ஷ்ம்யோபதேஷ்ட்ரே, உத்தம ச்லோக ஸங்கீத குரவே, உத்தம ஸங்கீத ஸித்தாய, உத்ஸவஸம்ப்ரதாயகீர்த்தனாபராய, உபாஸகோத்தாரகாய, ஏகாந்த பக்தி புஷ்போபாஸித குரவே என்பவை ரஸமான நாமாக்கள்.

இங்கு கையாண்ட சப்தங்கள் நிகண்டுவை தேடச்செய்கின்றன. அநுசயிஜிகத்னவே, ஆத்மஸநயே. இயஸா வ்யபாகர்த்ரே, ருக்ம்யூமாய, ருஜுவநயே. ருதந்யே, ருத தீதயே, ருததாம்நே ஊர்ஜா, அபிரோருத முதலியன.

மேலும் வர்ணிக்கும் முறை:- சக்தி, ஊர்ஜா, ஓஜஸ் தரு அரண்யம் மஹார்ணவம், நாதமூர்த்தி, லஹரி, ஸ்ருதி கதி, அதிபதி, வர்ஷம் ப்ரக்ஷரணம், குஸுமம், வஸு, ஜிகத்னு, மஹோததி, ராகம், திவ்ய தேஜஸ், ஸநி, நிதி, தேவ, தைவதம், ஸித்த ஸிந்து - கான கோகிலம் என்ற வகையைப் பார்க்கும் பொழுது தமது குருநாதனை எவ்வாறெல்லாம் காண்கிறார் என்பதும் தெள்ளென விளங்குமே. **எதைச் சொல்லுவது எதை விடுவது என்ற ஸங்கடமான நிலையில் தோன்றியதை மட்டும் குறிப்பிட்டுள்ளேன்.**

ஐந்தாவது சதகம் : ஐந்தாவது சதகம் தொடங்கும் பொழுதே ஏகாந்தபக்தி ப்ரதீத ஸத்குரவே நம: என்பது. ஒவ்வொரு நாமாவும் ஆழ்ந்த கருத்துக்களை உள்ளேயடக்கியுள்ளது. ஒரு சில நாமாக்கள் அமைந்த அழகை மட்டும் காட்டுகின்றோம். 439வது ஐகாக்ர்யத்தை கொடுப்பவர் அவரே என்பதும், கதநாதகாய 447 கர்ம கௌசலப்ரதாயிநே என்பதும், 451 கார்ய ஸித்தி ப்ரதாய என்பதும், 452ல் கார்த்த ஸ்வர ஸ்வராய என்பதும் ரஸம். இதில் ஸ்வரசப்தம் இருபொருளில் வருவதைச் சுட்டிக் காட்டுவது கவனிக்கத் தக்கது. கார்த்தஸ்வரம் என்பதற்கு தங்கம் என்று பொருள். அவ்வண்ணமே கீர்த்தனாசார்யர் என்பதும், க்ரவண பக்த்ரு ஸ்பர்த்ரே என்பதும். 484 கிராமாதுர்யவரதாய என்பதும், குருதமாய குரூத்தமாய என்று இணைத்துப் பேசியதும், க்ருஹ தைவத்யம் என்பதும், சிரஸ்த்தாயி ஸங்கீதாநந்த ஸுகீர்த்தந ப்ரதாத்ரே என்பதும் ரஸம்.

485வது திருநாமத்தில் கீர்தேவீ நிரந்தரவாஸ ஜிஹ்வாக்ர பக்தாக்ர்யாய நம: என்பதில் இவர் தம் குருநாதரை அநுராகத்துடன் வர்ணிப்பது போக்யம். வாகீச்வரியான ஸரஸ்வதி இவர்தம் நாவுநுனியில் நிரந்தரமாக வஸிக்கிறார் என்பதும் உண்மையே! இவ்வாறே 507வது திருநாமமும் அனுபவ பூர்வமானது.

108வது நாமா மிக மிக அத்புதம். அவர் தம் உரையிலேயே தெளியலாம். ஸஹஸ்ரத்தில் நடுநாயகமாக, 540வது திருநாமமாக அமைந்துள்ளது இப்பெரிய திருநாமம். இவ்வாறு நாமாவளியை இங்கு கண்டு கொண்டோம். ஒவ்வொரு இடத்திலும் ஒருவிதமான க்ரமம் கையாளப்படுவதை ஆராய்ச்சியினால்தான் அறிய இயலும்.

ஆறுவது சதகம் : ஒவ்வொரு சதகத்தில் ஒருவகையான ரீதி கையாளப்பட்டுள்ளது. ஆழ்ந்து கவனிப்பவர்களுக்கு மட்டுமே இது

விளங்கும். மனதைக் கவர்கின்ற இந்நாமாக்களில் சிலவற்றை மட்டும் குறிப்பிடுகிறோம். தொடக்கம் ஜுஷ்ய ஸங்கீத ஸ்வாமிநே என்பது. 551, தத்வதர்சகாய, 554, தமோமய சிஷ்ய சித்தோத்தேஜகாய 558. தீர்த்ததமாய, துஷ்டி ஜநநாய, த்யக்த ஸங்காய, தாஸஜநாக்ரேஸராய, 'நாதோபாஸிகோச்சீவஸிதாய', நிஜபக்தரக்ஷகாய, நித்யாநந்த ரூபாய, நிரவதி ஸங்கீத ஸுகத ஸத்குரவே, நிர்மல நிச்சல சித்தாய என்பதோடு நில்லாமல் நிர்மல நிஸ்சல சித்தஸ்த்தாய என்பது ரஸம். நித்ராலஸ்யாராதயே என்பது அனுபவ முதிர்ச்சியை காட்டுகிறது. 648வது நாமாவில் ந்ருபோத்தமனான ஸ்ரீராமகானத்தில் அபர பாகவதோத்தமனாய் விளங்கும் ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிநே நமோ நம: என்று இந்த சதகம் முடிக்கப்பெற்றது. நூதன க்ஷீர நவநீத திவ்யகான ப்ரத்யூஷ ப்ராசித ஸ்ரீராமாய என்பதிலும் நூதனரஸம் சேர்ந்திருக்கிறது. ஒவ்வொரு நாமாவையும் விவரிக்கப்புக்கில் ஒரு பாரதமேயாகுமே!

179. ஓம் மிக மென்மையான மனமெனும் நறுமண மலர்மஞ்சத்தில் ஸ்ரீராமனைப் பள்ளிக்கிடத்திய (யாரால் மிக மெல்லிய மனமெனும் நறுமணமலர் மஞ்சத்தில் ஸ்ரீராமன் பள்ளிக்கிடத்தப்பட்டானோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

180. ஓம் தனது இனிய குரலினால் பேரின்பமாகிய ஸ்ரீராமனை ஆனந்தித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

181. ஓம் துதிப்பாட்டுக்களாகிய பற்பல நறுமணமலர்களால் ஸ்ரீராமனைப்

பூஜித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

182. ஓம் வணங்கப்பட்டவர்களால் வணங்கப்படவேண்டிய ஸ்ரீராமனை வணங்கிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

183. ஓம் ஒலிநயம் மிகும் அழகுறு நாம கீர்த்தனங்களால் அழகுறு ராம-சந்த்ரனை ஆனந்தித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

184. ஓம் எல்லா உலகுக்கும் அருட்கடலான ஸ்ரீராமனைப் புகழ்ந்து பாடிய இசைப்பாற்கடலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

185. ஓம் நல்லறிவின் இருப்பிடமான ஸ்ரீராமனைத் துதிக்கும் இனிய கானத்தின் இருப்பிடமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

186. ஓம் ஸ்ரீராமனிடம் பொங்கி எழும் அன்பின் அலையாகிய ஸத்கு-ருவுக்கு நமஸ்காரம்.

187. ஓம் பற்பல லீலைகளில் களித்த ஸ்ரீராமனது நாமத்தில் களித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம.

188. ஓம் தோஷங்களைக் களைந்து ஸந்தோஷமளிக்கும் ஸ்ரீராமநாமம் ஆகிய ரக்ஷையைக்கட்டுகின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

189. ஓம் கல்யாண ராமசந்திரனின் சிறந்த பாடகரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

190. ஓம் மிக அழகிய, மயக்கும் உருவம் படைத்த ஸ்ரீராமனின் நாமத்-தின் உருவமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

191. ஓம் நகைமுகம் படைத்த ஸ்ரீராமனின் மகிழ்வினால் இலங்கும் திரு-முகம் படைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

192. ஓம் நற்குணங்கள் நிரம்பிய ஸ்ரீராமனிடம் அன்பு நிரம்பிய / நற்கு-ணங்கள் நிரம்பிய ஸ்ரீராமனைப் பாடும் ராகங்களை வளர்த்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

193. ஓம் ஸ்ரீராமனின் நற்குணங்களின் முழுமையைக் கொண்டுள்ள ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

194. ஓம் ராமனாம் அமிழ்து ததும்பிய கானக்குடமாம் தொண்டையை உடைய - ராம அமுதைப் பொழிந்த பாட்டுக்களை இசைத்த குரலுடைய - குருநாதருக்கு நமஸ்காரம்.

195. ஓம் ராம ராம என ஒலித்த வாக்குச்சிறப்புள்ள எண்ணற்ற க்ருதிகள் செய்த, ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

196. ஓம் தேனினும் இனிய ஸ்ரீராமநாமத்தைத் தீங்குரலில் ஒலித்த ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

197. ஓம் தூய்மையூட்டும் பண்பு படைத்த ஸ்ரீராமனைப் பாடும் தூய பண்புடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

198. ஓம் மாசற்ற ஸ்ரீராமனை ராகத்தால் (இனிய பண்ணுல்) மகிழ்விக்-

கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

199. ஓம் ஸ்ரீராமனின் அளவற்ற சிறப்பினை அறுதியிட்டுக்கூறிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

200. ஓம் தூய உருப்படைத்த ஸ்ரீராமமயமான தெள்ளிய தூய மனம்படைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

201. ஓம் நூபுரங்கள் 'கல்' என ஒலிக்கும் ஸ்ரீராமனது நடையைத் தன் மனதில் கண்டுகளித்த (நூபுரங்கள் 'கல்' என ஒலிக்கும் ஸ்ரீராமனது நடை களிக்கப்பட்ட மனதினை உடைய) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

202. ஓம் ஒளியே ஆன ஸ்ரீராமனைத் தன்பாட்டாகிய ஒளி வட்டத்தால் சூழ்ந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

203. ஓம் நிலவு முகம் படைத்த ஸ்ரீராமனின் ஆனந்தம் இலங்கும் திருமுகம் கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

204. ஓம் தேவர்கட்கெல்லாம் கடவுளான ஸ்ரீராமனை உபாஸித்த ராகக் கடவுளான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

205. ஓம் ராமநாம அணி ஒளிரும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

206. ஓம் வாழ்வளிக்கும் ராமநாம நினைவில் விழிப்புள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

207. ஓம் வாழ்வின் ஒவ்வொரு நொடியையும் ஸ்ரீராமதாரக மந்த்ரத்தால் நிரப்பிய மகானாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

208. ஓம் வாழ்வுத்துணியில் தாரக நாமந்தனை நெய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம். (வாழ்வுத்துணியில் நெய்யப்பட்ட தாரகநாமத்தினை உடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.)

209. ஓம் வெட்டவெளியை ஆடையாகவுள்ள ஸ்ரீராமனுக்கு ஆடையாகிய திவ்யவாக்கினை உடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

210. ஓம் அறிவு வெளியேஆன ஸ்ரீராமனை ஸங்கீதத்தால் உபாஸித்த அறிவின்பவடிவினரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

211. ஓம் அறிவொளி விளக்கமான ஸ்ரீராமானந்தம் ஒளிரும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

212. ஓம் ஸ்ரீராமனுடனிருக்கும் ஸங்கீதப் பேரரசராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

213. ஓம் தோன்றுதல் இல்லா (என்றும் விளங்கும்) ஸ்ரீராமனிடம் ஆழ்ந்த உள்ளன்பின் ஒளிபிம்பமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

214. ஓம் ஓங்காரத்தின் இருப்பிடமாகிய / ஓங்காரத்தை இருப்பிடமாகக் கொண்ட - ஸ்ரீராமனின் நாமத்தின் இருப்பிடமான / ஸ்ரீராமநாமத்தை இருப்பிடமாகக் கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

215. ஓம் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும் தூய பெயருடைய ஸத்குரு-வுக்கு நமஸ்காரம்.

216. ஓம் ஸத்குரு ஸ்ரீத்யாகராஜஸ்வாமிக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள்.

217. ஓம் ஸ்ரீராம க்ருஷ்ண கானானந்தத்தின் அவதாரமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

218. ஓம் நாமத்தின் பெருமையைப் பாடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

219. ஓம் பாகவத ஸமூஹமாகிய மலைமேல் விளக்காகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

220. ஓம் ஹரிஜபத்தினால் ஒளிரும் இதயத்தூய்மை படைத்த ஸத்குரு-வுக்கு நமஸ்காரம்.

221. ஓம் பகைவரை அடக்கும் பகவானை ஆராதிக்கும் தன்னடக்கம் படைத்த முனிவரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

222. ஓம் அமிழ்தினிமை படைத்த அழியாக் கீர்த்தனங்களினால் (பாடுப-வர்க்கு) ஸ்ரீராமனிடம் அன்புண்டாக்கும் / ஸ்ரீராமனிடம் கொண்ட அன்பினால் அமிழ்தினிய அழியாக் கீர்த்தனங்கள் படைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

223. ஓம் மங்கள இசை வாத்யப் பிரியரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்

224. ஓம் வீணையின் நாதத்தில் மகிழ்கின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

225. ஓம் புல்லாங்குழல் இசைப்பதில் மகிழும் ஸ்ரீக்ருஷ்ணனின் நண்பரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

226. ஓம் புல்லாங்குழல் இசைத்து மகிழும் ஸ்ரீக்ருஷ்ணனின் லீலைகளில் மகிழும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

227. ஓம் பிருந்தாவன லோலனாகிய கண்ணனைக் கண்டுமகிழும்/புகழ்-பாடி மகிழும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

228. ஓம் நந்தனால் அர்ச்சிக்கப்பட்ட பாதங்களை ஆயிரக்கணக்கான பாட்-டுக்களால் அர்ச்சித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

229. ஓம் நந்தனால் ஆனந்திக்கத்தகுந்த ஸ்ரீக்ருஷ்ணனின் ஆனந்திக்கப்-படவேண்டிய புகழ் பாடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

230. ஓம் நந்தனால் ஆனந்திக்கப்பட்ட ஸ்ரீக்ருஷ்ணனை நவரஸங்களைப் பிழிந்தெடுத்த பாட்டுக்களால் ஆனந்தித்த ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

231. ஓம் நந்தனை மகிழ்வித்தோனின் (ஸ்ரீக்ருஷ்ணனின்) நாமத்தில் மகிழ்ந்த (நந்தனை ஆனந்தப்படுத்திய ஸ்ரீக்ருஷ்ணனின் நாமம் யாரால் ஆனந்திக்கப்பட்டதோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

232. ஓம் தாமரை இதழ்க் கண்ணனை புதுப்புது பதங்கள் நடனமாடும் நாமகீர்த்தனங்களினால் மகிழ்வித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

233. ஓம் மந்தர மலையைத் தாங்கினவனின் (ஸ்ரீக்ருஷ்ணனின்) மந்த்ரத்தைத் தன்னுள் கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

234. ஓம் மலையரசனை தரித்தவனைத் தன்னுள்ளத்தில் தரித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

235. ஓம் யாதவகுல திலகனாகிய ஸ்ரீக்ருஷ்ணனைப் பாடிய பாடக திலகமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

236. ஓம் யதுகுலத்தவரை மகிழ்விக்கும் ஸ்ரீக்ருஷ்ணனின் புகழ்பாடுதலில் தலைசிறந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

237. ஓம் வணங்கியவரைத் தாங்கும் பரமனை நாதத்தால் அலங்கரித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

238. ஓம் கடலினை இருப்பிடமாகக் கொண்ட கடவுள் புகழ் பாடியவராகிய (யாரால் கடலினை இருப்பிடமாகக் கொண்ட கடவுள் புகழப் பெற்றுனோ, அந்த), ஸ்வரக்கடலில் குடிகொண்ட / ஸ்வரார்ணவம் எனும் இசைநூலில் வசிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

239. ஓம் பரமசிவன் துதித்துப்பாடிய ஸ்ரீராமபிரானைத் துதித்துப்பாடிய (யாரால் பரமசிவன் துதித்த ஸ்ரீராமன் துதிக்கப்பட்டானோ, அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

240. ஓம் மலைமேல் ஈசனான சிவனின் மனதைக் கவர்ந்த ஸ்ரீராமனின் மனங்கவரும் குரல் ஈசராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

241. ஓம் வாக்குக்கரசரான ப்ரம்மாவால் துதிக்கப்பட்ட ஸ்ரீராமனை நன்கு துதித்த வாக்குக்கரசரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

242. ஓம் தேனினிய கானத்தால் மாதவனை மகிழ்விக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

243. ஓம் ராகவனை ராகத்தேனால் அபிஷேகிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்

244. ஓம் (தனது) ரஸிகர்களில் முதன்மையான / அழகிலும் நேர்த்தியிலும் முதன்மையான ஸ்ரீராமனின் ரஸிகர்களில் முதன்மைபெற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

245. ஓம் பூமியின் புதல்வியான ஸீதையிடம் விருப்புள்ள ஸ்ரீராமரைப் பூஜிப்பதில் விருப்புள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

246. ஓம் நிலமகளின் மகளான ஸீதையின் மணாளனான ஸ்ரீராமனின் பேச்சாகிய தேனைப்பருகும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

247. ஓம் விண்மீன் அரசனாகிய சந்திரன் போல் முகமுடைய ஸ்ரீராமனின் புகழ்பாடும் ஸ்வரங்களுக்கரசராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

248. ஓம் ஸூர்ய குலத்தை அலங்கரித்த ஸ்ரீராமனை எண்ணற்ற பற்பல வகைப்பட்ட இனிய பாட்டுக்களால் அலங்கரித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

249. ஓம் ஸூர்ய குலத்தில் நன்குதித்த ஸ்ரீராமனை இனிதே பாடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

250. ஓம் தாமரையின் உறவினனான ஸூர்யனின் குலத்துதித்த ஸ்ரீராமனின் உறவினரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

251. ஓம் சிறந்த வீராதி வீரனாகிய ஸ்ரீராமனை சிறந்த சக்தி வாய்ந்த மென்மையுமான இனிய குரலில் பூஜித்த (யாருடைய சிறந்த சக்திவாய்ந்த மென்மையுமான இனிய குரலில் சிறந்த வீராதி வீரனாகிய ஸ்ரீராமன் பூஜிக்கப்பட்டானோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

252. ஓம் அரவணைத்துயில்வோனை உபசரிப்பதில் ஈடுபட்ட இன்பண்ணரசராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

253. ஓம் பாம்பின்மேல் பள்ளிகொண்டோனைப் பள்ளி கொள்ளச் செய்த இன்பண்படுக்கையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

254. ஓம் திருவிடம் விருப்பு கொண்டோனின் குணங்களில் விருப்புள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

255. ஓம் லக்ஷ்மீபதியின் வாக்கினைப் பருகும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

256. ஓம் திருமகள்மணாளனைப் பாடிய திருவருட்பாவலராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

257. ஓம் மங்களத்தை அளிப்போனைப் பாடுகின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

258. ஓம் லக்ஷ்மீபதியை இனிய இசை ஒலியால் தொடுகின்ற – லக்ஷ்மீபதியை இனிமையாகப் பாடுகின்ற - ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

259. ஓம் மதனன்தந்தையை மகிழ்விக்கும் இனிய கீர்த்தனங்களின் தந்தையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

260. ஓம் பூமியின் புதல்வியான ஸீதையை மகிழ்விப்போனை இன்குரல் அமுதத்தால் மகிழ்விக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

261. ஓம் நில அரசர் கரங்களால் அர்ச்சிக்கப்பட்டோனை (ஸ்ரீராமனை) அர்ச்சிக்கும் குரல் அரசரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

262. ஓம் ராவணனின் பகைவனை (ஸ்ரீராமனை) ராகத்தால் புகழ்ந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

263. ஓம் முகில் நிகர் மேனியோனை மென்மையும் கம்பீரமுமான ராகங்களில் பாடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

264. ஓம் மலைமேல்புலனாகிய ஸ்ரீராமனைக் கண்கூடாகக் கண்ட ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

265. ஓம் கருணைக் கடைக்கண் பார்வையுடையோனின் (ஸ்ரீராமனின்) ஆனந்தத்தால் கசியும் கடைக்கண்ணினையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம் / ஸ்ரீராமனின் ஆனந்தத்தினால் கசிந்த கருணைக் கடைக்கண்ணோக்கினையுடைய ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

266. ஓம் தசரத புதல்வனின் தரிசனத்தால் மெய் சிலிர்த்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

267. ஓம் தாசரதி மகிழும் ஸ்வரக்கடலான / தாசரதி மகிழும் ஸ்வர அம்பறுத்தூணியை உடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

268. ஓம் கரைபுரண்டோடும் இன்னொலி தேவகங்கையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

269. ஓம் மிக்க இனிய, மங்களம் செய்யும் அமுதவாக்கே ஆன ஸத்கு-ருவுக்கு நமஸ்காரம்.

270. ஓம் இனிய கீர்த்தனைக் கூட்டங்களின் செவி இன்பத்தில் விஞ்சும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

271. ஓம் வேதத்தின் உட்பொருளான இறைவனடிகளில் அர்ப்பணமாக வேதப் பொருளின் ஸாரமான எண்ணிறந்த பாட்டுக்களைச் செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

272. ஓம் நாதானந்தத்தை உண்டுபண்ணும் க்ருதிக் கூட்டங்களைச் செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

273. ஓம் நவரஸங்களும் ததும்பும் மிகப்பல க்ருதிகளைச் செய்த ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

274. ஓம் ஒலி இனிமையும் பண்ணழகும் தாளக்கோப்பும் அழகுக்கூத்தாடும் ஒளி மின்னும் மிகப்பல பாட்டுக்களை இயற்றிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

275. ஓம் வேதசாஸ்த்ரங்களில் காணும் உண்மைகளைப் பிழிந்தெடுத்த க்ருதிக் கூட்டங்களைச் செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

276. ஓம் பிரிக்கமுடியாத பக்தி, ஸங்கீதம் இவற்றின் ஒருமையை அடை-யாளமாகக் கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

277. ஓம் பக்தி இல்லாத ஸங்கீத வித்வான்களின் கூட்டத்துக்கு வெகு-தொலைவில் உள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

278. ஓம் மிகச் சிறந்த பக்த கவியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

279. ஓம் நாதோபாஸனையின் உயர்வினைப் பாடிய உயர்ந்த ஆசானுக்கு நமஸ்காரம்.

280. ஓம் இடைவிடாத ஸங்கீதோபாஸனையை வாழ்வுநெறியாகக் கடைப்-

பிடித்த (யாரால் இடைவிடாத ஸங்கீதோபாஸனை வாழ்வு நெறியாகக் கடைப்பிடிக்கப்பட்டதோ அந்த) ஸ்வாமிக்கு நமஸ்காரம்.

281. ஓம் பகவத்கீதையை வாழ்ந்து உதாரணித்துக் காட்டிய (யாரால் பகவத்கீதை வாழ்ந்து உதாரணித்துக்காட்டப்பட்டதோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

282. ஓம் ஞானம், பக்தி, வைராக்யம், திடசித்தமுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

283. ஓம் மனஉறுதியும், சகிப்புத்தன்மையும் உள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

284. ஓம் பொன்னையும் பொருளையும் நஞ்செனை வெறுத்து ஒதுக்கிய (யாரால் பொன்னும் பொருளும் நஞ்செனை வெறுத்து ஒதுக்கப்பட்டனவோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

285. ஓம் பிறரை இகழ்தலைக் கண்டித்த (யாரால் பிறரை இகழ்தல் கண்டிக்கப்பட்டதோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

286. ஓம் பற்றற்ற இறைவழிபாட்டினை விவரித்த (யாரால் பற்றற்ற இறைவழிபாடு விவரிக்கப்பட்டதோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

287. ஓம் வாழ்வில் உயர்ந்த பக்திநெறியினை உதாரணித்துக் காட்டிய (யாருடைய வாழ்வில் உயர்ந்த பக்திநெறி உதாரணித்துக் காட்டப்பட்டதோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

288. ஓம் இறை அன்பும் பக்தியும் முழுதும் நிறைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

289. ஓம் பஜனையிலேயே ஈடுபட்ட உள்ளத்தை உடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

290. ஓம் மணியோசையாய் இசை பொழியும் தேனினிய குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

291. ஓம் பரா, பச்யந்தீ, மத்யமா, வைகரீ எனும் நிலைகளுள்ள ஒலியைத் தன்வடிவாகக்கொண்ட பரம்பொருளான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

292. ஓம் ஸ்ரீராமபக்தி எனும் தோட்டத்திலிருந்து நாமமலர்களை வாரி இறைக்கும் அழகு நிறைந்த இனிய மிகப்பல கீர்த்தனைகள் வடிவில் உள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

293. ஓம் கீதமலர்கள் பூத்துக் குலுங்கும் ஞான பக்தித் தருவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

294. ஓம் திருவடிதனில் வீழ்ந்தவரின் உள்ள அனலைத் தணிக்கும் தண்ணிழற்றருவாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

295. ஓம் உலக வாழ்வின் வெம்மையில் உலர்ந்த நெஞ்சத்துக்கு இசை

ஊற்றாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

296. ஓம் உலக வாழ்வுக் காங்கையைத் தணிக்கும் தங்க கங்கையாகிய (தங்க நிறத்தில் மின்னும் கங்கை) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

297. ஓம் நீராடிப் பருகுதலில் இன்பம் தரும் வாக்குகங்கையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

298. ஓம் பார்த்தாலே முக்தி தரும் கங்கையாகிய குருவுக்கு நமஸ்காரம்.

299. ஓம் பாதம் பணிந்து வணங்குபவர்மேல் அன்புடன் ராகம் எனும் அமுதச் சாற்றினைத் தெளிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

300. ஓம் இன்னிசைத்தொடர் அமுதவீழ்ச்சியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

301. ஓம் சோகநெருப்பினை அணைக்கும் அமுதகானக்கடலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

302. ஓம் அல்லும் பகலும் திருவடியை நினைந்துருகி வழிநடக்கும் பக்த இதயக்கடலிற்குச் சந்திரனான குருநாதருக்கு நமஸ்காரம்.

303. ஓம் துன்ப இருளுக்குப் பகலவனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

304. ஓம் அறியாமைத் துணைக்கு முடிவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

305. ஓம் நாதத்தை வேண்டும் இதய எல்லையின் ஆதவனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

306. ஓம் நாதோபாஸனைக்கு ஏங்கும் தனி ஆத்மாவின் ஒரே புகலிடமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

307. ஓம் நாதத்தை இரப்பவர்க்குத் தஞ்சமளிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

308. ஓம் வேண்டப்படும் நாதவித்தையின் முழுமையை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

309. ஓம் உள்ளத்தின் அடி ஆழத்தினின்றும் ஆழ்ந்த அன்புடன் ஏங்கி விரும்பப்படுகின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

310. ஓம் பக்த உள்ளொளி வட்டத்திலுள்ள தெய்வமான / பக்த இதயமாம் செந்தாமரையிலுள்ள தெய்வமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

311. ஓம் பக்த இதயமெனும் மங்கள மலரரியணையினின்றரசாளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

312. ஓம் மங்களமான கீர்த்தனங்களாகிய ஒளிமின்னும் மணிமகுடத்தில் இலங்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

313. ஓம் உபாஸிப்பவரின் பக்தித்துதியே பொன்னாடையாக அமையப்பெற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

314. ஓம் பக்த இதயமலரின் இன்னிசை நறுமணமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

315. ஓம் அன்பு மலர்கள் கொண்டு தொடுக்கப்பட்ட இத்துதிப்பூமாலை-யின் நறுமணமாகும் ஆழ்ந்த உணர்ச்சியில் மகிழும்/ அன்புடனும் பக்தியுடனும் தொடுக்கப்பட்ட இப்புகழ்ப்பூமாலைக்கு இன்னி-சைப் பண்ணெனும் மணமூட்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

316. ஓம் ஸுஸ்வரத்தால் மணமூட்டப்பட்ட இந்நாமாவளியில் மகிழும் / இவ்வின்னிசை நாம மலர் மாலையின் மணம் கமழும் ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

317. ஓம் ஆழ்ந்த அன்பினின்றெழுந்த இத்துதிபுஷ்பாலயத்தின் தெய்வ-மான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

318. ஓம் சிஷ்ய சிரத்தைத் தொட்டு ஆசீர்வதிக்கும் மங்களத் திருக்கரங்-களை உடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

319. ஓம் சிஷ்ய ஆக்ஞாசக்ரத்தைத் தொட்டு ஞான சக்தியை எழுப்பும் ஞானகுருவுக்கு அனேக நமஸ்காரங்கள்.

320. ஓம் மூலாதாரத்தில் குண்டலினீ வடிவில் சுருண்டுள்ள நாதசக்தி-யைத் தட்டி எழுப்பும் நாதகுருவுக்கு அனேக நமஸ்காரங்கள்.

321. ஓம் குண்டலினீ வடிவில் மூலாதாரத்தினின்றெழும்பும் நாதசக்தியே ஆன ஸத்குருவுக்கு அனேக நமஸ்காரங்கள்.

322. ஓம் ஸஹஸ்ராரத்திலுள்ள நாதஜ்யோதியாகிய ப்ரம்மனே ஆகிய குருவுக்கு அனேக நமஸ்காரங்கள்.

323. ஓம் எந்த ஒரு துதியும் மிகையாகாது எனும்படி இத்துதிக்கூட்டத்தி-னால் வணங்கப்பட்ட / இத்துதிக்கூட்டத்தில் உறையும் / இத்-துதிக்கூட்டத்தினை மகிழ்ந்தனுபவிக்கும் நாதப்பரம்பொருளான ஸத்குருவுக்கு அனேக நமஸ்காரங்கள்.

324. ஓம் ஸ்ரீத்யாகப்பரம்ம ஸத்குருஸ்வாமிக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள்.

ஓம்

ஸ்ரீராமஜயம்

ஸத்குரு ஸ்ரீத்யாகப்ரம்ம

பஞ்சசதீ

ஓம்

1. ஓம் திருவையாறு எனும் புனிதத்தலத்தில் ஸஞ்சரித்த பரமகுருவுக்கு நமஸ்காரம்.
2. ஓம் உஞ்சவ்ருத்தி தர்மத்தைக் கடைப்பிடித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
3. ஓம் மிக உயர்ந்த இறைவழிபாட்டு நெறியினைப் பாடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
4. ஓம் வைகறையிலும் அந்தி நேரத்திலும் கானமாகிய நீராஜனம் செய்யும்படி கட்டளையிட்டுள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
5. ஓம் எட்டு நிலைகள் கொண்ட (யம, நியம, ஆஸன, ப்ராணாயாம, ப்ரத்யாஹார, தாரண, த்யான, ஸமாதி) அஷ்டாங்க யோகத்தைத் தன்னுள் அடக்கிய நாதயோக ஆசார்யனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
6. ஓம் ஒளி வீசும் தூய உருவத்தையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
7. ஓம் ஒளிரும் திருமுகத்தையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
8. ஓம் கருணைததும்பும், ஒளியை உமிழும் மலர்க்கண்களையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
9. ஓம் இசை அம்ருதக் குடமாம் தொண்டையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
10. ஓம் மிக்க அழகிய, மென்மையான இதயம் படைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
11. ஓம் (திருவடியில் வீழ்ந்த) பக்தரைத் தாங்கும் தாமரைக் கரங்களுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
12. ஓம் பக்த இதயத்தடாகத்திற்குத் தூய்மையூட்டும் தாமரைத் திருப் பாதங்கட்கு நமஸ்காரம்.
13. ஓம் பாதுகாப்புநிழலளிக்கும் மங்களத்திருப்பாதங்கட்கு நமஸ்காரம்.
14. ஓம் குருபாதத்தினை இறுகப் பற்றியுள்ளவருக்குடனருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

15. ஓம் சரணடைந்தவரிதயத்தாபத்தைத் தணிக்கும் மங்கள ஸ்பர்சத்தையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

16. ஓம் குற்றங்கள் மலிந்து வழியற்றுச் சரணத்தில் வீழ்ந்தவரை வாத்ஸல்யம் பொங்கத்தூக்கி உயர்த்தும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

17. ஓம் அம்ருதமயமான நோக்கினால் பக்தரைக் காக்கும் (யாருடைய அம்ருதமயமான நோக்கினால் பக்தர் காக்கப்பட்டாரோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

18. ஓம் கோடி ஸூர்யர்களின் ஒளியை மந்தமாக்கும் வண்ணம் ஒளிரும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

19. ஓம் பக்தையின் கண்ணீர்த்துளிகளாலான ஸ்படிகமணிமாலை ஒளிரும் ஒளியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

20. ஓம் உறுதியான பக்தியுடைய சிஷ்ய நோக்கில் நன்கு புலனாகி ஒளிரும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

21. ஓம் அன்பினால் உருகும் இதயம் படைத்த பக்த அன்புப்பிடியில் கட்டுண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

22. ஓம் வழிபடும் மனக்கண்ணுக்கு எப்போதும் புலப்படுகின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

23. ஓம் வழிபடும் இதய முடிச்சைக் கட்டவிழ்க்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

24. ஓம் ஐயத்தை ஒழிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

25. ஓம் சிஷ்ய உள் மறைந்திருக்கும் அறிவுச் சக்தியைத் தட்டி எழுப்பும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

26. ஓம் சிஷ்ய சித்தத்தில் அறிவொளியைத் தூண்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

27. ஓம் தன்னைத் தேடுபவரை பரம்பொருளை அடையும் வழி நெறிப்படுத்தும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்

28. ஓம் நாதோபாஸனை நெறியில் வழிகாட்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

29. ஓம் இசை அஞ்ஜலிசெய ஏங்கும் வழிபடுபவரை இசைக்க வைக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

30. ஓம் சிஷ்ய உடலெனும் புல்லாங்குழலில் ஸுஸ்வரத்தை ஊதும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

31. ஓம் உடலினின்றெழும் ஒலியின் தெய்வீக ப்ரணவ வடிவத்தை விளங்கக் காட்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

32. ஓம் ஏழிசை ஒலிகளின் வடிவத்தை ஒளிரக் காட்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

33. ஓம் ஸ்வரம், ஜாதி, மூர்ச்சனை இவற்றின் வித்தியாசத்தை உள்ளுணர்ந்து அறிய வைக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

34. ஓம் ஸ்வரம், ராகம், தாளம் இவற்றின் அறிவை அளிக்கும் ஸத் குருவுக்கு நமஸ்காரம்.

35. ஓம் ராகம், தாளம், பஜனை எனும் கடலில் திளைத்து நீந்த வைக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

36. ஓம் ஸ்வரஸமுத்ரத்தின் (இசைக்கடலின்) கரைகாணச் செய்யும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

37. ஓம் ஸுஸ்வரமெனும் தேவகங்கையில் நீராட்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

38. ஓம் தன் கானமெனும் அம்ருதச் சாற்றினைப் பருகவைக்கும் ஸத் குருவுக்கு நமஸ்காரம்.

39. ஓம் ஸ்ரீராமநாமத்தைத் தான் பாடுதலாகிய விண்ணேர் அமிழ்தூட்டி போதையூட்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

40. ஓம் சிஷ்ய இதயமாம் நாதபுஷ்பத்தை மலரச்செய்யும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

41. ஓம் நாதயோகத்தில் ஒன்றிடும் அருள்செய்யும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

42. ஓம் முன்னும் பின்னும் இருபக்கலினின்றும் எப்போதும் பக்தையை நன்கு காக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

43. ஓம் தன்னையே உபாஸிப்பவரைக் கணமும் விட்டகலாத ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

44. ஓம் பக்தசித்தத்தில் நீக்கமற நிறைந்துள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

45. ஓம் வழிபடுபவரிதயத்தில் ஒளியூட்டும் பகலவனான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

46. ஓம் உபாஸிப்பவருடற்கோயிலில் மங்களமாக வசிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

47. ஓம் தியானிப்பவருள்ளிருக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

48. ஓம் தன்னையே இடைவிடாது நினைந்து வழிபடும் ஆத்மாவினுட்புகுந்து கலந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

49. ஓம் மனித உருக்கொண்ட தெய்வீக ஆசானாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

50. ஓம் மனிதவாழ்வை வளப்படுத்தும் ஆயிரக்கணக்கான அழகிய பாட்டுகளை அளித்துள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

51. ஓம் இவ்வுலகவாழ்வில் இன்பமும் விடுபடற்பேறும் தரவல்ல மங்களமான கீர்த்தனங்களை அருளிச்செய்திருக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

52. ஓம் பக்தி உணர்வின் முழுமை வெளிப்படும் மிகப்பல க்ருதிகளை அருளிச்செய்துள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

53. ஓம் நல்விஷயங்களைக் குளிகை ரூபத்தில் அடக்கியுள்ள க்ருதிக்கூட்டங்களை அருளியுள்ள புனிதரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

54. ஓம் எல்லா மக்கட்கும் நலஞ்செய்யும், உபதேசஸாரமான, தேனொழுகும் அழியாக் கீர்த்தனைக் கூட்டங்களை அருளியுள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

55. ஓம் ஸ்ரீராமநாமத்தினால் இனிமையூட்டப்பட்ட, தேனினிய பாட்டுக்களால் எல்லா மக்கட்கும் ராமபக்தியை உண்டுபண்ணும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

56. ஓம் சுழலும் மனதினை நிலைப்படுத்தும் ஸ்ரீராமனை நினைத்தலையும் நாமத்தைப் பாடுதலையும் பரிந்துரைக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

57. ஓம் அழியும் உடலுக்கப்பாற்பட்ட அழியா ஆத்ம ஸ்வரூபத்தைப் பிரகாசிக்க விளக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

58. ஓம் வாழ்விலும், பூஜையிலும் பொய்மையைச் சண்டிக்கும், உள்ளத்தூய்மையை உபதேசிக்கும், மெய்யான இறையுணர்வினை உள்ளூட்டும் கீதாசார்யனான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

59. ஓம் வாக்குக்கூர்மையில் திறன்மிகுந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

60. ஓம் எடுத்துரைக்க இயலாத இன்வாக்கமைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

61. ஓம் ஸ்ரீராமனைப்பாடும் ஒரே நோக்கிற்காக அவதரித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

62. ஓம் இவ்வுலகிலிருந்தும் எப்பொழுதும் ஸமாதியில் ஆழ்ந்திருந்த (தெய்வீக நினைவில் ஒன்றித்தன்னை மறந்திருந்த) ஸங்கீத ஸ்வாமியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

63. ஓம் கீதை, உபநிஷதங்கள் இவற்றின் ஸாரமான தேனைப் பிழிந்தெடுத்த, செவிக்கின்பமான இனிய கீர்த்தனைகளை அருளிச்செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

64. ஓம் ஏழு இன்னிசை ஒலிகளால் அழகுபடுத்தப்பட்ட நாத அரங்கினில் நடமாடும் ஸ்ரீராமனது நாதவடிவை இன்னிசையால் துதித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

65. ஓம் ஸ்வரம், ராகம், லயம், ஞானம், பக்தி, வைராக்கியம், உணர்ச்சி, ஆனந்தம், நாதம் ஆகிய ஒன்பது ரத்னங்கள் இழைத்த இதயப்

பொன்மண்டபத்தில் ஸ்ரீராமத்யானத்தில் ஆழ்ந்து ஒன்றிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

66. ஓம் திராட்சைச்சாற்றின் இனிமை பொருந்தி நவரஸங்களும் அமையப்பெற்ற க்ருதித்தொகுப்புக்களினால் ஸ்ரீராமனை பூஜித்து ஆனந்த பரவசமடைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

67. ஓம் வேதப்பொருள், மெய்வாக்கு, ஸ்வர சுத்தம், உண்மை பக்தி இவை நிரம்பிய செவிக்கினிய கானத்தினால் ஸ்ரீஹரியை வசீகரித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

68. ஓம் யதி, விரதி (விச்ராந்தி, இடைநிறுத்தம்) இவை அமையப்பெற்ற க்ருதிகளில் திறன்மிக்க உண்மை பக்தராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

69. ஓம் ப்ராஸம், அனுப்ராஸம் இவை போன்ற செய்யுள் அலங்காரங்களில் (எதுகை, மோனை போன்ற செய்யுள் அலங்காரங்களில்) நிபுணரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

70. ஓம் 'ய'கரத்துக்கு (य) அடுத்ததும் 'ப$_4$'கரத்துக்கு (भ) அடுத்ததுமான இரண்டெழுத்துக்களைக் கொண்ட 'राम'னைத் துதித்த 'த$_4$'கரத்துக்கு (ध) அடுத்ததும் 'த$_2$'கரத்துக்கு (थ) அடுத்ததுமான 'நாத' என்பதற்கு இருப்பிடமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

71. ஓம் வேத, சாஸ்த்ர, புராணங்களின் பொருளைச் சுருக்கி விளக்கும், நூற்றுக்கணக்கான ராகங்களில் க்ருதிரத்னங்கள் மூலம் ராமனை மகிழ்வித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

72. ஓம் பஜனைக்கு ஆனந்தமான கீர்த்தனங்கள் செய்த ஸத்குருவுக்கு நம்ஸ்காரம்.

73. ஓம் எப்பொழுதும் ஒழுங்குடனும் கட்டுப்பாட்டுடனும் தவறாது நாமஸங்கீர்த்தனத்தில் ஈடுபட்ட பெரும் தபஸ்வியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

74. ஓம் இசைப்பெருங்கடலின் கரைகண்ட தெய்வீகப்பாடகரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

75. ஓம் ராமனெனும் அமுது கடைந்தெடுக்கப்பட்ட இசைப்பாற்கடலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

76. ஓம் இசைக்கு ஏங்கும் பக்த இதயமான நுரை பெருகிக்கொந்தளிக்கும் கடல்மீதுதித்த நிலவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

77. ஓம் அன்புச்செம்மை பெற்ற இதயத்தின் பக்திப்பெருங்கடலில் ஸுஸ்வரத்தின் வெண்மைஒளியைப் பரவச்செய்யும் இசைத்தண்கதிர் மதியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

78. ஓம் குளிர்ந்த கருணைக்கிரணங்களினால் ஆனந்த ஒளியை எங்கும் பரப்பும் அமுதநிதியாம் இசைநிலவாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

79. ஓம் தன்னையே உபாஸிக்கும் இதயக்கடலில் அன்பு அலைகளை எழுப்பும் இசைமதியாம் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

80. ஓம் ஸங்கீதமாகிய பேரின்பக்கடலின் ஆழ்ந்த மர்மங்களை வெளிச்சமிட்டுக் காட்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

81. ஓம் மாயையினால் சூழப்பட்டு ஸம்ஸாரப்பெருங்கடலில் முழுகித் தவிப்பவரைக் காப்பாற்றும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

82. ஓம் அறியாமை இருள் சூழ்ந்து பரந்த பவக்கடலின் எல்லைவானில் ஒளிமயமாய் உதித்த கதிரவனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

83. ஓம் உள்ள இருள் போக்கும் இசைப்பகலவனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

84. ஓம் அறிவின்மை எனும் இருளால் சூழப்பட்ட இவ்வுலகிற்கு ஒளியூட்டிய பேரறிவாம் ஸூர்யனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

85. ஓம் ஆன்மீக அறிவின்மை எனும் இருளை விலக்கும் சுத்த ஞான ஒளியான இசை ஆதவனாம் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

86. ஓம் உக்ரமாகஜ்வலிக்கும் தூய்மைக்கிரணங்களால் மாசுள்ள எண்ணங்களைச் சுட்டெரிக்கும் சூரியனாம் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

87. ஓம் கீதம், வாத்யம், ந்ருத்யம் எனும் ஸங்கீதமலையின் முச்சிகரங்களுக்கொளியூட்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

88. ஓம் பக்த உள்ள ஏரியில் உணர்ச்சி, ஆனந்தம், ராகம் இவற்றின் வண்ண ஒளியூட்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

89. ஓம் உண்மை பக்தருக்கு எளிதில் நெருங்கக்கூடிய குருதேவருக்கு நமஸ்காரம்.

90. ஓம் பலனைக் காரணமாகக் கொண்ட அறிவீனர்களுக்கு வெகுதொலைவிலுள்ள பரம்பொருளான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

91. ஓம் உள்ளத்தூய்மை இல்லாத பூஜையை ஏற்காத ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

92. ஓம் தூயநல்லுள்ளத்துடன் செய்யப்படும் புஷ்பார்ச்சனையை / தூய உள்ளத்தின் மானஸபூஜையை ஏற்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

93. ஓம் உள்ளத்தை அமைதிப்படுத்தும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

94. ஓம் அமைதியான உள்ளக்குகையில் த்யானிக்கப்படும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

95. ஓம் அமைதியான உள்ளத்தில் தெள்ள ஒலித்த தெய்வீகக்குரலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

96. ஓம் இருண்ட உள்ளக்குகையில் வெளிச்சமூட்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

97. ஓம் தனது ஒளிவட்டத்தாலேயே சூழப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

98. ஓம் அசைவற்ற மனக்குளத்தில் பிரதிபலிக்கும் ஆத்மஸ்வரூபமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

99. ஓம் பூஜிக்கும் இதயத்தாமரையை மலர்விக்கும் ஸூர்யனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

100. ஓம் பேச்சே பண்ணான ஸத்க்குருவுக்கு நமஸ்காரம்.

101. ஓம் பக்த அன்பில் சிறைப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

102. ஓம் பக்த உயிர்மூச்சினின்றும் பிரிக்கமுடியாத ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

103. ஓம் அன்பினால் உருகும் பக்தைக்கே சொந்தமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

104. ஓம் உள்ளவேகத்தைத் தணிக்கும் உள்ளாழ் அமைதியான ப்ரணவமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

105. ஓம் ப்ரணவத்துள்ளுள்ள பரம்பொருளான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

106. ஓம் பூமியில் தோன்றிய ஸுஸ்வரஜோதியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

107. ஓம் செவிக்கும் நாவுக்கும் அமுதான பெயருடைய ஸத்குருநாதருக்கு நமஸ்காரம்.

108. ஓம் **ஸத்குரு ஸ்ரீத்யாகராஜஸ்வாமிக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள்.**

109. ஓம் அத்வைதத்தின் ஸாரமாகிய (இரண்டற்ற ஸாரமான) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

110. ஓம் ஆனந்த அமுதமாகிய ஸங்கீதக் கடலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

111. ஓம் இவ்வுலகுக்கும் பரவுலகிற்கும் அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

112. ஓம் ஆண்டவனைக் காண்பிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

113. ஓம் மேம்பட்ட அறிவுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

114. ஓம் மேலெழும்பிச்செல்லும் ஒளியை உடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

115. ஓம் பூஜிக்கப்படவேண்டிய ரிஷியாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்

116. ஓம் ஒரே ப்ரம்மனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

117. ஓம் ஓரக்ஷரமாகிய ஓங்காரத்திலே ஒளிந்திட்ட பரமாத்மாவாகிய

ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

118. ஓம் தனிப்பட்ட நாதயோகியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

119. ஓம் ஓங்காரத்தினை உருவாய்க்கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

120. ஓம் உபநிஷதப்பொருளின் ஸங்கீதவடிவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

121. ஓம் மேலான பரம்பொருளாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

122. ஓம் நமனிடம் அச்சத்தைப் போக்குகின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

123. ஓம் ஒளிமயமான கானஸௌர்யனான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

124. ஓம் ஸ்ரீராமசந்திரனைப் புகழ்ந்து பாடிய (யாரால் ஸ்ரீராமசந்திரன் புகழ்ந்து பாடப்பட்டானோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

125. ஓம் குலதனமாகிய ஸ்ரீராமனைச் சுற்றிச்சூழ்ன்ற வாழ்வினை உடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

126. ஓம் இன்னிசையை வென்ற குரலில் ராம, ராம எனக் கூவின ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

127. ஓம் கிருஷ்ணலீலையைப் புகழ்ந்து இனிய பாட்டுக்கள் இயற்றிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

128. ஓம் சிறப்புத்திறன்நிறைவும் வெற்றியும் அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

129. ஓம் ஒன்றேயான பரம்பொருளாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

130. ஓம் கைவல்யமெனும் முக்திநிலையை அளிக்கும் நாதோபாஸனை மார்க்கத்தை உபதேசிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

131. ஓம் குயிலினிய கானமெனும் புஷ்பாஞ்ஜலிப்பேறருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

132. ஓம் கௌஸல்யாவின் திருக்குமாரனின் பண்புகளைப்பாடி மகிழ்ந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

133. ஓம் முறைப்படி முன்னோரிடமிருந்து பெற்ற ஸ்ரீஸீதாராமமூர்த்தியை நாடோறும் பூஜித்துப்பாடி, பஜனை, உத்ஸவங்கள் நடத்தி மகிழ்ந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

134. ஓம் நிறைபேரறிவுநோக்கினை உடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

135. ஓம் (இசைமூலம்) இறைவழிபாடு எனும் யோகத்தை அன்றாட வாழ்வில் கடைப்பிடித்துக்காண்பித்த ஞானத்தோன்றலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

136. ஓம் விளையாட்டில் ஆனந்தித்த ஸ்ரீக்ருஷ்ணனது லீலைகளின் இன்பத்தைப் பாடி இன்புற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

137. ஓம் தழுவப்பட்ட கானானந்தமாகிய ஸ்ரீராமனை உடைய ஸத்கு-

ருவுக்கு நமஸ்காரம்.

138. ஓம் அயர்ச்சியை ஒழிக்கும் இசை இன்ப வடிவினரான ஸத்குரு-வுக்கு நமஸ்காரம்.

139. ஓம் மென்மையான இதயத்தையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

140. ஓம் துன்பத்தை போக்குகின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

141. ஓம் மீட்டப்பட்ட வீணையில் ஒலித்த ப்ரணவமாகிய ஸத்குரு-வுக்கு நமஸ்காரம்.

142. ஓம் சந்திரன் வெள்குறும் ஸ்ரீராமசந்திரனின் முக அழகை வர்-ணிக்கும் இசைநாதராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

143. ஓம் பக்த சங்கடங்களையும் பாபங்களையும் நீக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

144. ஓம் பூமியின் புதல்வியான ஸீதையின் அன்பனின் அடியார்களில் முதன்மையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

145. ஓம் பாற்கடற்கன்னிகையை மகிழ்விப்போனைத் தன் ராகக்கடலில் மகிழ்வித்த - மகிழ்ந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

146. ஓம் அற்பமானவையும் கவலையைத்தருவனவுமாகிய எண்ணங்கள் நிறை காட்டிற்குக் கோடரியாம் பாடல்கள் செய்த .ஸத்குரு-வுக்கு நமஸ்காரம்.

147. ஓம் நன்மை பயக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

148. ஓம் பரமாத்மாவாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

149. ஓம் ஆத்ம அறிவை அளிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

150. ஓம் பறவை அரசனை வாகனமாகக் கொண்ட ஸ்ரீமன் நாராய-ணன் திருநாமங்களை பஜித்த இசை அரசராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

151. ஓம் நாமமெனும் கற்கண்டு இனிமைகூட்ட இசைத்தேன்மாரி பொழி-யும் முகிலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

152. ஓம் மனத்துன்பத்தினால் வருந்துபவருக்கு ஒரே புகலிடமான ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

153. ஓம் துன்பத்தை அளிக்கும் முவ்வகைத் தாபங்களையும் (ஆதி ஆத்-மிகம், ஆதிபௌதிகம், ஆதி தைவிகம்) வேருடன் களையும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

154. ஓம் அறிவு, கண்ணுக்கு இவற்றை வளர்க்கும் ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

155. ஓம் கங்கையே ஆன தூய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

156. ஓம் காங்கேயனான முருகனைப்பாடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

157. ஓம் குரலினிமையை அணிகலனாய்க் கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

158. ஓம் இசை அன்பனாகிய ஸ்ரீராமனை இனிய பாடல்களால் ஏத்திய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

159. ஓம் இசையின் வாக்கினிமையிலும் சொற்பொருள் உணர்வு வளத்திலும் நிகரற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

160. ஓம் பாட்டிலும் வாத்ய இசையிலும் மறைந்துள்ள ஞானகுருவாகிய/இசை, வாத்ய, தாள அறிவைக் கொடுக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

161. ஓம் குருதேவருக்கு நமஸ்காரம்.

162. ஓம் (எல்லாவற்றிலும்) மறைந்துள்ள பரம்பொருளாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

163. ஓம் அறிவுக்கூர்மை படைத்த திறமிக்க கவியரசராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

164. ஓம் இசை அரசராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

165. ஓம் கோபாலனை கானமாலைகளினால் திறம்பட அலங்கரிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

166. ஓம் கோபிகைகளின் அன்பனைக் காமுற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

167. ஓம் கோவிந்தனை நாமஸங்கீர்த்தனம் செய்து வழிபட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

168. ஓம் கோவிந்த, நாராயண, ஹரி என நாமங்களை இனிது பாடி மயிர்க்கூச்சடைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

169. ஓம் பக்த உள்ளாழ்ந்த உணர்ச்சிகளும் எண்ணங்களும் சேர்த்துக்கோர்க்கப்பட்ட இந்த ஸ்படிக மாலையினால் அணிசெய்யப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

170. ஓம் கோள்துன்பம் ஒழிக்கும் ஹரிபஜனை செய்யத்தூண்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

171. ஓம் உள்ள, உடல் அயர்வினைப் பறந்தோடச் செய்யும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

172. ஓம் ஆழ்ந்த இனிய கம்பீரக்குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

173. ஓம் சுழலும் மனோவேகத்தில் தடுமாறும், தன்னையே உபாஸிக்கும் பக்தருக்கு ஆறுதலளிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

174. ஓம் பிறவிப்பிணியின் கொடும்பிடியினின்று விடுவிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

175. ஓம் கண்ணீர் பெருகத் திருவடி பற்றினவரை உயர்த்தும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

176. ஓம் இயற்கை ஊக்கமும் சக்தியும் அருளும் இன்குரலுடைய/இன்குரலும் இயற்கை ஊக்கமும் சக்தியும் அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

177. ஓம் அறிவைத்தன் வடிவாகக் கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

178. ஓம் ராமநாமத்தினை விடாது ஜபம் செய்தலை விரதமாக ஏற்று நடத்திய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

179. ஓம் நாதப்பனிமலை உச்சியினை முத்தமிடும் நாமஇன்பமாம் முகிலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

180. ஓம் அசைவன, அசையாதன எல்லாவற்றுள்ளும் நுட்பமாய் வியாபித்துள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

181. ஓம் உணர்வாய் எங்கும் பரந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

182. ஓம் இறை உணர்வினைத் தூண்டும் பாட்டுக்கள் கற்பித்த ஆசார்யனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

183. ஓம் (சிஷ்ய) நாதசக்தியைத் தூண்டும் (சிஷ்ய நாதசக்தி யாரால் தூண்டப்பட்டதோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

184. ஓம் அழகுறு ராமசந்திரனை இசையினால் ஏத்தித்துதித்த பக்தசந்திரனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

185. ஓம் ஒளிமண்டலத்தால் முழுதும் சூழப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

186. ஓம் உடைந்த உள்ளத்துக்கு ஆறுதலளிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்

187. ஓம் ராமனாகிய சந்திரனின் கிரணங்கள் கலந்த ஸ்வரத்தின் அழகிய உருவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

188. ஓம் வெற்றியுடைய ராமனுக்கு வெற்றி எனக் குயில் குரலில் முழுங்கும் கவியாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

189. ஓம் மடமையைப் போக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

190. ஓம் தன்னையே வழிபடும் பக்தமனதை வென்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

191. ஓம் தன்னை வென்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

192. ஓம் ஜீவன் முக்தரான (உலகில் வாழும் போதே விடுபட்ட நிலையினரான) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

193. ஓம் ஸ்ரீராமனுடன் ஒன்றுபட்ட, பூஜிக்கப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

194. ஓம் தங்கு தடையின்றி விரைந்தோடும் நாதகங்கையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

195. ஓம் விரிந்து மலர்ந்த நாதபுஷ்பத்தினால் வழிபடப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

196. ஓம் உண்மையான நாதச்செல்வத்தின் அருவியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

197. ஓம் எல்லாமறிந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

198. ஓம் அறிவு விழைபவருக்கு ஆசானாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

199. ஓம் அறிய வேண்டிய நாத ரஹஸ்யங்களின் களஞ்சியமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

200. ஓம் மிக்க ஒளியுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

201. ஓம் ஒளிரும் இன்னிசை ஆதவனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

202. ஓம் ரீங்காரமிடும் ராமநாம ச்ருதியை ஒலிக்கும் தெய்வீகத் தம்பூராவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

203. ஓம் இன்னொலியினை இறைக்கும் இசை நீர்வீழ்ச்சியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

204. ஓம் தாளம் இனிது ஒலிக்க பஜனை செய்து நடமாடும் ஆனந்த வடிவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

205. ஓம் மனக்குழப்பத்தையும் நிம்மதியின்மையையும் போக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

206. ஓம் நிம்மதியின்றித் தவிக்கும் சிஷ்யரின் புகலிடமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

207. ஓம் ஸ்வரார்ணவம் எனும் இசைநூலின் விளக்கமே ஆன ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

208. ஓம் நாத ரஹஸ்யங்களை நன்கு விளக்கியுள்ள (யாரால் நாதரஹஸ்யங்கள் நன்கு விளக்கப்பட்டனவோ, அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

209. ஓம் கருணையால் கனிந்த பார்வையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

210. ஓம் படிம வடிவுடை ஸ்ரீராமனாகிய தெய்வத்தின் பூஜையில் ஈடுபட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

211. ஓம் படிம வடிவில் சிஷ்ய பூஜை அறையினைப் புனிதப்படுத்தும் தெய்வமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

212. ஓம் உடுக்கை முழங்கும் சிவனாரது பொன்மயவடிவை இதயத்தாமரையில் காண்பிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

213. ஓம் 'ராம' 'ராம' என ஒலித்த இசை மணியாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

214. ஓம் தாரக நாமத்தை கோஷித்து முழங்கிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

215. ஓம் மேலெழும்பிப் பறந்த இசைக்குயிலான (மேன்மையான பொருட்செறிவுமிக்க பாட்டுக்கள் பலவும் செய்த) ஸத்குருநாதருக்கு நமஸ்காரம்.

216. ஓம் **நாதப்ரம்மானந்தத்தை அருளும் ஸ்ரீத்யாகப்ரம்ம ஸத்குருநாதருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள்.**

217. ஓம் வீணைஒலியினை ஒத்த இன்குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

218. ஓம் தாரக நாமத்தில் அன்பு கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

219. ஓம் மோன அமைதியுள் மனதில் கேட்கப்படும் ப்ரணவமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

220. ஓம் திருவையாறெனும் புனிதத்தலத்திற்குப் புனிதமூட்டிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

221. ஓம் உயர்ந்தெழுந்து ஆர்ப்பரிக்கும் ஸப்தஸ்வர அலைகள் நிறை ஆழியாம் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

222. ஓம் அமைதியினின்றெழும்பும் ஓங்கார நாதமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

223. ஓம் விழையப்படவேண்டிய இசைச்செல்வமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்

224. ஓம் அமிழ்து நிறை இசையின் ஒளிவடிவமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

225 ஓம் ஒளிநிறை நாதவிண்மீனான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

226. ஓம் பரமாத்மாவே ஆன ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

227. ஓம் இசை, வாத்யம், கூத்து இவை மூன்றின் இருப்பிடமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

228. ஓம் த்யாகராஜர் எனும் நாதப்ரம்மமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

229. ஓம் பயத்தையும் நடுக்கத்தையும் போக்குகின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

230. ஓம் பாதுகாப்புநிழலருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

231. ஓம் ஸத்வம், ராஜஸம், தாமஸம் எனும் முக்குணங்கட்கு அப்பாற்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

232. ஓம் ஆதி ஆத்மிகம், ஆதி தைவிகம், ஆதி பௌதிகம் எனும் முவ்வகைத்தாபங்கள் (பிணிகள்) அற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

233. ஓம் பக்தையை விட்டுக் கணமும் அகலாத ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

234. ஓம் மூவுலகிற்கும் அப்பாற்பட்ட நாதக்கடவுளான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

235. ஓம் ஒளிமிகுந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

236. ஓம் தயைக்குப்பாத்தி போன்ற ஸ்ரீராமனிடத்து அன்புப் பாட்டு-களுக்குப். பாத்தி போன்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

237. ஓம் தவத்தில் ஸஹிப்புத்தன்மை கொண்ட கட்டுப்பாடுள்ளோரைக் காக்கும் பரமனைப்பாடுவதில் ஒன்றிய ஸத்குருவுக்கு நமஸ்கா-ரம்.

238. ஓம் ஆதவன் குலத்துக்கணியாகிய ஸ்ரீராமனை நாள்தோறும் பாடிப்புளகாங்கிதமடைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

239. ஓம் தீனரைக் காக்கும் கடவுளைப் பாடிப்புகழ்ந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

240. ஓம் தீனர் துயர்தீர்க்கும் பரமனை அல்லும் பகலும் பஜனை செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

241. ஓம் துன்பத்தினின்றும் துயரத்தினின்றும் காக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

242. ஓம் வெகுதூரம் பரவிய இசைப்புகழுடைய ஸத்குருவுக்கு நமஸ்கா-ரம்.

243. ஓம் உறுதியான பக்தருக்கே சொந்தமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்

244. ஓம் உள்ள, உடல் ஆரோக்யத்தை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

245. ஓம் தெய்வீக இசையைப் பிரஸாதமாக அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

246. ஓம் ஊஞ்சலில் ஸ்ரீராமமூர்த்தியை எழுந்தருளுவித்து உத்ஸவம் நடத்-திப் பாடிய பாடல்களில் பிரஸித்தி பெற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

247. ஓம் பலவீனத்தைப் போக்குகின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

248. ஓம் உள்ளுணர்வினில் தெள்ள ஒலித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

249. ஓம் ஒளிரும் கண்களினால் தீக்ஷை அளிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

250. ஓம் ஸ்வரக் கடலை ஒளிரச் செய்த / ஸ்வரார்ணவம் எனும் இசை-நூலை விளக்கிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

251. ஓம் காணும் இச்சை கொண்டு கைகுவித்து வணங்குபவர் அந்த-ராத்மாவுக்குப் புலனாகும் ஒளியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

252. ஓம் எளியனவும் திராட்சைச் சாறு போல் உடன் இனித்து நன்மை பயப்பனவுமான . அழகிய மங்களமான கீர்த்தனங்களை இயற்-கையாய் இயற்றிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

253. ஓம் உள்ளமுருகித் தன்னையே வழிபடும் பக்த உள்ள, உடல், குரல் சோர்வினைப் போக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

254. ஓம் எதிர்மறைகளாகிய - எதிர்மறைகளினால் ஏற்படும் - துன்பத்தை நீக்குகின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

255. ஓம் எதிர்மறைகட்கப்பாற்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

256. ஓம் த்வாரகையை இருப்பிடமாகக் கொண்ட ஸ்ரீக்ருஷ்ணனின் விடுவிக்கும் நாமத்தின் இருப்பிடமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

257. ஓம் இவ்வுலகும் அவ்வுலகுமாகிய இருபொருளருளும் இசை அறிவின் மூலமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

258. ஓம் அறவுருவான ஸ்ரீராமபக்தியின் இயற்கையே உருக்கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

259. ஓம் உள்ளத்தை கட்டுப்படுத்தி ஒருமைப்பாட்டுடன் வழிபாட்டினால் அடையக்கூடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

260. ஓம் முகிலொளி படைத்த வடிவுடை ஸ்ரீராமன் மேல் இசைமாரி பொழியும் ஸ்வரமுகிலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

261. ஓம் உள்ள ஒருமைப்பாடின்றி பலனை உத்தேசித்துப் பொருட்கள் வேண்டிச் செய்யப்படும் பூஜையை இகழ்ந்த (யாரால் இகழப்பட்டதோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

262. ஓம் ஸங்கீதத் தென்றலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

263. ஓம் ஒலியுடன் ஆர்ப்பரித்தோடும் இசைப்புனிதகங்கையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

264. ஓம் நொந்த உள்ளத்தின் ஏக்கமே தூபமாக அமைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

265. ஓம் உறுதி கொண்ட மனத்துடன் தன்வழி தொடர்பவருக்கு முடிவற்ற ஸங்கீதானந்தத்தை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

266. ஓம் தாராளமாய் அளிக்கும் குருவரருக்கு நமஸ்காரம்.

267. ஓம் துணிவை உண்டு பண்ணும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

268. ஓம் இடைவிடா இனிய கானத்தினால் அன்றூடம் வழிபடும் அவாவினை நிறைவு செய்யும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

269. ஓம் இதயத்தூய்மையுள்ள ஆத்மாவின் இசைவழிபாட்டில் இன்புறும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

270. ஓம் த்யானிக்கப்படும் குருதேவருக்கு நமஸ்காரம்.

271. ஓம் த்யானத்தில் ஆழ்ந்து ஈடுபட்டவருக்குக் கட்புலனாகும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

272. ஓம் த்யானத்தின் சிறப்பினை முழங்கிய (யாரால் த்யானத்தின்

சிறப்பு முழங்கப்பட்டதோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

273. ஓம் ஸங்கீத ஸித்தியை நிச்சயம் அளிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

274. ஓம் தனதுடற்கோயிலில் ராம ராம எனும் துல்லியமான (மணி) ஓசையை ஒலிக்கச்செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

275. ஓம் இளம் துளஸி இலைகள் கொண்டு ராமனை அன்புடன் ராகத்தினால் அர்ச்சித்த/ ராமனைத்தன் அன்பும் ராகமுமான இளம் துளஸி இலைகளினால் அர்ச்சித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

276. ஓம் வெண்ணெய் போன்ற மென்மையான குரல் படைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

277. ஓம் மகிழ்வுற்று நாமகீர்த்தனங்களைப் பாடிய / நாமகீர்த்தனத்தில் மகிழ்ந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

278. ஓம் நாமத்தின் பெருமை புகழப்பட்ட (நாமத்தின் பெருமை யாரால் புகழப்பட்டதோ, அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

279. ஓம் கூத்தாடும் நாமகீர்த்தனை இன்பமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

280. ஓம் விடுவிக்கும் இறைவன் நாமம் முழங்கப்பட்ட (யாரால் முழங்கப்பட்டதோ, அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

281. ஓம் நாத நெறியில் முன்னோடியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

282. ஓம் கதியற்ற நாத வித்யார்த்தியின் ஒரே அடைக்கலமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

283. ஓம் உருவற்ற ஓங்காரத்திலே ஒளிந்திட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

284. ஓம் நாதவானில் ஒளிபரப்பிய (யாரால் நாத வானம் ஒளிபரப்பப்பட்டதோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

285. ஓம் நீருண்ட மேகத்தின் கம்பீரக்குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

286. ஓம் ஆயிரக்கணக்கில் துதிப்பாட்டுக்கள் படைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

287. ஓம் புதுப்புதுப் பாட்டுமலர்களால் ராமனை அர்ச்சித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

288. ஓம் கூத்து, பாட்டு இவ்வடிவிலுள்ள ராகதேவதையே ஆன ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

289. ஓம் கண்ணுக்கின்பமான ஸ்ரீராமனின் வடிவழகைப்பாடும் கான இன்பமே ஆன ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

290. ஓம் அன்றூட இசை வழிபாட்டில் இன்புறும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

291. ஓம் நாதோபாஸனை செய்யத்தூண்டிய (நாதோபாஸனை யாரால் தூண்டப்பட்டதோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

292. ஓம் "நௌகா சரித்ரம்" எனும் இசை நாடகத்தில் ஸ்ரீக்ருஷ்ணலீ-லையைப் புகழ்ந்து பாடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

293. ஓம் தக்க, அழகிய க்ருதி புஷ்ப வழிபாட்டில் மகிழ்ந்த ஸத்குரு-வுக்கு நமஸ்காரம்.

294. ஓம் அநுமன் நிலையாக அடைந்த, பஜனைக்கின்பமான கீர்த்த-னங்களினால் ஸ்ரீராமனை ஸேவித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

295. ஓம் அநுமன் துதிக்குப் பாத்திரமான ஸ்ரீராமனை மகிழ்விக்கும் புனிதத்துதிகள் பாடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

296. ஓம் தூய்மையூட்டும் ஸ்ரீராம பக்தியின் உயர்வினை அறுதியிட்டு-ரைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

297. ஓம் நாமமாகிய அமுதபானத்திற்கு தாகம் கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

298. ஓம் நாமகீர்த்தனம் எனும் இன்பமூட்டும் அமுதைப் பருகிய ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

299. ஓம் தூய உருக்கொண்ட ஸ்ரீராமனைக்காணும் இன்பம் பெற்ற புனித வடிவினரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

300. ஓம் பூஜிக்கப்படவேண்டிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

301. ஓம் பக்த உயிர் மூச்சுடன் கலந்துள்ள (யாரில் பக்த உயிர் மூச்சு கலந்திருக்கிறதோ, அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

302. ஓம் ஸ்பர்ச தீக்ஷை அளிக்கும் குருவுக்கு நமஸ்காரம்.

303. ஓம் உறுதியான தீர்மானத்துடன் மிகவும் முயலப்படும் நாதமாகிய செல்வத்தை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

304. ஓம் முன்னோரிடமிருந்து பெற்ற ஸ்ரீஸீதாராமமூர்த்தியை இசைமூ-லம் வழிபட்ட புனிதரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

305. ஓம் புனிதமான ஸ்ரீராமநாமத்தை இனிமையாக இசைத்து போதை-யூட்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

306. ஓம் நாதோபாஸனையின் மேன்மையை வலியுறுத்திய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

307. ஓம் புத்துணர்வூட்டும் ஸ்வர அமுதைப் பொழியும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

308. ஓம் ஒவ்வொரு நொடியும் நாமஸ்மரணையில் விழிப்புடனுள்ள ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

309. ஓம் அதிகாலையில் தம்பூராவுடன் ஸுஸ்வரமான கானாஞ்ஜலியால்

மகிழும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

310. ஓம் கைகுவித்து வணங்கும் பக்த ஆத்ம உணர்வில் மலர்ந்த இப்-புஷ்ப பூஜையில் மகிழும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

311. ஓம் இனிய பேச்சுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

312. ஓம் விரும்பியது கொடுத்து மகிழ்வூட்டும் ஸத்குருநாதருக்கு நமஸ்-காரம்.

313. ஓம் அன்புமயமான குருதேவருக்கு நமஸ்காரம்.

314. ஓம் இன்பமூட்டும் அமிழ்தாகிய மங்களமான கீர்த்தனங்களைக் கற்-பிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

315. ஓம் தெளிக்கப்பட்ட எண்ண மலர்களின் பனித்துளிகளாம் கண்ணீ-ரில் இளகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

316. ஓம் தெளிக்கப்பட்ட தேனாகிய பக்தியுடை அன்புப் பாட்டினால் மனங்கனிந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

317. ஓம் அன்பு கனிந்த, இனிமையே ஆன பாட்டுக்களினால் ஸ்ரீராம-னைக் கட்டித் தழுவிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

318. ஓம் அன்பும் கனிவுமே உருவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

319. ஓம் ஸ்ரீராமபாதங்களை அபிஷேகித்த புனித நீராகிய தன் இசை அமுதை (வணங்கியவர்மேல்) தெளிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

320. ஓம் ராமபக்தியின் முழுமதியாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

321. ஓம் நாம மலர்கள் செறிந்த நாதபாரிஜாதமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

322. ஓம் நாமத்தின் தெய்வீக நறுமணத்துடன் வீசும் நாத இன்பத்-தென்றலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

323. ஓம் பாய்ந்து நீந்தித் திளைக்கவேண்டிய தெய்வீக கான கங்கை-யாகிய ஸத்குருநாதருக்கு நமஸ்காரம்.

324. ஓம் **அர்வரசப்படுக்கையோனின் (ஸ்ரீமந்நாராயணன்) அருகாமையிலுள்ள இசை-யரசராகிய ஸ்ரீத்யாகராஜ குருநாதருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள்.**

325. ஓம் ஞானப்பழத்தை அளிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

326. ஓம் மிகச் சிறந்த பலனாகிய மோக்ஷத்தை அடைவிக்கும் ஸங்கீ-தயோக மார்க்கத்தில் வழிகாட்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

327. ஓம் மோக்ஷபலனை அடைவிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

328. ஓம் பரப்ரம்மமாகிய ஸ்ரீராமனை அடைந்த ஸத்குருவுக்கு நமஸ்கா-ரம்.

329. ஓம் பக்த அன்புத்திலகம் நெற்றியில் ஒளிரும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

330. ஓம் நாமானந்தத்தினால் மலர்ந்து சிரிக்கும் தாமரைக்கண்களுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

331. ஓம் அளவு கடந்த அன்பினைப் பொழியும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்

332. ஓம் உணர்ச்சிக் கண்ணீரினால் தொண்டை அடைக்கத் தழுதழுக்கும் பக்தமுன்னிலையில் தோன்றும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

333. ஓம் வானளாவிய நாதவடிவாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

334. ஓம் பீஜாக்ஷரமான ஓங்காரத்துள்ளிருக்கும் நாத சக்தியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

335. ஓம் அறிவுயோகநெறியினைக் கடைப்பிடித்தொழுகுபவர் மனதினை நிலையாக அடைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

336. ஓம் மிகுந்த ஒளியுடை (வெகுதூரம் பரவிய) ஸங்கீத ஜோதியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

337. ஓம் அறிவினைத் தட்டி எழுப்பும் குருவுக்கு நமஸ்காரம்.

338. ஓம் ப்ரம்மஞானியான (ப்ரம்மத்தை அறிந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

339. ஓம் ப்ரம்மத்தின் இயற்கையைத் தன் வடிவாகக் கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

340. ஓம் ப்ரம்ம முஹூர்த்தத்தில் (விடிகாலைக்கும் முன்னால்) செய்யப்படும் நாதோபாஸனையில் பிரியமுள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

341. ஓம் பக்தி நிறைந்த ஸுஸ்வரமான பாட்டில் ஆனந்திக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

342. ஓம் இறைவன் இயற்கையை இசைப்பதில் இன்புறும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

343. ஓம் இறைநினைவிலேயே ஆழ்ந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

344. ஓம் சிதைந்த இதயத்துக்கு மருத்துவரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

345. ஓம் பயந்த பாடகருக்கு உயிர்மூச்சளிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

346. ஓம் பாம்பணைப் பள்ளி கொண்டோனை பஜனை செய்து ஆனந்தித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

347. ஓம் பூமியின் புதல்வியான ஸீதையின் மணாளன் இருப்பிடமாகக் கொண்ட நன்னெஞ்சத்தை உடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

348. ஓம் மிக உயர்ந்த பக்தியுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

349. ஓம் நோய் தீர்க்கும் தன்மை படைத்த ஸங்கீதத்திற்கு ஆசார்யனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

350. ஓம் பைரவி ராகத்திலமைந்த அழகிய கீர்த்தனையில் கிடைத்தற்கரிய ஆதிதேவனாகிய ஸ்ரீராமனின் தர்சன பாக்யத்தைப் பாடி ஆனந்திக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

351. ஓம் இவ்வுலகின்பமும் முக்தியும் ஒருங்கே அருளும் கீர்த்தனைகளை உபதேசிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்

352. ஓம் பௌளிராக ஆலாபனை செய்து இனிய பாட்டின்மூலம் ஸ்ரீராமனைத் திருப்பள்ளியெழுப்பும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

353. ஓம் சுழன்றுழலும் மனதின் கொடுமைக்கு முடிவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

354. ஓம் ஐயத்தையும் குற்றத்தையும் விலக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

355. ஓம் புருவ மத்தியில் ஒருமைப்படுத்தப்பட்ட உள்நோக்குக்குப் புலனாகி ஒளிரும் நாதசக்தியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

356. ஓம் மங்களம் செய்யும் தெய்வீகமான இன்வாக்காகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

357. ஓம் மங்களத்தின் அழகிய உருவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

358. ஓம் மங்களத்திற்கு வழியான தெய்வீக கானாசார்யனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

359. ஓம் மிகவும் கௌரவிக்கப்பட்ட, கான வித்தையில் மிக உயர்ந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

360. ஓம் இனிய பாட்டுக்களைப் பிரஸாதமாக அளித்துள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

361. ஓம் கரைகாணா இன்னிசை ஆழியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

362. ஓம் அமிழ்துசெய் நிலவை வென்ற முகமுடைய ஸ்ரீராமனைப் பாடுதலில் அமிழ்தினிமையை வென்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

363. ஓம் முனிவர் வாழ்வான ஸ்ரீராமனைப் பாடுதலே வாழ்வாகக் கொண்ட முனிவரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

364. ஓம் வாக்குத் திறனற்ற சிஷ்யையின் பஞ்சசதிநாமாவளி மூலம் அர்ச்சிக்கப்பட்ட குருவுக்கு நமஸ்காரம்.

365. ஓம் மிகமென்மையான, அமிழ்தினிய குரலே அணியாகப்பூண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

366. ஓம் கொண்டற்கருமை நிறத்தோனின் இசைக்கொண்டலான (மேகம்) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

367. ஓம் அருள் மயமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

368. ஓம் மோக்ஷத்துக்கு வழியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

369. ஓம் மௌனகுருவுக்கு நமஸ்காரம்

370. ஓம் மௌனத்தினின்றெழும் நாத ஒளியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

371. ஓம் மௌனமே ச்ருதியாக, மூச்சே இடைவிடாகானமாக அர்ப்பிக்கப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

372. ஓம் எப்பொழுதும் நினைக்கப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

373. ஓம் தாரக நாமமாகிய செல்வத்தைச் சேர்த்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

374. ஓம் சிறப்பைத் தரும் நாதவித்தை எனும் பாக்யத்தை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

375. ஓம் வேண்டப்படும் ஆசார்யதர்சனமும் உடனிருக்கும் பலனும் அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

376. ஓம் ஒன்றிய மனமுடை சிஷ்யருக்கு உலகின் உட்பொருளை உணர்த்தும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

377. ஓம் நாமயோகம் ஒன்றிய [யாருடன் இறைவன் நாம (மனன, ஜப, கான) யோகம் ஒன்றியதோஅந்த] ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

378. ஓம் இடைவிடாது நாமப்பெருக்கிடும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

379. ஓம் யோகேச்வரனாகிய இறைவனின் நாமஜபமெனும் யோகநெறியில் வழிகாட்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

380. ஓம் யோகமே ஆகிய ஸங்கீதமெனும் அமிழ்தினால் பக்தருக்கு உயிரூட்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

381. ஓம் வேறொருவரன்றித் தன்னையே உபாஸிக்கும் பக்தரைக் காக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

382. ஓம் ரகுவரனை எண்ணற்ற க்ருதிகளில் புகழ்ந்து பாடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

383. ஓம் அவா, வெகுளி இவை போன்ற எதிரி உணர்வுகளை அழிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

384. ஓம் ராகமெனும் வரமருளும் (இசைவரமருளும்) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

385. ஓம் மன்னாதி மன்னர்களிற் சிறந்த ஸ்ரீராமனைப் பாடுதலிலேயே ஈடுபட்ட த்யாகராஜ குருவருக்கு நமஸ்காரம்.

386. ஓம் மன்னர்கட்கெல்லாம் மன்னரான ஸ்ரீராமன் புகழ்பாடும் இசை மன்னரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

387. ஓம் ராமசந்திரன் (ராமனாகிய சந்திரன்) ஒளிவீசும் ராக அமுதக்கடலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

388. ஓம் தாமரைக் கண்ணனைப் பாடுதலில் உருகி நனைந்த கண்களு-டைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

389. ஓம் ஸ்ரீராமமூர்த்தியைக் குலதனமாக (முன்னோர் வைத்த செல்வ-மாக)ப் பெற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

390. ஓம் ஒவ்வொரு மயிர்க்காலிலும் ராமபக்தி கசிகின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

391. ஓம் ராமனின் வடிவழகை ரஸித்து இன்புற்ற ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

392. ஓம் ராமபக்தியின் உயர்வை இனிதுபாடிய ஸத்குருவுக்கு நமஸ்கா-ரம்.

393. ஓம் ஸ்ரீராமனிடம் ஆழ்ந்து வேரூன்றிய அன்பு கொண்ட, இசை-யில் இன்புறும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

394. ஓம் ராமனெனும் ரத்னம் பதித்த ராகமெனும் (அன்பு, குரல் இனிமை, பண்) பொன்மாலையணிந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

395. ஓம் ராமநாமத்தைப் புகழ்ந்து பாடிய இசை இன்பமாகிய (ராம நாமம் புகழ்ந்து பாடப்பட்ட , இசை இன்பமாகிய) ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

396. ஓம் ராகமாகிய பரிசை வாரி வழங்கும் இசைச் செல்வந்தராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

397. ஓம் பிணி தீர்க்கும் பண்ணுருவியாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

398. ஓம் மயிர்க்கூச்சுண்டுபண்ணும் குருவரருக்கு நமஸ்காரம்.

399. ஓம் நேர்த்தியான, அழகு செறிந்த பதங்களால் அமைக்கப்பட்ட, ராக அமிழ்து சொட்டும் மங்களமான கீர்த்தனங்களைத் தோற்றுவித்த ஸத்குருவுக்கு நமஸ்கரரம்.

400. ஓம் சுருக்கம், சரளம், நுட்பம் இவை அமையப்பெற்ற இன்கவிப்பு-லமைக்குப் பெயர்பெற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

401. ஓம் ராமநாமமெனும் உயர்ந்த சந்தன ஸாரத்தால் பூசப்பட்டு மணமூட்டப்பட்ட (பூசப்பட்டு வாசனையூட்டும் ராமநாமமெ-னும் உயர்ந்த சந்தன ஸாரத்தினை உடைய) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

402. ஓம் தன்னுட் கலந்துவிட்ட ஸுஸ்வரத்தையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

403. ஓம் அலைக்கப்படும் மனதை அமைதிப்படுத்தும் இசைக்குரலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

404. ஓம் மனமாம் புஷ்பத்தினைப் பறித்து அர்ப்பிப்பவர் உள்வானில் மேலெழும்பும் ஒளிக்கதிரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

405. ஓம் ஒளிமயமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

406. ஓம் இவ்வுலகிற்கப்பாற்பட்ட நாத சக்தியான ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

407. ஓம் அழகிய இன்னிசை ஒலியின் ஆணிவேரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

408. ஓம் வாக்கெனும் வரமருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

409. ஓம் வாக்குக்கப்பாற்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

410. ஓம் வித்தையின் இருப்பிடமான ஸத்குருநாதருக்கு நமஸ்காரம்.

411. ஓம் வீணை வாசிப்பெனும் செல்வத்தை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

412. ஓம் வேதங்களில் புகழப்பட்ட ஸ்ரீராமனை நன்கு புகழ்ந்து பாடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

413. ஓம் வேதஸாரமான ஸ்ரீராமநாமத்தின் நாதஸாரமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

414. ஓம் வைதேஹியின் பாக்யமான ஸ்ரீராமனைப் பாடிய பாக்யமுள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

415. ஓம் வைபோகங்கள் கூத்தாடும் ரங்கனைப் பாடிக்கூத்தாடும் ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

416. ஓம் இன்னிசையைச் சூழ்ந்து வியாபிக்கும் (யாரால் ஸுஸ்வர கான-மானது சூழ்ந்து வியாபிக்கப்படுகிறதோ, அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

417. ஓம் அடர்ந்த உலக வாழ்க்கைக் காட்டினைக் கடக்கச் செய்யும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

418. ஓம் சங்கு சக்கரங்களை தரித்தோனைத் தன் இதயத்தில் தரிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

419. ஓம் சங்கரனுக்கு (சிவனுக்கு)ப் பிரியமான ஸ்ரீராமனுக்குப் பிரிய-மான, மங்களம் செயும் பாட்டிசைக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

420. ஓம் தாரக நாமத்தின் பெருமையை ஏத்திய ஸத்குருவுக்கு நமஸ்கா-ரம்.

421. ஓம் மங்களகரமான நாதசக்தியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

422. ஓம் என்றுமிருக்கும் ஸங்கீதமெனும் வரப்ரஸாதத்தை அருளும் ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

423. ஓம் நாதோபாஸனையை போதித்த (போதிக்கப் பட்ட நாதோபா-ஸனை) மங்கள சரித்ரத்தை உடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

424. ஓம் இன்னிசை ஒலி இன்பத்தினைத் தெளிக்கும் (தெளிக்கப்பட்ட

இன்னிசை ஒலி இன்பத்தை உடைய) மிகச்சிறந்த ஆனந்தமான கீர்த்தனைகளைச் செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

425. ஓம் மங்களகரமான அழகினிய குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

426. ஓம் மங்களம்தரும், என்றும்வாடா, மணமிக்க பாட்டுமலர்களின் மூலம் மகிழ்வூட்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

427. ஓம் சூன்ய வாதத்தை வேரோடு களையும் நாம கீர்த்தனத்தை போதித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

428. ஓம் ச்ருங்காரத்தின் உச்சியான ஸ்ரீராமனைப் பாடும் ஆனந்தத்தின் உச்சியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

429. ஓம் ஸ்ரீராமனாம் ரத்னத்தின் ஒளியைச் சென்னிமிசை கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

430. ஓம் மலையினை ஒத்த திடபக்தியுள்ளவருக்கு அருள் புரியும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

431. ஓம் தூய்மைப் படுத்தும் ஸங்கீதகங்கையாகிய ஸத்குருநாதருக்கு நமஸ்காரம்.

432. ஓம் ஸ்ரீத்யாகராஜஸ்வாமி எனும் தெய்வத்துக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள்.

433. ஓம் கருநிற அழகிய உருக்கொண்டோனைப் பாடும் அழகிய ஏழு இன்னிசை ஒலிகளின் (ஸப்தஸ்வரங்களின்) உருவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

435. ஓம் நம்பிக்கையுடன் தன்னை நினைந்தேங்குபவரைக் காக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

435. ஓம் அக்கறையுடன் பாடுபடும் சிஷ்ய உள்ளுள்ள அளவற்ற ஆத்ம சக்தி எனும் விளக்கினைத் தூண்டி நன்கு ஒளிரச்செய்யும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

436. ஓம் புகழ் அளிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

437. ஓம் அலுத்த உள்ளத்துக்குப் புத்துயிரூட்டும் இசை அமுதைப் பொழியும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

438. ஓம் தன்னை வந்தடைந்த, தன்னையே பூஜிக்கும் பக்தரைக் காக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

439. ஓம் கடைத்தேற்றும் ஸ்ரீராமம்கிமைகட்கிருப்பிடமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்

440. ஓம் ச்ருதி சுத்தமான ஆத்மானந்தமான கானத்தில் புலனாகும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

441. ஓம் நாதமெனும் தெய்வீக சக்தியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

442. ஓம் மிக்க சிறப்பினை அளிக்கும் நாதாசார்யனான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

443. ஓம் செவியினால் பருகிட வேண்டிய அமுதக்குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

444. ஓம் மனமுவந்த பணியினால் ஸ்ரீராமனை மகிழ்வித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

445. ஓம் மென்மையான, பிசிரற்ற குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

446. ஓம் ஸங்கீதச் சூழலை ஊடுருவிப் பரந்த (யாரால் ஸங்கீதச் சூழல் ஊடுருவி வியாபிக்கப்பட்டதோ, அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

447. ஓம் ஸங்கீதோபாஸனையை மெச்சிய (யாரால் ஸங்கீதோபாஸனை மெச்சப்பட்டதோ, அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

448. ஓம் தன் பற்றினை இறுகப் பற்றிக்கொண்ட உண்மை பக்தரை ஆரத்தழுவிக்கொள்ளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

449. ஓம் புகழ் பெற்ற இசை அரசராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

450. ஓம் சிலேடையில் திறனுள்ள மிகச் சிறந்த கவியாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

451. ஓம் புகழ்படைத்த, நாதச் சிறப்பான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

452. ஓம் ஏத்தித்துதிக்க வேண்டிய, இசைஉருவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

453. ஓம் ஏத்தித்துதிக்கப்பட்ட குருவரருக்கு நமஸ்காரம்.

454. ஓம் ஸுஸ்வரமாகிய காற்றை சுவாசித்த (யாரால் ஸுஸ்வரமாகிய காற்று சுவாசிக்கப்பட்டதோ அந்த) / உள்ளிழுக்கப்பட்ட ஸுஸ்வரமாகிய காற்றான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

455. ஓம் சலனமற்ற ஸுஸ்வர ஏரியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

456. ஓம் மங்களத்தைக் கொடுக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

457. ஓம் ஷட்ஜமாகிய ஆதார ச்ருதியினின்றெழும்பும் ஸங்கீதப் பெருக்கான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

458. ஓம் ஷாடவ, ஔடவ, ஸம்பூர்ண ராகங்களின் ஸாரம் ஓருருவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

459. ஓம் பதினாறு வித உபசாரங்களுடன் ஸ்ரீராமனுடைய அன்றாட இசை வழிபாட்டில் ஈடுபட்ட ஒப்பற்ற பரம பாகவதரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

460. ஓம் ஸங்கீதப்ரியரான ஸத்குருநாதருக்கு நமஸ்காரம்.

461. ஓம் ஸங்கீதத்தின் உறைவிடமான / ஸங்கீதத்தில் உறையும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

462. ஓம் எங்கும் நிறைந்துள்ள உண்மையாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

463. ஓம் எல்லாவற்றுக்கும் ஸாரமான ராம நாம மகிமையையும் அதிலுள்ள ரஹஸ்யத்தையும் உபதேசிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

464. ஓம் தனதன்புப் பிணைப்பில் கட்டுண்ட ஸ்ரீராமனையுடைய (யாருடைய அன்புப்பிணைப்பில் ஸ்ரீராமன் கட்டுண்டானோ, அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

465. ஓம் ஸீதாராமன் எப்போதும் வசிக்கும் கணக்கற்ற இனிய பாட்டுக்களைப் படைத்த / இனிய கீர்த்தனைகள் என்ற வலையில் ஸீதாராமனை எப்போதும் வசிக்கச்செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

466. ஓம் அழகிய, இனிய ஏழு ஸ்வரங்களுள்ளிருக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

467. ஓம் ஸுஸ்வரமெனும் அம்ருதரஸம் நிறைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

468. ஓம் ஸுஸ்வர அம்ருதமெனும் மிகச் சிறந்த மருந்தாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

469. ஓம் இன்னொலி வானில் ஒளிரும் மின்னலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

470. ஓம் ஸுஸ்வரக்கானகத்தில் உறையும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

471. ஓம் ஸுஸ்வர வித்தையில் மிகுந்த ஈடுபாடுள்ள ஒருவரால் வேண்டி தேடப்படும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

472. ஓம் ஸுஸ்வர வித்தை வேண்டுபவரின் உள்ள வானில் உதய ஸூர்யனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

473. ஓம் ஸூத்ரதாரியான ஸ்ரீராமனைப் பாடுவதிலே நிறைந்த மனதுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

474. ஓம் மங்களகரமான அழகிய ஆயிரக்கணக்கான கீர்த்தனைகளை ஸ்ரீராம அர்ச்சனைக்காக ச்ருஷ்டித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

475. ஓம் இன்கவித்திறன் வந்தடைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

476. ஓம் அன்புடை பக்தியின் உருவாக ஸ்ரீராமனை ஸேவித்த (ஸ்ரீராமன் ஸேவிக்கப்பட்ட அன்புடைய பக்தியின் உருவாகிய) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

477. ஓம் ராமராம எனும் இன்னொலியுடனிணைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

478. ஓம் ஸௌமித்ரி (லக்ஷ்மணன்) உடன்கூடிய ஸ்ரீராமனின் யாக ரக்ஷணத்தை இனிய பாட்டின் மூலம் நேரில் காண்பிக்கும்

ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

479. ஓம் துதிப்பாட்டுக்களின் கூட்டங்களினால் ஸ்ரீராமனை அழகுபடுத்திய (யாருடைய துதிப்பாட்டுக் கூட்டங்களினால் ஸ்ரீராமன் அழகுபடுத்தப்பட்டானோ, அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

480. ஓம் இத்துதி புஷ்பமாலைகளினால் அலங்கரிக்கப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

481. ஓம் ஸ்ரீராமன் நினைவிலேயே நிலைத்து நின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

482. ஓம் பக்தநினைவில் நிலைத்துள்ள (யாரிடம் பக்தநினைவு நிலைத்துள்ளதோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

483. ஓம் நிலைத்த, ஆழ்ந்த நோக்கினால் ஸங்கீத சாஸ்திரத்தின் அறிவும் தன்னுருவடையும் பாக்யமும் அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

484. ஓம் ராமகான கங்கையில் நீராடிய (யாரால் ராமகான கங்கை நீராடப்பட்டதோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

485. ஓம் தன் பற்றினை இறுகப்பற்றிய பக்த அன்பெனும் சந்தனஸாரம் பூசப்பெற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

486. ஓம் அன்புநிறைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

487. ஓம் தெளிவான பொருளுடன் தத்துவங்கள் நிரம்பிய பாட்டுக்களின் மூலம் ஞானத்தைத் தட்டி எழுப்பும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

488. ஓம் (நாதத்துக்காக) ஏங்கும் ஆத்மாவுக்கு நாதவரமருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

489. ஓம் ஆயிரமாயிரம் சூர்யர்களின் ஒளியுடன் ஒளிரும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

490. ஓம் ராமநாமமாகிய சந்திரனும் ஸ்வரங்களாகிய தாரகைகளும் ஒளிரும் ஸங்கீதவானமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

491. ஓம் ஒளிரும் நாமகானானந்தமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

492. ஓம் கவிதை உள்ளுணர்வை உண்டாக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

493. ஓம் அழகுறு ரகுராமனை ஸ்மரித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

494. ஓம் மலர்ந்து சிரிக்கும் நாதமலரின் நாமநறுமணமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

495. ஓம் இன்பந்தரும் இன்னிசை இறைவனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

496. ஓம் நினைத்தமாத்திரம் முன்தோன்றி ஒளிரும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

497. ஓம் தெள்ளத்தெளிந்த தெய்வீக ஸங்கீத தாமரைக்குளமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

498. ஓம் ஸ்வர வித்தைக் கடலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

499. ஓம் ஸ்வர சுத்தமருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

500. ஓம் ஸ்வதந்த்ரத்தை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

501. ஓம் ஸ்வரம், அக்ஷரம் கொண்ட இக்கதம்ப மலர்களின் நறுமணமான ஸத்குருவுக்கு நமஸ்காரம் / ஸ்வரம் அக்ஷரம் கொண்ட இக்கதம்ப மலர்களில் வசிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

502. ஓம் பக்த உள்மனப்பூர்வ எண்ணங்களும் உணர்வுகளுமான இந்நைவேத்யத்தைச் சுவைத்து ஆனந்திக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

503. ஓம் நிஜபக்த கானாஞ்ஜலியை ஆனந்தித்து ஸ்வீகரிக்கும் (ஏற்றுக்கொள்ளும்) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

504. ஓம் தன்னுடையவே ஆன, தன்னையே உபாஸிக்கும் பக்தையை முடிவற்ற ஓங்கார நாதரூபத்தில் சூழும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

505. ஓம் ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்யும் வசீகரக்குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

506. ஓம் ஹரிநாம ஸங்கீர்த்தனத்தின் உயர்வை முழங்கிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

507. ஓம் ஹரிபக்தி சொட்டும் இனிய கீர்த்தனங்களை போதித்த, புகழ்பெற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

508. ஓம் ஹாஸ்யரஸம் (நகைச்சுவை) நிரம்பிய நிந்தாஸ்துதி மன்னனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

509. ஓம் ஹிதோபதேச ஸாரமான அழகிய கீர்த்தனங்களை அருளிச்செய்துள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

510. ஓம் சக்தி அற்ற, ஒருமுனைப்பட்ட பக்தரின் ஒரே பாதுகாப்பான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

511. ஓம் ஆத்மாவுட்கலந்திட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

512. ஓம் இதயபூர்வமான பக்தி கொண்ட இப்புஷ்பாஞ்ஜலியில் மகிழ்வுறும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

513. ஓம் புத்துணர்வளிக்கும தெய்வீகக் குரலுடைய /புத்துணர்ச்சியூட்டும் குளிர்ந்த தெய்வீக மூச்சுக்காற்றாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

514. ஓம் தன் அன்பாலும் பாட்டாலும், பக்தரை மகிழ்விக்கும் / பக்தரை மகிழ்விக்கும், அன்பினாலுதித்த பாட்டுக்கள் படைத்த

/ பக்த அன்புப்பாட்டினால் மகிழ்ந்த (யாரால் பக்த அன்புப் பாட்டு மகிழப்பட்டதோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

515. ஓம் இதயமாம் பொற்கிண்ணம் நிறைய பக்தித்தேன் அர்ப்பிக்கப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

516. ஓம் ஸுஸ்வர ஆழியினைத் தங்கமயமாக்கும் இளங்கதிரவனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

517. ஓம் ஸ்ரீராமனாம் இளங்கதிரோனால் பொன்னிறமாக்கப்பட்ட இன்னிசை ஆழியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

518. ஓம் இன்பமான, இனியதான, சுகம் தரும், எழிலுடை எல்லாவற்றுக்கும் உட்கருவான குருநாதருக்கு நமஸ்காரம்.

519. ஓம் பக்த உள்ளுள் முழுதும் ஆழ்ந்து பரந்திருக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

520. ஓம் பக்த ஆழ் மனத்துள் மலர்ந்த இவ்வன்பு நறுமணப்புஷ்பங்கள் அர்ப்பிக்கப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

521. ஓம் பக்திபுஷ்பத்தின் ஸங்கீதநறுமணமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

522. ஓம் பக்தியின் நறுமணமும் கானமாகிய இனிய தேனும் பொருந்திய சலனமற்ற சித்த புஷ்பத்தால் அர்ச்சிக்கப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

523. ஓம் பக்த இதயக்குகையில் தெள்ளென ஒளிரும் நாதத்தோன்றலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

524. ஓம் நாதப்பொன்னொளியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

525. ஓம் தனிமையிலேயே உணர்ந்தனுபவிக்க வேண்டிய, தானே ஒளிரும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

526. ஓம் இன்னொலியின் மூலமான அடர்ந்தாழ் அமைதியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

527. ஓம் நாதப்ரம்மத்தின் நுண்ணுருவான ப்ராண சக்தியாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

528. ஓம் தெளிந்த அமைதியான மனதில் சுடர்விடும் நாதப்ரம்மமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

529. ஓம் நாதத்தின் உட்கருவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

530. ஓம் நாதத்தால் சூழப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

531. ஓம் நாதத்தின் உள்ளுள்ள / நாதத்தின் ஆழ் அமைதியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

532. ஓம் நாதத்தின் கோவிலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

533. ஓம் நாதக்கோவிலின் ஞானவிளக்கான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

534. ஓம் நாதக்கோவிலாம் இதயத்தினுள் தெய்வமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

535. ஓம் நாத ஒளிச்சுடரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

5?6. ஓம் நாதத்தினால் அர்ச்சிக்கப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

537. ஓம் நாதத்தின் நிறைவான/நாதப் பேரின்பமான ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

538. ஓம் நாதமெனும் தெய்வீக சக்தியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

539. ஓம் நாதோபாஸகரைத் தன்னோடு ஒன்றுக்கிக் கொள்ளும் மேம்-பட்ட நாதகுருவுக்கு அனேக நமஸ்காரங்கள்.

540. ஓம் **நாதப்ரம்மானந்தமாகிய ஸத்குரு ஸ்ரீத்யாகராஜஸ்வாமிக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரங்கள்.**

ஓம்

ஸ்ரீராமஜயம்

ஸத்குரு ஸ்ரீத்யாகப்ரம்ம

ஸஹஸ்ர நாமாவளீ

ஓம்

1. ஓம் ஸங்கீதாலயத்தில் உறையும் தெய்வமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
2. ஓம் ஓங்காரத்தின் உருவமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
3. ஓம் நாதோபாஸனைக்கான ஏக்கம் கொழுந்து விட்டெரியும் விளக்காக உள்ள ஸன்னிதியில் கடவுளான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
4. ஓம் பக்தையின் கண்ணீரினால் நீராட்டப்பட்ட புனித உருவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
5. ஓம் உள்ளார்ந்த அன்புள்ள பக்தையின் ஆழ்ந்த உணர்வே ஆடையாக அமையப்பெற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
6. ஓம் ஸ்ஸ்வரத்தின் நறுமணம் கொண்ட / ஸ்ஸ்வரத்தின் இனிமையே குரலான / ஸ்ஸ்வரத்தில் ஆழ்ந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
7. ஓம் நாத மலரை அணியாகப் பூண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்
8. ஓம் நாம மலர்களினால் பூஜிக்கப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
9. ஓம் த்யானிக்கும் பக்தையின் உயிர்மூச்சினால் அர்ச்சிக்கப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
10. ஓம் ஸஹஸ்ரநாமமெனும் நறுமண புஷ்பாஞ்ஜலி ஸமர்ப்பிக்கப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
11. ஓம் இனிமையாக இசைக்கும் தாகம் எனும் ஆத்ம தாபமே தூபமாக அர்ப்பிக்கப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
12. ஓம் பக்தையின் ஆத்ம நிவேதனத்துடன் கை குவித்து வணங்கப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
13. ஓம் கன, நய ராகங்களைப் பாடுவதாகிய தீபாராதனையில் ஒளிரும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
14. ஓம் இனிய கானமே ஜண ஜணவென ஒலிக்கும் மணியாக, இதயத்தில் ஒளிரும் அன்பே கர்ப்பூரமாக நீராஜனம் அமைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.
15. ஓம் ஆத்மானந்தமான தன் நாதவடிவைக் காணும் இன்பத்தை ப்ரஸாதமாக அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

16. ஓம் நாதப்ரம்மானந்தத்தையே தன் வடிவாகக் கொண்ட ஸத்குரு-வுக்கு நமஸ்காரம்.

17. ஓம் நாதத்தின் களியாட்டத்தின் வடிவான / நாத இன்பத்துடன் கூத்தாடும் வடிவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

18. ஓம் வழிபடும் பக்தையின் உள்ள அரங்கத்தில் ஆடுகின்ற ஸுஸ்வர தேவதையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

19. ஓம் ஸ, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழு ஸ்வரங்கள் இனிய ஒலியுடன் ஆடுகின்ற ஒளியாகிய ஸங்கீத தேவதையான ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

20. ஓம் நாதத்தை வழிபடும் பக்த இதயம், எண்ணம், குரல், நாவு இவற்றிலமர்ந்த நாத தேவதையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

21. ஓம் பிரகாசிக்கும் ஏழு ஸ்வரங்களின் ஒளிவட்டத்தால் சூழப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

22. ஓம் இசை இன்பம் ஒளிரும் திருமுகத்தையுடைய ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

23. ஓம் நாதவடிவமான ஸ்ரீராமனைத் திலகமாக அணிந்த அழகிய நெற்றியுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

24. ஓம் அறிவு நெருப்பின் பொறிபறக்கும், ஒளியை உமிழும் கண்களு-டைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

25. ஓம் ஸுஸ்வரத்தின் நறுமணத்தை முகர்ந்து இன்புறும் ஸத்குரு-வுக்கு நமஸ்காரம்.

26. ஓம் ஸப்தஸ்வர மணிகளால் அலங்கரிக்கப்பட்ட கோதண்டத்தைக் கையிலேந்திய ஸ்ரீராமனின் திருநாமத்தை உதடுகள் உச்சரிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

27. ஓம் மங்களவாணி மகிழ்ந்து ஆடும் தேன் நாவினையுடைய ஸத்-குருவுக்கு நமஸ்காரம்

28. ஓம் அமிழ்துடன் போட்டியிடும் வகையில் கனநயராகங்களை இசைக்கும் இனிய குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

29. ஓம் ஸ்வரம் (இனிய ஒலி), அக்ஷரம் (எழுத்து) இவற்றாலான மாலை-யின்றால் கழுத்தில் அலங்கரிக்கப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

30. ஓம் ஸ்வரங்களாலான அக்ஷமாலை மார்பில் அழகுற விளங்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

31. ஓம் தம்புரா, கைத்தாளம் இவற்றை இனிமையாக ஒலிக்கும் கரத்-தாமரைகட்கு நமஸ்காரம்.

32. ஓம் நாபி, இதயம், தொண்டை, நாவு, மூக்கு இவற்றிலிருந்து ஸஞ்-சரிக்கும் நாதத்தின் இயல்பான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

33. ஓம் நாதத்தை உபாஸிப்பவரால் ஸுஸ்வர புஷ்பத்தால் வழிபடப்-படும் திருவடித்தாமரைகட்கு நமஸ்காரம்.

34. ஓம் ஓங்காரச் சுழலின் உட்கருவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

35. ஓம் ஓங்காரத்தில் ஒளிந்துள்ள ஒலியின் மூலமான அமைதியாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

36. ஓம் அமைதியில் வேரூன்றிய தெய்வீகமான ப்ரணவநாதத்தை உருவாகக் கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

37. ஓம் ஓங்காரத்தின் உள்ளுள்ள அழகிய இனிய நாதத்தின் உருவமாக பக்தையின் உள்ளுள் வியாபித்திருக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

38. ஓம் ஸுநாதத்தை (இனிய ஒலியை)த் தன்னுள் அடக்கிய பேரின்பப் பேரமைதியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

39. ஓம் ஸுஸ்வரத்தில் (இனிய ஒலியில்) நிலைத்திருக்கும் நுண்ணுருவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

40. ஓம் செவிக்கினிய இனிய ஒலி வடிவில் எங்கும் வியாபித்துள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

41. ஓம் வீணையின் இனிய ஒலியில் இருக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

42. ஓம் எழுத்துக்களிலும் இனிய இசை ஒலியிலும் ஸஞ்சரிக்கும் இசைவாணியே ஆன / எழுத்துக்களிலும் இனிய ஒலியிலும் ஸஞ்சரிக்கும் இசையின் குரலான ஸத்குருவுக்கு நமஸ்காரம். எழுத்துக்களிலும் இன்னிசை ஒலியிலும் ஸஞ்சரிக்கும் இவ்விசைப்புகழே ஆன ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

43. ஓம் அமைதியினின்றெழும் இனிய ஒலியின் வடிவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

44. ஓம் அமைதியாம் ச்ருதியுடன்கூடிய, இனிய ரீங்காரத்துடன் பாடும் மென்இசையின் இன்னொலியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

45. ஓம் ஓங்கார ச்ருதியுடன் கூடிய இனிய சக்தி வாய்ந்த இசையின் உருவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

46. ஓம் ஒலி இன்பமாகிய பரந்த வெட்ட வெளியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

47. ஓம் ஆழமான நாதப்பெருங்கடலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

48. ஓம் கரையில்லா நாதக்கடலின் எல்லையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

49. ஓம் அமைதியாம் ஆழியினின்றெழும்பும் மிகமென்மையான இன்னொலி அலையாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

50. ஓம் ஸ்ரீராமநாம ச்ருதியுடன் பாடும் அலைகள் நிறைந்த நாதக்கடலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

51. ஓம் ஸ்ரீராமநாமத்திரைகள் உலக வாழ்வாகும் கரையைத் தாக்கும் ஸங்கீதானந்தக் கடலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

52. ஓம் அமிழ்த மயமான ஸ்ுஸ்வர ஆழியின் எல்லைவானில் உதித்த வெள்ளி நிலவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

53. ஓம் இசைக்கடலை ஒளிரச்செய்யும் பனிக்கதிர்மதியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

54. ஓம் இசைப்பாற்கடலில் இன்ப அலைகளை எழுப்பும் தண்ணிறைமதியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

55. ஓம் ஸுஸ்வர அமுதக் கடலின் ஆனந்த அலைகள் வெள்ளியென மின்ன ஒளியூட்டும் சரத்காலச் சந்திரனான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

56. ஓம் கடற்கரை வெண்ணிலவொளியின் இன்பமூட்டும் இசை நிலவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

57. ஓம் இசை இன்பமாகிய அமுதைப் பொழியும் இனியகான நிலவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

58. ஓம் இசைக்கடலின் கரையில் வீசும் இன்மணமிக்க தண்காற்ருகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

59. ஓம் அம்ருதத்தன்மை நிறைந்த அழியா இசை இன்ப உணர்வேயான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

60. ஓம் கனிவுக்கொண்டலினின்றமிழ்தைத் தெளிக்கும் சொற்சிறப்புள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

61. ஓம் இன்னிசை மின்னல் மேகமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

62. ஓம் ஆழ்ந்து கம்பீரமாக ஒலிக்கும் நாதமுகிலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

63. ஓம் தொடர்ச்சியான தெய்வீக இசை மழைபொழியும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

64. ஓம் இசைவானில் செஞ்சூரிய உதயமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

65. ஓம் இசை வானத்தில் பல பண்களால் வண்ணக் கோலமிட்டு அழகூட்டும் பொற்சூரியனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

66. ஓம் ஸுஸ்வரக் கடலினை ஒளியுறச் செய்யும் ஆதவனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

67. ஓம் விரிந்து பரந்த கானவெளியில் தகதகத்து ப்ரகாசிக்கும பகலவனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

68. ஓம் வறண்ட பாலையாகிய உள்ளத்தை ஸங்கீத ஓடையாக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

69. ஓம் ஸங்கீத தாகத்தைத் தணிக்கும் நீரூற்ருகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

70. ஓம் ஸங்கீதமாகிய நறுமலர்ப் பொழிலில் வீசும் மணமிக்க ஸுஸ்வர இளந்தென்றலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

71. ஓம் செவிக்கினிய இசை நறுமணம் பரப்பும் மலய மாருதமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

72. ஓம் இசையெனும் கொடிப்பந்தலில் ரீங்காரமிடும் தேன்வண்டாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

73. ஓம் இசைத்தோப்பிலே உறையும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

74. ஓம் கானகங்கையின் போக்காகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

75. ஓம் கானஅருவியின் நாமத்தேன்வீழ்ச்சியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

76. ஓம் இசைச்சோலையில் இனிமையாகக் கூவின இளவேனிற் குயிலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

77. ஓம் இசைஞான நதியின் பக்தி மூலமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

78. ஓம் இசைவானிலுதித்த தெய்வமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

79. ஓம் பண்ணெனும் பனிமலையை வெள்ளிமயமாக்கும் ராமனாகிய சந்திரனின் கதிரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

80. ஓம் ராமனாம் ஆதவன் செந்நிறமூட்டிய இன்னொலி இமய உச்சியாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

81. ஓம் ராமனாம் ஏரியில் பிரதிபலித்த ஸங்கீத உருவமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

82. ஓம் ஸங்கீத ஏரியில் பிரதிபலித்த ஸ்ரீராமமூர்த்தியே ஆன ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

83. ஓம் இடத்திலும் காலத்திலும் எங்கும் பரந்திருக்கும் நாத ஒளியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

84. ஓம் ஆழிமுதல் வானம் வரை எட்டுகின்ற ஸங்கீத உருவமாகிற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

85. ஓம் மலைமன்னனாகிய இமயத்தைக் காட்டிலும் உயர்ந்த இசைமன்னனான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

86. ஓம் பக்தியாகிய இமயத்திற் பிறந்த தெய்வீக ஸங்கீதமெனும் ஞான கங்கையான குருநாதருக்கு நமஸ்காரம்.

87. ஓம் நினைத்த மாத்திரத்தில் முக்தி அருளும் இசைகங்கையின் உற்பத்தி ஸ்தானமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

88. ஓம் அமிழ்பவரை மகிழ்விக்கும் க்ருதிகங்கை ப்ரவாஹமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

89. ஓம் அலுத்த உள்ளத்துக்கும் உடலுக்கும் மருந்தாகும் தெய்வீகக் கீர்த்தனைகங்கையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

90. ஓம் சினம், கவலை, பாபம் இவற்றை விரட்டித்தூய்மையாக்கும் புனித கீதகங்கையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

91. ஓம் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும் தெய்வீகமான சொற்கங்கை-யின் பிரவாகமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

92. ஓம் ஞானச் செம்மையினால் பண்ணெனும் வண்ண மயமாக்கப்பட்ட இசைகங்கை வெள்ளமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

93. ஓம் கடவுளின் வடிவமான கங்கையின் புனிதத்திற்கு மற்றோர் உரு-வான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

94. ஓம் அந்தி நேரத்திலே அழகுறு கங்கா தீரத்திலே அடர்ந்த அமை-தியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

95. ஓம் கங்கை நீராடுதலின் பலனை அளிக்கும் ஸ்ரீராமத்யானத்தை விதித்துரைக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

96. ஓம் ப்ரணவவானிலுதித்து திருவையாற்றில் விளங்கி இசையை ஆராதிக்கும் இதய மலரின் அன்புத் தேன்கடலில் கலந்து-விட்ட ஸங்கீத தேவகங்கையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

97. ஓம் இன்னிசைமயவாழ்வுக்கு ஆதார ச்ருதியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

98. ஓம் இன்னிசைக் கற்பகத்தருவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

99. ஓம் இன்னிசைமலரின் இனிய பக்திநறுமணமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

100. ஓம் இசை ஞானப்பழமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

101. ஓம் இன்னிசையின் இனிமையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

102. ஓம் முழுவதும் இனிமையே ஆன ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

103. ஓம் இனிய வரமருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

104. ஓம் இயற்கையான இன்னிசையை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

105. ஓம் இன்னிசையை ஆராதிப்பவருக்கு முடிவில்லா இன்பமும் மங்க-ளமும் முழுமையாக அருளும் ஸ்த்குருவுக்கு நமஸ்காரம்.

106. ஓம் இனிய இசை ஒலியின் இருப்பிடமான/இனிய இசை ஒலியை இருப்பிடமாகக் கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

107. ஓம் இன்னிசையின் மறு பெயரான ஸத்குருநாதருக்கு நமஸ்காரம்.

108. ஓம் ஸத்குரு ஸ்ரீத்யாகராஜஸ்வாமிக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

109. ஓம் புன்னகைக்கும் ஸங்கீத தேவனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

110. ஓம் எப்பொழுதும் இன்பமாகிய இசையின் இயற்கையான ஸத்கு-ருவுக்கு நமஸ்காரம்.

111. ஓம் இசை உள்ளிருக்கும் சக்தியின் ஸாரமான் ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

112. ஓம் எப்பொழுதுமிருக்கும் இசை இன்பத்தை உண்டாக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

113. ஓம் உடன் உயிர்விக்கும் இசை அருமருந்தான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

114. ஓம் இசைமலையின் உயர் உச்சியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

115. ஓம் இசைமலையின் உயர் உச்சிக்கு ஒளியூட்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்

116. ஓம் மின்னலை ஒத்த இசைப்பேரொளியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

117. ஓம் பொற்சிறகுடை இசைஅன்னமாம் பரம்பொருளாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

118. ஓம் அடர்ந்த நறுமணங்கொண்ட தெய்வீகத்தாமரையாம் ஸங்கீத ப்ரம்மகமலமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

119. ஓம் இசைமலையுச்சியினின்றிறங்கிய ஞானகங்கையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

120. ஓம் தொன்றுதொட்டுள்ள பரப்ரம்மத்தை குணங்கள் கொண்டதாய் வழிபடும் இசை மார்க்கத்தை நன்கறிவிக்கும் பொருட்டு அவதரித்த பரம தூயரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

121. ஓம் முழுமையான அவதாரமாகிய ஸ்ரீராமனின் த்யானத்திலும் நாம பஜனையிலும் மங்கள குணங்களைப் பாடுவதிலும் நிறைவு பெற்ற நோக்கத்தை உடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

122. ஓம் நாத உருவான ஸ்ரீராமனை ஏத்திப்பாடிய நாத அவதாரமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

123. ஓம் ஸ்ரீராமனாம் மலையினின்றெழும்பிய தேவகான தெய்வீக கங்கையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

124. ஓம் ஸ்ரீராம பக்தியை மூலமாகக் கொண்ட நாதமாம் வான்வெளி கங்கையாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

125. ஓம் ஸ்ரீராம பக்தி அலைமோதும் ஸங்கீத ஆறுகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

126. ஓம் ஸ்ரீராமனது புனித நாமத்தின் கானவெள்ளமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

127. ஓம் ஸ்ரீராம நாமாவளி மின்னும் நாதமழை முகிலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

128. ஓம் ஸ்ரீராம நாமம் தனை முழங்கும் மேகக்குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

129. ஓம் ஸ்ரீராம நாமத்தை தேனினுமினிய கானமாரியாய்ப் பொழிந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

130. ஓம் ஸ்ரீராம பக்தி பெருக்கெடுத்தோடும் கானாம்ருதகங்கையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

131. ஓம் ஸ்ரீராம நாமத்தை இடைவிடாது இசைத்தேன் கங்கையாகப் பெருக்கிடச்செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

132. ஓம் ஸ்ரீராம அம்ருதம் பெருக்கிடும் கானாம்ருதப்பெருக்காகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

133. ஓம் ஸ்ரீராமக்கடலில் ஸங்கமித்த ஸங்கீத கங்கையாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

134. ஓம் ஸ்ரீராமன் பள்ளிகொள்ளும் இசைப்பாற்கடலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

135. ஓம் ஸ்ரீராம பக்தியெனும் கடலின் இசை அலையாகிய/ஸ்ரீராம பக்தி எனும் கதிரோனின் இசைக்கதிராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்

136. ஓம் ஸ்ரீராமனின் சிறப்பாம் மஞ்சுக்கூட்டங்கள் மிதக்கும் இசைவானவெளியாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

137. ஓம் ஸ்ரீராம பக்தி எனும் ஏரியில் மணம் வீசிய ஸங்கீதத்தாமரையாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

138. ஓம் ஸ்ரீராம நாமமெனும் தாமரையை மொய்க்கும் வண்டாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

139. ஓம் ஸ்ரீராமனாகிய வண்டு சுற்றி வரும் இசைத்தாமரையாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

140. ஓம் ஸ்ரீராம நாமத்தேனுடை நாதமலராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

141. ஓம் ஸ்ரீராம பக்தியாகிய தேன் மணத்துடன் நாமத்தேனொழுகும் ஸு஼ஸ்வர மலராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

142. ஓம் ஸ்ரீராமத்துதிப் பாட்டுக்கள் பீறிட்டுப் பொழிந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

143. ஓம் ஸ்ரீராமனின் பேச்சினிமையைப் புகழ்ந்து பாடிய தேனினிய குரல் படைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

144. ஓம் ஸ்ரீராம தாரக நாமத்தினை நாதத்தேன் குரலில் முழங்கிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

145. ஓம் ஸ்ரீராமனாம் தோட்டத்தில் நாமந்தனை உயர்குரலில் கூவிய கானக்குயிலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

146. ஓம் ஸ்ரீராம நாமமெனும் கூட்டினை அடைந்த கானப் பறவையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

147. ஓம் ஸ்ரீராம, ராம, க்ருஷ்ண என இரவு பகல் கூவின, குயிலை வென்ற குரலினிமை படைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

148. ஓம் ஸ்ரீராமனோடிணைந்த, கானத்தில் மேலெழும்பிய இன்குரலு-

டைய / ஸ்ரீராமநாமமெனும் சிறகுடன் மேலெழும்பிப் பறந்த கானக்குயிலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

149. ஓம் ஸ்ரீராம நாம விண்மீன் நிறை இசைவானாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

150. ஓம் ஸ்ரீராம பக்திக் கடலின் எல்லையாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

151. ஓம் ஸ்ரீராம பக்திக் கடலில் அமிழ்ந்து திளைத்த ஸங்கீதமத்ஸ்யாவதாரமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

152. ஓம் ஸ்ரீராம பக்திப் பெரும்பேறு எனும் அமுதக்கடலில் நீந்தி மகிழ்ந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

153. ஓம் ஸ்ரீராம நாம ஸங்கீர்த்தனத்தில் மிக்க இன்புற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

154. ஓம் ஸ்ரீராமனின் அனந்த கல்யாண குணங்களை ஏத்திப்பாடிய தெய்வீகப் பாடகரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

155. ஓம் ஸ்ரீராம நாமமெனும் தேனினைப் பருகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

156. ஓம் ஸ்ரீராமனின் தேனினுமினிய நாமத்தினை மகிழ்ந்து பாடிய (கானக்குயிலான) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

157. ஓம் ஸ்ரீராம நாமமே இனிது ஒலித்து மூச்சுக் காற்றாய் வெளிவரும் இன்குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

158. ஓம் ஸ்ரீராம நாமமாகிய இன்னொலியினைத் தன் உடலாகிய புல்லாங்குழலில் இசைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

159. ஓம் ஸ்ரீராம, ராம என இனிமையாக ஒலித்த வீணையாம் உடலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

160. ஓம் ஸ்ரீராம பூஜையாக வீணை இசைத்து மங்களமான ராகங்களைப்பாடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

161. ஓம் ஸ்ரீராமநாமமே வெளி எண்ணங்களை விரட்டி மூச்சுக்காற்றாய் உள்நிரப்பும், உட்தங்கும் ப்ராணாயாமமாக அமைந்த நாதயோகியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

162. ஓம் ஸ்ரீராமனை நாதத்தில் உபாஸிக்கும் வழிகாட்டிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

163. ஓம் ஸ்ரீராமனின் திருப்பள்ளி எழுச்சியாக இனிதுபாடி ஆலாபனை செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

164. ஓம் ஸ்ரீராம, ஸீதாராம என அத்யந்த வாத்ஸல்யத்துடன் கொஞ்சிக்கூவி அழைக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

165. ஓம் ஸ்ரீராமனுக்குத் தன் பாட்டுத்தேன் கலந்த பக்திப்பாலைப் பருகுவித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

166. ஓம் ஸ்ரீராமனுக்குத் தனது ஞானமாகிய வெண்ணெயை உண்ணு-

வித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

167. ஓம் ஸ்ரீராமனை மகிழ்விக்கும், தம்புராவுடன் இனிது இணைந்த, செவிக்கின்பமான, தேனே ஆன பாட்டினை அர்ப்பித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

168. ஓம் ஸ்ரீராமனைப் பாடுவதின் ஸ்வானுபவத்தில் த்யானத்திலாழ்ந்து அப்படியே ஸமாதி நிலைக்குச் சென்று விடும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

169. ஓம் ஸ்ரீராமனின் திருவடிகளை த்யானிக்கும் தேவகங்கையில் நீராடுதலை வழக்கமாகக் கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

170. ஓம் ஸ்ரீராமனைத் தன்மனமாகிய பொற்பீடத்தில் நன்கு பிரதிஷ்டை செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

171. ஓம் ஸ்ரீராமனின் ஒளிமய வடிவினை த்யானித்தலில் ஈடுபட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

172. ஓம் ஸ்ரீராமனைத் தன் கானாம்ருதத்தால் அபிஷேகித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

173. ஓம் ஸ்ரீராமனுக்குத் தன் அன்பெனும் பொன்மயமான வஸ்திரத்தைப் போர்த்திய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

174. ஓம் ஸ்ரீராமனுக்குத் தன் தெய்வீக வாக்கெனும் ஆடை அணிவித்த (ஸ்ரீராமனுக்கு ஆடையாகிய தெய்வீக வாக்கினை உடைய) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

175. ஓம் ஸ்ரீராமனை நாமகானமெனும் வாடாத கானமலர் மாலைகளினால் அலங்கரித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

176. ஓம் ஸ்ரீராமனுக்கு ஆயிரக்கணக்கான கீர்த்தனங்கள் எனும் ஒளிவீசும் ரத்னமாலைகளாம் பணிபூட்டிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

177. ஓம் ஸ்ரீராமனுக்குத் தனது துதியும் பக்தியுமே தூப தீபங்களாய் அர்ப்பணித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

178. ஓம் ஸ்ரீராமனை நாமஸ்மரணை எனும் மலர்களால் அர்ச்சித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

179. ஓம் ஸ்ரீராமன் விரும்பும், தனது தாஸ்ய, வாத்ஸல்ய, மதுர, ப்ரேம, பக்தி உணர்வுகள் பொங்கித் ததும்பும், பலவகைப்பட்ட, தெய்வீகமான பாட்டுக்களையே இனிய உணவாகப் படைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்..

180. ஓம் ஸ்ரீராமனுக்குத் தனது பூஜையின் பலனையே நிவேதித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

181. ஓம் ஸ்ரீராமனால் பெறும் முடிவில்லா இன்பத்தையே தாம்பூலமாக ஸமர்ப்பித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

182. ஓம் ஸ்ரீராமனுக்கு தீபாராதனமாகிய ஆத்ம ஒளியுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

183. ஓம் ஸ்ரீராமனை தரிசிக்கும் இத்தீபாராதனத்தில் மகிழ்ந்த ஸத்கு-ருவுக்கு நமஸ்காரம்.

184. ஓம் ஸ்ரீஸீதாராம ஸன்னிதியில் தெண்டனிட்ட ஸங்கீதவடிவாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

185. ஓம் ஸ்ரீராமன் எல்லாவற்றுக்கும் ஸாரமாகும் தன்மையை மிக அழ-காகப் பாடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

186. ஓம் ஸ்ரீராமன் ஸர்வஸாக்ஷி என்பதற்கு ஸாக்ஷியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

187. ஓம் ஸ்ரீராம ஸ்வானுபவத்தினால் இனிது பொழிந்த ஸங்கீதமாகிய தெய்வ வாக்கே ஆன ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

188. ஓம் ஸ்ரீராமனைக் கொஞ்சிடும் தேனொழுகும் கானத்தில் சிறந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

189. ஓம் ஸ்ரீராமன் மகிழ்ந்தாடும்படி ராம, ராம, கோவிந்த, முகுந்த என்று கொஞ்சிக்கூவி அழைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

190. ஓம் ஸ்ரீராமனை மகிழ்விக்கும் பல வண்ணப்பாட்டுக்களில் திறம்ப-டைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

191. ஓம் ஸ்ரீராமன் மகிழ்ந்தாடும் இசை அரசரான ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

192. ஓம் ஸ்ரீராமனால் மகிழ்ந்தாட்டுவிக்கப்பட்ட கானவடிவான ஸத்கு-ருவுக்கு நமஸ்காரம்.

193. ஓம் ஸ்ரீராமனிடம் அன்பு எனும் கரும்புவில்லும், ஸப்தஸ்வரங்களா-கிய மலர்க்கணைகளும் கொண்டு இசைவிரும்பியின் இதயத்தை வென்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

194. ஓம் ஸ்ரீராமனின் இன்குணங்களைப் பாடுதலில் இன்புற்ற குருநா-தருக்கு நமஸ்காரம்.

195. ஓம் இசை விரும்பியான ஸ்ரீராமனை விரும்பிய ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

196. ஓம் மோஹனராமனிடம் மோஹம் கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்கா-ரம்.

197. ஓம் காமமில்லாத, ஸ்ரீராமனே விருப்பம் ஆன / காமமில்லாத ஸ்ரீராமனால் விரும்பப்பட்ட / காமமில்லாதவரும் ஸ்ரீராமனால் விரும்பப்பட்டவரும் ஆன ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

198. ஓம் பரசுராமனை வென்ற ஸ்ரீராமனால் வெல்லப்பட்ட மனதையு-டைய / தன் மனத்தை வென்று ஸ்ரீராமனை அடைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

199. ஓம் அழகிய ராமனைக் கொஞ்சும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

200. ஓம் ஸ்ரீஸீதாராமனைப் பூஜித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

201. ஓம் ஜகதாத்மாவான ஸ்ரீராமனைத் தனது ஆத்மாவில் ஆனந்தித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

202. ஓம் அழகினிய பெயருடைய ஸ்ரீராமனை மகிழ்விக்கும் செவிக்கினிய கானத்தில் ஒன்றிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

203. ஓம் இசை அன்பனாகிய ஸ்ரீரகுவரனை விரும்பிய மனதுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

204. ஓம் தனது இதயத்தில் கூத்தாடும் ஸ்ரீராமனை இன்னிசையால் சூழ்ந்து தழுவும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

205. ஓம் அமுத நிலவு முகம் படைத்த ஸ்ரீராமன் மேல் அமுதகானம் படைத்த - கானாமுதம் பொழியும் நிலவான - ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

206. ஓம் அமுதினிமை கொண்ட ஸ்ரீராமனின் பேச்சினைப்பருகி இன்பம் கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

207. ஓம் அமுதரஸம் நிறைந்த ஸ்ரீராமனைப் பருகுவிக்கும் கானாமுதச் சாறு நிறைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

208. ஓம் இனிமையாக லாலி (தாலாட்டு) பாடி ஸ்ரீராமனை யோகநித்திரையில் கண்வளரச் செய்யும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

209. ஓம் நாத உருவான ஸ்ரீராமனைத் தன் மூச்சால் வணங்கிய/ நாத உருவான ஸ்ரீராமனையே மூச்சாகக் கொண்ட, வந்தனைக்குரிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

210. ஓம் நற்குணங்களின் இருப்பிடமான ஸ்ரீராமன் உறையும், ஸுஸ்வரத்தின் இருப்பிடமான / நற்குணங்களின் இருப்பிடமான ஸ்ரீராமனைப் பூஜித்த, ஸுஸ்வரத்தின் இருப்பிடமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

211. ஓம் ஸப்தஸ்வரங்களின் (ஏழு இன்னிசை ஒலிகளின்) மொத்த உருவான ஸ்ரீராமனைப் பாடிய ஸுஸ்வர (இன்னொலி) உருவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

212. ஓம் ஸ்ரீராமநாமமாகிய முத்துமாலை ஒளிவிடும் ஸங்கீத மூர்த்தியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

213. ஓம் ஸங்கீத புஷ்பப்பொழிவினால் ஸ்ரீராமமூர்த்தியை அலங்கரித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

214. ஓம் ஸ்ரீராமசந்த்ர மூர்த்தியுடன் ஒன்றிய ஸங்கீதானந்த (இசை இன்ப) மூர்த்தியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

215. ஓம் நாதப்ரஹ்மானந்த வடிவில் ஸ்ரீராமன் உறையும் நாதாலயமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

216. ஓம் நாதாவதாரமான ஸ்ரீத்யாகப்ரம்ம ஸத்குருநாதருக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

217. ஓம் ஸ்ரீராம சைதன்யரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

218. ஓம் ஸ்ரீராமனிடத்து அன்பின் .அவதாரமான ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

219. ஓம் ஸ்ரீராமனிடத்து அன்பே வடிவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

220. ஓம் ஸ்ரீராமனின் கோயிலாம் உடல் கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

221. ஓம் ஸ்ரீராமனின் வடிவான இதயங்கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

222. ஓம் ஸ்ரீராமன் அணிசெய்த அன்பான இதயத்தையுடைய / தனது அன்பான இதயத்தால் ஸ்ரீராமனை அணிசெய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

223. ஓம் ஸ்ரீராமன் கோயில்கொண்ட நல்லிதயத்தினையுடைய ஸத்கு-ருவுக்கு நமஸ்காரம்

224. ஓம் ஸ்ரீராமனைத் தன்னுள் கண்டு மகிழ்ந்த ஸத்குருவுக்கு நமஸ்கா-ரம்.

225. ஓம் ஸ்ரீராமனைத் தன்னுள் அநுபவித்தலில் நன்கு ஆழ்ந்த ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

226. ஓம் ஸ்ரீராம பக்தி எனும் யோகத்தில் மேம்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

227. ஓம் ஸ்ரீராம பக்தியின் ஸாரத்தின் அனுபவமே ஆன ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

228. ஓம் ஸ்ரீராம தாரக மந்திரத்தின் இசைவடிவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

229. ஓம் ஸ்ரீராமனின் ஒளிக்கதிர்க்கூட்டத்தினால் சூழப்பட்ட ஸத்குரு-வுக்கு நமஸ்காரம்.

230. ஓம் ஸ்ரீராம த்யானத்தில் ஒன்றி ஒளிரும் திருமுகத்தினையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

231. ஓம் ஸ்ரீராம நாமமே நெற்றிக்கோடுகளாய் அமைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

232. ஓம் ஸ்ரீராமனின் திவ்ய ரூபத்தின் தோன்றலில் (தெய்வீக வடிவம் தன் கண்முன் தோன்றலில்) விரிந்து மலர்ந்த தாமரைக் கண்

களுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

233. ஓம் ஸ்ரீராம நாமமெனும் மலரின் நறுமணத்தினை முகர்ந்து இன்புறும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

234. ஓம் ஸ்ரீராம நாமமெனும் இன்னமுதைச் சுவைக்கும் இன்நாவுடைய / இன்னமுதாம் ஸ்ரீராமநாமத்தினை இனிது ஒலிக்கும் நாவுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

235. ஓம் ஸ்ரீராமனைப் பாடிய இன்குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

236. ஓம் ஸ்ரீராமனின் வடிவம் பொறிக்கப்பட்ட நல்லிதயத்தினை உடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

237. ஓம் ஸ்ரீராமனைப் பூஜிக்கும் நாம மலர்கள் கொண்ட திருக்கரங்களுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

238. ஓம் ஸ்ரீராமனை மகிழ்விக்கும் தெய்வீக கானமெழுப்பும் மணிபூரக சக்ரத்தையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

239. ஓம் ஸ்ரீராமனின் வடிவே ஆன ப்ரணவ நாதத்தினை எழுப்பும் மூலாதார சக்ரத்தையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

240. ஓம் ஸ்ரீராமன் திருநாமத்தை இசைத்த வண்ணம் திருவையாறு எனும் புனிதத் தலத்திற்குப் புனிதமூட்டிய தாமரைப்பாதங்கட்கு நமஸ்காரம்.

241. ஓம் ஸ்ரீராமனுடன் கலந்த உயிர்மூச்சுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

242. ஓம் ஸ்ரீராமனுக்கு மிகவும் பிடித்த தெய்வீகக் குரல், வாக்கினை உடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

243. ஓம் ஸ்ரீராம மயமான பேச்சுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்

244. ஓம் ஸ்ரீராம நாமமெனும் சர்க்கரை கலந்த இனிய பேச்சுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

245. ஓம் ஸ்ரீராம நாம மலர்மாலைகள் மார்பில் மணம் வீசும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

246. ஓம் ஸ்ரீராம பக்தியெனும் சந்தனம் பூசிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

247. ஓம் ஸ்ரீராம பக்தர் எனும் தனி அடையாளங்கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

248. ஓம் ஸ்ரீராம நாமமெனும் உடைவாளினை தரித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

249. ஓம் ஸ்ரீராமனை ஸ்மரித்தலாலேற்படும் மயிர்க்கூச்சமே கவசமாய் தரித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

250. ஓம் ஸ்ரீராம பக்தி நெறியில் இடையூறுகிய காமக்ரோதங்கள் முதலான எதிரிகளைப் பூண்டுடன் அழிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

251. ஓம் ஸ்ரீராம பக்தியின் இலக்கணமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

252. ஓம் ஸ்ரீராமனையே பூஜித்து வணங்கிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

253. ஓம் ஸ்ரீராமனுக்குத் தான் அடியவன் என்ற உணர்வுடன் வணங்கிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

254. ஓம் ஸ்ரீராமனின் அடியார்க்கடியானாகத் தன்னைக் கருதிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

255. ஓம் ஸ்ரீராமனையே எப்பொழுதும் நாடிய மனதுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

256. ஓம் ஸ்ரீராம பக்தியில் நிலைத்திருந்த தபஸ்வியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

257. ஓம் ஸ்ரீராமனிடம் உண்மையான பக்தி எனும் பதவியினை உடைய, ஒளிமிகுந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

258. ஓம் ஸ்ரீராமனை உணர்தல் எனும் அமிழ்தினைத் தானும் பருகிப் பிறர்க்கும் அளிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

259. ஓம் ஸ்ரீராமனாகவே அனைத்தையும் கண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

260. ஓம் ஸ்ரீராமனைத் தன்னுள் எப்போதும் கண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

261. ஓம் ஸ்ரீராமனிடம் அன்பில் நிலைத்து நின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

262. ஓம் ஸ்ரீராம நாம ஸ்மரணத்தில் இன்புற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

263. ஓம் ஸ்ரீராம ஸந்நிதியில் வழிபட்டு இன்புற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

264. ஓம் ஸ்ரீராமனை இனிய கீர்த்தனைகளில் துதித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

265. ஓம் ஸ்ரீராம நாமத்தினைப் பாடுதலையே தன் ஒரே வேலையாகக் கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

266. ஓம் ஸ்ரீராமனது நற்குணங்களை உயர்ந்த குரலில் பாடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

267. ஓம் ஸ்ரீராமனைத் தன் இதயத் தாமரையால் அர்ச்சித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

268. ஓம் ஸ்ரீராமனைத் தனிப்பட்ட மனதுடன் ஆராதித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

269. ஓம் ஸ்ரீராமனின் அருகாமையில் உலக விஷயங்களைப் புற்பூண்டுக்குச் சமமாய்க் கருதிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

270. ஓம் ஸ்ரீராமனின் எல்லையற்ற பெருமையை வியந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

271. ஓம் ஸ்ரீராமனின் திருவடிகளை இறுகப் பற்றித் தன்னை மறந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

272. ஓம் ஸ்ரீராமனை இறுகத்தழுவி மயிர்க்கூச்சடைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

273. ஓம் ஸ்ரீராமனை நினைத்த மாத்திரத்தில் புல்லரிப்படைந்த .ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

274. ஓம் ஸ்ரீராமனை நினைத்தலில் இடைவிடாது நிலைத்து நின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

275. ஓம் ஸ்ரீராமனை எப்பொழுதும் நினைத்துக் கவலையொழிந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

276. ஓம் ஸ்ரீராம நாம ஜபம், ஸ்மரணம் இவற்றையே வ்ரதமாகக் கொண்ட புனிதரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

277. ஓம் ஸ்ரீராம மயமான வாழ்வை நடத்திய மாபெரும் ஞானியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

278. ஓம் ஸ்ரீராமனின் திருவடிதனை வழிபடுதலில் வழிகாட்டிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

279. ஓம் ஸ்ரீராமனின் மிக உயர்ந்த குணங்களை ஏத்திப்பாடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

280. ஓம் ஸ்ரீராமனின் அருளின் ஆற்றலை அறுதியிட்டு உறுதிகூறிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

281. ஓம் ஸ்ரீராமனுடன் இறுகப் பிணைப்புண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

282. ஓம் ஸ்ரீராமனைத் துதித்துப் பாடுதலில் தனிச் சிறப்பு பெற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

283. ஓம் ஸ்ரீராமனின் வழிபாட்டிலேயே சுற்றிச் சுழன்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

284. ஓம் ஸ்ரீமத்ராமாயண பாராயணத்தை நெறிமுறையாகக்கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

285. ஓம் ஸ்ரீமத்ராமாயணத்தை மீண்டும் உரைத்துப்பாடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

286. ஓம் ஸ்ரீராமனின் மங்களமான சரித்திரம் எனும் கடலில் ஆழ்ந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

287. ஓம் ஸ்ரீமத்ராமாயணத்தின் பற்பல சுவைமிகு கட்டங்களாகிய முத்துக்களை ஒளிவீசும் கீர்த்தன மாலைகளாகச் செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

288. ஓம் ஸ்ரீராமனின் இறைமையை மிகப்பல க்ருதிரத்னங்கள் மூலம் ஒளிரச்செய்யும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

289. ஓம் ஸ்ரீராம நாமத்தை இசைச்சுவடியில் அழியாது பொறித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

290. ஓம் ஸ்ரீராம தாரக நாமத்தின் பெருமையை வெளிப்படுத்திய ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

291. ஓம் ஸ்ரீராமனின் தாரக(நாம) வடிவின் (கடைத்தேற்றும் வடிவினனான ஸ்ரீராமனைப் பற்றிய) உண்மையை அறியச் செய்யும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

292. ஓம் ஸ்ரீராமனைப் புகழ்ந்து பாடுதலில் பெருஞ்சிறப்பு வாய்ந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

293. ஓம் ஸ்ரீராம பஜனை ஆனந்தம் மிளிரும் கீர்த்தனைகள் மிகப் பலவற்றை தாராளமாய் அளித்துள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

294. ஓம் ஸ்ரீராமனுக்கு எப்போதும் அஞ்சலியாக கானம் பொழிந்த, சிறப்புள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

295. ஓம் ஸ்ரீராமனின் கண்ணுக்கின்பமான வடிவழகினை வர்ணித்துப் பாடிய தலையாய சிறப்புடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

296. ஓம் ஸ்ரீராமனது திவ்யநாமஸங்கீர்த்தனத்தில் மகிழ்ந்த முனிவரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

297. ஓம் ஸ்ரீராம நாமத்தைக் கேட்ட மாத்திரத்தில் மயிர்கூச்சடைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

298. ஓம் ஸ்ரீராமனின் திருவடிகளைச் சித்தத்தில் தரித்த அருள்நிறை பாடகரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

299. ஓம் ஸ்ரீராமனின் பாதங்களை அர்ச்சிக்கும் பாட்டு மலர்களின் நறுமணம் பரப்பும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

300. ஓம் ஸ்ரீராமனைப்பாடும், கதம்ப மலர்களின் நறுமணம் கமழும் இசைத்தென்றலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

301. ஓம் ஸ்ரீராம எனும் இனிய ஒலியையே மொழிந்த ஸுஸ்வர (இன்னொலி) வீணையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

302. ஓம் ஸ்ரீராமனுக்கே அர்ப்பணமாகிய இசைவடிவான குருநாதருக்கு நமஸ்காரம்.

303. ஓம் ஸ்ரீராமனிடம் அன்பு, ஸங்கீத ஞானம் (இசைப்புலமை) இவற்றின் மொத்த உருவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

304. ஓம் ஸ்ரீராமனின் இன்பம் ஒலிக்கச்செய்த நாமத்தின் வடிவான/ ஸ்ரீராமனிடத்து இன்பத்தால் ஒலிக்கப்பட்ட நாமத்தின் வடிவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

305. ஓம் ஸ்ரீராம நாமம் தரும் இன்பஸாரத்தின் நாத வடிவான ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

306. ஓம் ஸ்ரீராமனாகிய சந்த்ரனின் கானமாம் கிரணமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

307. ஓம் ஸ்ரீராமனாம் ஸூர்யனின் நாமக்கதிராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

308. ஓம் ஸ்ரீராமனிடமிருந்து வேறல்லாத ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

309. ஓம் ஸ்ரீராமநாமத்தில் உறையும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

310. ஓம் ஸ்ரீராம தாரக மந்த்ரத்தின் எல்லையுள் உள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

311. ஓம் ஸ்ரீராம தாரக மந்த்ரத்தால் அடையப்படும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

312. ஓம் ஸ்ரீராம தாரக மந்த்ரத்தை உபதேசிக்கும் குருதேவருக்கு நமஸ்காரம்.

313. ஓம் ஸ்ரீராம தாரக மந்த்ரத்தின் உட்பொருளை அறியச்செய்யும் ஆசானாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

314. ஓம் ஸ்ரீராமனும் நாதப்ரஹ்மமும் ஒன்றே என விளக்கும் பல க்ருதிகளை அளித்துள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

315. ஓம் ஸ்ரீராம பக்தி கரைபுரண்டோடும் இனிய கீர்த்தனைகளை இதயபூர்வமாகப் பாடுபவர் முன் தோன்றும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

316. ஓம் ஸ்ரீராமனின் அருள் பாலிக்கும் ஸங்கீத அருள் மூர்த்தியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

317. ஓம் ஸ்ரீராம தாரக மந்த்ர ஜபமாகிய விளக்கொளியில் ஒளிர்கின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

318. ஓம் ஸ்ரீராமனை ஒருமுகப்பட்ட மனதுடன் சிந்தித்தல் எனும் தூபத்தினால் மணமூட்டப்பெறும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

319. ஓம் ஸ்ரீராம ப்ரேமையில் மலர்ந்த இதய புஷ்பார்ச்சனையில் பிரியமுள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

320. ஓம் ஸ்ரீராமனிடம் அனன்ய சரணாகதி உணர்வு எனும் தேன் நைவேத்யத்தில் பிரியமுள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

321. ஓம் ஸ்ரீராம நாம ஸங்கீர்த்தனம், பஜனை எனும் தீபாராதனத்தில் பிரியமுள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

322. ஓம் ஸ்ரீராம தாரகநாமத்தின் இடைவிடா ஜபத்தில் ஈடுபட்ட சிஷ்யரிடம் பிரியமுள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

323. ஓம் ஸ்ரீராம ப்ரஸாதமான ஸங்கீத ஞானத்தை அருளும் ஸத்குருநாதருக்கு நமஸ்காரம்.

324. ஓம் **ஸ்ரீராம பக்த ஸமூஹத்தினால் பூஜிக்கப்படவேண்டிய ஸத்குரு ஸ்ரீத்யாகராஜஸ்வாமிக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.**

325. ஓம் (இப்பக்தைக்கு) தம்மைவிட வேறென்றும் உயர்ந்ததல்லாத, ஒரே

குருவான ஸத்குரு ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிக்கு நமஸ்காரம்.

326. ஓம் வரையற்ற நாதசக்தியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

327. ஓம் நிர்ணயிக்க முடியாத, உயிர்மூச்சே ஆன, நாத ஆற்றலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

328. ஓம் எல்லையற்ற, முழுமையான நாதவெட்டவெளியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

329. ஓம் ஆதித்தனை வெல்லும் ஒளிபடைத்த நாதத்தோன்றலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

330. ஓம் உள்ளத்தை உருக்கும் (கண்ணீர் பெருக்கிடச்செய்யும்) நாதத்தின் ஆத்மாவாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

331. ஓம் மிகவும் போற்றி வணங்கப்படும் நாதகுருவுக்கு நமஸ்காரம்.

332. ஓம் வெம்மையைப் போக்கும், பாதுகாப்பாகிய நிழல் அருளும் நாதக்குளிர்தருவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

333. ஓம் மிக அடர்ந்த, ஊடுருவ முடியாத நாதக்காடான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

334. ஓம் ஆழங்காணமுடியா, அளவற்ற இன்பம்நிறை நாதப்பெரும் பொற்கடலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

335. ஓம் அளவு கடந்த இசைப்பெரும் பரப்பகற்சியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

336. ஓம் என்றும் உள்ள நாதப்ரஹ்மமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

337. ஓம் அக்ஷரம் (எழுத்து) ஸுஸ்வரம் (இன்னிசைஒலி) இவற்றின் உள் மறைந்துள்ள நாதமே ஆன / எழுத்தும் இன்னொலியும் ஒன்றுபடும் நாதத்தின் ஆத்மாவாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

338. ஓம் வாடாமலராகிய ஸுஸ்வரத்தினால் (இப்பக்தையின் அழியா ஆன்மாவாகிய ஸுஸ்வரமெனும் வாடா மலரினால்) அர்ச்சிக்கப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

339. ஓம் இயற்கையாகத் தோன்றும் நாதத்தின் வடிவான - முழுமுதற் தோன்றலாகிய நாத உருக்கடவுளான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

340. ஓம் முடிவில்லா நாதானந்தத்தின் மூலமான (வேரான) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

341. ஓம் இடைவிடா இசை இன்பத்தை உண்டு பண்ணும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

342. ஓம் நிலையில்லா உலகில் நிலையுள்ள ஒரே பொருளான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

343. ஓம் சிந்தனைக்கு அப்பாற்பட்ட வடிவினரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

344. ஓம் தீவினையை அழிக்கும் திருவடி இணையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

345. ஓம் அனன்ய பக்தரால் கட்டுண்ட எல்லையற்றவரான ஸத்குரு-வுக்கு நமஸ்காரம்.

346. ஓம் எல்லையற்ற ஸ்ரீராமனைப் பிணைக்கும் இனிய கானத்தினை உடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

347. ஓம் அந்தராத்மாவான ஸ்ரீராமனைப் பாடும் இசையின் ஆத்மாவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

348. ஓம் அளவு கடந்த ஸங்கீதானந்த அலையான ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

349. ஓம் தானே பொங்கிப் பீறிட்ட நாத அம்ருத ஊற்றான ஸத்குரு-வுக்கு நமஸ்காரம்.

350. ஓம் நாதத்தின் தங்கு தடையில்லாப் போக்கான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

351. ஓம் அமுத வாக்குக்கும் குரலுக்கும் அதிபதியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

352. ஓம் அளவற்ற இனிமை படைத்த வார்த்தைகளை உபயோகித்தலில் வல்லுநரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

353. ஓம் இடைவிடா நாதமழை பொழிந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

354. ஓம் மிக இனிமையான கானப் பெருக்கிட்ட ஸத்குருவ'க்கு நமஸ்காரம்.

355. ஓம் இணையற்ற க்ருதிகர்த்தாவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

356. ஓம் அற்புதமான கவிச்சிறப்புடையவரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

357. ஓம் அன்புடன் கூடிய பக்தியினால் மணம் பெற்ற, ஏழு இன்னிசை ஒலிகளை இதழ்களாகக் கொண்ட நாத மலரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

358. ஓம் மிக்க மணங்கமழும் ஆயிரம் இதழ் கொண்ட நாம மலராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

359. ஓம் அதிகாலையில் இன்னொலி இசையினால் வணங்கப்படவேண்-டிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

360. ஓம் இடைவிடா இன்னிசை அஞ்சலி ஸமர்ப்பிக்கப்பட வேண்டிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

361. ஓம் வழுவா நெறியுடன் நாள்தோறும் செய்யப்படும் உபாஸனையில் திருப்தியுறும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

362. ஓம் தன்னையே எப்போதும் நினைக்கும் அனன்ய பக்தநோக்கில் புலப்படும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

363. ஓம் தன்னை இடைவிடாது ப்ரார்த்திப்பவருடன் இடைவிடா, முடிவற்ற நாத வடிவில் உடனிருக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

364. ஓம் தன்னையே ஆழ்ந்து அன்புடன் உபாஸிப்பவரை நன்கு காக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

365. ஓம் வேறு கதியற்றுச் சரணடைந்தவரை அன்புடன் காக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

366. ஓம் தன்னையே உபாஸிப்பவர்க்கு ஸங்கீத சிக்ஷை அளிக்கும் குருவுக்கு நமஸ்காரம்.

367. ஓம் கொடுப்பதில் நிகரற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

368. ஓம் நிலையான உதவி அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

369. ஓம் குறைவற்ற, அழியாத நாத வித்தையை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

370. ஓம் எல்லையற்ற ஸங்கீதானந்தமாகிய வரப்ரஸாதத்தை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

371. ஓம் கூர்ந்து, நிலைத்து ஆழ்ந்த நோக்கினால் நாதப்ரஹ்ம ஞானத்தை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

372. ஓம் வேறெந்த நோக்குமற்று நாதத்தை உபாஸிப்பவருக்கு முழுமையும் நிறைவுமருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

373. ஓம் அனன்ய சரணுகதி அடைந்தவரை (பிறவித்தளையினின்று) விடுவிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

374. ஓம் கைகூப்பி அஞ்சலி செய்பவரைவிட்டகலாத ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

375. ஓம் தன்னையே விரும்பி வழிபடுபவரின் உயிர் மூச்சான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

376. ஓம் பரிவின் உருவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

377. ஓம் இணையற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

378. ஓம் அமைதியின் ஆழ்பெரும் ஆழியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

379. ஓம் இடைவிடா நாமஸங்கீர்த்தனத்தில் (இறைவன் பேர் பாடுதலில்) பிரியமுள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

380. ஓம் அனன்ய (தன்னையே உபாஸிக்கும்) பக்தைக்கு மிக வேண்டியவரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

381. ஓம் அன்பும், பண்ணும் நன்கொருங்கிணைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

382. ஓம் பக்த அந்தராத்மாவான, ராக உருவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

383. ஓம் கல்லாத பக்தையின் ஆத்ம தாபத்தினாலேயே அர்ச்சிக்கப்பட்ட

ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

384. ஓம் திறமையற்ற பக்தையின் அன்பு, எண்ணம், மொழி, செயலினாலேயே பூஜிக்கப்படும் குருவுக்கு நமஸ்காரம்.

385. ஓம் தன்னிடமே ஈடுபட்டு உபாஸிப்பவரைத் தன்னுடன் சேர்த்துக் கொள்ளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

386. ஓம் நாத ஒளித்தோன்றலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

387. ஓம் நாத வெளியினை ஊடுருவிப்பரந்த தெய்வீக ஒளியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

388. ஓம் முதலும் முடிவுமில்லாத அருட்பேரொளியாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

389. ஓம் தொடர்ந்த ஸங்கீதானந்தத்தினால் சூழப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

390. ஓம் ஆராதிப்பவர் இதயத்தாமரையில் வஸிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

391. ஓம் உருகும் பக்த சித்தத்துடன் கலந்துவிட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

392. ஓம் உயிர்மூச்சினை அளிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

393. ஓம் தன்னை அடைந்தவரின் ஒரே செல்வமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

394. ஓம் ஆத்மாவை நிவேதிப்பவர் இதயபூர்வமான அன்பின் முழுமையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

395. ஓம் ஆனந்தமூட்டும், ஸங்கீத உயர் குருவுக்கு நமஸ்காரம்.

396. ஓம் ஆசார்ய தேவருக்கு நமஸ்காரம்.

397. ஓம் நீண்ட ஆயுளும் நோயற்ற வாழ்வும் அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

398. ஓம் சோர்வினை உலுக்கி நீக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

399. ஓம் இன்பூட்டும் கான வித்தையெனும் வரமருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

400. ஓம் ஆழ்ந்ததும் கிடைத்தற்கரியதுமான ராகம், தாளம் இவற்றின் அறிவான செல்வத்தை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

401. ஓம் ஆத்மஞானத்தைத் தூண்டி எழுப்பும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

402. ஓம் ஆத்மாவின் உண்மை இயல்பு பற்றிய அறிவை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

403. ஓம் ஆத்மாவுடன் ஒன்றிடலை, உண்டுபண்ணும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

404. ஓம் இஷ்ட தெய்வமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

405. ஓம் உள்ள உடற்சோர்வினைப் போக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

406. ஓம் வேண்டுபவர்க்கு நாத வித்தையின் முழுமையை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

407. ஓம் கரும்புச் சாற்றுப் பெருக்காம் இனிய கவித்வத்தை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

408. ஓம் ஆனந்தமே ஆன, மங்களம் தரும் ஸங்கீதத்தை வேண்டிய வரமாக அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

409. ஓம் இவ்வுலக இன்பமும் ஞானமோக்ஷமும் (அறிவின் மூலம் விடுதலை) அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

410. ஓம் மிகவும் விரும்பி முயற்சிக்கப்படும் இசையுடன் ஒன்றுபடுதலாகிய / ஸங்கீதம், லயம் எனும் செல்வத்தினை அருளும் குருநாதருக்கு நமஸ்காரம்.

411. ஓம் இறைவன் அருளாலேயே அடையக் கூடிய நாதவித்தையின் நுட்பங்களை உபதேசிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

412. ஓம் நன்புகழ் படைத்த ஸங்கீத குருவுக்கு நமஸ்காரம்.

413. ஓம் உயர்ந்த ஸங்கீதமயமான வாழ்விற்கு உதாரணமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

414. ஓம் மேலெழும்பிய நாத ஒளியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

415. ஓம் கரைபுரண்டோடும் தெய்வீக நாதகங்கையாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

416. ஓம் மிக உயர்ந்த ஸங்கீத ஸித்தரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

417. ஓம் உத்ஸவ ஸம்ப்ரதாயக் கீர்த்தனைகளில் ஒப்பற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

418. ஓம் உத்ஸவ ஸம்ப்ரதாய இனிய கீர்த்தனையில் ஸ்ரீராமனது நூபுர ஒலியினைக் கேட்பிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

419. ஓம் மேலெழும்பிய இன்குரலில் ராம ராம எனக் கூவிய இசைக்குயிலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

420. ஓம் விடியற்காலையில் இசைவழிபாட்டினை விதித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

421. ஓம் அன்பினால் நனைந்த, தனித்த, தன்னையே வழிபடும் பக்தரை விடியற்காலையில் தன் முன் பாடவைக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

422. ஓம் வழிபடுவரை உயர்த்தி மீட்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

423. ஓம் வழிபடுபவர் உள்ளுள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

424. ஓம் மேலெழும்பும் இன்னிசை ஒலியுடன் ஒன்றிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

425. ஓம் வழிபடுபவரைக் காக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

426. ஓம் மங்களம் அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

427. ஓம் கடன்பட்டமையால் தொடரும் கட்டுக்களினின்று விடுவிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

428. ஓம் நன்னெறியில் வழிகாட்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

429. ஓம் உள்ளன்புடன் புகழப்படும், பூஜிக்கப்படும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

430. ஓம் அழியா இடம் பெற்றுள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

431. ஓம் பார்க்க வேண்டிய ஒரே பொருளான ஸத்குருநாதருக்கு நமஸ்காரம்.

432. ஓம் தனிப்பட்ட பக்தியெனும் புஷ்பத்தால் உபாஸிக்கப்படும் ஸத்குரு ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

433. ஓம் தனிப்பட்ட பக்தியினால் உவப்புறும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

434. ஓம் ஒருமுனைப்பட்ட த்யானத்தினால் அடைய வேண்டிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

435. ஓம் ஒருமுனைப்பட்ட பக்த உள்ளுள் ஞானக்கண்ணை மலரச்செய்யும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

436. ஓம் ஒருமுனைப்பட்டு த்யானிப்பவர் செவிப்புலனுக்குட்படும் ஸுஸ்வர அமுதக்குரலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

437. ஓம் ஒரே நிஷ்டையுடன் த்யானிப்பவர் உள்வானில் உதித்தெழும் நாத ஒளியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

438. ஓம் ஒரே மனதுடன் பூஜிப்பவருக்கு ஸங்கீதமாகிய பேரின்பத்தை அளிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

439. ஓம் ஒருமுகப்படுதல் அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்

440. ஓம் ஓங்கார நாத வடிவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

441. ஓம் ஆற்றலூட்டும் நாத சக்தியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

442. ஓம் ஆனந்தத்தை அளிக்கும் நாதத்தையே ஒலியாகக் கொண்ட ப்ரஹ்மனான / மேகத்தின் கம்பீரக்குரலே ஒலியாகக் கொண்ட ப்ரஹ்மனான / ஆனந்தத்தை அளிக்கும் நாத வடிவாய் அவதரித்த ப்ரஹ்மனான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

443. ஓம் இன்குரலருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

444. ஓம் கருணை ததும்பும் பார்வையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

445. ஓம் மாசினை அழிக்கும் பேரொளி வீசும் பார்வையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

446. ஓம் துன்பம் நீக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

447. ஓம் செயலில் முழுத்திறமையளிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

448. ஓம் கர்மக் கட்டினைத் தகர்த்தெறியும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

449. ஓம் காலனுக்குக் காலனாம் பரம்பொருளான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

450. ஓம் கருணைக்கடலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

451. ஓம் முயற்சியின் முழுநிறைவளிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

452. ஓம் தங்கக்குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

453. ஓம் ராமசந்த்ரனின் ஒளிக்கிரணங்களை வாரி இறைக்கும் ஸுஸ்வர பூர்ணசந்த்ரனான (இன்னிசையொலி நிறைமதியான) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

454. ஓம் கீர்த்தனைகள் அருளிச்செய்த ஆசார்யனான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

455. ஓம் அரவரசின் மேல் பள்ளி கொண்டோனைப் பாடி ஆனந்தப்படுத்திய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

456. ஓம் கூர்மாவதாரனைப்பாடி ஆனந்தித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

457. ஓம் கிருஷ்ணன் வஸிக்கும் இனிய கீர்த்தனைக்கூட்டங்களைச் செய்த / இனிய கீர்த்தனங்களை ஸ்ரீக்ருஷ்ணனுக்கு ஆடையாக நெய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

458. ஓம் கிருஷ்ணலீலையை ரஸித்த பாடகராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

459. ஓம் கேசவனைப் பாடுதல் மூலம் உயர்ந்த ஞானத்தினை அளிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

460. ஓம் முக்தி அளிக்கும் கல்யாண ராமனைப் பாடும்படி ஆக்ஞாபித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

461. ஓம் ஸப்தஸ்வரங்களின் ஆனந்த ஒலியே உடலாய் அமையப்பெற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

462. ஓம் கோதண்டராமனை இசைமூலம் ஆராதித்து ஆனந்தித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

463. ஓம் ஜானகியை மனையாளாகக் கொண்ட ஸ்ரீராமன் முன் பாடுதலில் ஆர்வம் கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

464. ஓம் துதிக்கும் பக்தரைக் காக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

465. ஓம் சிஷ்ய உடலாம் வீணையில் ஸுஸ்வரமயமான இன்னொலிகளை எழுப்பும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

466. ஓம் ஒருநொடிப்பொழுதும் மறக்கப்படாத ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

467. ஓம் அழிபவைக்குள்ளிருக்கும் அழியா ஆத்மாவாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

468. ஓம் அருளிரக்கம் கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

469. ஓம் உடன்காத்தருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

470. ஓம் பாற்கடலில் பள்ளி கொண்டோனை மிக இனிய அழகிய பாட்டுகளால் அணிசெய்து மகிழ்ந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

471. ஓம் பாற்கடற்றுயிலும் ஸ்ரீராமனைத் தன் இன்னிசைக் கடலில் பள்ளி கொள்ளச்செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

472. ஓம் கொந்தளிக்கும் கடலாம் மனதை சமனப்படுத்தும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

473. ஓம் மங்களமருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

474. ஓம் கணத்தில் கவிபாடும் திறனருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

475. ஓம் கருடனை வாகனமாகக் கொண்ட ஸ்ரீமந்நாராயணனைப் பாடுதலில் உயர்ந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

476. ஓம் செங்கோலேந்திய ராமனைச் சிறப்பித்துப் புகழ்ந்து பாடிய (யாரால் செங்கோலேந்திய ஸ்ரீராமன் சிறப்பித்துப் புகழ்ந்து பாடப்பட்டானோ, அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

477. ஓம் மிகவும் போற்றி வணங்கத்தக்க ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

478. ஓம் கம்பீரமான குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

479. ஓம் ஆழ்ந்தறிய முடியா முழுமுதற் பொருளான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

480. ஓம் ஆழ்ந்து ஊடுருவும் நாதத்தின் நுண் ஆற்றலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

481. ஓம் கங்கையின் புனிதமுடைய நாமமாகிய தீர்த்தத்தைத் தெளிக்கும் கான அலையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

482. ஓம் அறியமுடியா இசைக்கடவுளாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

483. ஓம் கானக்கடலில் ஊடுருவிய (யாரால் கானக்கடல் ஊடுருவப்பட்டதோ, அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

484. ஓம் குரல், வாக்கின் இனிமையை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

485. ஓம் பக்தர்களின் முதன்மையான, நாவு நுனியில் கலைவாணி நிலையாக வசிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

486. ஓம் நற்குணங்கள் நிறைந்த ஸ்ரீராமனைப்பாடும் ஆனந்தம் நிரம்பிய, புகழப்பட வேண்டிய, நற்குணங்கள் நிறைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

487. ஓம் ராம, ராம என்று நாமமலரினை மொய்த்து முரலும் கானவண்டான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

488. ஓம் தன்னையே உபாஸிக்கும் சிஷ்யையின் ஆத்மா பின்னிப்பிணைந்திருக்கும் ஒளிவடிவமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

489. ஓம் கோக்கப்பட்ட குணங்களாகிய இந்த அக்ஷரமாலைக்கு அழகூட்டும் குருநாதருக்கு நமஸ்காரம்.

490. ஓம் மிக உயர்ந்த குருநாதருக்கு நமஸ்காரம்.

491. ஓம் பரமாத்மாவே ஆன ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

492. ஓம் மறைந்துள்ள ஆத்மசக்தியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

493. ஓம் இவ்வில்லத்தின் தெய்வமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

494. ஓம் இசைப்புலவரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

495. ஓம் கோவிந்தநாம ஸங்கீர்த்தனம் பாடுவதில் தலைசிறந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

496. ஓம் ஆழ்ந்த பொருளும் உணர்ச்சிப்பெருக்கும் நிறைந்த பாட்டுக்களின் அதிபதியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

497. ஓம் முகில்வண்ண ஸ்ரீராமனைப் பாடுதலின் இன்பம் நிறைமுகிலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

498. ஓம் கொடிய அரக்கர்களை ஒழிக்கும் ஸ்ரீராமனை மயக்கும் இன்னிசைக்குரல் படைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

499. ஓம் இனிய நறுமணங்கமழும் நாமமலர்களால் ராமனைப் பூஜிக்கத் தூண்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

500. ஓம் திருவடியில் வீழ்ந்தவருக்கு எல்லாம் அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

501. ஓம் அலையும் உள்ளத்தை நிலைப்படுத்தும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

502. ஓம் திடுக்கிட்டு நடுங்கும் நரம்புகளை வலுப்படுத்தும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

503. ஓம் ஸுஸ்வரத்தின் அழகொளிரும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

504. ஓம் சந்திரனின் அழகுமுகம் படைத்த ராமசந்திரனை இனிது பாடும் ஆனந்தத்தினால் ஒளிரும் திருமுகம் படைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

505. ஓம் பாங்குற அமைந்த சொற்களின் இனிமையும் அழகும் மிளிரும் கவித்திறன்மிக்க ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

506. ஓம் அசையும் பொருள், அசையாப் பொருள் இவை அடங்கிய படைப்பு முழுமையிற் பரவி ஊடுருவும் ஓங்காரத்தின் உட்பொருளை அறியச்செய்யும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

507. ஓம் அழகினிய இசைக்குரல் படைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

508. ஓம் அழகிய கண்படைத்த ஸ்ரீராமனைப்பாடும் இன்பத்தில் நனைந்த கண்ணுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

509. ஓம் சொல்வளம், பொருள்வளம் மிக்க, உணர்ச்சி சொட்டும் இனிய பாட்டுக்களினால் ஸ்ரீராமனை மகிழ்வித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

510. ஓம் அறிவடர் ஸ்ரீராமனின் கானத்திலீடுபட்ட அறிவின்ப வடிவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

511. ஓம் நிலைத்திருக்கும் ஸங்கீதானந்தமாகிய இனிய கீர்த்தனைகளை அளித்துள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

512. ஓம் உள்ளுள் ஊடுருவிக் கலந்துள்ள ஸத்குருநாதருக்கு நமஸ்காரம்.

513. ஓம் மன அலைவுகளைத் தடுக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

514. ஓம் அறிந்துணரும் திறனைத் தூண்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

515. ஓம் (இப்பக்தையின்) எண்ணங்களாலேயே அர்ச்சிக்கப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

516. ஓம் உள்ளத்தூய்மையூட்டிக் கடைத்தேற்றும் திருநாமத்தையுடைய / உள்ளத்தூய்மையூட்டும் ஸ்ரீராமதாரக நாமத்தினையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

517. ஓம் ஜபிக்கப்பட்ட ராமதாரகநாம மாலை அணிந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

518. ஓம் நாதச் சோலையில் நாம மலரை முத்தமிடும் கானமென்காற்றாகிய குருநாதருக்கு நமஸ்காரம்.

519. ஓம் நாமமலரில் நாதத்தேன் உறிஞ்சும் நாதத் தேன்வண்டான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

520. ஓம் உள்ளங்கவர் இன்குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

521. ஓம் சைதன்ய ப்ரம்மன் ஆகிய (அறிவுமயபரம்பொருள் ஆகிய) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

522. ஓம் தேர்ந்த கவி மேதையாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

523. ஓம் நாம அமுதம் கொட்டும் கானமாகிய தங்கக்கலத்தினைத் திருக்கரத்திலேந்திய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

524. ஓம் கீர்த்தன அம்ருதம் பொழியும் ஸங்கீத தேவதையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

525. ஓம் அழகிற்சிறந்த ரகுநந்தனனை வந்திக்கும் பக்ததிலகமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

526. ஓம் பாதுகாப்பு நிழலருளும் குருவருக்கு நமஸ்காரம்.

527. ஓம் குற்றங்குறைகள் மலிந்த, தானே உந்தப்பட்ட (சரணமடைந்த) சிஷ்யையைக் கரையேற்றும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

528. ஓம் உடைந்த மனதை சமனப்படுத்தும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

529. ஓம் ராமரத்னம் பதித்த கானப்பொன்னாடை போர்த்த நாத தேவதையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

530. ஓம் கவிதை அணி அலங்காரங்கள் நிறைந்த ரஸமான அழகிய கீர்த்தனைக் கூட்டங்களினால் ஸ்ரீராமனை அலங்கரிப்பதில் திறன்மிகுந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

531. ஓம் ஜனகர் மகளான ஸீதையின் நற்பேறுன ஸ்ரீராமனைப்பாடிய திருவார்ந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

532. ஓம் நீரரசனாம் ஆழிமேல் பள்ளி கொண்டோனைக் கீர்த்தனத்தினால் மகிழ்விக்கும் கவியரசராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

533. ஓம் பிச்சிப்பூ அணிந்த ஸ்ரீராமனை நாம மலர்களால் அர்ச்சிப்பதில் ஈடுபட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

534. ஓம் ஜானகியின் உயிர்நாயகனாகிய ஸ்ரீராமனின் நாம ஸ்மரணமே உயிர்நிலையான பாடகராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

535. ஓம் ஜானகீ – நாயகனாகிய ஸ்ரீராமனை கன, நய ராகங்களில் ஆலாபனைசெய்து ஆராதித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

536. ஓம் புஷ்பஸாரமாகிய தேனினை வென்ற குரலினிமை படைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

537. ஓம் ஞானம் வேண்டுபவர் அடைக்கலமாகிய நற்கீர்த்தனங்கள் செய்தருளிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

538. ஓம் உயிர்ச்சக்தியூட்டும் மிகப்பலவாகிய கீர்த்தனங்கள் செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

539. ஓம் உயிர்ச்சக்தியாகிய ஸத்குருநாதருக்கு நமஸ்காரம்.

540. ஓம் ஜீவாத்மாவாகிய ஸீதையை சோகவனத்தில் துன்புறுத்தும் வாஸனைகளின் (முற்பிறவிகள், இப்பிறவியைச் சேர்ந்த அனுபவ, எண்ணப் பொறிப்புகளின்) செயல்பாடுகள் எனும் அரக்கர்கூட்டத்தை உடைய கர்மாவின் இணைப்பு எனும் ராவணனைக் கொல்லும் ராம நாமமெனும் அம்பும் நாம கீர்த்தனம் எனும் கோதண்டமாகிய வில்லும் ஏந்திய திருக்கரங்களுடைய பரமாத்மாவாகிய ஸத்குரு ஸ்ரீத்யாகராஜஸ்வாமிக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

541. ஓம் பூஜிக்கப்பட வேண்டிய ஸங்கீதஸ்வாமியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

542. ஓம் ஞானமயமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

543. ஓம் மிகச்சிறந்த பாடகராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

544. ஓம் ஒளிமிகு ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

545. ஓம் ஒளியின் தன்மையாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

546. ஓம் நிலவொளியின் இன்பமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

547. ஓம் கணீரென கூர்ந்தொலிக்கும் ஸுஸ்வர (இன்னிசை ஒலி) மணியின் நாம இனிமையாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

548. ஓம் டங்காரத்துடன் ஜயகோஷம் செய்யும் ராமபாணத்தின் காக்கும் தன்மையையும் வீரச்சிறப்பினையும் பாடும் தெய்வீகப்பாடகரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

549. ஓம் நாணேற்றி ராம நாமம் முழங்கும் ஸுஸ்வரமாகிய கோதண்டமேந்திய திருக்கரங்களுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

550. ஓம் வீணையுடன் ஒன்றுதலிலிருக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

551. ஓம் ஆன்மாவின் உண்மையைக் காணச்செய்யும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

552. ஓம் தவத்தலைவராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

553. ஓம் அறியாமை இருள் நீக்கும் ஆதவனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

554. ஓம் அறியாமை இருள் நிரம்பிய சிஷ்ய சித்தத்தில் அறிவொளி தூண்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

555. ஓம் கடைத்தேற்றும் நற்கீர்த்தனங்களை போதித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

556. ஓம் தவமிருப்பவர் மனதில் நடமாடும் ப்ரம்மமே ஆன ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

557. ஓம் பிறவிப் பெருங்கடல் தாண்ட இச்சிப்பவருக்கு ஒரே அடைக்கலமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

558. ஓம் மிகப்புனிதமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

559. ஓம் விடாமுயற்சியுடன் அயராது உழைப்பவரை உயர்த்தும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

560. ஓம் வேகமாகச் செல்லும் எண்ணங்களாகிய மேகக்கூட்டத்துக்கு விரைகாற்றாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

561. ஓம் மனநிறைவளிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

562. ஓம் துரியநிலைக்கப்பாற்பட்ட ப்ரம்மமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

563. ஓம் பவப்பிணியை விரைந்து தீர்க்கும் மருத்துவராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

564. ஓம் விஷயதாகத்தை (உலகப்பொருட்களில் ஆசையை) ஒழித்து மன அமைதியருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

565. ஓம் வேண்டப்படும் ஸங்கீதச் செல்வத்தை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

566. ஓம் உடல்வன்மையும் ஆன்ம ஒளியும் அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

567. ஓம் புனிதமான நற்கீர்த்தனங்களைப் பிரஸாதமாக அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்

568. ஓம் மகிழ்வூட்டும் ஸங்கீத ஞானமருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

569. ஓம் இசை, கூத்து, வாத்தியம் எனும் மூன்றையும் பிரஸாதமாய் அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

570. ஓம் உலகப்பற்றினை ஒழித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

571. ஓம் காக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

572. ஓம் உள அடக்கமும் மன அமைதியும் அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

573. ஓம் தசரதனை மகிழ்விப்போனைத் தன் துதிப்பாட்டால் மகிழ்விக்கின்ற/ தசரதனை மகிழ்விப்போனைக் காண்பதில் மகிழ்கின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

574. ஓம் அடியார்களில் முதன்மையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

575. ஓம் திவ்யவாக்கு எனும் ஆடை அணிந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

576. ஓம் இரவு பகல் த்யானிக்கப்படும் குருநாதருக்கு நமஸ்காரம்.

577. ஓம் மகிழ்ச்சியற்ற உள்ளவானில் ஒளியூட்டும் கதிரோனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

578. ஓம் கழலும் ஞானநெருப்பாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

579. ஓம் கெட்ட கனவுகளை அழிக்கின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

580. ஓம் ஏத்தித் துதிக்கப்பட வேண்டிய நாதகுருவுக்கு நமஸ்காரம்.

581. ஓம் கரைகாணு ஸங்கீத தேவ கங்கையாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

582. ஓம் உறுதியான முடிவுடன் திருவடியில் வீழ்ந்தவரைத் தன்னுடன் சேர்த்துக் கொள்ளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

583. ஓம் உருக்கொண்ட நாத ஒளியாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

584. ஓம் தெய்வீக கானத்தைப் பொழியும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

585. ஓம் ஸ்ரீராமனின் உத்ஸவமூர்த்தியை ஊஞ்சலில் எழுந்தருளச்செய்து இனிமையே ஆகிய பாட்டுகளினால் துதித்துப்பாடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

586. ஓம் எட்டாத்தன்மையையும் அருமைப்பாடினையும் ஓடச்செய்யும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

587. ஓம் கணீர் ஒலியுடன் பாடிப்பூஜை செய்யும் வரமருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

588. ஓம் அமைதிநிரம்பிய நாதயோகியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

589. ஓம் நாதயோகத்தில் விரைவாய் நிறைவு காண அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

590. ஓம் இதயத்தை உருக்கும் கானகங்கையின் தோற்றுவாயான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

591. ஓம் எதிர்மறைகளின் தளையினின்று விடுவிக்கின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

592. ஓம் இரட்டைகட்கப்பாற்பட்ட (இன்பம்-துன்பம் போன்ற எதிர் இரட்டைகள்) ஞானியாகிய / எதிர்மறைகட்கு அப்பாற்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

593. ஓம் த்வாரகாநாதனாகிய ஸ்ரீக்ருஷ்ணனின் லீலாவிசித்திரத்தை பல்வண்ணப்பாட்டுக்களில் ஆலாபித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

594. ஓம் இவ்வுலகிற்கும் அவ்வுலகிற்கும் அருள்செயும் ஸ்ரீராமன் திருவடிகளில் பக்தியைத் தூண்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

595. ஓம் த்வைதம், அத்வைதம் இத்தத்துவங்களின் பொருளை விளக்கும் மிகப்பல கீர்த்தனங்கள் செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

596. ஓம் பூமியினின்றுதித்த ஸீதையின் அன்பனை நிந்தாஸ்துதி செய்து மகிழ்ந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

597. ஓம் இடையறுவீழ்ச்சியென நாமாவளி மழை பொழிந்த கானமுகிலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

598. ஓம் அறிவையும், பக்தியையும் வளர்க்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

599. ஓம் ஞானத்துக்கும் பக்திக்கும் இருப்பிடமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

600. ஓம் ஆழ்ந்த, இனிய மென் அமைதியான குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

601. ஓம் நிலையின்மையை உதறித்தள்ளிய (யாரால் நிலையின்மை உதறித்தள்ளப்பட்டதோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

602. ஓம் துன்பத்தால் உலர்ந்த மனதைப் புத்துணர்வு பெறச்செய்யும் சிறந்த கானகங்கையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

603. ஓம் தனது திருக்கரந்தனை இறுகப்பற்றிய, தன்னையே உபாஸிக்கும் பக்தரை நாதோபாஸனையில் நன்கு வழிநடத்தும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

604. ஓம் ஊட்டமளிக்கும், பருகிடவேண்டிய, அமுதைக்கறந்தெடுத்த இனிய கீர்த்தனைகள் மிகப்பல செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

605. ஓம் வாரி வழங்கும் இசைச்செல்வந்தரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

606. ஓம் த்யானிக்கப்பட வேண்டிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

607. ஓம் த்யானத்தினால் அடையக்கூடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

608. ஓம் ஓங்காரத்தின் உள்ளிருக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

609. ஓம் நாமத்தின் (இறைவன் திருநாமங்களின்) அக்ஷரங்களை ஒலித்த இன்னிசைசங்காகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

610. ஓம் நாதத்தின் சிறப்பை இனிய க்ருதிக்கூட்டங்களில் ஒலித்த கவி-வரராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

611. ஓம் இருண்ட மனதிற்கு ஞான ஒளியூட்டும் சூர்யனாகிய ஸத்கு-ருவுக்கு நமஸ்காரம்.

612. ஓம் வணங்கப்படவேண்டிய குருதேவருக்கு நமஸ்காரம்.

613. ஓம் நாதத்திற்கு ஏங்கும் ஆன்மாவினால் தேடப்படும் பரம குருவுக்கு நமஸ்காரம்.

614. ஓம் நாதவித்தையை வேண்டுபவருக்கு ஆதாரமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

615. ஓம் நாதோபாஸகரின் லட்சியமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

616. ஓம் நாதோபாஸகரின் உயிர்மூச்சான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

617. ஓம் நாதயோகத்தில் உறுதியுடன் விடாது முயலுபவருக்கு முழுமை நிறைவின் மூலமான (விதையான) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

618. ஓம் நாதோபாஸனையிலேயே நிலைத்துநிற்கும் ஆன்மாவுக்கு ஒரே புகலிடமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

619. ஓம் நாதோபாஸனையை விரதமாக ஏற்று உள்ளார்ந்து முயலுபவ-ருக்கு விடாமல் உதவி, காத்தருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

620. ஓம் நாதானந்தத்தைப் பொழியும் மங்களமான இனிய கீர்த்தனை மேகமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

621. ஓம் நாதோபாஸகரின் வாக்கினிமையிலுள்ள ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

622. ஓம் நாமகானம் (இறைவன் நாமத்தைப் பாடுதல்) எனும் அமிழ்தச்-

சாற்றைப் பருகுதலில் விருப்புள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

623. ஓம் நாதத்தோட்டத்தினின்று நாம மலர்களைச் சேகரிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

624. ஓம் நாம மலர்களால் ஸ்ரீராமனை அர்ச்சித்து ஆனந்தித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

625. ஓம் நாமத்தின் பெருமையினைப்பாடி மகிழ்வுறும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

626. ஓம் நாராயண, ஹரி என நாமஸங்கீர்த்தனம் செய்து பெருமகிழ்வுற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

627. ஓம் ஸ்ரீராம தாரக நாமத்தை எப்போதும் துதித்த (யாரால் ஸ்ரீராமதாரக நாமம் எப்போதும் துதிக்கப்பட்டதோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

628. ஓம் வேத சாஸ்த்ர புராண ஸாரமான நற்கீர்த்தனங்களை அருளியுள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

629. ஓம் உண்மை பக்தியை எழுப்பும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

630. ஓம் உண்மை பக்தரைக் காக்கும் குருநாதருக்கு நமஸ்காரம்.

631. ஓம் உளச்சோர்வு, வாட்டம் இவற்றினைப் போக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

632. ஓம் உறக்கம், சோம்பல் இவற்றின் எதிரியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

633. ஓம் நிலைத்ததன்மையை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

634. ஓம் என்றுமுள்ள ஆனந்தவடிவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

635. ஓம் நிலைத்த நாதானந்தத்தை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

636. ஓம் தெளிந்த அசைவற்ற சித்தத்தையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

637. ஓம் தெளிந்த அசைவற்ற சித்தத்தில் உள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

638. ஓம் தெள்ளத்தெளிந்த சித்தமாகிய வெளியினில் ஒளிரும் நாதப்ரஹ்ம ஒளிப்பிழம்பான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

639. ஓம் தொடர்ந்த, அளவற்ற ஸங்கீத ஆனந்தத்தை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

640. ஓம் ஐயமின்றி விடுதலை அளிக்கும் திருவடிகட்கு நமஸ்காரம்.

641. ஓம் வேறுவழியற்ற பக்தைக்கு ஒரே புகலிடமான திருவடிகட்கு நமஸ்காரம்.

642. ஓம் உண்மைபக்தர் இறுகப் பற்றிக்கொண்ட புனிதத் திருவடிகட்கு நமஸ்காரம்.

643. ஓம் என்றும் புதிய பாட்டுக்களில் தனித்திறன் படைத்த ஸத்குரு-வுக்கு நமஸ்காரம்.

644. ஓம் நீலமேக ச்யாமளனான ஸ்ரீராமனின் வடிவழகை வர்ணிப்பதில் விஞ்சுகின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

645. ஓம் ஸ்ரீராமனைத்துதித்துப் பாடிய (யாரால் ஸ்ரீராமன் துதித்துப் பாடப்பட்டானோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

646. ஓம் புதிய பாலும் வெண்ணெயும் தனது தெய்வீகமான கானத்து-டன் / புதிய பாலும் வெண்ணெயுமே ஆன தனது தெய்வீக கானத்தை ஸ்ரீராமனுக்கு ஒவ்வொருநாளும் விடியற்காலையில் நிவேதித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

647. ஓம் நரஸிம்ஹதர்சனத்தினால் புலகமடைந்த ப்ரஹ்லாதன் மூலம் தனது அனுபவத்தினை விவரித்த (விவரிக்கப்பட்ட சுய அனுபவத்தினை உடைய) ஸத்குருநாதருக்கு நமஸ்காரம்.[1]

648. ஓம் மன்னர்களிற் சிறந்த ஸ்ரீராமனைப் பாடுவதில் ஈடிணையற்ற பாகவதோத்தமரான **ஸத்குரு ஸ்ரீத்யாகராஜஸ்வாமிக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.**

649. ஓம் தனது அடிச்சுவட்டினையே பின்பற்றுவருக்கு நாத வளர்ச்சி, முழுமை இன்பம் இவற்றை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

650. ஓம் நிராசையை நீக்குகின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

651. ஓம் கர்மாவினின்று விடுபட்டு முக்தியடைதலருளும் ஞானாசார்ய-னான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

652. ஓம் நிலைப்பேறளிக்கும் நாதோபாஸனையாகிய நற்பேறருளும் ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

653. ஓம் இயற்கையான ஸங்கீதவரமருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

654. ஓம் பேரின்பமளிக்கும் நாதயோக ஆசார்யனான ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

655. ஓம் முழுநிறைவுடை வாக்கேயகாரராகிய (இசைப்பாடல்கள் இயற்-றிய) ஸத்குருவுக்கு நமஸ்காரம்

656. ஓம் ஸுஸ்வர (இன்னிசையொலி) சந்தனம் பூசப்பட்ட, பக்தியின் உருவமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

657. ஓம் விடாது முயலும், அறிவாற்றல் குறைந்த பக்தரைக் கைதூக்-கிவிடும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

---

[1] ப்ரஹ்லாத பக்தி விஜயம்.

658. ஓம் பரமாத்மஞானத்தை எழுப்பும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

659. ஓம் மேம்பட்ட, உயர்ந்த குருவுக்கு நமஸ்காரம்.

660. ஓம் பேரின்ப ஒளிச்சுடராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

661. ஓம் பேரின்பக்கடலாகிய ஸ்ரீராமனைப் பாடும் பேரின்பம் நிறைகடலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

662. ஓம் அவ்வுலகிற்கு அருள் செய்யும் ஸ்ரீராம பஜனை, கானம் இந்நெறியில் முன்னோடியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

663. ஓம் பக்தியற்ற ஸங்கீத ஞானத்தைப் புறக்கணித்த (யாரால் பக்தியற்ற ஸங்கீதஞானம் புறக்கணிக்கப் பட்டதோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

664. ஓம் ஸ்ரீஸீதாராமனின் அர்ச்சாமூர்த்தியை (விக்ரஹ உருவை)ப் பூஜித்த (யாரால் ஸ்ரீஸீதாராமனின் அர்ச்சாமூர்த்தி பூஜிக்கப்பட்டதோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

665. ஓம் பரப்பப்பட்ட நாமானந்த ஒளியுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

666. ஓம் நாமகீர்த்தனத்தின் இன்பம் பெருக்கெடுத்த ஸ்வானுபவமுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

667. ஓம் ஊடுருவிப் பரந்த பக்தி நறுமணத்தை உடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

668. ஓம் சூழப்பட்ட ஸ்ரீராமபக்தி ஒளியினையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

669. ஓம் ஸ்ரீராமமூர்த்தியைக் கட்டித் தழுவிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

670. ஓம் தேடுபவருக்குக் கண்முன் தோன்றலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

671. ஓம் மாயையினால் சூழப்பட்டு, சுற்றிச் சுழன்று திண்டாடுமிச்சிஷ்யரை நாதோபாஸனையில் தொடர்ந்து வழிகாட்டி நெறிப்படுத்தும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

672. ஓம் நன்கு உபாஸிப்பவருக்கு என்றும் நிறை மங்களத்தைத் தரும் ஸங்கீதாமுதத்தைப் பொழியும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

673. ஓம் பாதத்தில் வீழ்ந்தவரைத் தூய்மைப்படுத்தும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

674. ஓம் தூய்மையூட்டும் நாமதீர்த்தத்தைத் தெளிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

675. ஓம் திருவடி ஸ்பர்சனத்திற்கு ஏங்கும் ஆத்மாவைக் கட்டி அணைத்துக்கொள்ளும் இதயங்கனிந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்

676. ஓம் தாகங்கொண்ட பக்தைக்குத் தன் கானாமுதத்தைப் பருகிடச்செய்யும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

677. ஓம் பொங்கும் நாதாமுதத்தின் பெருக்கான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

678. ஓம் அமுதைப்பொழியும் இசை இன்பக்கொண்டலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

679. ஓம் முழுமையாக எழும்பும் நாதாமுத அலையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

680. ஓம் புனிதப்பெயர் புகழ் படைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

681. ஓம் புஷ்ப நறுமணம் கொண்ட எண்ணமலரால் அர்ச்சிக்கப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

682. ஓம் பூஜைக்குரிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

683. ஓம் பூஜிப்பவரின் ஒரே உறவினரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

684. ஓம் பற்றிய பக்தைக்குக் காப்பளிக்கும் மங்களமான திருவடிகட்கு நமஸ்காரம்.

685. ஓம் மென்மையான பக்திபுஷ்பத்தினால் அர்ச்சிக்கப்பட்ட திருவடிகட்கு நமஸ்காரம்.

686. ஓம் தனித்திறம் படைத்த இன்கவித்வமருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

687. ஓம் முன்னோர் அளித்த செல்வமாகப் பெற்ற ஸ்ரீஸீதாராமன் திருவுருவினை அன்றாடம் பூஜித்து ஆராதித்துப் பாடுவதில் ஈடுபட்ட அவதார புருஷராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

688. ஓம் புனிதமான பாகவதோத்தமராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

689. ஓம் பலவகைப் பாட்டுக்களில் நாமத்தின் பெருமை மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கூறப்படுகின்ற வாக்கின் ஒளியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

690. ஓம் பக்தருக்கு புத்துயிரூட்டும் அமுதமயமான கீர்த்தனங்களை உடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

691. ஓம் நாமத்தின் பெருமையைப் பாடிமுழங்கிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

692. ஓம் ஒலிக்கப்பட்ட கமகத்தில் உள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

693. ஓம் எதிரில் தோன்றிய நாத தெய்வமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

694. ஓம் ப்ரணவ (ஓங்கார) ரூபத்தில் எங்கும் பரந்து விரிந்துள்ள நாத சக்தியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

695. ஓம் எப்போதும் நினைந்து த்யானிக்கும் பக்தர் முன் புலப்படும் நாதத்தோன்றலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

696. ஓம் சுடர்விடும் நாத ஒளியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

697. ஓம் காத்திருக்கப்படுகின்ற ஸங்கீத குருவுக்கு நமஸ்காரம்.

698. ஓம் வணங்கிய பக்தரைக் காக்கின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

699. ஓம் உயிர் மூச்சினை அருளும் / கவிதை அருட்கிளர்ச்சி அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

700. ஓம் விதியின் தளையினின்று விடுவிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

701. ஓம் ப்ராணநாதனாகிய ஸ்ரீக்ருஷ்ணனின் லீலைகளை மணியோசை-யெனப்பாடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

702. ஓம் மிகுந்த அன்புக்குரிய குருதேவருக்கு நமஸ்காரம்.

703. ஓம் செயல் வெற்றி மகிழ்வருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

704. ஓம் அன்பு ததும்பும் தெய்வீகப் பார்வையினால் பக்தையைச் சூழும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

705. ஓம் பஜனை ஆனந்தத்தால் அசைந்தாடுகின்ற, ஒளிவட்டத்தால் சூழப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

706. ஓம் ஸ்ரீராமனது மிகுந்த வடிவழகைப் பாடுவதில் நிகரற்ற ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

707. ஓம் தெளிக்கப்படவேண்டிய நாமாமுதம் கொண்ட குறையா அக்ஷ-யபாத்திரமாகிய வகைவகையான கீர்த்தனங்கள் செய்த ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

708. ஓம் உயர்ந்த தத்வார்த்தங்கள் நிரம்பிய கான வெள்ளமாகிய ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

709. ஓம் உயர்வருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

710. ஓம் அறிவுவளம் நிறை கவியரசராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

711. ஓம் நாமாமுதத்தில் முழுகித் திளைக்கும் கானானந்த வடிவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

712. ஓம் அரவரசப் பள்ளிகொண்டோனை பஜனைசெய்த இசை அரசரா-கிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

713. ஓம் ராமானந்தம் கனிந்து கீதக்கிளைகளுடன் விளங்கும் நாதமே வேரான இசைஅரசமரமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

714. ஓம் நுரையீரலினை நிரப்பும் ஸுஸ்வரமெனும் தெய்வீக நறுமணக் காற்றாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

715. ஓம் ராகமாம் அமிழ்தின் தொடர்பெருக்காகிய ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

716. ஓம் நிலைத்து ஊடுருவும் பார்வையினால் பக்தைக்கு அருள் புரியும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

717. ஓம் அன்பினால் தன்னுடன் பிணைக்கப்பட்டவருக்கு தன்னுடன்

ஒன்றும் அருள் புரியும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

718. ஓம் சிறுவன் ராமனின் திருவிளையாடல்களைத் தன்னுள் அனுபவித்த திருவார்ந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

719. ஓம் துளஸி, வில்வம் முதலிய இலைகளும், பல்வகை நறுமலர்களும் நாம மலர்களும்கொண்டு ஸ்ரீராமனைப் பூஜித்து அர்ச்சனை செய்யும் உவகை வடிவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

720. ஓம் கூரிய அறிவருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

721. ஓம் அறிவுக்கப்பாற்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

722. ஓம் மிகப்பெரும் புகழுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

723. ஓம் உயர்பெரும் அறிவுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

724. ஓம் அறிவுணர்வுக்கப்பாற்பட்ட ஸ்ரீராமனை மிக மென்மையான இனிய பாட்டினால் திருப்பள்ளி எழுப்பும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

725. ஓம் ப்ரஹ்ம ஒளியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

726. ஓம் ப்ரஹ்ம ஞானத்தினை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

727. ஓம் பக்தியினைப் பிச்சையாக அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

728. ஓம் பக்திக்கடலின் கரைகாணச் செய்விக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

729. ஓம் பக்த பாபத்தினைச் சாம்பலாக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

730. ஓம் பக்த துன்பம், கவலைகட்கு முடிவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

731. ஓம் பக்தமானத்தைக் காத்தருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

732. ஓம் பக்தருக்கு நன்மையருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

733. ஓம் பக்தையால் இறுகப்பற்றப்பட்ட திருவடிகட்கு நமஸ்காரம்.

734. ஓம் பக்தையின் இதயக்கோவிலில் உறுதியாகப் பிரதிஷ்டை செய்யப்பட்ட மங்களத்திருவடிகட்கு நமஸ்காரம்.

735. ஓம் பக்தையின் இதயத்தைத் தனது மங்களமான இருப்பிடமாகக் கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

736. ஓம் பக்தையின் இதயக்கோயிலில் ஒளிரும் நாத விளக்குச் சுடரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

737. ஓம் இறைவன் அர்ச்சனை, இசை ஆராதனம் இவற்றில் ஈடுபட்டுத் தாரகநாம இன்பம் பொங்கி வழிகின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

738. ஓம் இறைவன் நாமத்தை இனிது பாடுவதிலேயே ஈடுபட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

739. ஓம் பக்தி உணர்வின் அனுபவ மயமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

740. ஓம் பக்தியோக நெறியில் விழிப்புற்ற மனதுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

741. ஓம் பக்தியினால் நறுமணம் பெற்ற இத்துதிமலர்களால் மகிழ்வுற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

742. ஓம் பக்தையின் அநுராக (அன்பு) வெள்ளத்தால் முழுக்காட்டப்படும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

743. ஓம் பக்தையின் வாழ்வுக்குடத்தை ஸங்கீதத்தேனால் நிரப்புகின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

744. ஓம் மங்களம் செய்யும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

745. ஓம் காத்தருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

746. ஓம் தெளிந்த கணீர் என ஒலிக்கும் குரலுடைய, ஒளிமிக்க ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

747. ஓம் பேரின்பமருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

748. ஓம் பிறவிப்பிணிக்கு முறிவுமருந்தான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

749. ஓம் பிறவிக்கப்பாற்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

750. ஓம் பக்தி உணர்வுமிக்க மனதில் கருத்துருக் கொள்ளப்படும் ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

751. ஓம் இதயபூர்வ உணர்வெனும் புஷ்பத்தால் பூஜிக்கப்படும் ஸத்கு-ருவுக்கு நமஸ்காரம்.

752. ஓம் ஒளிவட்டத்தால் சூழப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

753. ஓம் ஒளிரும் ஸ்வஸ்வரமூர்த்தியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

754. ஓம் பிச்சையாக வேண்டப்பட்ட ஸ்வஸ்வர வித்தையை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

755. ஓம் அன்புணர்வில் தோய்ந்த, பக்தியின் மிக்க நறுமணம் பொருந்திய குறையாச் செல்வமாகிய மிகப்பல கீர்த்தனமலர்களை அருளிச் செய்துள்ள ஸத்குருநாதருக்கு நமஸ்காரம்.

756. ஓம் **மிக்க ஒளிகொண்ட ஸ்ரீத்யாகராஜ ஸத்குருஸ்வாமிக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.**

757. ஓம் ஸங்கீதானந்தம் நிரம்பிய ஸத்குருஸ்வாமிக்கு நமஸ்காரம்.

758. ஓம் சுழன்று சுழன்றியங்கும் மனதை ஒருமுகப்படுத்தும் இனிய ச்ருதியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

759. ஓம் ஒளிவீசும் ஸங்கீத ஸூர்யனான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

760. ஓம் மங்களமான கானவடிவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

761. ஓம் அழகினிய குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

762. ஓம் மிக அழகிய இன்னிசையொலி இன்ப அலையான ஸத்குரு-வுக்கு நமஸ்காரம்.

763. ஓம் நாமப்பூங்கொத்துக்கள் பூத்துக்குலுங்கும் தெய்வீக கானக்-கொடியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்

764. ஓம் மனமாம் கொடிவீட்டினில் மறைந்துள்ள மங்களப்பாடகராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

765. ஓம் வேண்டப்படும் ஸங்கீதமாகிய பலனருளும் ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

766. ஓம் உள்ளக்கட்டுப்பாட்டினை வற்புறுத்திய முனிவராகிய ஸத்குரு-வுக்கு நமஸ்காரம்.

767. ஓம் மந்த்ரத்தை உபதேசிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

768. ஓம் இறைவனிடம் மிக்க ஈடுபாடு கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

769. ஓம் தீவினையை திசை திருப்பும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

770. ஓம் மங்களத்தை உண்டாக்கும், இன்குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

771. ஓம் தாராளமாய் அளிக்கும் இசைச் செல்வந்தராகிய/மிக மதிப்பு-டைய இசை மாணிக்கமாகிய /இன்னிசைக்குப் புகழ்பெற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

772. ஓம் சிந்தித்துப் பின்பற்ற வேண்டிய தத்வார்த்தங்கள் நிரம்பிய இனிய கீர்த்தனைகள் மிகப்பலவற்றை அருளியுள்ள, ஸங்கீதத்-தின் முழுமை நிறைவு பெற்ற அவதாரமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

773. ஓம் மிக்க மேம்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

774. ஓம் போற்றிப் பூஜிக்கப்படும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

775. ஓம் மேம்பட்ட, உயர்மகிழ்வுள்ள பாட்டுக்கள் பற்பல செய்த ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

776. ஓம் தன்மானம் நிறைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

777. ஓம் தனதிதயத்தில் நடமாடி ஒளியூட்டும் ஸ்ரீராமனின் திருவுருவை இசைபாடி இன்புற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

778. ஓம் தேடுபவர் உள்ளத்தில் பளிச்சிடும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

779. ஓம் தேடுபவரின் தூய்மைப்படுத்தப்பட்ட உள்ளத்துக்கு அழகூட்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

780. ஓம் திருவுற்றோனின் உற்றாராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

781. ஓம் இனிமைமிகுமொழியுடைய ஸ்ரீராமன் பூஜிக்கப்பட்ட, இனிமை-யேஆன பாட்டுக்களை இயற்றிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

782. ஓம் இனிய நாமம் கலக்கப்பட்ட ஸ்வரம், ராகம், லயம் இவை-யாகிய அமுதச்சாற்றினைப் பருகி இன்புறும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

783. ஓம் மீன் முதலான பத்து அவதாரங்களின் பெருமையை மிக அழ-காகப்பாடிய கானாவதாரமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்

784. ஓம் தூயோரின் உள்ளத்தை இருப்பிடமாகக் கொண்டோனின் பெரு-மைகட்கு இருப்பிடமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

785. ஓம் முரகரர்களை அழித்தோனைக் கவர்ந்த ஹரிபக்தராகிய ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

786. ஓம் முக்தியினை இச்சிப்பவரின் அடைக்கலமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

787. ஓம் மூலாதாரத்தினின்றுதிக்கும் ஓங்காரநாதமே ஆன ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

788. ஓம் வீட்டுப்பேறுன / வீட்டுப் பேரருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

789. ஓம் மென்மையான இன்னிசை ஒலியின் இனிமையான ஸத்குரு-வுக்கு நமஸ்காரம்.

790. ஓம் மேருவுக்குச் சமமான மேதையுடன் ஒளிரும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

791. ஓம் மகிழ்வூட்டும் நாதகுருவுக்கு நமஸ்காரம்.

792. ஓம் மோஹன வடிவுடையோன் மேல் கொண்ட மோஹமே அடை-யாளமாயுள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

793. ஓம் முக்தியளிக்கும், பற்பல ராகங்களிலமைந்த இனிய கீர்த்தனை-களை இயற்றிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

794. ஓம் விடுவிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

795. ஓம் அமைதியாய் தியானித்தலால் அடைய வேண்டிய ஸத்குரு-வுக்கு நமஸ்காரம்.

796. ஓம் சோர்வுற்ற மனதிற்கருமருந்தான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

797. ஓம் மனஅடக்கமுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

798. ஓம் சிறந்த துறவியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

799. ஓம் புகழ் பெற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

800. ஓம் சிறப்பினை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

801. ஓம் வருதலும் போதலுமான காலப்போக்கிற்கப்பாற்பட்ட ஸத்குரு-வுக்கு நமஸ்காரம்.

802. ஓம் பரம்பொருளுடன் ஒன்றிய தூயராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

803. ஓம் பெருக்கெடுத்தோடும் கான கங்கையாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

804. ஓம் மனதை ஒருமுகப்படுத்தி த்யானிக்கப்படவேண்டிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

805. ஓம் யோகஸாரமான நாதவித்தைக் கடலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

806. ஓம் தகுந்த உபதேசமளிக்கும் குருதேவருக்கு நமஸ்காரம்.

807. ஓம் அன்பும் பக்தியுமே உருவெடுத்த, ராகக்கடவுளான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

808. ஓம் இன்குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

809. ஓம் ஶ்ரீராமனின் அழகினை கணீரென ஒலிக்கும் குரலில் பாடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

810. ஓம் ரகுநந்தனனை (ரகுவம்சத்தை மகிழ்விப்போனை) இன்பமான இனிய பாட்டுக்களால் வணங்கிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

811. ஓம் ரங்கசாயியின் தெய்வீக வடிவை இதய அணியாகக் கொண்ட/ ரங்கசாயியின் தெய்வீக வடிவைத் தன் இதயத்தால் அணிசெய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

812. ஓம் வெள்ளியங்கிரியோனால் மலைமகளுக்குக் கூறப்பட்ட ஸ்வரக் கடலின் மறைமுக உண்மைகளை வென்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

813. ஓம் ரமாரமணன் மகிழ்ந்திடும் மனதையுடைய / ரமா ரமணனில் மகிழ்வுற்ற மனதையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

814. ஓம் ராமசந்திரனின் அன்புக்குரிய இசைஞராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

815. ஓம் ராமனாகிய தெய்வத்தை எளிதில் அடைந்த சிறந்த பக்தராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

816. ஓம் ராமநாமமாகிய காக்கும் மந்த்ரத்தை உபதேசிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

817. ஓம் அரசர்க்கரசரின் உயரணியாகிய ஶ்ரீராமனைப் பாடுவதில் ஈடுபட்ட பாகவத சிரோமணியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

818. ஓம் இசை அன்பனான ஶ்ரீராமனின் அன்பரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

819. ஓம் ராகத்தையே வடிவாகக்கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

820. ஓம் விருப்பு வெறுப்பற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

821. ஓம் ராம, ராம, கோவிந்த, முகுந்த என நாம ஸங்கீர்த்தனத்தின் ஆனந்தமேயான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

822. ஓம் ராகமெனும் (அன்பு, இசை எனும்) பூச்சினை ஸ்ரீராமன்மேல் பூசிய/ ராகமெனும் பூச்சுக் கொண்ட தானே ஸ்ரீராமனுக்குப் பூச்சாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

823. ஓம் ஒளிபடைத்த கண்ணினையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

824. ஓம் ராகமெனும் ஒளிக்கிருப்பிடமான, ராமனாகிய ஒளிக்கிரணங்களை மாலையாகப் பூண்ட ஞாயிறாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

825. ஓம் அழகொளி முகத்தோனாம் ஸ்ரீராமனின் வடிவழகினை அழகும் அன்பும் மிளிரும் ராகத்தினால் ஒளிரச்செய்யும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

826. ஓம் ராகத்தின் அழகும் ஒளியும் ஓருருப்பெற்ற ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

827. ஓம் ஒளிரும் ராகக்கடவுளான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

828. ஓம் மயிர்கூச்சுண்டாக்கும் ஸ்ரீராமனுக்கு அஞ்சலியாகப் பாட்டுக்கள் செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

829. ஓம் லக்ஷ்ய குருவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

830. ஓம் லக்ஷ்மீரமணன் இன்புறும் வகையில் இன்னிசை ஒலித்த ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

831. ஓம் லக்ஷ்மணனுடன் விளங்கும் ஸ்ரீஸீதாராமனின் திருவுருவை இடை-விடாது இசை மூலம் ஆராதிப்பதில் ஈடுபட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

832. ஓம் லக்ஷணங்கள் நிரம்பப்பெற்ற ஸ்ரீராமனைப் பிரதக்ஷிணம் செய்-யக்கூப்பிடும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

833. ஓம் பற்றிக்கொள்ளவேண்டிய குருதேவருவுக்கு நமஸ்காரம்.

834. ஓம் இறுகப்பற்றிப் பூஜிப்பவரைக் காக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

835. ஓம் அறிவுத்திறமிக்க ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

836. ஓம் தாளம் கூத்தாடும், உணர்ச்சி பெருக்கெடுத்தோடும், பண்ணி-னால் வண்ணமூட்டப்பட்ட பாட்டுகள் பற்பல இயற்றிய கலைவளமுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

837. ஓம் லயசுத்தத்தை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

838. ஓம் தன்னுள் ஒன்றும் வரமருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

839. ஓம் தனதருமை ஸ்ரீராமமூர்த்தியை லாலி (தாலாட்டு) பாடிக்கொஞ்சும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

840. ஓம் வனப்புமிகு ஸ்ரீராமசந்திரனின் மேல் கொண்ட அன்புமயமான

ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

841. ஓம் கான வடிவில் நாமத்தின் பெருமையைப் பொறித்த நாதவடி-வான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

842. ஓம் விளையாட்டாக அவதரித்த ஸ்ரீராமன் மேல் அன்பிற்சிறந்த குருநாதருக்கு நமஸ்காரம்.

843. ஓம் விளையாட்டில் கைதேர்ந்த ஸ்ரீக்ருஷ்ணனைக் கொஞ்சும் பாட்-டில் கைதேர்ந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

844. ஓம் உலகைத் திறம்படக்காக்கும் ஸ்ரீராமனைப்பாடிப் புகழ்ந்த ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

845. ஓம் தாமரைக்கண்ணனை நிந்தாஸ்துதி செய்து ஆனந்திக்கும் ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

846. ஓம் வணங்கப்படவேண்டிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

847. ஓம் வணங்குபவருக்குச் சிறந்த கானவரமருளும் ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

848. ஓம் தாமரைக்கண்ணனின் ஜபமே நவநிதியாகும் என்றுரைத்த ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

849. ஓம் ராமநாமம் உட்செறிந்த தேன்குரல் படைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

850. ஓம் விரிந்த நாதமலராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

851. ஓம் தூயநாமமலர்களின், பாட்டெனும் புஷ்பார்ச்சனையில் மகிழும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

852. ஓம் களங்கமில்லா நிலவான ராமசந்திரனைப்பாடுவதில் சந்திரனான (தலைசிறந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

853. ஓம் தூய இதயத்தையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

854. ஓம் விரக்தியையே (பற்றின்மையையே) உருவாகக்கொண்ட ஸத்கு-ருவுக்கு நமஸ்காரம்.

855. ஓம் நம்பிக்கை வைக்கவேண்டிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

856. ஓம் உலகியற்பொறிப்புகளை அழிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

857. ஓம் புகழ்பெற்ற ராம பக்தராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

858. ஓம் வேதப்பொருள் புலப்படும் நாத நூலாகிய ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

859. ஓம் வெகுதூரம் பரவிய இசையொளியாகிய ஸத்குருவுக்கு நமஸ்கா-ரம்.

860. ஓம் வீணை கானத்தில் ஊடுருவிப்பரந்து கலந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

861. ஓம் அழகிற் சிறந்த ஸ்ரீராமனை அழகிற்சிறந்த பாடல்களால் புகழும் தலைசிறந்த பக்தராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

862. ஓம் வேங்கடேசன் திருநாமமெனும் ஏணிமூலம் நன்னெறியில் ஏற்றுவிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

863. ஓம் வேதசாஸ்திரங்களின் தன்மை, உண்மைப்பொருள் இவற்றினை நாத வடிவில் அறியச் செய்யும் ஸத்குருநாதருக்கு நமஸ்காரம்.

864. ஓம் **வேதாந்தத்தை நன்கறிந்த நாதயோகியான ஸத்குரு ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.**

865. ஓம் தன்னை அடைந்த உபாஸகரை உய்விக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

866. ஓம் ஒலியாகும் ப்ரம்மனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

867. ஓம் ஒலிக்கப்பாற்பட்ட / விவரிக்க இயலாத ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

868. ஓம் அமைதியும் வீட்டுப்பேறும் அளிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

869. ஓம் அமைதியான மனமாம் இன்பமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

870. ஓம் பொன்னில் பொறிக்கப்படவேண்டிய இசைப்புகழான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

871. ஓம் சிஷ்ய உள்ளத்துன்பத்தினாலேயே அர்ச்சிக்கப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

872. ஓம் சிஷ்யரிடம் பரிவுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

873. ஓம் சிஷ்யர் குற்றங்களை மன்னிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

874. ஓம் சிஷ்ய அஹங்காரத்தினை அழிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

875. ஓம் சிஷ்ய மன இருளைப் போக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

876. ஓம் மங்களத்தை ஆசீர்வதித்தருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

877. ஓம் மங்களம் செய்யும், தெய்வீகமான கானம் இசைக்கும், விரும்பப்படும் குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

878. ஓம் சிவநாமத்தை பஜனை செய்து வில்வத்தால் அர்ச்சனை செய்து இதயத்தாமரையால் பூஜிக்கத் தூண்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

879. ஓம் கேட்க மிகவும் விரும்புபவருக்குச் சலுகையாக இன்குரலை ஒலிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

880. ஓம் தூய்மையின் அவதாரமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

881. ஓம் மங்களங்கள் நிறை ஸ்ரீராமனின் திருநாமங்கள் நிறைந்த ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

882. ஓம் சூரனாகிய ஸ்ரீராமனைப் பாடுவதில் ஈடுபட்ட இன்னிசையொ-லியின் உருவமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

883. ஓம் ச்ருங்கார குணத்தின் இருப்பிடமான ஸ்ரீராமனிடம் பக்திக்கு இருப்பிடமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

884. ஓம் பைந்நாகப் படுக்கையோனைப் பாடுதலில் ஒன்றிய ஸத்குரு-வுக்கு நமஸ்காரம்.

885. ஓம் தளர்ச்சியினைப் போக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

886. ஓம் துன்பப்பனிக்கு சூர்யனான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

887. ஓம் சோகத்தினின்றுதித்த ச்லோகத்தில் பிரியமுள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

888. ஓம் உலர்ந்த உள்ளத்துக்குப் புத்துயிரளிக்கும் ஸுஸ்வரத்தைத் தெளிக்கும் ஸங்கீதமாம் குளிர்தென்றலாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

889. ஓம் அழகிய ஸப்தஸ்வரங்களெனும் வானவில்லாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

890. ஓம் வீரமும் பெருந்தன்மையும் நிரம்பிய ஸ்ரீராமனின் இன்குணங்க-ளைப்பாடி மயங்கிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

891. ஓம் நீலவண்ண மேனியழகுடை ஸ்ரீராமனைப் புகழ்ந்து பாடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

892. ஓம் அக்கறையுடன் முயலும் சரணடைந்தவருக்குத் தன் தர்சன பலனருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்

893. ஓம் முயன்று உழைப்பவருக்கு ஸ்வர வித்தையின் முழுமை நிறை-வினை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

894. ஓம் சரணடைந்தவரை முழுதும் காக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

895. ஓம் செவியை மயக்கும் ஸுஸ்வர இனிமையிலுள்ள கடவுளான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

896. ஓம் கேட்பதே பேரின்பமான இன்குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

897. ஓம் விரைந்தோடும் ஸங்கீதப்பெருக்கான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

898. ஓம் மிக்க புகழுடைய இசை மேதையாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

899. ஓம் கேட்பதற்கினிய ச்ருதியே வடிவாய்க் கொண்ட / கேட்பதற்கினிய வேதமே உருக்கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

900. ஓம் திருவருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

901. ஓம் ஸ்ரீகாந்த, ஸ்ரீகர என்று இனிது ஒலிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

902. ஓம் திருவுக்கு மகிழ்வூட்டும் வடிவுடையோன் மகிழத்தக்க பாட்டுக்களைச் செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

903. ஓம் ஸ்ரீஹரி கீர்த்தனம் செய்து உடல், ஐம்புலன்கள் இவற்றின் நினைவகன்று "அவனே நான்; நானே அவன்" எனும் உணர்விலேயே ஸமாதியிலாழ்ந்து விடும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

904. ஓம் ச்ருதி, லயம் இவற்றையே உருவாகக்கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

905. ஓம் ச்ருதியோடிணைந்து இன்பமூட்டும் இன்னொலி இசையெனும் புஷ்பத்தினால் அர்ச்சிக்கப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

906. ஓம் மேன்மை செய்யும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

907. ஓம் செவிக்கு உவகையூட்டும் வாக்கினிமை படைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

908. ஓம் தடுமாறி முயல்பவருக்குக் கைகொடுத்து முன்னேற்றிவிடும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

909. ஓம் தன்னைப்பற்றிக்கொண்ட, நாதோபாஸனையை விரதமாகக் கொண்டவருக்கு விருப்பின் நிறைவருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

910. ஓம் இத்துதியில் இருக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

911. ஓம் சலனமற்ற மனதில் தோன்றும் நாதப்ரஹ்மனான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

912. ஓம் காமம் முதலான அறுவகைப் பகைவரை ஒழிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

913. ஓம் ஸங்கீதமாகிய செல்வத்தை அடைவிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

914. ஓம் ஸங்கீத பரமாசார்யராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

915. ஓம் ஸங்கீதத்தின் உட்கருவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

916. ஓம் ஏழு இன்னிசை ஒலிகளின் முழுமையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

917. ஓம் ஏழு இன்னிசை ஒலிகளின் உட்புகுந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

918. ஓம் ஏழு இன்னிசை ஒலிகளில் சஞ்சரிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

919. ஓம் இன்னிசையின் அவதாரமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

920. ஓம் ஸங்கீத யோகத்தின் உச்சநிலையிலுள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

921. ஓம் ஸங்கீதஞானம், பக்தி இவற்றின் எல்லையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

922. ஓம் ஸத்ஸங்கம் எனப்படும் நற்றுணையான ஸத்கீர்த்தனங்கள் மிகப்-பல அருளிச்செய்துள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

923. ஓம் ஸத்கீர்த்தனங்களினால் நன்னெறி போதித்த மகரிஷியான ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

924. ஓம் உண்மை பக்த மனதில் நன்கு நிலைநாட்டப்பட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

925. ஓம் ஸங்கீதத்தை வழிபடும் இவ்வாத்மாவின் பக்தியின் மொத்த உருவின் பிரதிபிம்பமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

926. ஓம் இனிய பாட்டே மொழியாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

927. ஓம் ஸங்கீத ஞானத்தை (இசை அறிவை)ப் பிச்சையாக அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

928. ஓம் இசையறிவுக் கடலின் எல்லையை அடைவிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

929. ஓம் கைகுவித்து வணங்கும் பக்தையுள்ளுள் எப்பொழுதும் ஒளிரும் உண்மையாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

930. ஓம் தன்னையே முழுமையாகச் சரணடைந்தவருக்கு எல்லாமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

931. ஓம் உண்மை பக்தரின் வாழ்வின் உயிர்மூச்சான ஸத்குருவுக்கு நமஸ்-காரம்.

932. ஓம் (குருவின் பாதத்தில்) எல்லாவற்றையும் ஸமர்ப்பித்துப் பாதத்தை இறுகப்பற்றியவரைக் காக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

933. ஓம் பிறவிப் பிணியில் இன்னலுறும் ஆத்மாவுக்கு ஸ்ரீராமதாரக மந்த்ரத்தை மருந்தாக இடும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

934. ஓம் பிறவிப்பிணியெனும் கருமுகிலின் தங்க எல்லைக்கோடான ஸத்-குருவுக்கு நமஸ்காரம்.

935. ஓம் பிறவிப் பெருங்கடலில் முழுகுபவருக்குத் தோணியான ஸத்கு-ருவுக்கு நமஸ்காரம்.

936. ஓம் ஸப்தஸ்வரத்துடுப்புக்களால் ராமநாமமெனும் ஓடத்தின் மூலம் பிறவிக்கடலைக் கடக்க வைக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

937. ஓம் எல்லாவித . ஒலிகளும் நிறைந்த இசைக்கடலான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

938. ஓம் எல்லாவித செல்வமுமான ஸ்ரீராமனைப் பாடுதலே செல்வம் (தேடும் பொருள்) என ஒலித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

939. ஓம் எல்லா உலகினையும் காக்கும் ஸ்ரீராமனைத் தன் உளக்-

கோயிலில் நன்கு நிலைப் படுத்திய (யாரால் உளக்கோயிலில் எல்லா உலகையும் காக்கும் ஸ்ரீராமன் நிலைப்படுத்தப்பட்டானோ அந்த) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

940. ஓம் அனைத்துலகினையும் மகிழ்விக்கும் ஸ்ரீராமனை இனிதுபாடி மகிழ்விக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

941. ஓம் எல்லா மந்த்ர, தந்த்ர வடிவான ஸ்ரீராமனின் தாரக மந்த்ரப்ரியரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

942. ஓம் எல்லா வேதங்களின் ஸாரமான ஸ்ரீராமனை பற்றிய அறிவின் ஸாரமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

943. ஓம் உண்மை, நல்லொழுக்கம் இவற்றின் வடிவான ஸ்ரீராமனை பக்தி செய்தலின் உண்மை வடிவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

944. ஓம் உண்மையுடன் இணைந்த ஸ்ரீராமனிடம் இணைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

945. ஓம் தூயசித்தம் படைத்த ஸ்ரீராமனை அண்டிய சித்தத்தையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

946. ஓம் அனைத்துக்கும் ஸாரமான ஸ்ரீராம அனுபவத்தின் ஸாரமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

947. ஓம் அனைத்துக்கோள்கட்கும் ஆதாரமான ஸ்ரீராமனைப் பாடுதற்கு ஆதாரமாயுள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

948. ஓம் அனைத்துயிர்கட்கும் வாழ்வளிக்கும் ஸ்ரீராமனின் நாமத்தை விடாது ஸ்மரித்தலே வாழ்வாகக் கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

949. ஓம் அனைத்துக்கும் ஸாக்ஷியான ஸ்ரீராமனிடம் கொள்ளும் பக்தியினால் அடையக்கூடிய ப்ரஹ்மானந்தத்துக்கு (பேரின்பத்துக்கு) ஸாக்ஷியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

950. ஓம் அனைத்துலகோங்கிய ஸ்ரீராமனைப்பாடுவதில் உயர்ந்த ஹிமாலயமான குருநாதருக்கு நமஸ்காரம்.

951. ஓம் புனிதகங்கையைத் தோற்றுவித்த ஸ்ரீராமன் பேரில் கானகங்கையைத் தோற்றுவித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

952. ஓம் அனைத்துலகினைக் காக்கும் ஸ்ரீராமனின் திருவடியினைத் தழுவும் அளவற்ற ஆனந்தங்கொண்ட, ஸ்வர ஸமுத்ரத்தின் இனிது சிரித்துக் கும்மாளமிடும் அழகிய அலையான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

953. ஓம் இணையற்ற ஸ்ரீராமனின் குணங்களைப் பாடுவதில் இணையற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

954. ஓம் ஸப்தஸ்வரங்களில் நடமாடும் ஸ்ரீராமநாமத்தைப் பாடிக்கொண்டு நடமாடிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

955. ஓம் இசைப்பிரியனான ஸ்ரீராமனின் பண்புகளைப் பாடுதலில் பிரியமுள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

956. ஓம் நற்குணங்களின் மொத்த உருவான ஸ்ரீராமனை மகிழ்விக்கும் இன்னிசையொலியின் இருப்பிடமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

957. ஓம் இன்குணம் படைத்த ஸ்ரீராமனை வர்ணிக்கும் இன்நடைநயமிகு கவியாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

958. ஓம் கவிநயத்தில் மகிழ்வுறும் ஸ்ரீராமனைப் பாடுவதில் மகிழ்வுறும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

959. ஓம் தாமரைமுகத்தோனாகிய ஸ்ரீராமனைப் பாடுதலில் ஆனந்தபரவசத்திற்சிவந்த திருமுகத்தினை உடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

960. ஓம் தாமரைக்கண்ணனாகிய ஸ்ரீராமனின் கடைக்கண் பார்வையினால் ஆனந்தபாஷ்பம் நிறை கண்களுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

961. ஓம் ஸாமகானத்தினை விரும்பும் ஸ்ரீராம நாமத்தினை விரும்பும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

962. ஓம் ஸாமம் முதலான வேதங்களில் ஸஞ்சரிக்கும் ஸ்ரீராமனின் குணச்சிறப்புகளில் ஸஞ்சரிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

963. ஓம் ஸாகேதம் எனப்படும் அயோத்தியை இருப்பிடமாகக் கொண்ட ஸ்ரீராமனின் பக்தரான, ஸங்கீதத்துக்கு இருப்பிடமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

964. ஓம் தெளிந்த சான்றுகளினால் நிலைநாட்டப்பட்ட, பொருள் புலனின்பங்களில் பற்றற்ற, உண்மை பக்தியுடைய புனிதராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

965. ஓம் சான்றுடன் உணர்த்தப்பட்ட பேரின்பமயமாகிய ஸ்ரீராமனை நாள்தோறும் கண்டு, புகழ்ந்து பாடி மகிழ்ந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

966. ஓம் பரம்பொருளறிவுபெற்றோரின் அன்புக்குரிய ஸ்ரீராமனின் மங்கள சரிதத்தைப் பாடிப் புகழ்பெற்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

967. ஓம் ஸீதைமணாளனைப் பாடுவதில் இணையற்ற கவிவரராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

968. ஓம் ஸீதாராமனை இனிதே துதித்துப்பாடிய தலைசிறந்த முனிவராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

969. ஓம் ஸீதாராமனை ஸங்கீதோபாஸனை செய்வதிலேயே முழுதும் ஈடுபட்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

970. ஓம் மங்களமானதும் தூய்மைபடைத்ததுமான ஸ்ரீராமனின் தெய்வீக வடிவை தியானிப்பதில் ஈடுபட்ட தூய ஆத்மாவாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

971. ஓம் நற்குணங்களாம் மணிக்கருவூலமான ஸ்ரீராமனுக்கு அணிகளான இனிய கீர்த்தனைகளாம் தங்கக்கருவூலமான ஸத்குருநாதருக்கு நமஸ்காரம்.

972. ஓம் **மங்கள ஒளியே ஆன ஸ்ரீராமனைத் தனது ஸுஸ்வர கானமாகிய நீராஜனத்தினால் ஒளிவீசச்செய்த ஸங்கீத ஸத்குரு ஸ்ரீத்யாகராஜஸ்வாமிக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.**

973. ஓம் அழகு முகத்தோனாகிய ஸ்ரீராமனை ஸுஸ்வர கானத்தினால் துதித்த, ஒளிமிகு திருமுகமுடைய ஸத்குரு ஸ்ரீத்யாகராஜ ஸ்வாமிக்கு நமஸ்காரம்.

974. ஓம் பேரறிவாகிய ஸ்ரீராமனை இனிய கீர்த்தனங்களால் அனுபவித்து மகிழ்ந்த நல்லறிவு படைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

975. ஓம் இன்பத்துக்கு இருப்பிடமான ஸ்ரீராமனைப் பாடிய, இன்னிசையொலியின் இருப்பிடமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

976. ஓம் அமுதரஸம் நிரம்பிய ஸ்ரீராமன்மேல் இன்சுவை நிரம்பிய கான அமுதத்தினைப் பொழிந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

977. ஓம் அமுதே ஆன ராகத்தினைப் பெருக்கெடுத்தோடச்செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

978. ஓம் அமுதே ஆன இறைவன் நாமத்தின் இனிமையான, / அமுதினிய பெயருடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

979. ஓம் ஸுஸ்வரப் பெருக்காக ஓடும் நாமாமுதத்தினைப் பொழியும் முகிலான / ஸுஸ்வரப்பெருக்கிட்டுப் பாயும் நாமாமுத வெள்ளமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்

980. ஓம் அமுதைப் பொழியும் அழகிய கீர்த்தனைகள் எண்ணற்றவை செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

981. ஓம் அழகினிய ஒலி இன்பம் நறுமணம் பரப்புபவையும் அருட்கிளர்ச்சியினின்றுதித்தவையுமான புதியகானமலர்களால் ராமனை ஆராதித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

982. ஓம் தேவர்களின் வணக்கத்துக்குரிய ஸ்ரீராமனை ஸேவிப்பதில் ஈடுபட்ட, ஸுஸ்வரத்தின் இருப்பிடமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

983. ஓம் ஸூர்ய குலத்திற்சிறந்தோனாகிய ஸ்ரீராமனை வணங்கிய ஸுஸ்வர ஸூர்யனான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

984. ஓம் நுண்வடிவில் எங்கும் ஊடுருவிப் பரந்து விரிந்துள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

985. ஓம் நுண்ணிய நாத சக்தியின் வெளிப்படை உருவமான ஸத்கு-

ருவுக்கு நமஸ்காரம்.

986. ஓம் படைத்தல், காத்தல், அழித்தல், ஆகிய முத்தொழில் புரியும் பரம்பொருளின் துதிப்பாட்டுக்கூட்டங்களைப் படைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

987. ஓம் தேனினிய, மெல்லிழைவான குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

988. ஓம் ஸேதுவை அமைத்த ஸ்ரீராமனைத் தன் இனிய கானத்தினால் கட்டுறச்செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

989. ஓம் ஸேவிக்கப்படவேண்டிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

990. ஓம் ஸேவிப்பவரின் உள்ளத்தின் ஒரே இலக்கான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

991. ஓம் ஸேவிப்பவரின் துன்பத்துக்கு முடிவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

992. ஓம் ஸுஸ்வரோபாஸகரை இருப்பிடமாகக் கொண்ட - ஸுஸ்வரோபாஸகரின் உள் வஸிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

993. ஓம் ஏங்குபவருக்கு இசையெனும் அமுதினை ஊட்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

994. ஓம் ஏங்கும் சிஷ்யைக்கு இடைவிடா இன்னிசைப்பெருக்காம் நற்பேறருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

995. ஓம் ஸௌபாக்யபலனருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

996. ஓம் ஸௌமங்களப்ராப்தி ஆசியினை இசைக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

997. ஓம் சலனமற்ற மனமெனும் தடாகக்கரையில் த்யானிக்கப்படவேண்டிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

998. ஓம் அமைதியாகச் செல்லும் நாதநதியின் தோற்றுவாயான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

999. ஓம் மோன அமைதியினென்றெழும் நாதத்தின் முழுமையான சக்தியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்

1000. ஓம் துதித்துப் பாடவேண்டிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1001. ஓம் இத்துதி புஷ்பார்ச்சனையில் மகிழ்வுறும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1002. ஓம் ஆவலுடன் வேண்டப்படும் (குருவின்) தர்சனம், திருவடி ஸ்பர்சனம், திவ்யகான ச்ரவணம் (கேட்டல்) இவையாகிய பெரும்பேற்றினை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்:

1003. ஓம் ஸ்படிகம் போன்ற தெள்ளத்தெளிய ஒளியுடைய கான உருவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1004. ஓம் சுடர்விடும் நாதப்பேரொளியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1005. ஓம் ராமசந்திரன் புன்னகைக்கும் இனிய கீர்த்தனைக் கூட்டங்களை அருளிச்செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1006. ஓம் ராமனெனும் ஆனந்தம் மென்னகைக்கும் ஸுஸ்வர சந்திரனாகிய (ராமனெனும் இன்ப ஒளிதனைப் பரப்பும் இன்னிசை நிலவான) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1007. ஓம் இசையெனும் அமுதக் கிரணங்களைப் பொழியும் ராமானந்தம் எனும் நிறைமதியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1008. ஓம் (ஸுஸ்வரமெனும்) இன்னிசையெனும் இன்பச் சாற்றின் பெருக்கான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1009. ஓம் தூய, தெளிந்த இதயத்தில் நன்கு ஒளிரும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1010. ஓம் தானே ஒளிரும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1011. ஓம் மின்னிச்சுடர்விடும் தாரக நாமமெனும் பணிபூண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1012. ஓம் ஒளிரும் இவ்வாயிரம் நாமங்களெனும் மாலையில் அழகுற்று விளங்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1013. ஓம் ஸவரம், லயம் இவற்றின் உட்செறிவான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1014. ஓம் ஸ்வரலய வரமருளும் (ஸ்வரத்துடன் ஒன்றிடும் வரமருளும்/ ஸ்வரம், தாளம் எனும் வரமருளும்) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1015. ஓம் ஸ்வரசுத்தமான கானாஞ்ஜலியை உண்டு பண்ணும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1016. ஓம் இயல்பான இன்சுவையும் உணர்ச்சிச் செறிவும் ஆழ்ந்த, பற்பல ராகங்களிலமைந்த பாட்டுக்களின் மூலம் ஞானம் எழுச்சியுறச்செய்யும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1017. ஓம் மிகவும் இனிமையாகப்பாடும் தெய்வீகப்பாடகராகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1018. ஓம் இனிமைமிகு இசைஅமிழ்தின் வெள்ளமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1019. ஓம் தேன்பாய்ந்து எதிரொலிக்கும் இன்னிசை ஒலியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1020. ஓம் ஆசுகவியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1021. ஓம் குயிலை வென்ற இன்குரலுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1022. ஓம் தனதிதயத்தில் ஸஞ்சரிக்கும் ஸ்ரீராமனைத் தெளிவாகக்காட்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1023. ஓம் அசையும் பொருள், அசையாப்பொருள் இவை அனைத்திலும் இறைவனைக் காண்பிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1024. ஓம் ஊக்கமும் உயிரும் ஊட்டிடும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1025. ஓம் தனது பக்தையின் அன்பினால் மலர்ந்த இவ்வெண்ணமலர்களின் உள்ளுள்ள நறுமணமாகிய/இன்பமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம். /தன்னுடைய அனன்ய பக்தையின் அன்புடை மனமெனும் புஷ்பத்தில் மகிழ்வுடன் அமர்ந்திருக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1026. ஓம் தன்னையே உபாஸிக்கும் பக்தையை ஸ்வீகரித்துக்கொண்ட (ஏற்றுக்கொண்ட) ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1027. ஓம் ஸ்வர அமிழ்து நிறை தெய்வீகக் கலசமேந்திய ஸங்கீத தெய்வமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1028. ஓம் இன்னிசை ஒலியெனும் தங்கச்சுரங்கமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1029. ஓம் பரமாத்மாவின் மறைநிலை மெய்ம்மையை விளங்கக்காட்டும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1030. ஓம் புல்லரிக்கச் செய்யும் குருதேவருவுக்கு நமஸ்காரம்.

1031. ஓம் ஹரிக்கு அர்ப்பணமாக க்ருதிகள் செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1032. ஓம் ஹரிதாஸ சிரோமணியான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1033. ஓம் ஹரிநாம ஸங்கீர்த்தனப்ரியரான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1034. ஓம் ஹரிநாம ஸங்கீர்த்தனத்தின் ஆனந்தமே உருக்கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1035. ஓம் ஹரிநாமஸங்கீர்த்தனத்தை ஆனந்தத்துடன் வர்ணிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1036. ஓம் ஹரிபஜனையின் ஆனந்தம் பெருக்கெடுத்தோடும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1037. ஓம் குரங்குகளைப் பரிவாரமாகக் கொண்டோனைப் பாடிய, ஸுஸ்வரங்களைப் பரிவாரமாகக் கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1038. ஓம் ஹரிநாமஸ்மரணமே வாழ்வாகக் கொண்ட ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1039. ஓம் ஹரிஸமர்ப்பணமாகத் தன் வாழ்வினை நடத்திய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1040. ஓம் ஹரியின் பாதத்தாமரைகளைப் போற்றிய போற்றற்குரிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1041. ஓம் ஹரியின் திருவடிதனை இதயத்தில் தரித்த ஸத்குருவுக்கு

நமஸ்காரம்.

1042. ஓம் ஹரியுடனிணைந்த ஸங்கீதத்தைத் தன்னோடிணைத்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1043. ஓம் ஹரி, ஹரன் இவர்களின் ஒருமையைப் பாட்டுக்கள் மூலம் தெளியக் காண்பித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1044. ஓம் ஹரிநாம ஸங்கீர்த்தனம் நடக்கும் ஸந்நிதியில் இருக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1045. ஓம் ஹனுமான், லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன் இவர்களுடன் கூடிய ஸ்ரீஸீதாராம விக்ரஹத்தைப் பாடிப் பூஜை செய்த ஒப்பற்ற புண்ய சரிதத்தை உடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1046. ஓம் பொன்மயமான ஸீதாராமசந்திரன் (ஸீதாராமனாகிய சந்திரன்) உதயமாகும் ஸங்கீதத் தொடுவானமாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1047. ஓம் பரிவின் உருவாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1048. ஓம் மிகவும் நேசிக்கப்படும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1049. ஓம் நன்மை செய்கின்ற ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1050. ஓம் நன்மை பயக்கும் பாட்டுக்களை போதித்த ஆசார்யனான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1051. ஓம் நல்லுபதேசம் செய்யும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1052. ஓம் குளிர்ச்சி தரும் மருந்திடுதல் போன்று பாட்டுக்கள் பற்பல பொழிந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1053. ஓம் தண்மதிக் கதிர்கள் போன்ற தெய்வீக வாக்கினையுடைய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1054. ஓம் பொன்மலர் நறுமணம் (பெற்றது) போன்று இன்னிசை நறுமணம் பெற்ற ஆசுகவி பொழியும் சக்தியினை அருளும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1055. ஓம் ராம நாமமாகிய வைரங்கள் பளபளக்கும், இனியபாட்டுகளெனும் பொன்னணிகள் பூண்டு விளங்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1056. ஓம் ராமனிடம் பக்தி எனும் நெருப்பில் விஷயப் பற்றினை ஆஹுதியாக இட்ட/ விஷயப்பற்று ஆஹுதியாக இடப்பட்ட, ராமபக்தி எனும் நெருப்பே ஆன ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1057. ஓம் இதய வெம்மையைத் தணிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1058. ஓம் இதயத்தைத் தொடும் க்ருதிகளைச் செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1059. ஓம் உளங்கவரும் ஸ்ரீராமனை இனிய கானத்தினால் கவர்ந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1060. ஓம் இதயங்குளிரப் பேசும் ஸ்ரீராமனின் மெல்லினிய மொழிதனைப்

பருகி ஆனந்தித்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1061. ஓம் இதய ஆழத்தினின்றெழும் அன்பெனும் புஷ்பத்தினால் பூஜிக்கப்பட்ட குருவுக்கு நமஸ்காரம்.

1062. ஓம் உள்ளத்தை உவகை கொள்ளச் செய்யும் நாதகுருவுக்கு நமஸ்காரம்.

1063. ஓம் ராமனின் ஆனந்தத்தினால், மயிர்க்கூச்செறிந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1064. ஓம் களிப்பூட்டும் நாத "வஸுதாரா" நீர்வீழ்ச்சியான / நாதமாகிய செல்வத்தைப் பொழியும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1065. ஓம் உள்ளத்தின் அடி ஆழத்தினின்றெழுந்த, குழந்தையின் மழலையொத்த இத்துதியினை மிகுந்த மகிழ்ச்சியுடன் அங்கீகரிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1066. ஓம் காரணம், விளைவு இரண்டும் தானேயான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1067. ஓம் முழுமுதற்காரணமாகிய ஓங்கார நாதப்ரஹ்மனாகிய ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1068. ஓம் எழுத்துக்கள், இன்னிசை ஒலிகள் கொண்ட ஸஹஸ்ரநாம புஷ்பாஞ்ஜலி ஸமர்ப்பணத்துடன் ஸேவிக்கப்பட்ட ஸ்ரீஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1069. ஓம் மங்களம் தரும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1070. ஓம் த்யாகத்துடனிணைந்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1071. ஓம் கமகத்தினுள் உறையும் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1072. ஓம் ராகத்தின் மூலமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1073. ஓம் விழிப்புடனுள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1074. ஓம் பெயருக்குத் தக்கவாறுள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1075. ஓம் ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1076. ஓம் நற்குணங்களின் புகலிடமான ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1077. ஓம் இனிய அழகிய ராகங்களில் விருப்புள்ள ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1078. ஓம் வேத ஸாரமான க்ருதிகளைச் செய்த ஸத்குருவுக்கு நமஸ்காரம்.

1079. ஓம் வணங்குதற்குரிய குருவுக்கு நமஸ்காரம்.

1080. ஓம் மங்களமான ஸ்வர புஷ்பார்ச்சனை செய்யப்பட்ட ஸ்ரீத்யாகப்ரஹ்ம ஸத்குருஸ்வாமிக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

ஓம்.

மங்களம்.

ஸ்ரீராம ஜயம்:

ஸத்குரு ஸ்ரீத்யாகப்ரம்ம
சரணாகதி கத்யம்

ஓம்

ஓம் 1. ஸ்ரீராமநாமமாகிய இறக்கையினாலேயே தொடக்கூடிய குருசரணம் வெற்றியுடனிலங்குக!

2. ஹரிநாமங்களாகிய புஷ்பக்குவியல்களினால் பூஜிக்கப் பட்ட மங்களமான பாதம்;

3. தடங்கல்களைப் போக்கும் நற்றிருவடிகள்;

4. உடைந்த மனத்தினை திடப்படுத்தும்; பக்தையின் அன்பான இதயத்தை இருப்பிடமாகக் கொண்ட; தியானிக்கப்படவேண்டிய மங்கள சரணம்;

5. பக்தையின் செல்வமான புனித சரணம்;

6. பக்த பாபங்களை அழிக்கின்ற; எல்லா நோக்கங்களையும் நிறைவேறச் செய்யும்; ஸங்கீத ஞானத்தை அருளும் மெய்ப்பாதங்கள்;

7. சரணடைந்தவரை உய்விக்கும் புனிதப் பத இணை;

8. அன்புமிகு பக்த உயிர் மூச்சினின்று பிரியாத இறைவன் திருவடிகள்;

9. பக்தையின் ஒரே புகலிடமான, பூஜிக்கப்படவேண்டிய குருவின் தூய திருவடி;

10. பக்தையால் இறுகப்பற்றப்பட்ட மங்களமான திருவடித்தாமரை;

11. நாதத்தில் பற்றுடைய பக்தை வணங்கிடும் அழகிய திருவடித்தாமரை;

12. பேரின்பப்பதவியளிக்கும் ஸத்குரு திருவடி இணை - தம்மை நான் சரணமடைகிறேன்.

13. ஸ்ரீராம பக்த; ராமனை அர்ச்சித்த; ராமனை பஜித்த; மங்களம் செயும் திருவார்ந்த; மங்களமே ஆன; விடியற்காலையின் அழகே ஆன;

14. ஸ்ரீராமனாகும் பரம்பொருளை நன்கறிந்த; ராமனை இனிதே பாடிய ராமனின்பாடகரான; ராமதாரக நாமத்தினைத் துதித்த; தாரக நாமமே தன்னுருவாய்க் கொண்ட;

15. ஸ்ரீராமனின் நண்பரான; ராமனில் மகிழ்ந்த; ராமநாமத்தினால் கள்வெறியூட்டும்; ஸ்ரீராமனின் மங்கள சரிதத்தைப் புகழ்ந்த; ஸ்ரீராம

சந்திரனை இனிதேத்திய;

16. ஸ்ரீராமனின் ஒளிக்கதிர்; ஸ்ரீராமனுடையதான திருமேனி; முழுமைநலமருளும்; ராமனே ஆன; உயிர் வாழ்வூட்டும் ராமநாமத்தினை முழங்கும் தேனினிய குரல் (ராம மயமான வாழ்வுடைய; ராமநாமத்தினை முழங்கும் தேனினிய குரல்) படைத்த;

17. ஸ்ரீராமனின் இன்பமான; ராமன் மகிழ்ந்த (இசைத்தோட்டமான); ராமன் மகிழும் ராகாலாபனையில் மகிழும்; ராமநாமத்தின் இன்பமான / இருப்பிடமான - இன்பமே ஆன ராமநாமமான;

18. ஸ்ரீராமக்ருஷ்ண லீலைகளெனும் வலையில்/ ஸமூஹத்தில் சிக்குண்ட; இனிய கீர்த்தனைகளெனும் வலையில்/ ஸமூஹத்தில் ஸ்ரீராமனையும் க்ருஷ்ணனையும் சிக்க வைத்த;

19. நாராயண, ஹரி, ராம, க்ருஷ்ண, கோவிந்த எனும் நாமங்களைப் பாடி பஜனை செய்த;

20. ஹரிபக்தர்களைக் கூப்பிடும் பஜனோத்ஸவ ஆனந்தமான;

21. சூரனான ரகுராமனால் மிக்க மகிழப்பெற்ற, கடைத்தேற்றுகின்ற நூற்றுக்கணக்கான ராகங்களில் க்ருதி மணிமாலைகள் அமைத்த;

22. உலகெலாம் மகிழ்விப்போனை உவந்துபாடி உலகெலாம் மகிழ்விக்கின்ற;

23. பகவானின் பல திருநாமங்கள் நிரம்பிய, தெள்ளமைதி நிறைமனமுடைய பாகவத திலகமான;

24. மங்களம் தரும்;

25. பக்தியுடன் கூடிய ஸங்கீதத்தை போதித்த ஞானாசார்யதேவ!

26. திவ்ய நாமஸங்கீர்த்தனத்தில் விஞ்சிய;

27. ராகமும் தாளமும் அழகிய சொற்களும் இணைந்தாடும் கூத்தின் களிப்பான;

28. ரகூத்தமனைத் தேனினும் இனிமையாகப்பாடிய கானோத்தம!

29. ரகுவரன் நடமாடும், இன்னிசை ஒலிகள் பலவண்ணம் தீட்டப்பட்ட, இன்னிசை இன்பத்தினால் சூழப்பட்ட பல்லாயிரக்கணக்கான க்ருதிகளைப் படைத்த;

30. தலைசிறந்த யோகியான; இன்னிசையின் / அன்பின் இருப்பிடமான; நோய்தீர்க்கும்; ஆனந்தமயமான; மிகப்புனிதமான பெயருடைய; ரகுவரனைப் பாடிய (நோய்தீர்க்கும், ஆனந்தமயமான மிகப்புனிதமான பெயருடைய ரகுவரனைப்பாடிய);

31. ஹரியைப் பூஜித்த; குரலினால் ஹரியை வசப்படுத்திய / குரலினிமையில் குயிலை வென்ற; அறிவின் கதிரவனாகிய; புண்ணியமுடைய; கணபதியைத் தாழ்ந்து பணிந்திட்ட; முரளீதரனை வணங்கிய;

32. பொறுமை படைத்த; தளர்வற்ற; நுண்ணறிவுத்திறம் படைத்த; அமைதியாய் நிலைத்த மனம் படைத்த; மாறுதலற்ற; தளர்ச்சியற்ற தன்மையினை அருளும்; சிறந்த, கட்டுப்பாடுள்ள; தெய்வீக உள்ளுணர்வொளிபெற்ற; உள்ளொளியும் அருளுணர்வுமருளும்; நன்னட்பாகிய; ஐயமற்ற;

33. ஆசை, அறிவு மயக்கம் இவையற்ற; நிஜபக்தரைக் காத்தருளும்;

34. மூச்சினை வென்ற; அழிவற்ற; இன்னிசைக்குரலுடைய; உறுதி, ஊக்கம், இன்பம் இவற்றினை அருளும்; அறிவினைத் தூண்டி எழுப்பும்; பேரொளி படைத்த, அழகுறு ஸ்ரீராமனின் கடைத்தேற்றும் நாமத்தின் மூலம் மகிழ்வூட்டும் - நாமத்தில் மகிழும்;

35. அன்புக்குரிய; இணையற்ற; நின்னைப்போல் இன்னொருவர் இல்லாத; விவரிக்க இயலாத சிறப்புடைய; அழிவற்ற;

36. உயர்வான உள்ளுரம் படைத்த; உயர்குணம் படைத்த; பற்றற்ற; அமைதி குலையாத; எழுத்துக்களை வென்ற; வாக்குத்திறனில் விஞ்சும்;

37. அருமதிப்புள்ள; தவம் நிறைந்த; பூஜிக்கப்பட வேண்டிய; ஒளிரும் மதிபடைத்த ஞான குருவே!

38. பக்தையின் அநுராகத்தின் வடிவே!

39. பக்தையின் அந்தராத்மாவே!

40. கண்ணீர் கங்கையில் நீராடிய பக்த உள்ளார்ந்த அன்பெனும் பாட்டினாலேயே நீராட்டப்பட்ட; பக்திக்கண்ணீர் மலர்களால் அர்ச்சிக்கப்பட்ட; உணர்ச்சியின் அடைவு எனும் நைவேத்யம் ஸமர்ப்பிக்கப்பட்ட; ஏகாக்ர சித்தமே பூஜையாக அமையப்பெற்ற;

41. திவ்ய திருச்சன்னதியில் விடியுமுன் வீணை வாசிக்கப்பட்ட;

42. நின்னையே அடைந்திட்ட நினதிச் சிஷ்யைக்கு நிம்மதியினை அருளும் ஆசார்ய தேவ!

43. அன்பின் வெளிப்படை உருவான;

44. மங்களகரமான பார்வையினால் பக்தையைச் சூழும்; பாதாதிகேசம் பக்தையின் இவ்வன்பு மழலைப் பாட்டினால் சூழ்ப்பட்ட;

45. மிகச் சிறந்த அழகிய மென்குரலே அணியாகக் கொண்ட; சிஷ்யையின் இதயத்தாமரைக்கு அழகூட்டும், தேனான குரல் படைத்த;

46. ரகுநந்தனை மகிழ்விக்கும் தேன்குரல் படைத்த; இன்னிசைத் தேனுக்காக ஏங்கும் இதயத்தின் மனோரதமான தேனொழுகும் இன்குரல் படைத்த;

47. இனிய இசையினால் ராமனை அழகுபடுத்திய; சூர்ய குலத்தின் அணிகலனை (ஸ்ரீராமனை) அணிசெய்த அழகினிய குரல் படைத்த; ராம நாமமெனும் முத்து மாலையினால் அணிபூண்ட;

48. அமைதியை அணிகலனாகக் கொண்ட / அமைதிக்கு அழகூட்டும் ராமனை அணிசெய்யும் அமைதியான மனதுடைய; அமைதியான ஸுஸ்வர வித்யையை அணியாகப்பூண்ட / அணிசெய்யும்;

49. நற்குணங்களின் சுரங்கமான ஸ்ரீராமனுக்கு ஆடையாக அமையப்பெற்ற நல்வாக்கினைஉடைய, இன்குரலுருவான;

50. ராகத்தின் (பண்ணின், அன்பின்) உருவான ஸ்ரீராமனை ராகத்துடன் (பண்ணுடன், அன்புடன்) துதித்த, ராமபக்தியின் உருவான;

51. ஸ்ரீராமமந்த்ரமே ஆதாரச்ருதியாக, இனிய நாதமே திவ்யமான உருவாகக் கொண்ட;

52. ஸ்ரீராமமந்த்ரம் ஒளிரும் திருநாவுநுனியுடை;

53. ஸ்ரீராமமந்த்ர புஷ்பத்தினால் உபாஸிக்கப்பட்ட ஸுஸ்வர தேவ!

54. தேவதேவர்களால் அர்ச்சிக்கப்பட்ட ஸ்ரீராமனை இன்னிசையால் அர்ச்சித்த, இன்னிசைகானத்தில் மகிழ்ந்த தேவ!

55. வேதங்களின் கூட்டத்தில் உறையும் பரமனின் செவிக்கினிய புகழ்பாடிய க்ருதிக் கூட்டங்களைச் செய்த, ச்ருதி லயத்தில் ஒன்றிய, ஒளிமயமான திருவதனமுடைய;

56. பகலவனையும் தண்மதியினையும் கண்களாகக் கொண்டோனை (ஸ்ரீராமனை)ப்பாடும் ஆனந்தக் கண்ணீர் பொங்கும் கண்மலர்களுடைய;

57. முழுமதிமுகம் படைத்தோனின் (ஸ்ரீராமனின்) அழகு, இன்பம், குரலினிமையை இனிது பாடிய, இன்னிசைத்தண்மதிக்கதிரான;

58. மாசு நீக்கும்; இன்னிசைப் பெருக்கான; என்றும் நிலைத்திருக்கும் தன்மையின் வடிவான ஸ்ரீராமனின் தாரக மந்திரத்தின் நிலைத்த இருப்பிடமான / தாரக நாமத்தினை நிலைத்த இருப்பிடமாகக் கொண்ட; இன்னிசை ஆழியான;

59. புகழ்ச்சிப் ப்ரியனான மகாவிஷ்ணுவினைப் புகழ்ந்த - புண்ணியமும் புகழும் வாய்ந்த;

60. திறன்மிகு, மிகச் சிறந்த கவிமேதையான;

61. அழகிய ஸ்ரீராமனிடம் அன்பினால் இனிது ஒளிரும், அழகிய பண்ணும் இன்பமும் ஆகிய வெள்ளிக்கடலான;

62. மேகத்தின் காந்தியுடையோனை இன்னிசை ஜாலமெனும் ஆழியில் கொண்ட தெய்வீகமான; ஆழியின் கம்பீரம் கொண்டோனை கம்பீரமாகப்பாடும் இசை மேகமான; தாமரைபோல் சிவந்த (இறைவனின்) பாதங்களை அர்ச்சித்த இதயத்தாமரையுடைய;

63. சரணம் வேண்டும் இவ்விதயத் தடாகத்தின் தாமரையான; / சரணம் வேண்டும் இவ்விதயத் தடாகத்தில் பிரதிபலிக்கும் நிலவான;

64. மன்மதனைப் படைத்தோன் மேல் பாட்டுக்கள் படைத்த; பிறவிப் பெருங்கடலுக்குத் தோணியான; இயலுலகின் மூலமான இறைவனிடம் பக்திக்கு மூலமான; அன்பின் பிறப்பிடமான ஆண்டவன்பால் கொண்ட அன்பால் பாட்டுகளைப் பிறப்பித்த;

65. பரமசிவன் மனதால் தியானிப்போனை (ஸ்ரீராமனை) தியானிக்கின்ற; சிவனைப் புகழ்ந்து பாடிய; சிவனால் துதிக்கப்பட்டவனின் (ஸ்ரீராமனின்) துதிகள் செய்த; பிறவிபயம் எனும் அடர்ந்த மேகக்கூட்டங்களைச் சிதற அடிக்கும் புயற்காற்ருன; இயலுலகின் இறைவனைப் பல்வேறு வண்ணப் பாட்டுக்களால் துதித்த;

66. பாபமில்லாப் பரம்பொருளை உள்ள உணர்வுடன் அர்ச்சித்த; பத்மநாபனின் புனித நாமத்தின் ஒளி பெற்ற;

67. சூர்ய சந்திரர்களைக் கண்களாகக் கொண்ட ஹரியின் மேல் அன்புகொண்ட; கலியின் தீமைகளை ஒழிக்கும் ஹரியின் ஒளிக்கதிரான; ஹரியை வசப்படுத்தும் குயிலினிய குரல் படைத்த;

68. மங்களமான அழகிய திருக்கோலம் கொண்ட மாதவனின் தேனினிய நாமத்தை இனிதே முழங்கிய; கமலையின் துணைவனை அழகினிய இசைக்குரலில் அர்ச்சித்த;

69. அழகினிய இசைவடிவுடைய கவிக்கதிரவனான;

70. திருவுடைய அழகிய ராமனின் திருவார்ந்த நாமத்தைத் திருவுற்று இசைப்பதில் சிறப்புற்ற;

71. ஸ்ரீராமனைப் பணிந்த; ஸ்ரீராமனை அடைந்த; இன்பமான ராமநாமத்தைப் பாடுதலால் அடையக்கூடிய; இப்பக்தையால் அணுகப்பட்ட; ஆழ்ந்த பக்தி உணர்வு எனும் புஷ்பத்தினால் பூஜிக்கப்பட்ட;

72. புஷ்பக விமானமுடைய ஸ்ரீராமன் களித்திடும், ஒளிரும் ஏழு ஸ்வரங்களெனும் விமானமுடைய / ஏழுமாடி அரண்மனையையுடைய;

73. அமரர்களால் பூஜிக்கப்பட்டவனைப் பூஜித்த, அமரகானத்தில் சிறந்த; வேதங்களால் அறியப்படவேண்டிய பரம்பொருளை அறியச் செய்த; காந்தர்வ வேதம் எனப்படும் இசைக்கலையில் தலைசிறந்த; கௌஸலையின் புதல்வனைப்பாடிய;

74. கௌஸல்யாபுதல்வனின் தோழரான; கௌசிகர் எனப்படும் விச்வாமித்ரரின் நண்பனின் (ஸ்ரீராமனின்) நண்பரான; சூர்யகுலத்தலைவனின் (ஸ்ரீராமனின்) அன்பரான; தன்னை அடைந்தோரின் உற்ருனின் (ஸ்ரீராமனின்) உற்ருரான; ஸ்ரீராமசந்திரனைத் துணையாகப் பெற்ற;

75. தாமரையின் நண்பனின் (ஆதவனின்) குலத்துதித்தோனுக்கு (ஸ்ரீராமனுக்கு) மிகவும் நெருங்கிய; வாயுபுத்ரனின் உற்ருேனுக்குற்ற; குரங்குகளைப் பணியாளராகப் பெற்ருேனை (ஸ்ரீராமனை)ப் போற்றிய வாக்கின் ஈசராகிய;

76. தீய சக்திகளுக்கு எதிரியான ஸ்ரீராமனை ஆராதித்த ஸ்வரக்கூட்டங்களுடைய; அழகுமுகம் படைத்த ஸ்ரீராமனின் நற்குணச் சேர்க்கையை விரித்துரைத்த; நற்குணம் நிறைந்த ஸ்ரீராமனைப் பாடுவதில் ஈடுபட்ட நல்லறிவு நிரம்பிய;

77. இடைவிடா, இனிய ராமநாம கானத்தினால் ஸ்ரீராமனை மகிழ்வுறச் செய்த; நீடமைதியும் வீட்டுப்பேறும் நல்கும் ஸ்ரீராமனைப் பாடித்துதித்த;

78. அமரர் கோமானால் துதிக்கப்பட்டோனைத் துதித்த இசைக்கோமானாகிய;

79. ஆகமங்களில் ஸஞ்சரிப்பவனின் இன்குணங்களில் ஸஞ்சரிக்கின்ற; கருணையின் சுரங்கமான ஸ்ரீராமனைப் புகழும் பாடல்களின் சுரங்கமான;

80. ஆதவன் குலத்துச்சிறந்தோனின் (ஸ்ரீராமனின்) கானத்திற்சிறந்த; ரகுராமன் மகிழும் அழகினிய ராம நாமத்தைப் பாடுதலின் எல்லையான;

81. சூர்யகுல அரசனைத் துதிப்பதில் அரசராகிய; தீரனாகிய ரகுவீரனைத் துதித்த; மென்மையும் வலிமையும் ஒருங்கிணைந்த சிறந்த இன்னிசைக் குரலுடைய;

82. திருமகளின் நற்பேறான ஸ்ரீமன் நாராயணன் கோவில்கொள்ளும் பேறுபெற்ற நல்லிதயமுடைய;

83. மக்களைத்தாங்கும் ஸ்ரீராமனை அமுதச் சாற்றின் வீழ்ச்சியென இடைவிடாத ராகப் பொழிவில் தாங்கிய; பூமியைத் தாங்கும் மலையைத் தாங்கியவனைத் தாங்கும் இன்னிசை வீழ்ச்சியான;

84. கூற்றுவனால் போற்றப்பட்டோனைப் போற்றிய; தீவினைக்குக் கூற்றுவனாகிய; இறைவன் திருநாமத்தைப் பாடுதலாகிய மலர்மணம் விண்ணினை எட்டிய;

85. சிறந்த லீலையாக மனித உருக்கொண்ட பரமாத்மாவின் பூஜையாக அமைந்த சிறந்த இன்னிசை இன்பமே ஆன;

86. மேன்மையான இன்பமான ஸ்ரீராமசந்திரன் முன்னிலையில் இன்குரலிற்பாடிய;

87. தம்பூராவுடன் கூடிய ஸுஸ்வர கானத்தினால் தும்புருவால் துதிக்கப்பட்டோனை இனிதே துதித்த;

88. மலர்க்கணைகளைத் தொடுக்கும் மன்மதனின் தந்தையான ஸ்ரீமந் நாராயணனை இன்குரலிற் பாடிய; இன்பமளிக்கும் ரகுநாயகனிடம் பக்தியினால் இன்புற்ற பாடகராகிய;

89. வில்லினால் அழகு சேர்க்கப்பட்ட அழகனை (ஸ்ரீராமனை) அலங்கரிக்கும் அழகிய வானவில்லான ஸப்தஸ்வரங்கள் கொண்ட; யாகத்தைக் காத்தவனை (ஸ்ரீராமனை) இன்குரலிற்பாடிய;

90. வாயுபுத்ரனான ஹனுமான் இறுகப் பற்றிய அழகிய பாதத்தாமரைகளை எப்பொழுதும் துதித்த; தாமரைத் திருமுகமுடையோனை இனிது பாடிய;

91. ஆயிரக்கணக்கான அழியாப்பாடல்களினால் அச்யுதனைத் துதித்த; இசைப்பிரியரான; இசையன்பனாகிய ஸ்ரீக்ருஷ்ணனுக்குகந்த வகையில் பாடிய; பாட்டுகளின் எளிமை, இனிமை, பொருட்செறிவு, அழகு, இயல்பு இவற்றில் இணையற்ற;

92. வஞ்சகமான பொம்மலாட்டத்தில் உயிர்களை ஆட்டுவிக்கும் கயிற்றினைப் பிடித்துள்ள ஸ்ரீக்ருஷ்ணனின் லீலா நாடகங்களைப் பாடும், கணக்கற்ற பாட்டுக்குவியல்களைச் செய்த;

93. விச்வரூபங்கொண்ட ஸ்ரீக்ருஷ்ணனின் அழகிய உருவத்தை இசைவானில் அன்புத் தூரிகையால் வண்ணம் தீட்டிய;

94. இச்சிஷ்யையின் பக்தியுடை சித்தவானில் அன்புத்தூரிகையால் வண்ணம் தீட்டப்பட்ட ராகத்தின் உருவே!

95. மாதவனின் தேனினிய நாம, குணக்கூட்டங்களை மேகத்தை ஒத்த குரலில் பாடிய, தேனினிய குரல் படைத்த, நாமமெனும் தேனை சேகரிக்கும்;

96. திருமகள்துணைவனின் குரலினிமையை ஒலித்த, இனிமையே ஆன குரலுடைய;

97. திருமகள் அன்பனின் நாமங்களைப் பாடுதலில் விருப்பங்கொண்ட;

98. திருமகள் திருமுகத்தாமரையினை மலர்விக்கும் பகலவனாம் நாராயணனை நாள்தோறும் பாடுதலில் இன்பங்கொண்ட / பாடிமகிழ்விக்கும், இன்னொலியாம் தாமரையை மலரச் செய்யும் பகலவனாகிய;

99. திருமகளை மகிழ்விப்போனை மகிழ்விக்கும்படி அழகிய திருநாமங்களை இனிது பாடும் தலைசிறந்த பாடகராகிய;

100. ஆழியுள் மறைந்தோனுள் மறைந்த இன்னிசை ஆழியான; அமுதச் சாறுன / ஸாரத்துள் ஸாரமான ராமநாமத்தின் ஒலி இன்பத்தின் ஸாரமான;

101. தொடர்ந்து நாமாவளிகளைப் பொழியும் கானமேகமான; அமுதச் சாறுன, கணீரென ஒலிக்கும் நாதத்தினைப் பொழியும்; எல்லோரையும் தன்வயப் படுத்துகின்ற, ஸ்ரீராமனின் நாமத்தினைப் பொழியும் அமுதமுகிலான;

102. நாம அம்ருதம் பெருக்கெடுத்தோடும் தெய்வீக இசைகங்கையான;

103. இசையெனும் அமுதக்கடலே ஆன;

104. பக்த அன்பெனும் கடலுக்கு நிறைமதியான;

105. இசையின் உறவினரான/இசையினையே உறவாகக் கொண்ட;

106. தெய்வீகமான இசைக்கலையை அருளும்; இன்குரல் அருளும்; வரத-ராஜரின் துதி பாடியுள்ள ஸ்வரராஜாவான;

107. நாகாசலம் எனப்படும் திருவேங்கடத்துறைவோனின் நாமத்தின் இருப்பிடமான; நாம அம்ருதத்தைப் பருகிடும்; அம்ருதமே ஆன கானமாம் பேரின்பத்தின் இருப்பிடமான;

108. தாமோதரனை மகிழ்விக்கும் இன்பமான, நாமகானத்தின் ராகத்தின் இன்பமான / பக்தியின் நறுமணமான;

109. மதுஸூதனனுக்குப் பிரியமான நாமத் தேனினைப் பெருக்குறச்செய்யும்;

110. ஸீதையெனும் பெண்மணியின் அழகிய இதயத்தை இருப்பிடமாகக் கொண்டோனின் இருப்பிடமாகும் அழகிய இதயத்தைக் கொண்ட; அழகான நாமகான இனிமையால் ராமனை மகிழ்வித்த [ராமன் மகிழ்விக்கப்பட்ட அழகான நாமகானத்தினை இனிது இசைத்த];

111. பேரின்பம் தரும் ஸ்ரீராமநாமத்தின் மர்மத்தினை உணர்ந்த; ஸ்ரீராம-னின் கடைத்தேற்றும் நாமத்தின் பெருமையினை இனிது இசைத்த;

112. நாமந்தனை இனிமையாக இசைத்து இயற்கைக்கப்பாற்பட்ட, ஒளிமி-கும் வடிவழகுடை ஸ்ரீராமனை அர்ச்சித்த; ராமமயமான, களங்கமற்ற உள்ளத்தினை உடைய;

113. பெயரும் உருவுமற்ற தெய்வத்தின் பெயர், உருவத்தின் மகிமையை தெய்வீகமாகப் பாடி இன்புற்ற;

114. குணங்களற்ற (குணங்களுக்கப்பாற்பட்ட) ஸ்ரீராமனின் எண்ணற்ற குணக்கூட்டங்களை எடுத்துரைப்பதில் ஒப்பற்ற; வேதத்தின் உட்பொ-ருளாம் ஸ்ரீராமனை அமிழ்தினை விஞ்சிய கானத்தில் இசைப்பதில் உவமையற்ற;

115. குணங்களற்ற பிரஹ்மத்தினை அறிந்த;

116. நிர்குணப்ரம்மன்!

117. நாதப்ரஹ்மன்!

118. பக்தையின் அன்பின் இசை உருவே!

119. பக்தை மிகவும் ஏங்கி விரும்பும் நாத இன்ப வடிவே!

120. இவ்வுண்மைவாக்கின் உண்மையே ஆன உண்மைப்பொருளான; உண்-மையின் உருவான ஸ்ரீராமன்மேல் பற்றுகொண்ட இசையின் உருவான;

121. ஸங்கீத சாஸ்திரத்தில் தலைசிறந்த (நன்கு நீராடிய); நாமகீர்த்தன-மெனும் ஆற்றில் நீந்துவதில் தனித்திறம் படைத்த; விரைந்தோடும் நாமானந்தமெனும் ஆறுன; நாமகானமெனும் அமுதக்கடலான; நாமத்-தினை ஒலிக்கும் ஞானமேகமான; ராம, க்ருஷ்ண எனப்பாடிப்புகழும்;

122. நாமாமுதம் பெருகி ஓடச்செய்யும் நாததேவ!

123. ஸ்ரீராமனிடம் அனுராகம் (அன்பு கலந்த பக்தி) எனும் உயர்ந்த மலையின் உச்சியான;

124. நாமமலரின் அடர்ந்த நறுமணமாகிய;

125. இன்னிசையொலியெனும் மலர்நறுமணம் பெற்ற நாதாரண்யமான; இன்னிசையொலி இன்பம் கூவும் குயிலான; ஸுஸ்வரமாம் கதம்ப மலர்களின் நறுமணம் கமழும் தென்றலான;

126. ஸுஸ்வரமாம் அமுதரஸம் நிரம்பிய; ஸுஸ்வர அமுதின் இனிமை-யான; ஸுஸ்வரக்கூட்டங்களால் சூழப்பட்ட; ஸுஸ்வரத்தின் உடலான; ஸுஸ்வரத்தின் இயல்பான; இதயத்தைக் கொள்ளை கொள்ளும் இன்குரல் படைத்த;

127. ஸுஸ்வரத்தில் திளைத்து மகிழும்; ஸுஸ்வரத்தில் மகிழும் இவ்விதயத்தில் மகிழும்;

128. ஸுஸ்வர அரசரான; ஸுஸ்வர அவை படைத்த; ஸுஸ்வரத்தை இருப்பிடமாகக் கொண்ட / ஸுஸ்வரத்தின் இருப்பிடமான; தேனைப் பழிக்கும் தேன்குரல் படைத்த;

129. வெண்ணிற அரவரசனைப் படுக்கையாகக் கொண்டோனை இன்னொலியால் வழிபட்ட, இன்னிசை இன்பத்தையே படுக்கையாகக்கொண்ட, இன்னிசை யோகேந்த்ர!

130. ஸுஸ்வர கானத்தினால் அடையக்கூடிய; அமுதமய மொழியுடைய; இனிய நாதத்தினை அருளும்; இசை இன்பந்தரும் ச்ருதிக் கூட்டங்கள் செய்த; இன்னிசையில் மகிழும்;

131. அழகொளியூட்டும், அழகொளி மயமான ஸப்தஸ்வரதேவதைகளைக் காணச்செய்யும்;

132. வன்னொலியினிடமிருந்து காக்கும் இன்னொலிக் கவசமாகிய ஆசார்ய!

133. அழகிற்சிறந்த ஸப்தஸ்வரங்களின் இன்னொலியில் மறைந்துள்ள ஆழ்அமைதியான ஓங்காரமான;

134. வேறொரு எண்ணமுமில்லாமல் ஒரே நினைவுடன் பக்தையினால் அல்லும் பகலும் த்யானிக்கப்படுகின்ற; தன்னையே பஜிக்கும் பக்தையிடம் பரிவு நிரம்பிய; தன்னிடம் ஒன்றிய, தன்னையே தொடரும் இப்பக்தையின் அன்புடைகுருவான;

135. பக்தையின் உள்ளவானாகிய; உள்ளவானில் உதிக்கும் ஆதவனாகிய; மனச்சோர்வினைப் போக்குகின்ற; சினமெனும் நெருப்பினை அணைக்கும் நீராகிய; கானமெனும் அமுதக் கடலான; தெய்வீக ஞானப்பழத்தை அருளும் தருவான;

136. பக்தையின் கஷ்டங்களாகிய முகிலுக்குக் காற்றான; கதிரவன் குலத்துதித்தோனின் (ஸ்ரீராமனின்) பக்தரான; பக்தைக்கு உள்ளிழுக்கும் மூச்சுக்காற்றேஆன; பக்தையின் இதயக்கடலினைப் பொங்கச் செய்-

யும் நிலவான;

137. பண்ணினால் வண்ணமூட்டப்பட்ட பக்தியுடை எண்ணமலர்களின் நறுமணம் கமழும் மனமெனும் கொடிவீட்டினில் மதமுடை வண்டி-னம் முரலும் இன்னொலிகலந்த குயிலிசையின் இன்னோசையாம் நாமகீர்த்தனத்தின் இசைக்கூத்தினில் வசித்திடும் குருவர!

138. நாதப்பூங்கொடியில் இன்பக்குயில்களும் தேன் வண்டுகளும் ராம, க்ருஷ்ண நாமங்களை இனிதொலிக்க, நாமப்பூக்களை வாரி இறைக்க, அன்புத் தேன்சொட்டும் ராகப் பூங்கொத்துக்கள் நிறைந்த பக்தியெ-னும் கொடிப்பந்தலான!

139. பக்தியுடை உள்ளத்தை ராகக்கொடிப்பந்தலாகவே ஆக்குகின்ற; இவ்-வெண்ண மலர்களுக்கு இன்பநிறைமதியான;

140. பக்தையின் அன்புடை இதயத்தடாகத்தினை ஒளிரச்செய்யும் வெள்-ளிக்கதிர்ப்பண்மதியான;

141. சிஷ்யையின் பக்திமிகு இதயத்தடாகத்தில் பண்ணெனும் அல்லியினை மலரச்செய்யும் வெள்ளிக்கதிர்களுடை தண்மதியான;

142. உலகின் ஆரவார அமளியினின்று தப்புவதற்குப் புகலிடமான மோன அமைதி கொண்ட கானமலையின் முழைஞ்சாகிய;

143. ஹிமாலயத்தில் (பனிக்கோவில் எனப்படும் இமயமலையில்) உறைந்த பனித்தடாகக் கரையில், இனிய ராகாலாபனை செய்து பனியை உருக்கிடும்; விடாது பிடித்துக்கொண்ட இப்பக்த மனதுள் ஒன்றி உறைந்த;

144. சிக்கெனப் பிடித்த இப்பக்த இதயத்தில் நாதத்திற்கான ஏக்கம் கொழுந்துவிட்டெரியும் அனற்பிழம்பினால் உருகும் இதயங்கொண்ட நாதகுரோ!

145. ப்ரஹ்ம முஹூர்த்தத்தில் எழுப்பித் தன்முன் பாட வைத்துக் கான முயற்சிப் பயனுகர்வருளும் நாதாசார்ய!

146. கலையில் திறனருளும்; ஆனந்த அலைகளை எழுப்பும்; ப்ரார்த்திக்கும் பக்தைக்கு ஆத்ம தர்சனமருளும்;

147. மனோவாக்குக்கெட்டாத ஆத்மானந்தமருளும், அழகினிமையாய்ப் பாடும், இன்முகத்துடன் புன்னகைக்கும், ஒரே பரம்பொருளான;

148. நாத இன்பக்கடலான/நாத இன்பப் பொக்கிஷமான;

149. நாதத்திற்குப் பேராவல் கொண்ட பக்தமனக் கடலைப் பொங்கச் செய்யும் அமுதக்கிரணங்கள் கொண்ட நாதத்தண்மதியான - மனக்-கடலை நாதமாம் அமுதம் நிரம்பச் செய்யும்; விண்ணைத்தொடும் நாதப்பேரொளியான; வானளாவிய நாதச்சிறப்புடைய;

150. நாதவெளியான; நாதவானில் சுடர்விடும் மணியான (நாதவானில் ஆதவனான); நாத ஒளிக்கற்றையை வடித்துப் பரப்பும்;

151. நாதசக்தி அருளும்; நாதத்துடன் ஒன்றுபடச்செய்யும்;

152. நாதத்தை இருப்பிடமாகக் கொண்ட; நாதத்தின் பெருமையினை ஒலிக்கும்; நாதக் கடவுளான; நாதத்தின் அடிப்படையான; நாதத்தின் இருப்பிடமான;

153. ப்ரணவ நாதத்தின் உருவே!

154. நாதப்ரஹ்மானந்த!

155. நாத வடிவில் ப்ரஹ்மஞானமருளும்;

156. நாதத்தையே கருத்தூன்றி விரும்பும் இப்பக்தையின் சித்தத்துள்ளுள்ள நாத ஒளியான; எல்லையில்லா நாத ஒளிவட்டமான;

157. ஒளிமயமான, முழுமையான நாதவடிவே!

158. இத்துதிமண்டலத்தை வந்தடைந்த / இத்துதிமண்டலத்தில் மகிழும்;

159. அருட்கிளர்ச்சியின் மூலமான சலனமற்ற உள்ளத்தின் நீடமைதியாகிய;

160. உட்கிளர்ந்து மலர்ந்த உள்ளஉணர்வெனும் புஷ்பத்தால் ஸேவிக்கப்பட்ட நாதகுரோ!

161. எந்த ஒருதுதியும் நிந்தனுக்கு மிகையாகாது!

162. உச்சரித்ததுமே புல்லரிக்கச் செய்திடும் திவ்யத் திருநாமமுடையோய்!

163. ஸத்குருஸ்வாமின்!

164. ப்ராணாத்மன் (என் உயிரும் ஆத்மாவும் ஆகிய குருவே)!

165. எனக்கு நின் தர்சனம் தந்தருள்க!

166. மங்களமான எண்ணமலர்களெனும் மானஸ புஷ்பார்ப்பணம் செய்யப்பட்ட மலரடி இணைபடைத்தோய்!

167. நிந்தன் திருவடிதனை சரணமடைகிறேன்!

168. தெரியாமல் செய்யப்பட்ட என் பிழைகளைப் பொறுத்தருள்க!

169. எனது ஸஞ்சித கர்மத்தினைச் சாம்பலாக்குக!

170. என்னை நின்னுடன் ஒன்றுபடச்செய்க!

(ஸத்குரு திருவாய் மலர்ந்தருளல்)

அப்படியே ஆகட்டும்!

உனக்கு மங்களம்!

ஓம்.

ஸ்ரீராமஜயம்

ஸத்குரு ஸ்ரீத்யாகப்ரம்ம மங்களாஷ்டகம்

ஓம்

நாதப்ரம்மாவதாரத்துக்கு, தனது இன்பமாகிய ராமனைப் பாடியவருக்கு, ராகம், ஸ்வரம், லயம் இவற்றினை அடைவிப்பவருக்கு (ராகம், ஸ்வரம் இவற்றினில் ஒன்றுதலை - ராகம், ஸ்வரம் எனும் பேரின்பநிலையினில் ஒன்றுதலை அருள்பவருக்கு), த்யாகராஜருக்கு மங்களம்.

ஸங்கீத யோகத்தில் தலைசிறந்தவருக்கு, நற்கீர்த்தனைகளினால் நற்புகழ் படைத்தவருக்கு, ஸங்கீத குருதேவருக்கு, த்யாகராஜருக்கு மங்களம்.

பகைவருக்கு அச்சமூட்டும் பகவானைப் பாடியவருக்கு, இன்னிசைப் பெருக்குக்கு முதன்மையானவருக்கு, ருத்ரனின் உயர்ந்த ஈசனை (ஸ்ரீராமனை)த் துதித்துப் பாடியவருக்கு, த்யாகராஜருக்கு மங்களம்.

கங்கையின் புனிதமூட்டும் கானமிசைத்தவருக்கு, அத்புதமான பாட்டுக்களை இசைத்த காந்தர்வருக்கு, கீதமண்டலத்தின் ஒளியுடையவருக்கு, குருநாதருக்கு மங்களம்.

மங்களமான, மங்களம் உண்டாக்கும் வாக்ப்ரவாஹம் பொழிந்தவருக்கு, இனிமையே ஆன மொழியுடையவருக்கு, மௌனத்தின் மூலம் உபதேசம் செய்யும் குருவுக்கு, த்யாகராஜருக்கு மங்களம்.

பஞ்சநதமெனும் புண்யத்தலத்துதித்த ஒளிச்சுடர் ஸூர்யனானவருக்கு, ஒப்புயர்வற்ற இறைவனாம் ஹரியைப் பக்கத்தில் கொண்டவருக்கு, முழுமை நிலையினை உணர்த்தும், பூஜைக்குரியவருக்கு, த்யாகராஜருக்கு மங்களம்.

நற்பேறருளும் ஸ்ரீராமனிடம் அன்பு கொண்டவருக்கு, உயர்நிலை, ஒளியாகிய ஸ்ரீராமனை அன்புப் பண்ணினால் (வண்ணம் தீட்டி) மகிழ்வூட்டியவருக்கு, ஸ்ரீராமனை த்யானித்த, தெய்வீகமானவருக்கு, த்யாகராஜருக்கு மங்களம்.

நிஷாதமன்னனின் நண்பனின் நண்பருக்கு (குஹனின் நண்பனாகிய ஸ்ரீராமனின் நண்பருக்கு), ஒருமைப்பாட்டினை அருள்பவருக்கு, ஸங்கீதமெனும் புஷ்பப்பொழிவினால் பூஜிக்கப்பட்டவருக்கு, த்யாகராஜருக்கு மங்களம்.

ஓம்.

மங்களம்.

ஸ்ரீராமஜயம்

குருவந்தனம்

ஸ்ரீத்யாகராஜருக்கு நமஸ்காரங்கள்; மெய்யறிவு ஒளிக்கு நமஸ்காரங்கள்; ஸ்ரீராமபக்தருக்கு நமஸ்காரங்கள்; ஆசார்யருக்கு அனேக நமஸ்காரங்கள். 1

நாதாவதாரமானவருக்கு, பூஜிக்கப்படவேண்டியவருக்கு; நாதோபாஸன வழிகாட்டுபவருக்கு; பரப்ரம்மமனை ஸ்ரீராமனை நாதத்தால் அர்ச்சித்தவருக்கு அனேக நமஸ்காரங்கள். 2

தாரகநல்மந்த்ரத்தை நூறுகோடி ஜபித்த நற்கீர்த்தி உடையவருக்கு; ஸ்ரீராமபத்ரனின் தாரகத்திருநாமத்தின் இன்பமே வடிவானவருக்கு; 3

யாகத்தைக்காக்கும் ஸ்ரீராமனின் தர்ஶனத்தில் பரவஶப் பேரின்ப வடிவானவருக்கு; கங்காப்ரவாஹமான வாக்குப்பொழிவினுல் ஸ்ரீராமமூர்த்தியை அபிஷேகித்தவருக்கு; 4

பண்ணிசை அருவியான இனிய நற்கீர்த்தன இன்பத்தில் உருகும் குரலுடையவருக்கு; செய்யுளணிகள் ஒளிரும் கம்பீர நடையில் பாடியவருக்கு; 5

பல்லாயிரகணக்கான நற்கீர்தனங்களால் ஸ்ரீராமனும் பேரொளியைப் பாடியவருக்கு; இனிய திவ்யநாமஸங்கீர்த்தனங்களில் பளிச்சிடும் லயத்துடன் ஆடியவருக்கு; 6

ராகம், தாளம் ஒய்வமைதி நடமிடும் க்ருதிகளை வெள்ளமாய்ப் பெருக்கியவருக்கு; ராமபக்தியெனும் அமுதவெள்ளத்தில் திளைத்த ஸ்வானுபவத்தில் ஒளிர்பவருக்கு; 7

பண், இறையன்பு, மெய்யறிவு இவற்றைச் சுருங்க விளக்கும் க்ருதிகளைக் கற்பித்தவருக்கு; திருநாமங்களைப் பாடுதலில் பேரரசரானவருக்கு; ஸத்பக்திரஸமாய் பாடியவருக்கு; 8

நாதயோகத்தில் நன்கு ஒன்றியவருக்கு; த்யானயோகத்தில் ஸமாதியில் ஆழ்ந்தவருக்கு; பக்தியோகத்தில் மிகச்சிறந்தவருக்கு; ஞானயோகத்தின் முழுமையானவருக்கு; 9

வேதோபநிஷத்பொழிவான க்ருதிகங்கை வெள்ளமானவருக்கு; வேதவேதாந்த மெய்ப்பொருளினை போதிக்கும் ஸத்குருவுக்கு நமஸ்காரங்கள். 10

தேனினிது இசைத்தவருக்கு; இந்நாமமலர்களால் அர்சிக்கப்பட்டவருக்கு; இம்மலர்மாலையின் நல்வண்ணமானவருக்கு / புஷ்பாவளியின் இன்னிசையானவருக்கு; த்யாகராஜருக்கு மங்களம். 11

ஓம்

மங்களம்

ஸ்ரீராமஜயம்

குருஸ்துதிப்ரமாணிகா

இனிய நாதத்தினுல் ராமனைப் பூஜித்தவரை; இனிய பாட்டுக்களினுல் எல்லோரையும் மகிழ்வித்தவரை; பக்தியுடன் இனிய பண்ணிசையால் வணங்கப்பட்டவரை; இவ்வினிய பாட்டினுல் அடையப்பட்டவரை; குருவை; 1

இனிது ராமநாமத்தினைப் பாடியவரை; திருநாமங்களைப் பாடுதலில் தலைசிறந்தவரை; யோகஸமாதியில் நிலைத்துள்ளவரை; தன்னில் ஒன்றிய திருநாம இன்பத்தினை எப்போதும் உடையவரை; 2

கங்கையேயென இனிய பாட்டுக்கள் பொழிந்தவரை; தாரகநாமத்தினை இனிது பாடியவரை; மிக இனிய இசைக்குரல் படைத்தவரை; ஶ்ருதியோடிணைந்த பாட்டின்பம் கொண்டவரை; 3

லய அமைதிகொண்ட கீர்த்தனங்கள் செய்தவரை; ராகத்தின் ஸாரமாய் அமிழ்தினைப் பொழிந்தவரை; நல்லினிய தாரகநாமத்தை நன்கு ஜபித்தவரை; ஸ்ரீராமனின் தோற்றத்தை நேரில் கண்டவரை; 4

இனிய நாதமே ஒளிமிகு வடிவானவரை; நாதமெய்யின்பத்தைத் தன்னுள் கொண்டவரை; ஸ்ரீராமனின் மகிழ்வில் எப்பொழுதும் லயித்திருப்பவரை; எப்பொழுதும் இறைமையை உணர்ந்தவரை; 5

தாமரைக்கரத்தில் ஜல்லகம் கொண்டவரை; (தாளத்திற்கேற்ப) நடமிடும் திருவடித்தாமரைகள் கொண்டவரை; ஶ்ருதிலயத்தைத் தன்னியல்பாகக் கொண்டவரை; உணர்ச்சியுள்ள கீர்த்தனங்களை நன்கு பாடியவரை; 6

மெய்ப்பொருள் தத்துவத்தைத் தெளிவுறுத்துபவரை; அகந்தையை அழிப்பவரை; உள்ளொன்றிடச்செய்பவரை; இவ்வுள்ளத்தில் ஒன்றிய ஸத்குருவை; இவ்வுருகிய உள்ளத்தால் அர்ச்சிக்கப்பட்டவரை; 7

இவ்வுள்ளத்தில் காட்சியளிக்கும் தெய்வத்தை; இவ்வுள்ளத்தில் தெளிவுறு வடிவானவரை; இவ்வுள்ளத்தில் மலர்ந்த எண்ணமலர்களால் அர்ச்சிக்கப்பட்டவரை; இவ்வெண்ணங்களின் உணர்ச்சிச்செறிவில் மகிழ்வுறுபவரை; 8

தன்னியல்பான இவ்வெண்ணங்கள் அர்ப்பிக்கப்பட்டவரை; (இவற்றின்) வண்ணப்பண்ணிலும் இயல்பிலும் மகிழ்வுறுபவரை; தனது ராகரத்னமாலைகள் கொண்டவரை; தனது ஶிஷ்யையின் இம்மலர்மாலைகள் அணிந்தவரை; 9

தனது நற்றிருவடிகளை அடைந்த இப்புதல்விக்கு அடைக்கலமானவரை; தனது திருவடிகளை அடைந்த இப்புதல்வியை நன்கு காப்பவரை; நல்மங்களத்திற்கு இருப்பிடமானவரை; ஒளிபொருந்தியவரை; குருவை; எப்போதும் துதிக்கிறேன். 10

இந்த குருஸ்துதிப்ப்ரமாணிகா குருவினால் தூண்டப்பட்ட சொற்கள் கொண்டது; பெரும் மகிழ்வினை அளிப்பது; குருவருள் மங்களம் நல்குவது. 11

ஓம்

மங்களம்

ஸ்ரீராமஜயம்

ஸத்குரு ஸ்ரீத்யாகப்ரம்ம புஜங்கப்ரயாத ஸ்தோத்ரம்

யதி த்யாகராஜேந்த்ரரால் நன்கு பாடப்பட்ட பாட்டுக்களுடையவரை; எப்பொழுதும் அவரால் பக்தியுடன் துதிக்கப்பட்ட ராமனே; தனது மேலான நற்புகழைப் பாடும் கீர்த்தனை வெள்ளம் கொண்டவரை; ராமசந்த்ரனே; மங்களத்துடன் கூடியவரை, எப்பொழுதும் துதிக்கிறேன். 1

ஸ்ரீத்யாகராஜரைத் துதிக்கிறேன்; யதீந்த்ரரைத் துதிக்கிறேன்; ஸ்ரீராமசந்த்ரனின் தனிச்சிறப்பு வாய்ந்த பக்தராய் முன்னோடியாய் உள்ளவரைத் துதிக்கிறேன்; நாத அரசரைத் துதிக்கிறேன்; மேலான இன்பமும் வீட்டுப்பேறும் அடையச்செய்பவரை, மங்களம் செய்பவரைத் துதிக்கிறேன்; ஸத்குருவைத் துதிக்கிறேன். 2

பரப்ரம்மனைக் குணங்களுடை உருவாய்ப் பாடியவரை; பரப்ரம்மனின் குணங்களற்ற தன்மையை அறியச்செய்பவரை; பரப்ரம்மத்தில் ஒன்றியவரை; மேலான ஆத்மாவாக உணரப்பட்டவரை; பரப்ரம்ம வடிவானவரை; குருவைத் துதிக்கிறேன். 3

பரப்ரம்மனை நாதத்தால் நன்கு பூஜித்தவரை; நல்லொளி கொண்டவரை; மேலான செல்வமாய் ஸங்கீத யோகத்தைப் புகழ்ந்தவரை; இனிய நாதத்தினால் பேரின்ப ஒளிவடிவை அர்ச்சித்தவரை; இனிய நாதமே தன்வடிவாகக் கொண்டவரை; ப்ரம்மவடிவான குருவைத் துதிக்கிறேன். 4

இனிய ராகமும் ஸ்வரமும் ஒலிக்கும் ஸங்கீத வடிவானவரை; அமுதச்சாறாக/அமுதப்பொழிவாக ஸப்தஸ்வரங்கள் எழில் நடம்புரிய கானம் செய்பவரை; நல்லினிய குரலால் ராமனை அழைத்தவரை; குருத்யாகராஜரை அன்புடன் துதிக்கிறேன். 5

பாதத்தாமரைகளில் சலங்கைகள் ஒலிக்க இனிது கானம் செய்பவரை; கரகமலங்களில் ஏழுதாளங்கள் விதவிதமாக ஒலிப்பவரை; இனிதொலிக்கும் தம்புரா நாதத்துடன் ஒன்றிய குரலுடையவரை; கணீரெனும் மணியின் இன்னொலியுடன் நாதத்தைப் பொழிபவரை; 6

ஸதா அனுஸ்வரங்களின் 'ஹ்ரீம்'கார ஒலி செவிகளில் ஒன்றியவரை; ஸதா ஆத்மானுபவ வெள்ளத்தில் அமிழ்ந்துள்ளவரை; ஸதா நாம ஸங்கீர்த்தனம் எனும் பேரின்பயோகத்தில் ஒன்றியவரை; ஸத்குருத்யாகராஜரை எப்போதும் துதிக்கிறேன். 7

ஸதா ராம, ராம என்று திருநாமத்தினைப் பாடியவரை; ஸதா திருநாம மெய்யமுதினைப் பருகி மகிழ்பவரை; ஸதா ராகத்திலும் தாளத்திலும் ஒன்றிய சிறப்புடையவரை; என்னில் ஆத்ம விழிப்புணர்ச்சியைத் தூண்டியவரை; அவரை எப்போதும் துதிக்கிறேன். 8

மங்களத்திருமுகத்தில் மெய்யறிவொளி வீசுபவரை; ஒளி பொருந்திய அழகிய கருணை விழிகளால் அமைதியூட்டுபவரை; இனிய வார்த்தைகளால் இனிய ராமனைத் தழுவியவரை; என்னைக் கைதூக்கி விடுபவரை; அந்த ஸத்குருவை நமஸ்கரிக்கிறேன். 9

இன்பப்பூங்காவான, அன்னை லக்ஷ்மியின் இன்பமான திருநாமத்தினை ஜபிக்கப்பட வேண்டியதாகக் கொண்டவரை; கோடிக்கணக்கில் ஜபிக்கப்பட்ட ஈஶன் திருநாம ஒளி இலங்கும் திருநாவு கொண்டவரை; மார்பில் ஒளிவீசும் ஶ்ரீராமனின் எழிலொளிர் திருவுருவம் கொண்டவரை; ஹரியை ஸ்மரிப்பவரை; அந்த ஸத்குருவை துதிக்கிறேன். 10

பாதத்தினைத் தழுவிக்கொண்ட இந்த பக்தைக்குக் காப்பளிப்பவரை; மிகச்சிறந்தவரை; தன்னை ஶரணடைந்த இந்த பக்தையைக் கைதூக்கி வழிநடத்தி உபதேஶம் செய்பவரை; தனது இன்குரலோடிணைந்த இன்னிசைக் கலையினைப் பயிற்றுபவரை; எனது புகலிடமான ஸத்குருவை, அவரை ஶரணடைகிறேன். 11

இனிய இன்பமான ஸப்தஸ்வர வித்தையின் அதிதெய்வமானவரை; முழுமுதற் கடவுளானவரை; இனிய ப்ராஸங்களும் அனுப்ராஸங்களும்

(எதுகை, மோனை போன்ற செய்யுளணிகள்) ஒளிர் காவ்யமெனக்ருதிகள் செய்தவரை; காவ்ய எழிலும் உள்ளுயிர்ப்பும் ஸத்பக்தியும் கொண்ட க்ருதிவெள்ளங்கள் செய்தவரை; ஸங்கீதத்துடன் ஒளிர்பவரை / விஷ்ணுவைப் பாடுவதில் மன்னரானவரை; குருவைத் துதிக்கிறேன். 12

ஸதா ஶ்ரீராமனின் மெய்த்யானதிலும் ஸங்கீதத்திலும் / மெய்ப்பொருள் மகிழ்வுத்தோட்டமான ஶ்ரீராமனின் த்யானத்திலும் ஸங்கீதத்திலும் ஈடுபட்டு மகிழ்பவரை; ஸமாதியில் ஒன்றிய ஸங்கீத வாக்கேயகாரரை; மிகவும் புண்யமான கங்கையே பொழியும் வாக்குடையவரை; பெரியவரை; குருவை நான் எப்போதும் துதிக்கிறேன். 13

சிறந்த த்யானகங்கையில் மங்கல நீராடும் பாக்யம் கொண்டவரை; க்ருதிகளில் ப்ரவஹிக்கும் மெய்யின் ஸாரமும் ஸங்கீத இன்பமும் கொண்டவரை; அமுதப்பெருக்கான ஸத்கீர்தனங்களாகிய பாட்டுத்தொகுப்புகள் செய்தவரை; எனது ஆசார்யராகிய பெரியவரை, அவரைத் துதிக்கிறேன். 14

இனிய ஸங்கீத ஸாம்ராஜ்யத்தை ஒருகுடை நிழலில் ஆட்சிபுரிபவரை; ஒளிரும் ராமசந்த்ரனை, இனியவனை, தனக்கு நெருங்கியவனைப் பாடியவரை; புல்லரித்து மயிர்க்கூச்சுடன் பேரின்பத்திலொன்றிப் பாடியவரை; ஸத்குரு த்யாகராஜரை உணர்ச்சியுடன் துதிக்கிறேன். 15

திருமகள் மகிழ்வான, மங்கலமளித்துக் காப்பாற்றும் தாரக மந்த்ரத்தை ஒலித்தவரை; வேதப்பொருட்ஸாரம் ஒளிரும் கீர்த்தனைகளைப் பொழிந்தவரை; நன்மையைத் தூண்டும் உபதேஶங்கள் செய்தவரை; ஸத்குரு த்யாகராஜரை எப்போதும் துதிக்கிறேன். 16

மேலான இன்பத்தைக் கொடுப்பதும் திருமகளின் மகிழ்வுமான மந்த்ரத்தை உபதேஶிப்பவரை; எப்பொழுதும் இன்பமளிக்கும் ஸங்கீதத்தின் தத்துவத்தை உபதேஶிப்பவரை; தெய்வீகமான, இன்பமளிக்கும் கங்கையே இனிய கானமாகப் பொழிபவரை; மேலான இன்பத்தின் மூலமான அந்த குருவைத் துதிக்கிறேன். 17

பிறவித்துயரைப் போக்கும் ஸங்கீத கங்கை வெள்ளமாய்ப் பெருக்கிடுபவரை; நல்மங்களமும் ஸங்கீத ஸித்தியும் அருள்பவரை; என்றுமிருக்கும் நற்கீர்த்தனங்களில் ஒளிரும் உருவுடையவரை; எனது சிறந்த ஆசார்யரை எப்போதும் நான் துதிக்கிறேன். 18

அறிவொளியும் மெய்ஞானமும் கொண்ட ஸங்கீதத்தை போதிப்பவரை; தாள, ஸ்வர இன்பத்துடன் கூடி கம்பீரமாக ராகமிசைப்பவரை; எழிலினிமை கொண்ட கம்பீர க்ருதி நடையுடயவரை; அறிவுவெளி விளக்கானவரை; அந்த ஸத்குருவைத் துதிக்கிறேன். 19

என்றும் தூய மெய்யுருவ ஒளியானவரை; தமோகுணமாகிய தூக்கத்தின் பகைவனான ஸூர்யனின் ஒளிகொண்டவரை; ராஜஸ, தாமஸ குணங்களைப் போக்கிடும் ஸத்துவ ஒளியானவரை; என்னுள் ஒளியானவரை; அந்த ஸத்குருவைத் துதிக்கிறேன். 20

பாம்பின்மேல் ஒளிர்பவனைப் புலரியில் பாடியவரை; பாம்பணைமேல் பள்ளிகொண்டவனை, அமைதிகொண்டவனை, இனிது பாடியவரை; புஜங்கப்ரயாதம் எனும் நடையில் அமைந்த இத்துதிகளின் நாதனானவரை; ஸத்குரு த்யாகராஜரைத் துதித்து வணங்குகிறேன். 21

புஜங்கப்ரயாதத்தில் பாடப்பட்ட இத்துதியில் மிகவும் மகிழ்வுறுபவரை; புஜங்கப்ரயாதத்தில் தனது நற்சிறப்பைத் தானே பாடியவரை; புஜங்கப்ரயாதத்தில் இத்துதிபாடும் இவளுடன் ஒன்றியவரை; எனக்குள் நன்கொன்றிய குருதேவரைத் துதிக்கிறேன். 22

குருத்யாகராஜேந்த்ரரிடத்து பக்தியால் பாடப்பட்டவை; சிறந்த இன்பமளிக்கும் ஸங்கீத ஸந்நிதியில் அர்ப்பணிக்கப்பட்டவை; நல்மலர்களால் செயும் பூஜையானவை; உண்மையான பூஜையானவை; குருவின் திருவடிக்கமலங்களில் ஸமர்ப்பிக்கப்படுபவை; மிக்க மங்களம் நல்குபவை. 23

குருத்யாகராஜரெனும் காந்தர்வருக்கு நல்மங்களம்; இன்னிசைக் கடலைப் பொங்கச்செய்யும் முழு நிலவானவருக்கு நல்மங்களம்; கான

கங்காப்ரவாஹம் கொண்டவருக்கு, தூய பரம்பொருளானவருக்கு நல்மங்களம்; நல்மங்கலமளிப்பவருக்கு நல்மங்களம்; நல்மங்களம். 24

ஓம்

மங்களம்

ஶ்ரீராமஜயம்

ஸத்குரு ஶ்ரீத்யாகப்ரம்ம ஶரணாகதி ஸ்தோத்ரம்

ஸ்வரராகஸுதாரஸ – இன்னிசை ஒலியும் பண்ணுமாகிய அமுதச்சாறே – புனிதத் திருமேனியாகக்கொண்ட; மனிதர்களிற் சிறந்த(வராய் அவதரித்த); ஸத்க்ருதிகள் செய்த குருவாகிய; கவிதை ஆற்றலும் இனிமை, எழில், பக்தி இவை அனைத்தும் ஒருங்கிணைந்த க்ருதிகளைச்செய்த குருதேவ! தங்கள் திருவடிகளைச் ஶரணடைகிறேன். 1

நடமிடும் ஸ்வர தேவதையின் திவ்யக் காட்சியான/திவ்யக் காட்சி அளிக்கும்; ஸ, ரி, க, ம, ப, த, நி எனும் ஏழு ஸ்வரங்கள் அருவியாய்ப் பொழியும் கானம் படைத்த; ஸகலார்த்தங்களையும் கொடுக்கும் பரமனின் திருநாமத்தில் லயித்த உள்ளத்தினின்றுதித்த பாட்டமுதைப்பொழிந்த / திருநாமங்களைத் தாமரைமலர் மாலையெனக் கோத்த; குருதேவ! தங்கள் சரணங்களை ஶரணடைகிறேன். 2

ஶிவனை மகிழ்விக்கும் திருநாமக்கடலான; சிறந்த ரிஷியான; எனக்குப்ரியமான ஸத்துவ குருவான; பகைவரை அழிப்பவனை வெல்லும் நாதக்கடலான; குருபுங்கவ! தங்கள் நற்றிருவடிகளை ஶரணடைகிறேன். 3

விண்ணிலிருந்து வந்திட்ட தேவ! இன்னிசை இறைவ! விண்ணினின்றிழிந்திட்ட புண்ய கங்கையே ஆன மங்கலக்ருதிகள் செய்த; மலையரசனும் இமயத்தின் புதல்வியான கங்கை இன்னொலியுடன் பாய்ந்திடும் பாட்டிசைத்த; குருதேவ! தங்கள் திருவடிகளே ஶரணம். 4

'நான்', 'எனது' எனும் அஹங்கார மமகாரங்களை இல்லையென்றுக்குபவர்; புகழப்பட்ட இமயமே ஆன குரு; எனக்கு ஶ்ருதியோடிணைந்த இன்னிசையையும் நல்லறிவையும் போதித்து நற்கதியளிக்கும் குரு; எனது குற்றங்களைக் களைந்து காத்திடும் குரு; எனது தெய்வமே! தங்களது நற்றிருவடிகளே ஶரணம். 5

எனது உள்ளத்தில் வெள்ளிமயமாய் ஒளிரும் புண்ய ஹிமாலயமான; எனது வாக்கில் ப்ரவஹித்து இசைபாடும் கங்கைப் பெருக்கான; எனது உள்ளத்தில் ஒன்றிய இனிய நாதம் படைக்கும் குருவான; எனக்கு எல்லாமேயான தங்கள் திருவடிகளே ஶரணம். 6

மேலான பஞ்சநத க்ஷேத்ரத்திலுதித்த நாதநதி; மேலானராமனெனும் கடலில் கலந்திடும் கானம் செய்த; மேலான இனிய இசையில் ராமனும் ஹரியை பூஜித்த; குருதேவ! தங்கள் திருவடிகள் ஶரணம். 7

செல்வமாகிய தாஶரதியைத் துதித்த கான அமுது படைத்த; பூமியின் புதல்வியின் நாயகனுன ஶ்ரீராமன் மேல் அன்புக்கடலான; பூமியில் ஸஞ்சரித்த நாதக்கடவுளான; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 8

துன்பத்தைப் போக்கும், இனிதொலிக்கும் பண்ணுருவியே! வழியற்ற என்னைக் கடைத்தேற்றுதல் நிந்தன் மகிழ்வாகும்; வேதாகம ஶாஸ்த்ரங்களைக் கொண்ட நற்கீர்த்தனைக்கடலே! குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 9

ஸகுணமாய் அர்ச்சிக்கப்பட்ட நிர்குணஸ்வரூபத்தை அறிந்த ஞானியே! இன்னிசை ஒலிக்கடலின் கரைகண்ட நாத ஒளியே! ஹரிபக்தியுடன் இணைந்து வியனுறு கவிதை ஆற்றல் அளிப்பவரே! குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 10

தாஶரதி எனும் ஹரி மகிழ்ந்திட்ட கானக்கடலே! ஹரிதாஸர்களின் தாஸன் நான் எனும் உணர்வுடன் இணைந்தவரே! ஹரியைக் கவர்ந்திடும் மிக நல்ல கணக்கற்ற க்ருதிகள் செய்தவரே! குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 11

இனிய நாத அமுதாய் ஹரிநாமத்தை இனிதிசைத்த; ஹரி, க்ருஷ்ண என இனிய நாம அமுதில் திளைத்த; ஹரி, கேஶவ, மாதவ என இசை பொழிந்த முகிலான; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 12

தேவர்கள் வணங்கும் அவனை நனைக்கும் பக்திச் சாற்றினைப் பொழிந்த; கடவுளான ராமனின் திருநாமத்தை அமுத கானமாய் இசைத்த; சிறந்த

ராகத்தையும் லயத்தையும் அறிந்த; அமுதினிய பேச்சுடைய குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 13

பாதத்தில் ஒலிக்கும் சலங்கை நாதத்தோடிணைந்த கரதாளத்தின் லயத்தோடொன்றி நடமிடும் குருதேவ! குரல் ஒன்றிய இனிய தம்புராவின் நாதத்தில் மகிழ்ந்த; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 14

பகவத் குண கானமிசைத்து ஸமாதியில் ஒன்றிய; மங்களம் அளிக்கும் காயகரான; பக்திக்கடலே! செல்வத்தைத் துச்சமாகக் கருதி அன்புக்குரிய ராமனையே செல்வமாக மதித்த குருவரசரே! தங்கள் திருவடி ஶரணம். 15

ரகுராமனில் மகிழ்ந்து நிலைத்த எண்ணங்களுடைய; தொடர்ச்சியாய் லக்ஷ்மியின் மகிழ்வானவனில் மகிழும் எண்ணமுடைய; இனிய ராமனின் இனிய நாமமாம் நல்மந்த்ரத்தை ஜபித்த; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 16

மானிட வடிவில் ராமனெனும் ஒளியை நன்கு கண்ட; சிறந்த பாட்டுக்களை மழையாய்ப் பொழியும் நாதமுகிலான; பரம்பொருளைக் கண்ட புல்லரிப்புடன் கூடிய புனிதரான; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 17

பிறவிக்கடலைக் கடக்கச்செய்யும் தாரகமந்த்ரத்தை உபதேஶிக்கும் குருவே! ஶிவன் த்யானிக்கும் ஶ்ரீராமன் தோன்றும் இசைக்கடலான; பிறவிப் பிணிக்கு மருத்துவம் செய்யும் ஶ்ரீராமனுக்கு நிவேதனமான திவ்யமான நல் க்ருதிகள் செய்த; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 18

சிறந்த இன்னிசை ஒலியிலும் பண்ணிலும் ஒன்றி திருமாலை அர்ச்சித்த; சிறந்த பண்ணிசை அமுதச்சாற்றினைப் பருகி மகிழ்ந்த; பரம்பொருளான ராமனின் திருநாமத்தை இனிது பாடும் இன்பம் கொண்ட; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 19

ரகுபுங்கவனைப் பாடுவதில் ஓங்கி உயர்ந்த குரலுடைய / உயர்ந்த இமய-மலையான; ரகுநாதனைப் பாடும் இனிய நாதத்தில் வானுலக கங்கையான;

ரகுகுல அரசனைப் பாடும் நற்கீர்த்தனைகளிற் சிறந்த அரசரான; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 20

என் வாழ்விற்குயிரூட்டும் ஜீவ நதியான கங்கையே ஆன; சிறந்த தங்கள் ஸத்க்ருதிகளில் திளைத்தலில் அமைதியருளும் குருவே! சிறந்த ராகதாளத்தில் ஒன்றிய கீர்த்தனங்களைப் பொழியும் முகிலான; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 21

சிறந்த சொற் பொருட்செறிவின் எழில் நடம் இசைத்திறனுடனும் பக்தியுடனும் இணைந்து பெருக்கெடுத்தோடச் செய்திடும்; ரகுநாயகனைப் பாடிடும் திவ்ய இசைஞரான; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 22

சிறப்புடை விஷ்ணுவின் திருவடிகளினின்று ஒலித்துக்கொண்டோடும் - சொற்சிறப்பும் இனிய இசையொலியும் திருநாம இன்பமுமான - அலகாநந்தாவும்; சிறந்த ஶிவனின் சடைமுடியினின்று பகீரதனின் விடாமுயற்சியின் பலனாக ஒலித்துக்கொண்டோடும் பாகீரதியும் கலந்த கங்கையாம் இனிய கானப்பொழிவே! எனக்குக்காப்பருள்க! 23

மிகவும் தூய நல்வாக்கினால் ஹரியை அபிஷேகித்த; வாக்குத்திறனே அற்ற இந்த ஶிஷ்யையின் நல்வாக்கினால் அபிஷேகிக்கப்பட்ட குருவே! குருபக்தி ஒன்றே துணையாக, வேறெந்த உதவியும் இன்றித் துதிக்கப்பட்ட குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 24

வேறு கதியில்லாமல் தங்களையே ஶரணடைந்த இந்த ஶிஷ்யையை வழிநடத்துபவரே; ஸ்வர ராகங்களின் ரஹஸ்யங்களையும் லயத்தையும் அறியச் செய்பவரே; வாக்குத்திறனே அற்ற இவளுக்கு நல்வாக்கும் இன்குரலும் அருள்பவரே! குருதேவ! தங்கள் திருவடி ஶரணம் . 25

(இந்த)இதயத்துட்சென்ற நற்க்ருதிகளில் தத்துவத்தைப் பொழிந்த; (இந்த)இதயத்துட்புகுந்த, மிகவும் மதிக்கத்தக்க ஸத்துவமே ஆன குருவே! (இந்த)இதயகமலத்தில் எப்போதும் த்யானிக்கப்பட்ட குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 26

இதயக்கோயிலில் விக்ரஹமாக ராமனைத் துதித்த; இவ்விதயக்கோயிலில் விக்ரஹவடிவில் துதிக்கப்பட்ட; இவ்விதயமலையில் பாய்ந்தோடும் இசைநதியான; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 27

இவ்விதயக்கோயிலில் வஸித்தலில் எப்போதும் மகிழ்பவரே! இவ்விதயக்கோயிலை மணமூட்டும் மலரின் தேனான; இவ்விதயக்கோயிலின் அர்ச்சனைத் துதிமலர்களுடன் கூடிய திருவடியுடைய; குருதேவ! தங்கள் திருவடி ஶரணம். 28

இன்பம், அமைதி, நல்மங்களம், என்றும் நிலைத்த தன்மை இவற்றை வரமாக அருள்பவர்; பிறவிப் பெருங்கடலைக் கடக்கச் செய்யும் தாரகநாமத்தை இனிது கானம் செய்வதிற் சிறந்தவர்; நீண்ட வாழ்வும், நோயற்ற தன்மையும், திவ்ய நோக்கும் அருள்பவர்; குருவின் மங்கள நற்றிருவடிகளே ஶரணம். 29

மிகச்சிறந்த நல்மங்களம் அருளும் குருவான; நல்மங்களம் அருளும் பூஜிக்கப்பட்ட திருவடிகளுடைய; நிலைத்த மங்களம் செய்திடும் இன்னிசை குருவே! தங்கள் மங்களத் திருவடிகளே ஶரணம். 30

ஓம்

மங்களம்

ஸ்ரீராமஜயம்

ஸ்ரீத்யாகப்ரம்ம குரு அஷ்டகம்

குரு(தேவர்) ராமனிடம் நல்பக்தியுடனிணைந்த கானக்கடலானவர்; குரு த்யாகத்துடனிணைந்த இறைவன் நாமக்கடலானவர்; குரு தன் ஒளியினால் கணக்கற்ற ஸூர்யர்களை வென்றவர் (வெல்லப்பட்ட கணக்கற்ற ஸூர்யர்கள்); குருவே எனது அடைக்கலமான, தத்துவச் செல்வத்தின் இருப்பிடம். 1

குரு கத்யம், பத்யம் (உரைநடை, நற்செய்யுள்) இவற்றால் துதிக்கப்பட்ட ஆஶுகவி; குருவின் திவ்யநாமகீர்த்தனங்கள் திவ்ய கங்கையே ஆனவை; குருவின் நற்க்ருதிகள், கீர்த்தனங்கள் புத்தெழில் நிரம்பியவை; குருவே என் அடைக்கலமான, ஸத்துவச் செல்வத்தின் இருப்பிடம். 2

குருவின் பேச்சும் பாட்டும் இன்சொற்கள் கொண்டவை; குரு இன்குரல் கொண்டவர்; தன் இதயத்துட்புகுந்த இறைவனின் திருநாமத்தை ஜபம் செய்தவர்; குரு இறைவனை உண்மையுடன் வழிபட்டவர்; பக்தியில் இருப்பவர்; குருவே என் அடைக்கலமான, உண்மைச் செல்வத்தின் இருப்பிடம். 3

குரு பஞ்சநதத்தில் தன் அன்பனை ராமனைப் / பஞ்சநத ஈஶனுக்குகந்த ராமநாமத்தைப் பாடி இன்புற்றவர்; குரு வேண்டுவன அனைத்தும் அளிக்கும் ராமனை நல்லுள்ளத்தில் கொண்டவர்; குரு எளிதில் காவ்யம் படைக்கும், ரஸனை மிக்கவர்; குருவே என் அடைக்கலமான, நித்ய நிதியானவர். 4

குரு தனது பாட்டுகளினால் ஸ்ரீராமனும் ஹரியை அழகிய சிற்பங்களாய் வடித்தவர்; குரு தனது கீர்த்தனைகளாம் கோயிலில் விஷ்ணுவைப் பூஜித்தவர்; குருவின் நாதத்திலும் லயத்திலும் கோயில்கொண்டிருப்பவர்; ஒளிமயமானவிஷ்ணு; குருவே எனது அடைக்கலமான, நாதச் செல்வத்தின் இருப்பிடம். 5

குரு பாமரர்களிடமிருந்து வெகுதூரத்திலுள்ள, இனிய நாதத்தில் இமய-மானவர்; குரு பாமரர்களுக்கும் போதிக்கும் வகையில் நற்கீர்த்தனங்கள் அருளியவர்; குரு உள்ளத்தைத் தூய்மையாக்கும் திருநாமத்தை இனிது இசைத்தவர்; குருவே எனது அடைக்கலமான, அறிவுச் செல்வத்திற்கிருப்பிடம். 6

குருவின் தூய்மையளிக்கும் பாட்டுக்கள் தேவநதியான கங்கையின் இன்பமளிப்பவை; குருவின் தூய பாட்டு விண்ணுலக இன்பம் பயப்பது; குரு மறுபிறவியைத்தடுத்து நிலைபேரின்பம் பெறச்செய்பவர்; குருவே எனது அடைக்கலமான, ராமனெனும் செல்வத்திற்கிருப்பிடம். 7

குருவின் பண்ணிசையில்/அன்பில் சிறந்த நல்லரசனுன ஸ்ரீராமன் ஒளிர்பவர்; குரு ராமனை நன்கு பூஜித்துப் பாடுதலில் மிகச் சிறந்தவர்; குரு பக்தியுடன் ஸமர்ப்பிக்கப்பட்ட இம்மலர்கள் கொண்ட திருவடிகளுடையவர்; குருவே எனது அடைக்கலமான, மங்களத்திற்கிருப்பிடம். 8

ஓம்

மங்களம்

ஸ்ரீராமஜயம்

ஸத்குரு ஸ்ரீத்யாகப்ரம்ம மங்களாஷ்டகம்

ஸங்கீதத்தின் உயிரும் வித்துமானவருக்கு; ஸப்தஸ்வரங்களில் உறைபவருக்கு; ஷட்ஜத்தை ஆதாரமாகக்கொண்ட ஶ்ருதியில் இருப்பவருக்கு; ஸத்குருவுக்கு மங்களம். 1

மலைமேல் வீற்றிருந்த ராமனை / ரிஷபாரூடனை ஶிவனைப் பாடியவருக்கு; பகைவரை அழிக்கும் ஸ்ரீராமன் மேல் பாடியவருக்கு; ரிஷிஶ்ரேஷ்டருக்கு; நற்பாட்டுகள் பாடியவருக்கு / நன்கு பாடப்பட்டவருக்கு; பாட்டெனும் செல்வத்தை அருளியவருக்கு மங்களம். 2

கங்கையின் புனிதமாய்ப் பாடியவருக்கு; ஆழ்ந்த இனிய குரலில் மொழிபவருக்கு; காந்தர்வ கானமாம் இனிய இசையில் மகிழ்பவருக்கு / இசையில் காந்தர்வரானவருக்கு; பாட்டில் மகிழ்பவருக்கு; ஆய்ந்தறியமுடியாதவருக்கு மங்களம். 3

குருநாதருக்கு மங்களம்; மங்களம், இன்பம், சிறப்பு இவை கொண்டவருக்கு / இவற்றை அளிப்பவருக்கு; மங்களமான ஸ்வரங்களின் ஸாரமானவருக்கு/ மங்கள அமுதக்குரல் படைத்தவருக்கு; மங்களம் தானே ஆனவருக்கு மங்களம். 4

மிக்க இனிய குரலில் பாடியவருக்கு/பாடப்படவேண்டியவருக்கு; நிறைந்த ஸ்வரக்கடலானவருக்கு; கடல் வண்ணத்தில் நடம் புரிபவருக்கு / கடலில் பண்ணிசை நடம் புரிபவருக்கு; மேலான பரம்பொருளானவருக்கு / மேலானபொருளளிப்பவருக்கு மங்களம். 5

மங்களமருள்பவருக்கு; நற்பேறுள்ளவரால் ஸேவிக்கப்படுபவருக்கு; திறமையும் தைர்யமும் அளிப்பவருக்கு; த்யானிக்கப்பட்டவருக்கு; த்யானத்தால் அடையப்பட வேண்டியவருக்கு; த்யானிக்கப்பட்ட உருவானவருக்கு மங்களம். 6

நிஷாத ஸ்வரத்தின் இனிமையானவருக்கு/இனிமைகொண்டவருக்கு; இரவும் பகலும் நினைக்கப்பட்டவருக்கு; வீட்டுப்பேறளிப்பவருக்கு; நிலைத்த இன்பத்தை அருள்பவருக்கு மங்களம். 7

ஸப்தஸ்வரங்களின் அதிஷ்டான் தேவதையானவருக்கு; தன்னால் இனிது பாடப்பட்ட க்ருதிகளில் இருப்பவருக்கு; ஸத்குரு த்யாகராஜருக்கு; புஷ்பாவினால்/புஷ்பங்களால் அர்ச்சிக்கப்பட்டவருக்கு மங்களம். 8

ஓம்

மங்களம்

ॐ

श्रीविद्यारामकृष्णाय गायत्रीसारगातवे ।
श्रीवत्सपुष्पारामाय त्यागराजाय मङ्गलम् ।।

ஓம்


ஶ்ரீவித்^{3}யாராமக்ரு'ஷ்ணாய கா^{3}யத்ரீஸாரகா^{3}தவே |
ஶ்ரீவத்ஸபுஷ்பாராமாய த்யாக^{3}ராஜாய மங்க^{3}ளம் ‖

ஓம்

திருப்பதியில் நூல் வெளியீடு




முன்னாள் குடியரசுத் தலைவர் ஸ்ரீ ஷங்கர் தயாள் ஷர்மா ஆசிரியையிடமிருந்து இந்நூலைப் பெறுகிறார்



கையில் நூலுடன் குடியரசுத் தலைவர்; ஆசிரியையின் பின்னால் அவரது கணவர் ஸ்ரீ வத்ஸன்; அருகில் ஸ்ரீ ஸேவா ஸ்வாமி அவர்கள்



குடியரசுத்தலைவர் நூலினை ஆராய்தல்



ஆசிரியை விளக்குகிறார்



குடியரசுத்தலைவர் நூலினை வெளியிடல்



ஸ்ரீ ஸேவா ஸ்வாமி அவர்கள் குடியரசுத்தலைவரிடமிருந்து நூலின் முதல் பிரதியைப் பெறுகிறார்



ஹிந்து பத்திரிகைப் பேட்டியில் நூலுடன் ஸ்ரீமதி புஷ்பா ஸ்ரீவத்ஸன்


રામ